

ŚAKUNTALA

OR

THE LOST RING

TRANSLATED INTO TAMIL PROSE AND VERSE

WITH EXPLANATORY NOTES

BY

RAO SAHIB S. BAVANANDAM PILLAI

F. R. HIST. S. (LOND.) AND M.R.A.S (LOND.)

[Illustrated with half-tone pictures.]

'*The course of true love never did run smooth*'—Shakespeare.

Madras:

PRINTED AT THE VAIJAYANTI PRESS,

(MADRAS TIMES PRINTING & PUBLISHING & CO., LD)

BY

W F GRAHAME ESQ , I C S (RETIRED) AT 32, MOUNT ROAD.

1912

ALL RIGHTS RESERVED.

சகுந்தலை

அல்லது

காணாமற்போன கணையாழி

[படங்களுடன்]

இந்நாடகம்

பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்
செந்தமிழில்

ராவ் ஸாஹிப் ச. பவாநந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ். (லண்டன்) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்)

மொழிபெயர்த்தது.

'உண்மைக் காதற் குறுமிடை யூறுகள் பல'

சென்னை

வைஜயந்தி அச்சுக்கூடம்

1912

ரிஜிஸ்தர் செய்தது.

நாடக பாத்திரங்கள்

1. துஷ்யந்தன் ... ... புருவமிசத்திலுதித்த அரசன், நாடகத்தலைவன்.

2. சர்வதமனன் ... ... துஷ்யந்தமகாராஜாவுக்கு சகுந்தலையிடமாகப்பிறந்தவன்; இப்பேர் இவனுக்கு சிறுவயதில் வழங்கிவந்த காரணப்பெயர்; பின்பு பரதன் என்று மறுபெயர் கொண்டான்.

3. விதூஷகன் ... ... எப்பொழுதும் அரசனோடிருந்து, சமயோசிதமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் மாதவியன் என்னும் பிராமணன்.

4. கண்வர் ... ... ஒருமுனிவரார்; சகுந்தலையை எடுத்து வளர்த்த தந்தை.

5. மாரீசர் ... ... காசிபரென்னும் இவர், பிரம்மாவின் பேரனான மரீசிப் பிரம்மருஷியின் புத்திரர்; தேவதைகளுக்கும், மனிதர்களுக்கும் ஆதிபிதா.

6. துருவாசர் ... ... சகுந்தலைக்குச் சாபங்கொடுத்த ஒரு முனிவர்.

7. வைகாநஸர் ... ...
8. சார்ங்கரவன் ... ...
9. சாரத்வதன் ... ...
10. கௌதமன் ... ...
11. நாரதன் ... ...
12. தாண்டாயனன் ... ...

(7–12) கண்வருடைய சிஷ்யர்கள்.

13. காலவன் ... ... மாரீசரின் சிஷ்யன்.

14. சாகலியர் ... ... மாரீசர் ஆசிரமத்திலுள்ள ஒரு பிராமணன்.

15. ஆர்யபிசுனர் ... ... துஷ்யந்தன் மந்திரி.

16. மித்திராவசு ... ... அரசன் மைத்துனராகிய ஊர்க்காவலர் தலைவன். (கொத்தவால்)

17. ஸோமராதர் ... ... அரண்மனைப் புரோகிதர்.

18. மாதலி ... ... இந்திர ஸாரதி.

19. ஸாரதி ... ... துஷ்யந்தனுடைய தேர்ப்பாகன்.

20. கரபகன் ... ... துஷ்யந்தன் தாயாரின் தூதன்.

21.	கஞ்சுகி	வாதாயனன் என்பவன்; அந்தப்புரங் காப்போன்
22.	முதல்வைதாளிகன் ...	சமயோசிதமாகப் பாடும் அரண்மனைப் பாடகர்கள்.
23.	இரண்டாம்வைதாளிகன் ...	
24.	ரைவதகன்	வாயில் காவலன்.
25.	சூசகன்	கொத்தவாலுக்குச் சேவகர்கள்.
26.	ஜானுகன்	
27.	சூத்திரதாரன்	நாடக நிர்வாகி.
28.	சகுந்தலை	விசுவாமித்திர மகருஷிக்குமேனகையிடமாகப் பிறந்த பெண்; இவள் கண்வரால் காட்டில் கண்டெடுத்து வளர்க்கப்பட்டவள்; துஷ்யந்தன் காந்தர்வ மணம்புரிந்த மனைவி, நாடகத்தலைவி.
29.	பிரியம்வதை	சகுந்தலையின் தோழிகள்.
30.	அனசூயை	
31.	கௌதமி	கண்வரின் ஆச்சிரமத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த ஓர் அம்மை.
32.	தாக்ஷாயணி	மாரீசரின் பத்தினி, தக்ஷப்பிரஜாபதிக்குப் பெண்முறையில், பிரம்மாவின் பேர்த்தி; தேவதைகளுக்கெல்லாம் ஆதி மாதா.
33.	மேனகை	சகுந்தலையைப்பெற்ற தாய்.
34.	சானுமதி	மேனகையின் தோழி ; ஒரு தேவஸ்திரி.
35.	ஹம்சபதிகை	துஷ்யந்தன் மனைவியரில் இருவர்.
36.	வாசுமதி	
37.	பரபிருதிகே	இரண்டு தோட்டக்காரிகள்.
38.	மதுகரிகே	
39.	சதுரிகை	அரண்மனைத் தாதிகள்.
40.	பிரதீகாரி .. ... . (என்னும் வேத்திரவதி)...	
41.	யவனி	
42.	தாளிகை	
43.	சுவரதே	ஒரு தவப்பெண்.
44.	நடி	சூத்திரதாரன் மனைவி.

சேனாபதி, பரிஜனங்கள், சிஷ்யர்கள், ருஷிபத்தினிகள், யவனப்பெண்கள், செம்படவன் முதலாயினோர்.

†	விசுவாமித்திரர் ...	... ஒருமுனிவர்; சகுந்தலையைப் பெற்ற தந்தை.
†	பரதன்	... நாடகாசிரியராகிய ஒருமுனிவர்.
†	இந்திரன்	.. தேவர்களுக்கு அரசன்.
†	ஜயிந்தவன் ...	... இந்திரன் புத்திரன்.
†	துர்ச்சயனன் ...	... காலநேமி யென்னும் இராக்ஷச வமிசத்தைச்சேர்ந்த ஓர் அசுரன்.
†	சாகேதலன் ...	... புகழ்பெற்ற ஓர் அயோத்தி நகர்வாசி.
†	தனமித்திரர்... ...	... ஓர் கப்பல்வியாபாரி.

நாடகம் நிகழ்விடம்

முதலாவது அங்கத்துக்கு இடம் அரணியம்; இரண்டாவதற்கு, அந்த அரணியத்திலுள்ள ஓர் ஆசிரமத்துக்கடுத்த மணல்வெளி; மூன்றாவதற்கு, வனத்திலுள்ள ஒரு முனிவராசிரமம்; நான்காவதற்கு, கண்வமுனிவருடைய ஆசிரமத்துக் கருகிலுள்ள ஒரு புல் நிலம்; ஐந்தாவதற்கு, அஸ்தினபுரியிலுள்ள துஷ்யந்தன் அரண்மனை; ஆறாவதற்கு, ஒரு தெருவும், அரண்மனையின் உத்தியானவனமும்; ஏழாவதற்கு, விண்ணுலகம்.

குறிப்பு

இந்நாடகத்தில் ✻ இக்குறியின் பின்னேவரும் வசனபாகங்களுக்கு நூலாசிரியர் இயற்றிய செய்யுட்களை அநுபந்தத்திற்காண்க.

† இவர்கள் நாடகபாத்திரங்களல்லர். இந்நாடகத்தில் குறிக்கப்பட்டவர்கள்.



அனசூயை— “பெண்மையின் நாயகன் பதத்தைத் தந்தன்றி—”

(16-ஆம் பக்கம் பார்க்க.)

கடவுள் துணை

சகுந்தலை

முன்னுரை

வாழ்த்து

(இரட்டை ஆசிரியவிருத்தம்)

†மறையோன் முதலிற் படைத்ததேது,
மன்னும் விதியாற் கொடுக்கின்ற
மகத்தி லவியை ஏற்பதேது,
மகிழ்வா யதனை நடத்துகின்ற
இறையாய் விளங்கி இருப்பதேது,
இயங்குங் காலம் அறிவிக்கும்
இரண்டு பொருள்கள் எவை, சுருதி
இயல்பா யெங்கும் பரந்ததேது,
முறையா யிருக்குஞ் சராசரங்கள்
முளைக்கு மிடமாக் கொண்டதேது,
மூவா வுயிர்கள் அனைத்தினுக்கும்
முயங்கு முயிரா யிருப்பதேது,
குறையா திந்த எண்வகையாங்
கோதில் காட்சி யளவாகக்
குலவும் வடிவன் ஈசனுமைக்
குற்ற மறக்காத் தருளுகவே.

---

† இதன் உரையை அநுபந்தத்திற் காண்க.

(வாழ்த்துரை கூறியபின்)

சூத்திரதாரன் — (உள்ளரங்கத்தை நோக்கினபடியே) ஆர்யே! அலங்காரம் ஆய் இருக்கும் அல்லவா; சற்றே இங்குவா.

நடி — (பிரவேசித்து) ஆர்ய! இதோ வந்திருக்கின்றேன்; தங்கள் ஏவல் ஏதுவோ?

சூத்திரதாரன் — ஆர்யே! கற்றுவல்லவர்கள் நிரம்பியுள்ள இந்த சபையின் முன்னிலையில், காளிதாஸர் நவீனமாக இயற்றிய **சகுந்தலை** நாடகத்தை, நாம், நடித்துக்காட்ட வேண்டுமாகையால், ஒவ்வொரு பாத்திரமும், நன்கு நடிக்க முயலவேண்டும்.

நடி — நாடக முறை தெரிந்து ஒவ்வொன்றையும் தாங்கள் ஏற்படுத்தி இருப்பதனால், தங்களுக்கு எதனாலும் குறைவு நேரிடாது.

சூத்திரதாரன் — ஆர்யே! உண்மை உரைக்கின்றேன்: கற்றவர்களுடைய இன்முகங் காணுமளவும், நான் ஏற்படுத்தியிருக்கிற முறைமையின் திறமை, ஏற்றதென்று எண்ணமாட்டேன்; கசடறக் கற்றவர்களும், தத்தம் புலமையில் நம்பிக்கையற்றிருக்கின்றார்கள்.

நடி — ஆம்: அது உண்மைதான்; இனிச் செய்யவேண்டிய காரியத்துக்குத் தாங்கள் விடை தருக.

சூத்திரதாரன் — இந்தச் சபையோர்களுக்குச் சிரவணானந்தத்தை உண்டுபண்ணுவதைவிட, செய்ய வேண்டுவது, வேறு என்ன இருக்கின்றது?

நடி — ஆர்ய! எந்தப் பருவத்தைக் குறித்துப் பாடலாம்?

சூத்திரதாரன் — ஆர்யே! இந்த முதுவேனிற் பருவத்தைக் குறித்துப் பாடுவாயாக; இப்பருவம், சில தினங்களுக்கு முந்தித்தான், தோன்றியிருக்கின்றது: இதுவே, ஸுகாநுபவத்துக்குத் தகுந்த காலம். இந்தப் பருவத்திலோ—பகற்காலங்களில் தண்ணீரில் மூழ்கிக் குளிப்பது, களிப்பைத் தரும்; பாதிரி மலர்களில் படிந்துவரும் நந்தவனக்காற்று மிகச் சுகந்தமாய் வீசும்; இடைவெளியில்லா மர நிழல்களில் தூக்கம் தானாகவே வரும்; மாலை நேரம் மனோகரமாய் இருக்கும்.

நடி—அப்படியே; (பாடுகிறாள்)

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

† வாகைநறும போதுகட்கு வண்டுமுத்தந் தந்தவற்றின்
இனியநறுந் தேனை மாந்த
வாகைநறும் போதுகளின் கேசரங்கள் தொடுவதற்கு
மெதமெதனவே வயங்குங் காலம்
வாகைநறும் போதுகளைத் தங்கரங்க ளான்மெதுவாய்க்
காதுகளில் வைத்துக் கொண்டு
வாகைநறும் போதுகளான் மங்கையர்கள் தங்களைத்தாம்
அலங்கரித்து மகிழுங் காலம.

(வெண்பா)

† வண்டுகள் பையமொய்க்கும் வாய்களையும மெத்தென்ற
தண்டுகளாங் கேசரத்தின் தாட்களையுங்—கொண்டுள்ள
வாகைநறும் போதுகளை வாள்விழியார் காதுகளில்
ஓகையுடன் பூண்பார் உகந்து.

சூத்திரதாரன்.—சபாஷ் ! மனதைக் கவரும்படி நன்றாய்ப் பாடினாய். ஆஹா ! ஆஹா ! இச்சபை, உன்பாட்டைக் கேட்டதனால், சித்திரம் போல் அசைவற்றிருக்கின்றது ; இப்போது எந்த நாடகத்தால் இந்தச் சபையை மகிழ்விக்கலாம் ?

நடி — ஆர்ய ! சகுந்தலை நாடகத்தை, நடிக்க வேண்டுமென்று தாங்கள், முதலிலேயே வெளியிட்டீர்களே !

சூத்திரதாரன் — ஆர்யே ! நன்கு நினைப்பூட்டினாய் ! அதையெல்லாம் தற்சமயம் மறந்தேனே ! விரைவின் மிகுந்த புள்ளிமான் ஒன்று, இதோ, இந்தத் துஷ்யந்த மஹாராஜனை, இழுத்தோடுகிறது போல, உன் இன்னிசை என் மனதைக் கவர்ந்து சென்றது.

[இருவரும் போகிறார்கள்.]

முன்னுரை முடிந்தது.

முதலாம் அங்கம்

இடம்: அரணியம்.

பாத்திரங்கள்: துஷ்யந்தன், ஸாரதி, வைகாநஸா, இரண்டு சிஷ்யர்கள், சகுந்தலை, பிரியம்வதை, அநசூயை.

[துஷ்யந்தன், ஸாரதியுடன் தேரில் அமர்ந்து நாணேற்றிய வில்லைக் கையிலேந்தி, புள்ளிமான் ஒன்றைப பின்தொடர்ந்து பிரவேசிக்கின்றான்.]

ஸாரதி — [மன்னனையும் மானையும் நோக்கினபடியே] ஆயுஷ்மான்! இந்தப் புள்ளிமானையும், நாணேற்றின வில்லையுடைய உம்மையும் பார்த்தால், ஸாக்ஷாத் பிநாகபாணியாகிய சிவனே, பிரம்மாவாகிய மானைப் பின்தொடர்ந்து செல்வதுபோலிருக்கிறது.

* **துஷ்யந்தன்** — ஸாரதி! இந்த மான் நம்மை நெடுந்தூரம் இழுத்துக் கொண்டு வந்துவிட்டதே! இதோ பார்! இப்பொழுதும் அது, தன் கழுத்தை அழகாகத் திருப்பித்திருப்பிப் பின்றொடரும் நம் இரதத்தைத் தனது கடைக்கண்ணால் நோக்குகின்றது; அம்பு தன்மேற் பாயுமோ என்னும பயத்தால், உடலின் முற்புறத்தைப் பிற்புறத்தில் ஒடுக்கிக்கொள்கிறது; இளைப்பால் அகல விரித்த வாயிலிருந்து, அரைகுறையாக மென்று கழித்த தருப்பைப் புற்களை வழியெல்லாஞ் சிந்துகிறது; சடுதியில் துள்ளிக் குதிப்பதால் ஆகாயத்தில் அதிக தூரத்தையும், பூமியிற் கொஞ்சதூரத்தையும் விரைவிற் கடந்து போகின்றது; (விந்தையோடு) விடாது பின்தொடர்ந்தும், எப்படியோ இந்த மான், என் கண்ணுக்கெட்டாமற் போய்விட்டதே!

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

† வாகைநறும போதுகட்கு வண்டுமுத்தந் தந்தவற்றின்
இனியநறுந் தேனை மாந்த
வாகைநறும் போதுகளின் கேசரங்கள் தொடுவதற்கு
மெதமெதனவே வயங்குங் காலம்
வாகைநறும் போதுகளைத் தங்கரங்க ளான்மெதுவாய்க்
காதுகளில் வைத்துக் கொண்டு
வாகைநறும் போதுகளான் மங்கையர்கள் தங்களைத்தாம்
அலங்கரித்து மகிழுங் காலம.

(வெண்பா)

† வண்டுகள் மையமொய்க்கும் வாய்களையும மெத்தென்ற
தண்டுகளாங் கேசரத்தின் தாட்களையுங்—கொண்டுள்ள
வாகைநறும் போதுகளை வாள்விழியார் காதுகளில்
ஓகையுடன் பூண்பார் உகந்து.

சூத்திரதாரன்.—சபாஷ்! மனதைக் கவரும்படி நன்றாய்ப் பாடினாய். ஆஹா! ஆஹா! இச்சபை, உன்பாட்டைக் கேட்டதனால், சித்திரம் போல் அசைவற்றிருக்கின்றது; இப்போது எந்த நாடகத்தால் இந்தச் சபையை மகிழ்விக்கலாம்?

நடி — ஆர்ய! சகுந்தலை நாடகத்தை, நடிக்க வேண்டுமென்று தாங்கள், முதலிலேயே வெளியிட்டீர்களே!

சூத்திரதாரன் — ஆர்யே! நன்கு நினைப்பூட்டினாய்! அதையெல்லாம் தற்சமயம் மறந்தேனே! விரைவின் மிருகத புள்ளிமான் ஒன்று, இதோ, இந்தத் துஷ்யந்த மஹாராஜனை, இழுத்தோடுகிறது போல, உன் இன்னிசை என் மனதைக் கவர்ந்து சென்றது.

[இருவரும் போகிறார்கள்.]

முன்னுரை முடிந்தது.

ஸாரதி—ஆயுஷ்மான்! தரை, மேடுபள்ளமாய் இருக்கிறதென்று, கடிவாள வார்களை இழுத்துப் பிடித்ததனால், தேரோட்டத்தைக் குறைத்திருக்கின்றேன். இதனாலேதான், இம்மானுக்கும் நமக்கும் இடைவெளி அதிகமாயிற்று. இப்போது, சமநிலத்தில் வந்துள்ள உமக்கு, அது அகப்படாமற் போகாது.

துஷ்யந்தன் — ஆனால் வார்களைத் தளர்த்திவிடு;

ஸாரதி — தேவரீர் கட்டளைப்படியே— (தேரை வேகமாய்விட்டு) ஆயுஷ்மான்! இதோ, பாரும்: இக்குதிரைகள், வார்கள் தளர்த்தப்பட்டவுடனே, முன்னுடலை நீட்டி (நெற்றியிற் சூட்டிய) சாமரைநுனி அசையாமல், செவிகளை விறைத்து நிமிர்த்து, தமது குளம்புகளிற் கிளம்பிய தூளிகளும் தம்மைத் தாக்காதபடி, மானின் வேகத்தைக்கண்டு பொறாமை கொண்டனபோல, ஓடிக்கொண்டிருக்கின்றன.

துஷ்யந்தன்—ஆம்;—இவைகள், † சூர்யேந்திரர்களுடைய பரிகளினும் மிஞ்சியிருக்கின்றன: ஏனெனில்: இந்தத் தேரோட்ட விரைவினால் எது, சிறியதாய்த் தோற்றுகிறதோ, அது, அப்போதே பெரியதாகவும், எவை இடை வெளியிட்டு வெவ்வேறாகத் தோற்றுகின்றனவோ, அவை அப்போதே, ஒன்று சேர்ந்தனவாகவும், எது, இயற்கையிற் கோணலாய் இருக்கின்றதோ, அது, அப்போதே நேராகவும், தோற்றுகின்றன; எந்த வஸ்துவும் எனக்கு ஒரு நிமிஷங்கூடத் தூரத்தில் இருப்பதாகத் தோற்றவில்லை; எதுவும் ஒரு நிமிஷமாயினும் சமீபத்திலிருப்பதாகவுங் காணப்படவில்லை. ஸாரதி! இதோ, மானைக் கொல்லுகிறேன்; பார்.

(குறிபார்க்கிறான்.)

(திரைமறைவில்)

பொறு, பொறு, அரச! இது ஆசிரம மிருகம்; கொல்லாதே! கொல்லாதே!

ஸாரதி — (ஓசையை உற்றுக்கேட்டு, அதுபிறந்த இடத்தை நோக்கி) ஆயுஷ்மான்! உமது அம்பு அந்த மானின்மேற் பாயுமுன், அதற்கும் உமக்கும் இடையில் துறவிகள் வந்திருக்கின்றனர்.

துஷ்யந்தன் — (துடிப்புடன்) ஆனால், குதிரைகளை நிறுத்து.

---

† சூரியன் + இந்திரன் = சூரயேந்திரா.

ஸாரதி — அப்படியே. (தேரை நிறுத்துகிறான்.)

(துறவி வைகாநஸர், இருவர் சிஷ்யர்களுடன் பிரவேசிக்கிறார்)

வைகாநஸர் — (தமது கையை உயர்த்தி) அரச! இது, ஆசிரம மிருகம்: கொல்லற்க! கொல்லற்க! மலர்க்குவியலில் நெருப்பிட்டபடி, இம்மானினுடைய மெல்லிய சரீரத்தின்மேல் உனது அம்பைத் தைக்கவிடாதே! விடாதே! வஜ்ராயுதம்போற் பாயும் இயல்பையும், கூரிய நுனிகளையுங்கொண்ட வுன்னுடைய அம்புகள் எங்கே! இச்சிறு மானின் மெல்லிய உயிர் எங்கே! ஆகையால், நன்று யிலக்கு வைத்துத்தொடுத்த உனது அம்பைத் தூணியில் திரும்பவை; உனது கணை, வருந்திேனாரை வாழ்விப்பதற்காம்; அன்றி, குற்றமின்றித் திருந்திேனாரைத் தாழ்விப்பதற்கன்று.

துஷ்யந்தன் — இதோ அதனைத் தூணியில் வைக்கிறேன். (அங்ஙனமே செய்கின்றான்.)

வைகாநஸர் — புருகுல தீபனும் உனக்கு, பொருத்தமான காரியமே செய்தனை! இக்காரியம், அவ்வமிசத்திற் பிறந்த வுனக்குத் தகும தகும்; இப்படிப்பட்ட நற்குணக் கடலாய், உலகடங்கலும் ஒரு குடைக்கீழ் ஆளவல்ல ஆண்டகை ஒருவனை, உனது மைந்தனாகப் பெறக்கடவை.

சிஷ்யர்கள்—(தமது கைகளை உயர்த்தி) வேந்தர்வேந்தனாய் மேதினி முழுவதும் ஒரே குடைக்கீழ் ஆளவல்ல மைந்தனைக் கடவுள் உமக்குக் கொடுத்தருள்வது திண்ணம் திண்ணம்.

துஷ்யந்தன்— (வணங்கி) அந்தணர் ஆசீர்வாதங்களை அங்கீகரிக்கின்றேன்.

வைகாநஸர் — அரச! சமித்துச் சேகரிப்பதற்கு நாங்கள், புறப்பட்டோம; இதோ, மாலினி நதிக்கரையில் எமது குலபதியாகிய கண்வ மஹர்ஷியினுடைய ஆசிரமம் காணப்படுகின்றது. வேறு கருமத்திற்குத் தடையின்றேல், நீ, இவ்வாசிரமத்திற் சென்று, † ஆதித்யம் பெற்றுக்கொள்ளலாம; அன்றியும், துறவிகளுடைய நற்கருமங்கள் இடையூறின்றி நிறைவேறுவதைக்

---

† ஆதித்தியம்=விருந்தினாகக் செய்யும் உபசாரம்.

நன்று, வில்லின் நாண் உராய்ந்து தழும்பேறிய உனது தோள்கள், அவர்களைக் காத்துவரும் அளவை அறிந்துகொள்ளலாம்.

துஷ்யந்தன் — உமது குலகுரு அங்கிருக்கின்றாரா ?

வைகாநஸர் — இல்லை ; தாம் இல்லாத காலத்தில், வரும் விருந்தினரை உபசரித்து ஏற்றுக்கொள்ள, தமது மகள் சகுந்தலையை நியமித்துவிட்டு, அவர் அவளுடைய விதியின் கொடுமையைத் தணிப்பதற்கு, தேவதாராதனம் செய்ய இப்பொழுதுதான் ‡ சோமதீர்த்தத்திற்குச் சென்றார்.

துஷ்யந்தன் —(உள்ளுக்குள்ளேயே) நல்லது ; நான் அவளைக்காண்பேன்; [உரக்க] மஹர்ஷியினிடத்தில் எனக்குள்ள நன்குமதிப்பை அவள், அவர்க்கு அறிவிப்பாள்.

வைகாநஸர் — நாங்கள் விடை பெற்றுக்கொள்ளுகிறோம்.

[சிஷ்யருடன்செல்கின்றார்.]

துஷ்யந்தன்— ஸாரதி ! குதிரைகளைத் தூண்டு ; இந்தப் பரிசுத்தாசிரமத்தைத் தரிசித்து, நமது ஆத்ம சுத்தந் தேடிக்கொள்வோம்.

ஸாரதி — ஆயுஷ்மான் ! தங்கள் சித்தம் எனது பாக்கியம்.

(இரதத்தை வேகமாய்ச் செலுத்துகிறான்.)

துஷ்யந்தன் — (சுற்றுமுற்றும் பார்த்து) இது, தபோவனத்திலுள்ள ஆசிரமம் என்று, யாருஞ்சொல்லாமலே, தெரிந்துகொள்ளக் கூடியதாயிருக்கின்றது.

ஸாரதி— எப்படி ?

துஷ்யந்தன் — என்ன ! நீ கவனிக்கவில்லையா? இதோ பார். கிளிகள் இருக்கும் மரப்பொந்துகளிலிருந்து காட்டுத்தானியங்கள் அம்மரங்களின் கீழ்ச் சிந்திக்கிடக்கின்றன. இதோ, இன்னுஞ் சில இடங்களில் கற்கள், புங்கம்பழத்தை நசுக்கினபடியால் எண்ணெய் கசிவுதோன்றக்கிடக்கின்றன. இதோ பார் ; இந்த மான்கள், சத்தத்தைக் கேட்டபின்னும் தாம், பழகிப் பயமற்றிருப்பதனால், ஓடாமல் துள்ளுகின்றன. இதோ, இந்த நீர்

‡ சோமதீர்த்தம்—இந்தியாவின் மேற்குக் கரையில், கூர்ச்சர நாட்டில், சோமநாதபுரத்திற் கருகேயுள்ள பிரபாஸம என்னும் ஒரு புண்ணிய தீர்த்தம்

கிளைகளுக்குச் செல்லும் வழிகளிலெல்லாம் பாவுரியோரங்களி லிருந்து வடிந்த நீர்த்துளிகள் வரிசை வரிசையாய்ச் சொட்டியிருக்கின்றன. இன்னும் * காற்றடிப்பதினால் அலைவீசும் கால்வாய்த தண்ணீரில், மரங்களின் வேர்க்கற்றைகள் முழுகி அலை கின்றன; ஹோமப் புகையால் இளந்துளிர்களின் நிறம் மங்கியிருக்கின்றது; தருப்பைப் புல்லின் கொழுந்தை அறு த்துவிட்ட நிலத்தில் பெட்டைமான் கன்றுகள் புற்களைக் கறித்து அச்சமின்றி உலாவுகின்றன.

ஸாரதி — ஆம்; எல்லாந் தெரிகின்றன.

துஷ்யந்தன் — (சிறிது முன்னேபோய்) இந்தத் தபோவனவாசிகளுக்கு இடைஞ்சல் உண்டாகாதபடி, தேரை இங்கேயே நிறுத்து; நான் இறங்கி விடுகின்றேன்.

ஸாரதி — கடிவாளத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டேன்; ஆயுஷ் மான்! இறங்கலாம்.

துஷ்யந்தன் — (இறங்கி) ஸாரதீ! தபோவனங்களிற் சாதாரண ஆடை அணியோடு நுழைய வேண்டும். இந்தா; இவைகளை வைத்துக் கொள். (வில்லையும் அணிகளையும் கொடுக்கிறான்.) ஸாரதீ! இவ்வாசி ரம வாசிகளை நான் கண்டு திரும்புவதற்குள், இக்குதிரைகளைத் தேய்த்துக் குளிப்பாட்டி, நீர் ஊட்டி இளைப்பாற்றிச் சித்தமாய் வைத்திருக்கவேண்டும்.

ஸாரதி — அப்படியே. (போய்விடுகிறான்.)

துஷ்யந்தன் — (நடந்துகொண்டே சுற்றிலும்நோக்கி) இவ்வாசிரம வாசல் இதோ இருக்கின்றது; நான் உள்ளே நுழைவேன். (நுழையும் போதே நற்சகுனம் தோன்றுகிறது.) * இது சாந்தகுணசீலர்க ளாகிய முனிவர்கள் வசிக்கும் ஆசிரமமாயிருந்தும், எனது வலது புஜம் துடிக்கின்றது. அதன் பலன் இங்கு எப்படி கிடைக்கக் கூடும். ஆனாலும் என்ன, சுபா சுபபலன்கள் சம்பவிப்பதற்கு நாடென்றும் காடென்றும் இருக்கிறதா?

(திரைமறைவில்)

இந்த வழிதான்; தோழிமார்களே! இந்த வழிதான்.

துஷ்யந்தன் — (உற்றுக் கேட்டு) ஆஹா! இந்தத் தோப்புக்கு வலது

புறத்திலிருந்து, ஏதோ பேசுங்குரல் கேட்கிறதே ; நான் அங்குப் போவேன். (நடந்து போய்க்கொண்டே சுற்று முற்றும் பார்த்து) ஆஹா! இதோ, ஆசிரமத்துக் கன்னியர்கள் தத்தம் சக்தி யநுசாரம் தண்ணீர்க்குடங்களை எடுத்துக்கொண்டு, சிறு செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற இங்கு வந்துகொண்டிருக்கின்றார் கள். (அவர்களை உற்றுப் பார்த்து) ஆஹா! இவர்கள் எத்தனை அழ காய் இருக்கின்றார்கள்! * ஆசிரமத்துப் பெண்களினுடைய இந்த அழகின் மேன்மை, நாகரிகம் மலிந்த அந்தப்புரத்திலும் காணக்கிடையாது ; உண்மையிலேயே, உத்தியான வனத்திலுள்ள பூங்கொடிகளிலும் சிறந்த கொடிகள் காட்டில் வளர்வன இல்லையா ? நான் இந்த மரநிழலில் மறைந்திருந்து இவர்களைக் கவனிப்பேன்.

(பார்த்துக்கொண்டே நிற்கிறான்.)

(முன்சொன்னபடியே நீர் நிறைந்த குடங்களை யேந்திச் சகுந்தலையும் தனது தோழிமார் இருவரும் மரங்களுக்குத் தண்ணீர் வார்க்கப் பிர வேசிக்கிறார்கள்.)

சகுந்தலை — இவ்வழிதான் ; எனதன்புள்ள தோழியர்களே ! இவ் வழிதான்.

அனசூயை — அன்புள்ள சகுந்தலா ! நமது அப்பா, கண்வர்—உன் மேல் வைத்திருக்கிற பிரியத்தைவிட, இந்த ஆசிரமத்திலுள்ள இளஞ் செடிகளின்மேல் அதிகப்பிரியம் வைத்திருக்கிறார் என் றெண்ணுகிறேன் ; ஏனென்றால், அன்றலர்ந்த மல்லிகை மலர் போல், மெல்லியளாயிருக்கும் உன்னை, அச்செடிகளைச் சுற் றிலும் உள்ள பாத்திகளில் நீர் நிரப்பும்படி ஏற்படுத்தி யிருக்கி றாரே !

சகுந்தலை — பிரியமுள்ள அனசூயா ! எங்க ளப்பா வுத்தரவு மாத்திர மல்ல ; எனக்குக்கூட அம்மரங்களினிடத்தில் சகோதர வாஞ்சை யுண்டு.

(செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கிறாள்.)

துஷ்யந்தன் — இம்மின்னொளியாள் தான் கண்வ மஹர்ஷியின் மகளா யிருக்கலாமோ ? கண்வர் காசியப கோத்திரத்தில் உதித்த

உத்தம விவேகியாயிருந்தும், தகுதி யின்னதென்று அறியாமற் போனாரே! * இயற்கை யழகமைந்த இந்தப் பெண்மணியின் திருமேனியை தவத்திற்குரிய கஷ்டங்களுக்கு உட்படுத்துவதானது நீலோற்பல மலரின் மெல்லிய இதழால் முதிர்ந்த சமுத்தின் அடியை அறுக்கத் துணிவதோடொக்குமே யன்றி வேறாகாது. நல்லது; இம்மா மறைவிற் பதுங்கியிருந்து, நான் அவளைக் கண்ணாரக் காண்பேன்; இல்லாவிட்டால் அவள் சந்தேகப்படுவாள்.

[அப்படியே மறைகின்றான்.]

சகுந்தலை — அடீ, என தன்புள்ள அனசூயே! பிரியம்வதை, என் மரவுரிக் கஞ்சுகத்தை என் மார்பில் அழுந்தும்படி இறுக்கிக் கட்டிவிட்டாள்; இதைக் கொஞ்சந் தளர்த்திவிடு.

அனசூயை—அப்படியே. (அதனைத் தளர்த்தி விடுகின்றாள்.)

பிரியம்வதை—(புன்சிரிப்புடன்) என்னை ஏன் நிந்திக்கிறாய்? உனது மார்பைப் பருக்கவைக்கும் மங்கைப் பருவத்தை யல்லவோ நிந்திக்க வேண்டும்.

(அகவல்)

துஷ்யந்தன்—† வெள்ளிய புறவிதழ் மேலெலா மூடி
உள்ளுற மலர்முகிழ் உறைவது போல
மரவுரி யாடை மறைத்தகா ரணத்தால்
இவளழ கெல்லாம் என்றன்
கண்களுக் ககப்படா தாந்துள வன்றே.

இன்னும் நான் என்ன சொல்வேன்! இந்த மரவுரியாடை, இவளுடைய சிறு வயதுக்குத் தகாததுதான்; ஆனாலும், இதுகூட இவளுக்கோரழகுண்டாக்கி இருக்கின்றது. * சடைப் பாசியினாற் சூழப்பட்டிருந்தாலும், தாமரை அழகாகவே தோற்றும்; சந்திரனிற் களங்கம் கறுப்பாயிருந்தும் அதன் அழகை அதிகப்படுத்துகின்றது; இந்தச் சுந்தரமங்கை, மரவுரி யணிந்திருந்தும் அழகு மிகுந்து விளங்குகின்றாள். இயற்கை அழகமைந்துள்ள உருவங்களுக்கு, அழகு செய்யாத பொருளும் உண்டோ?

சகுந்தலை—(முன்னோக்கினபடியே) அதோ, அந்த மகிழமரம் தென்றற் காற்றில் அசையும் தன் தளிர்களாகிய விரல்களால், என்னை

துஷ்யந்தன்—(தனக்குள்) என்ன விடை கூறலாம்? காட்டிக்கொள்ளலாமா? மறைக்கலாமா? இருக்கட்டும்; இவ்வாறு கூறலாம்: (உரக்க) நான், புருகுல மன்னனால் அனுப்பப்பட்ட நீதிமத விசாரணைத் தலைவன்; இப்பரிசுத்தாசிரமத்தில், துறவிகளுடைய தவவொழுக்கங்கள், தடையின்றி நடைபெறுகின்றனவா என்றறிய வந்திருக்கின்றேன்.

அனசூயை—ஆனால், துறவிகளுக்கு, இப்போது, † காவலர் ஒருவர், ஏற்பட்டுவிட்டார்.

[சகுந்தலை, காதலும் நாணமும் கலந்து விளங்குகின்றாள்.]

பிரியம்வதையும் அனசூயையும்— [சகுந்தலையின் குறிப்பையும் அரசன் குறிப்பையுங் கண்டு, சகுந்தலையோடு மெதுவாய்] ஏடி, சகுந்தலா! அப்பா, கண்வர் இப்போது இங்கே இருந்தால்—

சகுந்தலை —(கோபத்தோடு) இருந்தால் என்ன?

பிரியம்வதையும் அனசூயையும் — தம்மிடத்துள்ள அருமையான பொருள் ஒன்றை, இந்தப் பெருமையான விருந்தாளிக்குக் கொடுத்து மகிழ்விப்பார்.

சகுந்தலை —உங்களுக்கு ஒன்றும் வேலையில்லை; அதனாலேதான், உங்கள் மனதிலே என்னென்னவோ தோன்றுகிறது. உங்கள் பேச்சைக் கேட்கவே மாட்டேன்.

துஷ்யந்தன்—கன்னிகைகாள்! உங்கள் தோழியைப்பற்றி நானும், சில விஷயங்கள், கேட்கலாமா?

பிரியம்வதையும் அனசூயையும்—தங்கள சித்தம் எங்கள் பாக்கியம்.

துஷ்யந்தன்—கண்வர் துறவற நிலையில நிற்பவர்; உங்கள் தோழியாகிய இவள், அவர்க்கு மகளானவ தெப்படி?

அனசூயை—சொல்கிறேன்; கேளுங்கள: கௌசிக குலதிலகராகிய விஸ்வாமித்திரர், ராஜர்ஷி—

துஷ்யந்தன் — அவர் பெருமை நன்றாய்த் தெரியும்.

---

† காவலர்=பாலகர்=பாதுகாப்பவா என்றும், அரசர் என்றும் இருபொருள் படுகின்றமை காண்க

அனசூயை — அவர்தான், எங்கள் தோழிக்குத் தந்தை ; அவர் விட்டு விட்டுப் போனதுமுதல், இவளை வளர்த்து வருவதனால், கண்வரும் இவளுக்குப் பிதாவாயினர்.

துஷ்யந்தன் — "விட்டுவிட்டுப் போனார்" என்றது, விநோதமாயிருக்கின்றது ; முதலிலிருந்து கேட்க விரும்புகின்றேன்.

அனசூயை — அப்படியே கேட்கலாம் : ஒரு காலத்தில், அந்த ராஜர்ஷி கடுந்தவம் புரிவாராயினர்; தேவர்கள் பயந்ததனால், அவர்தவத்தை அழிக்க, மேனகை என்னும் தேவமாதை அனுப்பினார்கள்.

துஷ்யந்தன் — மற்றவர் செய்யும் தவத்தைக்கண்டு, மனமழிவது, தேவர்களுக்கு இயற்கைதான். பிறகு ?

அனசூயை — பிறகு, வசந்தகால முதலில், வந்து தோன்றிய அம்மேனகையின் ரூபலாவண்யத்தைக் கண்டு —

(சொல்ல வெட்கப்பட்டு, நிறுத்திவிடுகிருள்.)

துஷ்யந்தன் — அப்பால் நடந்தது, தெரிந்ததுதான், அப்படியானல், சகுந்தலைக்குத் தாய், தேவஸ்த்ரீ ?

அனசூயை — சரி : அப்படியே.

துஷ்யந்தன் — அதுதான் சரி ; * மானுடப் பெண்பெற்ற மகளுக்கு இத்தனை அழகேது ? மின்னற்கொடி விண்ணினின்று தோன்றுமேயல்லது மண்ணினின்று தோன்றமாட்டாது.

[சகுந்தலை நாணி முகங் கவிழ்ந்திருக்கின்றுள்.]

துஷ்யந்தன் — (தனக்குள்) எனது ஆசைக்கு இடம் உண்டாயிற்று ; ஆகினும், "இவள் தகுந்த வரனைப்பெற எண்ணுகிருள்" என்று இவளுடைய தோழி பரிகாசமாய்ச் சொன்னதனல் என் மனம் இன்னும் தடுமாறுகின்றது.

பிரியம்வதை — (புன்சிரிப்புடன் சகுந்தலையை நோக்கிப் பிறகு அரசன் பக்கம் திரும்பி) தாங்கள், இன்னும் என்னவோ கொஞ்சம், பேச விரும்புவதுபோலத் தோற்றுகின்றது.

(சகுந்தலை தன் தோழிக்கு, விரலால் சைகை காட்டிக் கண்டிக்கிருள்.)

துஷ்யந்தன் — உனது உத்தேசம் சரிதான் ; நல்லார் சரித்திரத்தைக் கேட்கும் அவாவால், இன்னும் சிலவற்றை, நான் கேட்க வேண்டி இருக்கின்றது.

பிரியம்வதை — யோசிக்கவேண்டாம்; என்ன வேண்டுமானாலும் துறவற நிலையில் நிற்பவர்களை, தாராளமாய்க் கேட்கலாம்.

துஷ்யந்தன் — உன் தோழியைப் பற்றி இன்னும் சில விஷயம், நான் அறிய விரும்புகின்றேன : * காதற்பெருக்கைக் கழிக்கத்தக்க **வைகாநஸ** விரதத்தை, இவள் மணம்புரியும் வரையில்தான் அனுஷ்டிக்கப் போகின்றனளோ ? அல்லது கண்ணழகுடைமையால் தான் விரும்பியிருக்கிற பெண் மான்களுடன் தன் ஆயுள் முழுவதும் காலங்கழிக்கப் போகின்றனளோ ?

பிரியம்வதை — ஐய ! தவநெறியில் நிற்கும் விஷயத்திலும் இவள், தன்னை எடுத்து வளர்த்த பிதாவுக்கு அடங்கியிருக்கின்றாள் ; ஆகிலும், அவர், இவளைத், தக்க வரனுக்கு மணம்புரிவிக்க எண்ணியிருக்கின்றார்.

துஷ்யந்தன் — (தனக்குள்) நெஞ்சே ! நீ கோரினது கிடைக்காமற் போகாது ; தேறியிரு. * உனது சந்தேகம் ஒழிந்தது : தீண்டாத் தீயென நினைந்தது, விரும்பித் தொடத்தக்க விலையிலா மணியாய் விளங்குகின்றது.

சகுந்தலை — [கோபிக்கிறதுபோல நடித்து] அனசூயா, நான் போகின்றேன்.

அனசூயை — ஏன் ?

சகுந்தலை — அம்மா, கௌதமியிடத்திற் போய், பிரியம்வதை என்னென்னவோ பிதற்றுகிறாள் என்று சொல்லுகிறேன்.

அனசூயை — அன்புள்ள சகுந்தலா ! நீ, இப்படிப் போவது சரியல்ல ; வாராத விருந்து வந்திருக்கிறது தெரிந்தும், ஆசிரமத்தில் இருக்கிற நீ, அதைப் பாராததுபோல, ஒரு மரியாதையும் செய்யாமற் போய்விடலாமா ?

[சகுந்தலை ஒன்றும் சொல்லாமல் புறப்படுகிறாள்.]

துஷ்யந்தன் — (தனக்குள்) ஆ ! இவள் ஏன் போக முயல்கின்றாள் ? (பிடித்திழுக்க விரும்பியும், தன்னைத்தானே தடுத்துக்கொண்டு) * காதலுற்றோர்க்கு, மனம் வேறு செய்கை வேறாகின்றன; துறவியின் மகளைத் தொடர எண்ணின எனது நல்லொழுக்க நெறி என்னைத்

தடுத்து நிறுத்தினது: நான் இருந்த இடத்தில் அசையாதிருந்தேன். ஆயினும் அவளைப் பின்தொடர்ந்து சென்று திரும்பினவன் ஆகின்றேன்.

பிரியம்வதை — (சகுந்தலையை நிறுத்தி) தோழீ! நீ, போவது தகாது.

சகுந்தலை—(முகத்தைச் சுளித்து) ஏன் சொல்லு?

பிரியம்வதை — இன்னும் இரண்டு செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டாமா? நீ, முன்னேயே எனக்குச் சொல்லவில்லையா? வா; கடனைத் தீர்த்து விட்டுப்போ;

[இப்படி அவளை வலுகட்டாயம் பண்ணித் திருப்புகிறாள்.]

துஷ்யந்தன் — அம்மணீ! இவளைவிட்டுவிடு; இதுவரையில் தண்ணீர் ஊற்றிக் கஷ்டப்பட்டதனாலேயே, இவள், களைத்துப் போயிருக்கின்றாள். * தண்ணீர்க் குடத்தைத் தாங்கினபடியால், இவள் தோள்கள் சோர்ந்தன; கரங்கள் செக்கச் செவேலெனச் சிவந்திருக்கின்றன. இன்னமும் பெருமூச்செறிகின்றதனால், இவளது மார்பகம், ஏறியும் இறங்கியும் அசைகின்றது. முகத்தில் அரும்பிய வியர்வைத் துளிகள், மிகுந்திருக்கின்றமையால், இவள் செவியிலணிந்த சிரீஷமலரை விழாமல் தடுக்கின்றன; கூந்தற் கட்டுக் குலைந்தவிழ்ந்திருப்பதனால், விரிந்துள்ள அதனை இவள், தனது கரத்தாற் சேர்த்துப் பிடித்திருக்கின்றாள். ஆகையால், இவள் கடனை நான் தீர்த்துவிடுகின்றேன்.

[தனது மோதிரத்தைப பிரியம்வதையிடத்திற் கொடுக்க நீட்டுகிறான்; அவளும் அனசூயையும் அதன்மேற் செதுக்கியிருக்கும் துஷ்யந்தன் என்னும் பெயரை வாசித்து, ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளுகிறார்கள்.]

துஷ்யந்தன் — என்னைப்பற்றி, வேறுவிதமாக நினைத்து மலைக்க வேண்டாம்; இந்த மோதிரம், அரசன் கொடுத்தனுப்பினது.

பிரியம்வதை — அப்படியானால், இது, அந்த விரலைவிட்டுப் பிரியப்படாது; தங்களுடைய அருமையான வாய்ச்சொல்லாலேயே, அவளுடைய கடன் தீர்ந்து விட்டது [புன்சிரிப்புடன்] தோழீ,

சகுந்தலா ! இந்தப் புண்ணிய புருஷர், கண்ணிய அரசர், உன் கடனைத் தீர்த்துவிட்டார்; இனி நீ போகலாம்.

சகுந்தலை — (தனக்குள்) என் இஷ்டப்படி நடக்க எனக்கே சுதந்தரம் இல்லையே ! (உரக்க) என்னைப் போ என்கிறதற்கும், வா என்கிற தற்கும் நீ யார் ?

துஷ்யந்தன் — (சகுந்தலையைப பாரத்துக்கொண்டே தனக்குள்) நாம், இவள் விஷயத்தில் மனஞ்செலுத்தி யிருப்பதுபோல, இவளும் நம் விஷயத்தில் இருப்பாளா ! ஏன் ? எனது ஆசைக்கு இடம் இருக்கிறது : * நான் பேசுங்காலத்தில் இவள், கலந்து பேசாமல் இருப்பாளாயினும், நான் பேசும் பேச்சுகளைச் செவிகொடுத்துக் கேட்கின்றாள். என்னெதிரில் தனது முகங்காட்டி நில்லாளாயினும், தனது பார்வைக்கு நானன்றி வேறு பொருள் கிடையாது.

(திரைக்குப் பின்னால்)

துறவிகாள் ! ஆசிரமத்து மிருகங்களைக் காப்பதற்குச் சித்தமாக எல்லாரும் சேரவாருங்கள் ; துஷ்யந்த மஹாராஜா, வேட்டையாடிக்கொண்டே, இதோ வந்து விட்டார் : * குதிரைக் குளம்படியிற் கிளம்பிய புழுதி, அந்தி வெய்யிலில் தகதகவென மின்னிக்கொண்டு, ஈரமரவுரி ஆடைகள் தொங்கவிட்டிருக்கிற மரக்கிளைகளில், வெட்டுக்கிளிக் கூட்டம் போல வந்து விழுகின்றது. அன்றியும், அரசன் தேரைக் கண்டு மருண்ட யானை ஒன்று, நமது தவங்களனைத்தும் கெடவும், மான் கூட்டம் மருளவும், முரட்டுத் தனத்தால் முறித்த மரக்கிளை, தனது தந்தங்களி லொன்றிற் குத்திக்கொண்டிருக்கவும், பாசம்போலச் சுற்றின கொடிகளின் சருகைக் கால்களால் இழுத்துக்கொண்டு தபோவனத்தில் நுழைய வருகின்றது.

[எல்லாரும உற்றுக்கேட்டுத் திகைக்கின்றார்கள்.]

துஷ்யந்தன் — (தனககுள்) அடடா ! நமது பரிவாரங்கள் நம்மைத் தேடிக்கொண்டு வருவதனால், இநத ஆசிரமவாசிகள், கலங்குகிறார்கள். நல்லது ; தற்காலம் நாமே அவர்களை, எதிர்கொண்டு போவோம்.

இதனால் இந்தக் காட்சியின் காலம் பிற்பகலாகக் கொள்ளப்பட்டது.

அனசூயை—ஐயா ! இந்தக்காட்டானை வருவதால், நாங்களும் கலங்கியிருக்கின்றோம் ; எங்கள் ஆசிரமத்துக்குப்போக தயைசெய்து உத்திரவு கொடுங்கள்.

துஷ்யந்தன்—[அவசரமாய்] அம்மைமீர் ! நீங்கள் போகலாம் ; எங்களால் ஆனவரையில் முயன்று, தபோவனத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் செய்கிறோம்.

[எல்லாரும் எழுந்திருக்கிறார்கள்.]

பிரியம்வதையும் அனசூயையும்—உத்தம புருஷ ! சரியாய் உபசாரம் செய்யாத படியால், நாங்கள், தங்களை மறுமுறை வரவேண்டுவதற்கு நாணுகின்றோம்.

துஷ்யந்தன்—அப்படிச் சொல்லவேண்டா ; உத்தமிகளாகிய உங்களைக் கண்டதனாலேயே, நான், எல்லா உபசாரமும் பெற்றவனானேன்.

[காரணம் இல்லாமலே தங்கித்தங்கிச் சகுந்தலை, தன் தோழிமார் இருவருடன் போய்விட்டாள்.]

துஷ்யந்தன் — பட்டணத்துக்குத் திரும்பிப்போக மனம் இல்லை ; ஆனாலும், எனது பரிவாரங்களுடன் சேர்ந்து, இவ்வாசிரமத்துக்குச் சமீபத்திலேயே, அவர்கள், கூடாரம் அடிக்கச்செய்வேன். சகுந்தலை நினைப்பைவிட்டு எனது மனதை வேறுவழியிற் செலுத்த முடியவில்லை. * காற்றெதிரிற்பட்ட கொடிமரத்தின் பட்டாடைபோல, எனதுடலம் முன்னே செல்கின்ற தென்றாலும், எனது மனது அதனிற் பிரிந்து பின்னே செல்கின்றது.

(முதலங்கம் முடிந்தது.)

இரண்டாம் அங்கம்

இடம் : ஆசிரமத்துக்கடுத்த மணல்வெளி.

பாத்திரங்கள் : விதூஷகன், துஷ்யந்தன், யவனப் பெண்கள், ரைவதகன் (வாயில் காவலன்), சேனாபதி, பரிஜனங்கள், கௌதமன், தாண்டாயனன் (இரண்டு சிஷ்யர்கள்), கரபகன் (துஷ்யந்தன் தாயாரின் தூதன்).

[களைத்துச் சோர்ந்து விதூஷகன் பிரவேசிக்கிறான்.]

விதூஷகன் — [பெருமூச்சு விட்டுக்கொண்டு] ஐயோ! வேட்டையாடுவதையே பெரிய வேலையாகக்கொண்டிருக்கிற இந்த வேந்தனோடு சேர்ந்து, நான், செத்துச் சுண்ணாம்பாய்ப் போகிறேனே! 'இதோ ஒரு மான்' 'அதோ ஒரு பன்றி' 'அதோ ஒரு புலி' எப்போதும் இதே கூச்சல்; இப்படிக் கூவிக்கொண்டே இராத்திரி யென்றும் இல்லை; பகலென்றும் இல்லை; காட்டுப் புதர்களுக்குள் நுழைந்து ஓடிக்கொண்டே இருக்கவேண்டும்; வெயில் என்றும் கிடையாது; கானல் என்றும் கிடையாது! மரநிழலாவது உண்டா? தாகமாயிருந்தோம்! என்ன குடிக்கிறது! மலை அருவித் தண்ணீர்தான், அதுவும் சருகுகள் விழுந்து, அழுகிக் கசப்பெடுக்கும்; ஜில்லென்றாவது இருக்குமா? வெயிலுக்குக் கதகதவென்று சுடும். வேளைக்கு உண்பது கிடையாது; அதுவும், வேட்டையிற் கொன்ற மிருகங்களின் இறைச்சியை நெருப்பிற் காய்ச்சின உணவு தவிர

வேறுகிடையாது ; குதிரைக்குப் பின்னாலே ஓடி ஓடி மூட்டு மூட்டுக்குச் சுளுக்கு நோவெடுத்துக் கொண்டிருக்கிறதே ! இராத் திரியிலுந் தூக்கங் கிடையாது. அதவா, தூங்கினாலும், அதிகாலை யில் பேரிரைச்சல் போடுகிறார்கள் அந்த வேடப் பட்டி மக்கள்; அவர் கள், காட்டைக்கலைத்து, வேட்டைக் கிடம்பண்ணுகிறார்களாம். எப்படித் தூக்கம்வரும் ? துக்கந்தான் வரும்; இதோடு என்துக்கந் தொலைந்ததா? உகிர்ச்சுற்றின்மேல் அம்மிக்கல் விழுந்தபடி நேற்று ஒரு சங்கதி: எங்களையெல்லாம், பின்னாலே விட்டு விட்டு, இந்த அரசர், ஒருமானைத் துரத்திக்கொண்டு போனார்; அது ஆசிர மத்தில் நுழைந்தது. இவரும் அதற்குள் நுழைந்து, அந்த நாற்கால் மானைவிட்டு, இருகால் மான் ஒன்றைக் கண்டுவிட்டார்; ஐயோ ! அதிஷ்டமே ! இந்த மான் பேர் சகுந்தலையாம்; இந்த மானைக் கண்டது முதல் ஐயாவுக்குப் பட்டணத்து ஞாபகமே கிடையாது; இன்றுகாலையில் கூட, எழுந்திருக்கும்போதே, அவள் நினைவுதான், என்னசெய்யலாம் ? நித்யகடனை முடித்தி ருப்பார்; நான் போய்க்காணுகின்றேன். (சுற்றித்திரிந்து பார்க்கிறான்.) இதோ வருகிறார் நமது நண்பர்; நம்மை நோக்கியே வந்து கொண் டிருக்கின்றார்; † யவனப் பெண்கள் சூழ வருகிறார்; அவர்கள் கழுத் திற் காட்டுப்பூமாலையையும், கைகளில் விற்களையும் தாங்கிக்கொ ண்டிருக்கிறார்கள். இருக்கட்டும் ; கைகால் இழுத்துக்கொண்ட முடவனைப் போலப் பாவனை காட்டி, நின்றுகொண்டிருக்கலாம் ; அப்படியாவது நமக்குத் தொல்லை ஒழியட்டுமே !

(தனது கோலின்மேற் சாய்ந்து நிற்கிறான்.)

[பிறகு துஷ்யந்தன், மேற்கூறியபடி பரிவாரங்களுடன் நுழைகின்றான்.]

துஷ்யந்தன் — (தனக்குள்) * என்னாசை மின்னாள் எனக்குக் கிடைத் தற்கு அருமையானவள் ; ஆனாலும் அவளுடைய காதற்குறிப் புகளைக் கண்ட எனது மனம தேறியிருக்கின்றது. காதற்பலன் இன்னுங் கைகூடாவிட்டாலும், இருவர்க்கிடையிலும் உள்ள

---

† யவனப் பெண்கள்=யவனதேசத்துப் பெண்கள் இந்ததேசம ஆப் கானஸ்தானம், பாக்திரியா அல்லது தார்தரி இவற்றுள் ஒன்றின்பெயரென்று ஊகிக்கப்படுகின்றது அரபி தேசத்தை சிலரும் கிரேக்க தேசத்தை சிலரும் யவனதேசமென்று வழங்குவதுமுண்டு.

அவாவே இன்பந் தருகின்றது. (புன்சிரிப்புடன்) தனது காதலி யின் உணர்ச்சியும், தனது உணர்ச்சியைப் போலவே யிருக்கும் என்று எண்ணுகிற படியால், காதலன் பித்தனுகின்றான்: வேறு எங்கேயோ பார்த்தாளாயினும், அவளது பார்வை, நயமா யிருந் தது; தனது இடுப்பின் பளுவாற் மையை நடந்தவளைப் பரிகாசங் காரணமாகத் தனது தோழி, 'நீ போகாதே' என்று நிறுத்தினாள்; அதற்கு அவள், தனது தோழியை நிந்தித்துப் பேசினாள்; இவை யாவும் என்மேல் அவட்குள்ள காதற் குறிகளேயாம். ஆஹா! தனது காதலியின் செய்கைகள், தன்பொருட்டென்று நினைப்பது காதலற்கு எத்தனை சகஜமாய் இருக்கின்றது!

விதூஷகன் — (அப்படியே நின்று கொண்டு) ஓ நண்பரே! என் கையுங் காலும் நீட்ட முடியவில்லை; ஆகையால், உம்மை வாயால் மாத்தி ரம் வாழ்த்துகின்றேன்.

துஷ்யந்தன் — (புன்சிரிப்புடன்) உனக்கு எதனால், இந்தக் கைகால் பிடிப்பு வந்தது?

விதூஷகன் — நீரே, கண்ணைக் குத்திவிட்டு, கண்ணீர் ஏன் வருகின்ற தென்று கேட்கின்றீரே?

துஷ்யந்தன் — உண்மையில், நீ, சொல்லுகிறது எனக்கு விளங்கவில்லை.

விதூஷகன் — ஓ நண்பரே! நாணல், கூனன்போல் வளைவது, தன்னா லேயா? ஆற்று நீர் ஓட்ட விரைவினாலேயா?

துஷ்யந்தன் — அதற்கு ஆற்று நீர் ஓட்ட விரைவுதான் காரணம்.

விதூஷகன் — எனது கைகால் பிடிப்புக்கு, நீர்தான் காரணம்.

துஷ்யந்தன் — எப்படி?

விதூஷகன் — இராஜ காரியங்களை அறவேமறந்து, இந்த இருண்ட காட்டில், வேடனைப்போல வாழ்கின்றீர். உமக்கு உண்மையைச் சொல்லுகின்றேன்; காட்டுமிருகங்களைப் பின்தொடர்ந்து, நாள் தோறும் ஓடி, ஓடி, என் கைகால்கள், மூட்டுவிட்டுப் போயிருக் கின்றன; அவைகள் என் வசத்தில் இல்லை; ஆகையால், நான் ஒரு நாளைக்கேனும், இளைப்பாறும்படி, நீர், தயைசெய்து உத்தரவு

கொடுக்கவேண்டும் என்று, உம்மை இரந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்.

துஷ்யந்தன் — (தனக்குள்) இவனும் இப்படிச் சொல்லுகிறான்; காசியபருடைய மகளை நினைந்து நினைந்து என்மனமும் வேட்டையை வெறுத்திருக்கின்றது. ஏனென்றால்: * எனது காதலியோடு கூடிப்பழகி, அவளுக்குத் தமது பார்வைகளைப் பழக்கி வாழும் இந்த மான்களின்மேல், எனது வளைத்தவில்லில் தொடுத்த அம்பெய்ய வலியற்றிருக்கின்றேன்.

விதூஷகன் — (அரசன் முகத்தை உற்றுநோக்கி) நீர் எதையோ நினைத்து, அதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கின்றீர்; நான் கேட்டுக்கொண்டது எங்கேயோ, காட்டில் அழுத அழுகையாய்ப் போய்விட்டது.

துஷ்யந்தன் — (புன்சிரிப்புடன்) வேறொன்றுமில்லை; சிநேகிதன் வார்த்தையை அவமதிக்கப் படாதென்பதைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கின்றேன்.

விதூஷகன்—நீர், நீடூழி வாழ்க. [போக முயல்கின்றான்.]

துஷ்யந்தன்—நண்ப! சற்று நில்லு; இன்னும் கொஞ்சம் பேசவேண்டி இருக்கிறது.

விதூஷகன்—உமது கட்டளைக்குக் காத்துக்கொண்டிருக்கின்றேன்.

துஷ்யந்தன்—நீ, இளைப்பாறியபின், கஷ்டமில்லாத மற்றொரு காரியத்தில், எனக்கு உதவி செய்யவேண்டும்.

விதூஷகன்—பலகாரம் பண்ணுகிற காரியத்திலா?

துஷ்யந்தன்—இன்னும் கொஞ்ச நாழிகையில் தெரியும்.

விதூஷகன்—இந்த நாழிகையே நல்ல நாழிகை.

துஷ்யந்தன்—இதோ, தெரிவிக்கின்றேன்: யார் அங்கே?

[வாயில் காவலன் வருகிறான்.]

ரைவதகன்—[வணங்கி] மஹாராஜா கட்டளைக்குக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

துஷ்யந்தன் — ஏ, ரைவதகா! சேனாபதியைக் கூப்பிடு.

ரைவதகன் — அப்படியே.

(போய்ச் சேனபதியை அழைத்துக்கொண்டு வந்து, அவனை நோக்கி.)

இதோ, மஹாராஜா, தங்களை எதிர்பார்த்தபடியே நிற்கிறார்; ஏதோ கட்டளையிடப் போகிறார்; சீக்கிரம் அவரைக் காணுங்கள்.

சேனபதி — (அரசனை நோக்கினபடியே மனதுக்குள்) வேட்டம் ஆடுவது துன்பந் தருவதொன்றேயாயினும், நமது அரசர், அதனால் நற்பலனையே பெற்றிருக்கின்றனர். எப்படியென்றால்: * மலையில் திரியும் யானையே போல மன்னவற்கு உடலம் வன்மையாயிருக்கின்றது; அவ்வுடலிற் கைகளும் மார்பும் வில்நாணை இடைவிடாதிழுத்தலால் இறுகியிருக்கின்றன. சூரியவெப்பத்தைப் பொறுத்துக்கொள்வதனால் வெயர்வை மிகுதியாயிருந்தும் இளைப்படையாமல் இவரது சரீரம் இளைத்திருக்கின்றது. ஆயினும் அதனில் அழகுடன் வன்மை மிகுந்திருக்கின்றது. (கிட்டப்போய்) ஜய ஜய மன்னவ! காட்டில் மிருகங்களை வளைத்து, வேட்டைக்கிடம்பண்ணியிருக்கின்றோம்; ஏன் இன்னும் தாமதிக்கின்றீர்கள்?

துஷ்யந்தன் — சேனபதீ! இந்த மாதவியன், வேட்டையை இகழ்ந்து பேசுகின்றான். ஆகையால், எனக்கு, வேட்டையில் உற்சாகம் குறைந்திருக்கின்றது.

சேனபதி — (விதூஷகனைப் பார்த்து, மறைவாய்) தடுப்பதை விடாதே; நான், அரசனுடைய குறிப்புணர்ந்து, அதற்கு இசைவாய் நடக்கின்றேன். [உரக்க] இந்த மடையன் என்னென்னவோ உளறுகின்றான்; உங்களைப் பார்க்கும்போதே, வேட்டையால் அடையும் பலன்கள் விளங்குகின்றன: * கொழுநீர் குறைந்து, அடிவயிறு சிறுத்து, தேகம் இலேசாய் இயங்குவதனாலும், காட்டு மிருகங்களின் கோபம் பயம் முதலியவைகளுடைய குறிப்பை அறிந்துகொள்ளப் பழகுவதனாலும், நிலைபெயர்ந்து ஓடும் மிருகங்களைக் குறிவைத்தடிக்கும் அற்புதப் பயிற்சியாலும் * வேட்டையே சிறந்ததாம். இதனைப் பாவகாரியம் என்று இகழ்பவர் வீணர்களே ஆவார்கள். இது போன்ற விளையாட்டு வேறொன்று எங்கேயிருக்கின்றது?

விதூஷகன் — (கோபமாய்) இராஜா, தமது நல்லறிவோடு விளங்கியிருக்கின்றார்; நீ, வேண்டுமானால், காடுகாடாய் அலைந்து, திரிந்து

கொண்டிரு ; கடைசியாக, மனிதன் மூக்கு இறைச்சியைத் தின்ன விரும்பும் ஒரு கிழக்காடி, உன்னை, பிடித்திழுத்து, வாயில் போட்டுக்கொள்ளட்டும்.

துஷ்யந்தன் — எனதன்புள்ள சேனாபதி! நாம் ஆசிரமத்துக் கருகில் இருக்கின்றோம் ; உமது வார்த்தைகளை, நான், அங்கீகரிக்க மாட்டேன் ; * காட்டெருமைகள், தமது கொம்புகளால் குட்டை களைக் கலக்கிக் குளித்துக் களிக்கட்டும்; மான்மந்தைகள் மாநிழல் களில் தங்கி, அசை போட்டுக்கொண்டிருக்கட்டும் ; குழிகளிற் கோரைக்கிழங்குகளைப் பன்றிக்கூட்டங்கள் கிண்டிக்கிளறி யுண் ணட்டும் ; நாண்பூட்டிய எனது வில்லும் அதனின் விடுபட்டு இளைப்பாறட்டும்.

சேனாபதி—தங்கள் சித்தம், எனது பாக்கியம்.

துஷ்யந்தன்—அப்படியாயின் காட்டைக் கலைப்பதற்கு எனக்கு முன்னே சென்றிருக்கிற வேட்டைக்காரர்களை யெல்லாம், திரும்பி வர வழை ; தபோவனத்திற்கு யாதொரு கலக்கமுமின்றி, சேனை களைத் தூரத்தில் வைத்துக்கொண்டிரு: * தொடுவதற்குக் குளிர்ந் துள்ள சூரியகாந்தக் கல்லானது, சூரியன் சூடுபட்ட மாத்திரை யில், நெருப்பைக் கொட்டுந்தன்மைபோல, இவ்விடத்திருக்கும் மஹார்ஷிகள் பார்வைக்குச் சாந்தர்களாய்க் காணப்பட்டாலும், கோபம் வந்தால் அடங்கியிருக்கிற கோபாக்கினியைச் சுவாலித்து விடுவார்கள்.

சேனாபதி— தங்கள் கட்டளைப்படியே செய்கிறேன்.

விதூஷகன்—அப்பாலே போடா, பட்டி மகனே! நீ என்னென்னவோ, சொன்னையே வேட்டையாட வேண்டுமென்று, உன் பேச்சு முன் னுக்கு வந்ததா ?

(சேனாபதி போய்விடுகிறான்.)

துஷ்யந்தன் — (தன்னுடைய பரிவாரப் பெண்களை நோக்கி) உங்கள் வேட் டை உடுப்புகளைக் கழற்றிவிடுங்கள் ; ரைவதகா ! நீயும், உன் வேலையைப் பார்.

பரிவாரப் பெண்கள் — தங்கள் கட்டளைப்படியே.

விதூஷகன் — பேஷ்! ஒரு ஈகூட இல்லாமல் துரத்திவிட்டீரே! நல்லது, இப்படி வாரும்; இதோ, இந்தக் கல்லாசனத்தில் உட்காரும்; இதற்கு மேலே கொடிகள் அடர்ந்து படர்ந்து குளிர்ச்சியாயிருக்கின்றது; நானுங்கூட, சௌக்கியமாய்க் குந்துகிறேன்.

துஷ்யந்தன் — நீ போய் முதலில் உட்காரு.

விதூஷகன் — ஆனால், வாருங்கள்; போவோம்.

(இருவரும் போய் உட்காருகிறார்கள்.)

துஷ்யந்தன் — விதூஷகா! உனக்குக் கண் இருந்தும் என்ன பிரயோஜனம்? அதனால், பார்ப்பதற்குத் தகுதியான பொருளை, நீ, பார்த்ததில்லையே?

விதூஷகன் — தாங்கள் தான் என் கண் எதிரே, இதோ, இருக்கின்றீர்களே!

துஷ்யந்தன் — ஒவ்வொருவனும், அவனவனுக்கு உரிய பொருளே, அரிய பொருளென மதிக்கின்றான்; ஆயினும், ஆசிரமாலங்காரப் பொருளாகிய சகுந்தலையைப் பற்றி நான் பேசுகின்றேன்.

விதூஷகன் — (தனக்குள்) இவர், அவளைப்பற்றிப் பேசாத வழி, செய்து விடுகின்றேன்; (உரக்க) ஐயா, அருமை நண்பரே! ருஷி மகளைக்கூட, கலியாணம்பண்ண ஆரம்பித்திருக்கின்றீர்?

துஷ்யந்தன்— * புருவமிசத்து மன்னர் மனங்கள் தகாத பொருள்களை விரும்பா;

விதூஷகன் — அது என்ன! ஏதும் இடமிருக்கின்றதோ?

துஷ்யந்தன் — * மல்லிகை மலர், தனது கொடியைவிட்டு நீங்கி எருக்கஞ்செடியில் விழுந்திருக்கிறபடி, மேனகை யென்னும் தேவமாது பெற்றுத் தனியாய் விட்ட இவளை, முனிவர் கண்டெடுத்தார்.

விதூஷகன் — (சிரித்து) பேரீச்சம்பழத்தைத் தின்று தெவிட்டினவன், புளியம்பழத்துக்குப் பேராசைப்படுவதுபோல, உமது அந்தப்புர மாதர்களை அலக்ஷியஞ்செய்து, இவளை விரும்புகின்றீர்.

துஷ்யந்தன் —* நீ யவளைப்பார்த்திருப்பை ஆயின், இப்படிச் சொல்லுவையா ?

விதூஷகன் — உமக்கும் இப்படிப்பட்ட அதிசயத்தை உண்டாக்கின உருவம், உண்மையில் உள்ளத்தை உருக்கத்தக்கதாகவே இருக்கும்.

துஷ்யந்தன்—நண்ப ! நான், அதிகம் கூறுவது, அநாவஶ்யம்; *பிரமதேவன், அவளைப் படத்தில் எழுதியதன்பின் உயிருண்டாக்கினனோ? உலகிலுள்ள அழகுகளையெல்லாம் ஒன்றாய்த் திரட்டிமனதாற் படைத்தனனோ ? படைத்தவனுடைய திறமையையும் அவளுடைய அழகையும் ஆராய்ந்தால், அவளே ஒப்பற்ற அழகியென விளங்குகின்றது.

விதூஷகன்—அப்படியானால், மற்ற அழகுகளை யெல்லாம், ஒதுக்கி விடவேண்டியதுதான்!

துஷ்யந்தன்—இன்னும் நான் எண்ணுகிறபடி, * அவளுடைய அழகிய திருமேனி, அன்றலர்ந்து ஆராலும் முகராத புஷ்பத்துக்கும், நகத்தாற் கிள்ளாத இளந்தளிர்க்கும், வயிரங்குடையாத மாணிக்கத்துக்கும், ஒருவர் நாவினாலும் சுவைக்கப்படாத புதிய தேனுக்க்கும் இணையாகும். முன் ஜன்மத்தில் செய்த நற்றவப்பயனெல்லாம் திரண்டுவந்திருக்கும் அத்திருவுருவை அனுபவிக்க, பிரமதேவன், எவனை உண்டாக்கி யிருக்கின்றனனோ அறியேன்.

விதூஷகன் — அப்படியானால் விரைந்து சென்று அம்மங்கையைக் காப்பாற்றக்கடவீர்; இல்லாவிட்டால், புங்க நெய்யைத் தலையிற் பூசிக்கொண்டிருக்கிற துறவிகளில் எவனாவது, அவளைச் சொந்தமாக்கிக் கொள்வான்.

துஷ்யந்தன் — அந்நங்கை, முழுவதும் பிறர்க்கடங்கி யிருக்கின்றாள்; அவள் தந்தையும் இப்போது இங்கில்லை.

விதூஷகன் — உம்மைப்பற்றிய உணர்ச்சியை, அவள் பார்வையால் எப்படிக் காட்டினாள் ?

துஷ்யந்தன் — ஆசிரமத்துப் பெண்கள் எப்போதும் கூச்சம் உள்ளவர்கள்; * நான், அவளை நேரிற்பார்த்தபோது, தனது பார்வையை

மாற்றினாள் ; வேறெதனாலேயோ, சிரித்ததாகப் பாவனை காட்டிப் புன்சிரிப்புத் தோன்ற நின்றாள். இப்படி யவள், தனது காதலை முழுவதூஉங் காட்டவும் இல்லை ; மறைக்கவும் இல்லை.

விதூஷகன்—உம்மைக் கண்டவுடனே, அவள், உமது மடிமேல் வந்து உட்கார வேண்டும் என்கிறீரோ ?

துஷ்யந்தன் — இன்னும் அவள், அச்சத்தை மேற்கொண்டவளாயினும், என்னைவிட்டுத் தனது தோழியர்களோடு போய்க்கொண்டிருந்த பொழுது, தனக்கென்மேலுள்ள காதலை வெளிப்படுத்தினாள். * சிறிது தூரம் சென்றாள்; சென்றவள், நின்றாள்; நின்று, தருப்பைப் புல் நுனி, தனது காலில் குத்திற்று என்றாள் ! மரவுரி, செடிகளில் மாட்டிக்கொள்ளாதிருந்தும், கொண்டதுபோலப் பாவனைகாட்டி, அதனை விடுவிக்கத் திரும்பினவள் போலத் தனது முகத்தை என் பக்கந் திருப்பினாள்.

விதூஷகன் — அப்படியானால், வழிப்பிரயாணத்துக்கு மூட்டை கட்டிக்கொண்டு, சித்தமாயிருக்க வேண்டியதுதான்; நீர் இந்த யோக வனத்தைப் போகவனமாக்கி யிருக்கின்றீர்.

துஷ்யந்தன் — துறவிகளிற் சிலர், என்னைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் ; ஆகையால், மறுபடியும் ஒருமுறை நான் அங்குச் செல்ல ஏதாவது ஒரு தந்திரம் சொல்லு.

விதூஷகன் — வேறே என்ன உபாயம் வேண்டும் ? நீர்தான் அவர்களுக்கு அரசராயிற்றே ?

துஷ்யந்தன் — அதனால் என்ன ?

விதூஷகன் — அவர்கள், ஆறிலொருபங்கு, காட்டுத் தானியத்திற் கடமை செலுத்த வேண்டுமெனப் போய்ச்சொல்லுமே ?

துஷ்யந்தன் — யோசனையின்றிப் பேசுகின்றனை ! துறவிகளைக் காத்து வருவதற்காக அவர்களிடத்தில் நான் பெறுங்கடமை வேறொன்றிருக்கிறது ; அஃது மாணிக்கக் குப்பையினும் மாண்புடையது. நாட்டில் வாழும் நான்கு வருணத்தாரிடத்திலும், அரசர் பெறுங் கடமை அழிந்துபோகின்றது ; காட்டில் வாழும் துறவிகள்,

தாமியற்றும் தவத்தில் ஆறிலொரு பங்காக அரசர்க்குக் கொடுக்கும் கடமை, என்றும் அழிவில்லாதது.

(திரைக்குப் பின்னல்)

நல்லவேளைக்கடையாளமாக நாமிருவரும் தேடிவந்தவரைக் கண்டு விட்டோம்.

துஷ்யந்தன் — (உற்றுக் கேட்டுக்கொண்டே) ஓஹோ! துறவிகள் குரலாயிருக்கிறது; அவர்கள்தான் இப்படி ஆரஅமரப் பேசுவார்கள்.

(ரைவதகன் வருகிறான்.)

ரைவதகன் — ஜயஜய மன்னவ! இதோ, இரண்டு ருஷி குமாரர்கள், வாசலில் காத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

துஷ்யந்தன் — அப்படியானால், அவர்களை உடனே அழைத்துக் கொண்டுவா.

ரைவதகன் — அப்படியே, அரசே!

(போய, இரண்டு துறவிகளையும் அழைத்துக்கொண்டு மறுபடியும் வருகிறான்.)

சுவாமிகாள்! இவ்வழியே வாருங்கள்; இதோ, இப்படி.

(இருவரும் அரசனை நோக்குகிறார்கள்.)

கௌதமன் — இவ்வரசருடைய தோற்றம், † கம்பீரமாயிருந்தாலும் ‡ நம்பிக்கைக்கு ஆஸ்பதமாயிருக்கின்றது; முனிவர்க்குச் சமானமான இவர்க்கு, இது, இயற்கையேயாம். * அனைவரும் வந்து ஆதித்யம் பெற்று மகிழ்வதற்கு இடமாயுள்ள ஆசிரம வாழ்க்கையை முனிவர்கள் அடைந்திருப்பதுபோல, இந்த அரசரும், அனைவர்க்கும் ஆதாரவாயுள்ள அரண்மனை இல்வாழ்க்கையிற் பொருந்தியிருக்கின்றார். ஒவ்வொரு நாளும், முனிவர்கள் யோகாப்பியாசம் செய்து வருவதுபோல, இவரும் சாந்தகுணசீலராய், தமது குடிகளைக் காத்துப் புண்ணியந் தேடிக்கொள்ளுகின்றனர். பஞ்சேந்திரிய ஒடுக்கம் என்கிற பொருள் கொண்ட

---

† கம்பீரம்= இராஜலக்ஷணமுடுக்கு. ‡ நம்பிக்கை= இரக்கமுள்ள பார்வையால், பிறர்க்கு நன்மை பயக்கும் நம்பிக்கை உண்டாக்குதல்.

"ருஷி" என்னும் பெயரை, அந்தரத்திற் சாரணர் பாடிச் செல்லும் தன்மைபோல, இந்திரிய நிக்கிரகம் பண்ணுவதால் இவருடைய பெயரையும் "ராஜர்ஷி" என்னும் சிறப்புப் பெயரால் இன்னமும் பாடிக்கொண்டே செல்கின்றனர்.

தாண்டாயனன் — கௌதமா! இந்திரனுக்கு நண்பராகிய துஷ்யந்தர் இவர்தானே?

கௌதமன் — ஆம்.

தாண்டாயனன்— * தேவாஸுரர்கள் யுத்தத்தில் அஸுரர்களை வெறுத்த தேவமாதர், இந்த அரசனுடைய வில்லையும் இந்திரனுடைய வஜ்ராயுதத்தையுமே ஜயம் பெற வாழ்த்துவது வழக்கம். ஆதலால் கோட்டைவாசற் கதவிற் றாழ்ப்பாள்போல நீண்டு பருத்த தமது தோள்களால், நாற்புறமும் கடல்வரையிற் பரவியுள்ள இந்நிலவுலகனைத்தையும் இவர் ஒருவரே பரிபாலித்து வருங்காரியம் அதிசயம் அல்ல.

கௌதமனும் தாண்டாயனனும் — (நெருங்கி) மஹாராஜாவுக்கு ஜயம் உண்டாகுக.

துஷ்யந்தன் — (ஆசனத்தை விட்டெழுந்து) உங்கள் இருவருக்கும் வந்தனம் செய்கின்றேன்.

கௌதமனும் தாண்டாயனனும் — மஹாராஜாவே! உமக்கு மங்களம் உண்டாகுக.

(பழங்களைக் காணிக்கையாகக் கொடுக்கின்றனர்.)

துஷ்யந்தன் — (அவைகளை வணங்கி ஏற்றுக்கொண்டு) தங்கள் கட்டளைக்கு எதிர்பார்க்கின்றேன்.

கௌதமனும் தாண்டாயனனும் — ஆசிரமவாசிகள், தாங்கள் இங்கிருப்பதை உணர்ந்து, பின் வருமாறு வேண்டிக்கொள்ளுகின்றனர்.

துஷ்யந்தன் — அவர்கள் கட்டளை யென்ன?

கௌதமனும் தாண்டாயனனும் — "மஹாநுபாவரான கண்வ மாமுனிவர், ஆசிரமத்தில் இல்லாமையால், இராக்ஷதர்கள், எங்கள் யாகங்

களைக் கெடுக்கின்றார்கள். ஆகையால், தாங்கள் ஸாரதியோடு, சில இரவு, எங்கள் ஆசிரமத்தில் தங்கியிருந்து, பாதுகாக்கவேண்டும்" என்பதேயாம்.

துஷ்யந்தன் — நீங்கள், இப்படி யழைக்க நான் செய்த பாக்கியமே பாக்கியம் !

விதூஷகன் — (மறைவாய் அரசனிடத்தில்) இப்பொழுது இந்த வேண்டு கோள் உமக்குத் தூண்டு கோல்தானே ?

துஷ்யந்தன்—(புன்சிரிப்புடன்) ரைவதகா! சீக்கிரம் சென்று, தேர்ப்பாக னிடத்தில் நான் சொன்னதாகத் தேரையும் வில்லம்புகளையும் கொண்டுவரச் சொல்.

ரைவதகன் — தங்கள் கட்டளைப்படியே. (போகிறான்.)

கௌதமனும் தாண்டாயனனும்—(சந்தோஷத்தோடு) உமது முன்னோர் களின் நல்வினைகளை நயந்து செய்வது, உமக்குத் தகுதியேயாம் ; உண்மை உரைக்குமிடத்து, இடருற்ற பேர்களுக்கிரங்கி உதவி செய்வதில், புருகுலத்தோர் மேம்பட்டிருக்கின்றார்கள்.

துஷ்யந்தன் — (வணங்கி) நீங்கள் முன்னே செல்லுங்கள் ; இதோ, நானும் பின்னாலேயே வருகின்றேன்.

கௌதமனும் தாண்டாயனனும் — ஜயம் உண்டாகக்கடவது.

(போகின்றார்கள்.)

துஷ்யந்தன் — விதூஷகா ! உனக்குச் சகுந்தலையைப் பார்க்க வேண் டும் என்னும் ஆவல் உண்டா ?

விதூஷகன் — முதலில் அதிகமாகத்தான் இருந்தது; இராக்ஷதர் சங் கதியைக்கேட்டபிறகு எல்லாம் அடியோடு பறந்துபோய்விட்டது.

துஷ்யந்தன் — பயப்படாதே; நீ, என் கிட்டவே இருக்கப் போகிறாய்.

விதூஷகன் — ஆனால் சரி; இராக்ஷத பயம் ஒழிந்தது.

(வாயில் காவலன் வருகிறான்.)

ரைவதகன் — தேர், சித்தமாய் மஹாராஜாவின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றது; இதோ, கரபகனும் நமது நகரத்

திலிருந்து வந்திருக்கின்றான்; மஹாராஜா அவர்களின் அன்னைப் பெருமாட்டியார், ஏதோ சமாசாரம் அனுப்பியிருக்கின்றார்கள்.

துஷ்யந்தன்— (மரியாதையோடு) மாதுஸ்ரீ அன்னையாரவர்களா, அனுப்பி யிருக்கின்றார்கள்?

ரைவதகன் — ஆம்.

துஷ்யந்தன் — அவனை உள்ளே வரச்சொல்லு.

ரைவதகன் — அப்படியே;

(போய், கரபகனை அழைத்துக்கொண்டு வருகிறான்.)

இதோ, அரசர் இங்கே இருக்கின்றார்; அவரருகிற் போ,

கரபகன் — ஜயஜய மன்னவ! உமது தாயாராகிய இராணியார், தாம், நோற்றுவந்த பரிசுத்த நோன்பொன்றை, இன்றைக்கு நான்காம் நாளிற் பூர்த்திசெய்யப் போகிறபடியால், அப்போது அவரது செல்வச் சிரஞ்சீவியாராகிய தாங்கள், தவறாமல் விஜயம் செய்ய வேண்டும் என்று அறிவிக்கக் கட்டளையிட்டனுப்பினார்கள்.

துஷ்யந்தன் — இதோ, துறவிகளுக்குச் செய்யவேண்டிய காரியம் ஒரு பக்கம்; எனதருமைத் தாயாரவர்களுடைய கட்டளை மறுபக்கம்; இரண்டும் மறுக்கக்கூடாத அவசிய காரியங்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் என்ன ஏற்பாடு செய்யலாம்?

விதூஷகன் — † திரிசங்கைப்போல இரண்டுக்கும் நடுவில் தொங்க வேண்டியதுதான்.

துஷ்யந்தன் — உண்மையாகவே, எனக்கொன்றும் பிரியவில்லை; இரண்டு கடமைகளும் வேறுவேறிடங்களிற் செய்யவேண்டியிருப்பதால், கற்பாறையால் தடுக்கப்பட்ட நதி, இரண்டாய்ப் பிரிவது போல, எனது மனமும் இரண்டாய்ப் பிரிந்திருக்கின்றது. (யோசித்து) நண்ப! உன்னைத் தமது மகனே போல எனது அன்னையார் அங்கீகரித்திருக்கின்றார்கள்; ஆகையால், நீ, உடனே சென்று, அந்த அம்மையாரைக் கண்டு, எனது மனம் துறவிகளின் காரியத்தை நிறைவேற்றுவதில் ஊக்கங்கொண்டிருப்பதை அறிவித்து, எனக்குப் பிரதியாக அங்கிருந்து காரியத்தை நடத்து.

---

† இதன் குறிப்பை அநுபந்தத்திற் காண்க.

விதூஷகன் — நான், இராக்ஷதர்களுக்குப் பயந்திருக்கின்றேன் என்று எண்ணவேண்டாம்.

துஷ்யந்தன் — (புன்சிரிப்போடு) நீ பிராமண குலமணியல்லவா? உன்னையும் யாராவது அப்படி நினைப்பார்களா?

விதூஷகன் — ஆனால், நான் போகிறேன்; என்னைமட்டும், உமது தம்பியைப்போலத் தகுதியாய் அனுப்பவேண்டும்.

துஷ்யந்தன் — அப்படியே; எனது சேனை பரிவாரங்களையெல்லாம், உன்னோடேயே அனுப்பிவிடுகின்றேன்; அவர்கள் இங்கிருந்தாலும் ஆசிரமவாசிகளுக்குக் கஷ்டந்தானே?

விதூஷகன் — (செருக்கோடு) சரி; நான், † யுவராஜனாய் விட்டேன்.

துஷ்யந்தன் — (தனக்குள்) இந்தப் பிராமணப் பையன், ஸ்திரபுத்தியில்லாதவன்; ஒருவேளை, அந்தப்புர ஸ்திரீகளிடத்தில், எனது தற்காலக் காதலுண்மையை வெளிப்படுத்தி விடுவான். ஆகையால், நான் இவனுக்கு இப்படிச் சொல்லவேண்டும்: (விதூஷகன் கையைப் பிடித்து, உரக்க) நண்ப! முனிவர்களைப் பெருமைப்படுத்தவே, நான், ஆசிரமத்துக்குச் செல்கின்றேன்; முனிவர் மகள்மேல் எனக்குக் கொஞ்சமேனும் இச்சை யென்பது கிடையாது; *நமது அந்தஸ்து எங்கே! காட்டு மான்களின் கூட்டுறவின் விசேஷத்தால், காதற்காரியமே இன்னதென்றுணராத கன்னிகை யெங்கே! விளையாட்டாகச் சொன்னதை வினையாக்காதே.

விதூஷகன் — ஆம்; நன்றாய் விளங்குகிறது.

(எல்லாரும் போய்விடுகின்றார்கள்.)

இரண்டாம் அங்கம் முடிந்தது.

† யுவராஜன் = இளவரசன்.

மூன்றாம் அங்கம்

இடம் :— வனத்தில் ஒரு முனிவராசிரமம்.

பாத்திரங்கள் :—சிஷ்யன், துஷ்யந்தன், சகுந்தலை, பிரியம்வதை, அனசூயை, கௌதமி.

[கண்வமா முனிவருடைய சிஷ்யன், தருப்பைக்கட்டைக் கையிலெடுத்துக்கொண்டு வருகிறான்.]

(சுத்த விஷ்கம்பம்)

சிஷ்யன்—துஷ்யந்த மஹாராஜருடைய வல்லமை எத்தனை வியப்புள்ளது! அவர் எமது ஆசிரமத்தில் நுழைந்ததுதான் தாமசம்; யாக காரியங்களெல்லாம் தடையின்றி நிறைவேறுகின்றன. அந்த மகானுபாவர், வில் நாணின் பயங்கர தொனியினாலேயே, வில்லின் உங்கார ஓசையினால் வெருட்டுதல்போல, எல்லா இடையூறுகளையும் ஒழித்துவிடுகின்றார். அவர் கணையைத் தொடுத்தாராயின் விக்கினங்களை என்ன பாடுபடுத்துவாரோ! இப்போது நான் இந்தத் தருப்பைக்கட்டை எடுத்துக்கொண்டுபோய், பலி பீடத்திற் பரப்புவதற்காக, யாகாதிகாரிகளிடத்தில் கொடுப்பேன். (சுற்றிப்போய் மேடைக்குப்புறம்பே, யாரிடத்திலோ பேசுவதுபோல, நிமிர்ந்துபார்த்து) பிரியம்வதா! இந்த † விலாமிச்சை வேர்த் தைலத்தையும் தண்டுகளோடு கூடிய தாமரை இலைகளையும்

† விலாமிச்சைவேர்=வெட்டிவேர்.

யார்க்காகக் கொண்டு போகின்றனை. (உற்றுக்கேட்டு) என்ன சொல்லுகிறாய் ! வெய்யிலிற் சென்றதால் உண்டான வெப்பம் பொறுக்காமல், சகுந்தலை வருந்துகிறாள் ; அவளைக் குளிர்விப்பதற்காக இவைகளைக் கொண்டுபோகின்றேன் என்கிறாயோ ! அவளைக் கவனித்து உபசாரம் பண்ணு ; பெருமை பொருந்திய கண்வ முனிவர்க்கு அருமைபொருந்திய உயிர் போன்றவள் அவள் ; ஏன் உயிர் போன்றவள் ; உயிரென்றே சொல்லலாம். நானும் அது தணியும்படி, யாகசாலையிற் பரிசுத்ததீர்த்தத்தை கௌதமியம்மையார் கையிற்கொடுத்தனுப்புகின்றேன். (போகிறான்.)

(இங்கே சுத்த விஷ்கம்பம் என்னும் தனியுரை முடிகின்றது.)

[பிறகு துஷ்யந்தன் † விரகதாபத்தோடு ப்ரவேசிக்கின்றான்.]

துஷ்யந்தன்—* முனிவருடைய தவத்தின் மேன்மையை நானறிவேன்; அக்கன்னிகை, தன் மனம்போற் செய்ய முடியாதென்பதும் தெரிவேன். ஆனாலும் அவளிடத்திற் பொருந்திய எனது மனதைமீட்குஞ்சக்தியின்றி மெலிகின்றேன். (காதல் நோயைப் பொறுக்கமுடியாத நிலைமையி லிருந்துகொண்டு) * காமதேவரே ! கலங்கும் ஏழைமேல் இரங்கி யருள் புரிகின்றீர் இல்லை ; புஷ்பபாணம் பொருந்திய நீர், கொடுமை செய்ய, எங்கே கற்றுக்கொண்டீர் ? (ஞாபகம் பண்ணிப் பார்த்து) ஆம். * சமுத்திர நடுவில் என்றென்றும் எரிந்து கொண்டே யிருக்கிற ‡ வடவா முகாக்கினிபோல, சிவனுடைய கோபத்தீ உம்மிடத்தில் எரிந்துகொண்டேயிருக்கின்றது. அன்றி, நீர், (அதனால்) சாம்பராய்ப்போயிருந்தால் என் போன்றவர்களை எங்ஙனம் எரித்திடுவீர் ?

மலர்க்கணைக் கடவுளே ! * உமது பாணம் புஷ்பமென்றும், சந்திரகிரணம் குளிர்ச்சி என்றும் சொல்வதெல்லாம் சுத்தப் பொய் ; சந்திரன், என்மேல் தீ இறைக்கின்றான் ; நீரோ, உமது மலரம்புகளை வச்சிராயுதம்போற் செலுத்துகின்றீர் ! ஆனாலும் இந்தக் காமதேவனை நான் வெறுக்கமாட்டேன். மீனக்கொடியாராகிய

---

† விரகதாபம் = காதல்நோய்.

‡ வடவா + முகம் + அக்கினி = பெட்டைக் குதிரைமுகத் தோற்றத்தை உடைய நெருப்பு.

இவர், இடைவிடாமல் தமது மலர்க்கணையை எய்து, எனக்கு நோயை உண்டாக்கினபோதிலும், இந்நோய் அந்நெடுங் கண்ணியின்பொருட்டே உண்டாக்கப்படுவதால், நான், ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கின்றது.

ஐயா, இன்பக் கடவுளே! உம்மை நான் எத்தனையோ வேண்டிக்கொண்டும், இன்னும் இரக்கம் என்பதை எங்கேயோ மறைத்து வைத்திருக்கின்றீர்!

ஐயா, உருவில்லாதவரே! உம்மை இடைவிடாமல் எண்ணியெண்ணி யென் மனதில் உமக்கோருருவத்தை உண்டாக்கிவிட்டேனே! உமக்குருவத்தைத் தந்து போற்றிய என்னையும், உமது வில்நாணைக் காதுவரையிலும் இழுத்துப் பாணத்தால் எய்வது ஞாயமாகுமா? (இப்படித்துயரத்தோடு சுற்றிவந்து) இந்தத் துயரத்தை எங்கேபோய் ஆற்றிக்கொள்வேன்! எனது தேகமும் இளைப் படைந்திருக்கின்றது; யாகமும் முடிந்தது. யாகாதிகாரிகளும் எனக்கு விடை கொடுத்துவிட்டார்கள். (பெருமூச்செறிந்து) காதலியைக் காண்பதிலும் வேறு ஆறுதல் என்ன இருக்கின்றது? அவளைத் தேடிச்செல்வேன். (சூரியனைநோக்கி) இந்தக்கடும்பகலில், சகுந்தலை தனியே இருக்கமாட்டாள்; தனது தோழியர்களோடு மாலினி நதிக்கரையில் பச்சைப்பசுங்கொடிப்பந்தலில் தன் இச்சையாய்க் காலங்கழித்துக்கொண்டிருப்பாள். நான் அங்கேசெல்வேன். (சுற்றிப்போய்க் கொண்டே, தன்மேற்படும் காற்றின் சுகத்தை விளக்குகின்றான்.) * ஆஹா! இந்த இடத்தில் எத்தனை இன்பமாய்க் காற்றடிக்கின்றது! தாமரைப்பூவாசனையும் மாலினிநதியின் தண்ணீர்த்துளியுங்கலந்த காற்று, காமதேவர் எரிக்கும் என்றன் அங்கங் குளிரத் தழுவிக்கொள்ளத் தகுதியாயிருக்கின்றது.

(சுற்றிப்போய்ப்பார்க்கிறான்.)

இதோ இந்தப்பிரப்பங்கொடிகள் சூழ்ந்த பச்சைப் பசுங்கொடிப் பந்தலுக்குச் சமீபத்திலேயே, சகுந்தலையிருக்கவேண்டும்; அதற்குள் நுழையும் வழியிலுள்ள வெண்மணலின் மேல் காலடிச்சுவடுகள் ஒழுங்காய்த் தோன்றுகின்றன. அவைகள் அவளுடைய இடுப்பின் பளுவால் முன் பக்கத்தைப்பார்க்கிலும் பின்பக்கம் அதிகமாய் அழுந்தியிருக்கின்றன. ஆகையால், அதோ, அந்த மரக்கிளை

களின் சந்து வழியாய்ப் பார்த்துக்கொண்டிருப்பேன். (சுற்றிப் போய்ப் பார்த்து, சந்தோஷத்தோடு) ஆஹா! * கண்கள்பெற்ற பலனைக் கண்டேன் : என் உயிர்க்காதலி இதோ இருக்கின்றாள் ; பளிங்குக் கல்மேற் படுத்திருக்கின்றாள் ; புஷ்பசயனத்திற் பொருந்தியிருக் கின்றாள் ; அனசூயை பிரியம்வதை யென்னும் தோழியர் இருவரும் உபசாரம் செய்துகொண்டு அருகில் இருக்கின்றார் கள் ; இவர்கள் பேசும் இரகஸியம் இன்னதென்றறிய நான் இங்கிருப்பேன்.

[மறைந்திருந்து பார்த்துக்கொண்டே நிற்கிறான். சகுந்தலையும் அவள் தோழிமாரும் முன் சொன்னபடியே இருக்கிறார்கள்.]

பிரியம்வதையும் அனசூயையும் — [சகுந்தலைக்கு விசிறினபடியே] அன்புள்ள சகுந்தலா! இந்தத் தாமரை இலைக்காற்று, உனக்குச் சௌக்கியமாயிருக்கிறதா ?

சகுந்தலை—ஆஹா ! தோழியர்களே, நீங்கள் எனக்கு விசிறிக்கொண்டா இருக்கிறீர்கள் ?

[தோழிமார், மனத்துயரத்தோடு, ஒருவரை ஒருவர் பார்க்கின்றார்கள்.]

துஷ்யந்தன்—உண்மையாகவே இவளுக்கு உடம்பு அசௌக்கியம்போற் காண்கிறது. (உன்னிப்பார்த்து) வெய்யிலின் கடுமையால் உண்டா யிருக்குமோ, அல்லது மனோவியாதியோ ! (காதலோடு நோக்கி) ஆஹா ! இன்னும் சந்தேகமா ! * மார்பினில் வெட்டிவேர் கட்டி வைத்திருந்தும், தாமரைத்தண்டின் கங்கணம் இரண்டுந் துவண்டு தொங்கிக்கொண்டிருந்தும், இவள், மேனி அழகு மிகுந்திருக் கின்றாள். வேனிற்காலத்து வெப்பமும் † விரகமும், மங்கை யரை வருத்துந் தன்மையில் சமமாயினும், வேனிற்காலத்து வெப்பத்தால் இளையாளாகிய இவள் இப்படி இளையாள் ; இத் தனை அழகுடன் விளங்காள்.

பிரியம்வதை — (மறைவாய் அனசூயையோடு) தோழி, அனசூயா ! அந்த ராஜருஷியைக் கண்ட நாள்முதல், சகுந்தலை இந்தமாதிரி

† விரகம்=காதல்.

அவஸ்தைப் படுவதுபோலிருக்கிறாள்; இந்த விசனத்துக்கு அவர்தான் காரணமோ?

அனசூயை — தோழீ! என் மனதிலும் அப்படித்தான் சந்தேகம் உண்டாயிருக்கின்றது. இருக்கட்டும்; நான் அவளை நேராய்க் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். (உரக்க) தோழி, சகுந்தலா! உன்னை ஒரு விஷயம் கேட்க விரும்புகின்றேன்; உனக்கோ, வேதனை அதிகமா யிருக்கின்றது.

சகுந்தலை — (படுக்கையி லிருந்தபடியே தலையை உயர்த்தி) தோழீ! என்ன கேட்கப்போகிறாய்?

அனசூயை — அன்புள்ள சகுந்தலா! விரகதாபம் இன்னதென்றறி யாதவர்களல்லவா நாம்? ஆனால், புராணேதிகாசங்களில் நாம் படித்தறிந்த காதலர் நிலைமையும், தற்காலம் உனது நிலைமையும் ஒத்திருக்கின்றன. உனது வேதனைக்குக் காரணம் என்ன? ஒளியாமற் சொல்லு; நோய் இன்னதென்றுணராமல் சரியான மருந்து தருவது அசாத்தியமல்லவா?

துஷ்யந்தன் — என் சந்தேகமும் அனசூயையின் சந்தேகமும் ஒத்திருக்கின்றன. ஆகையால் நான் ஊகித்துணர்ந்தவைகள் உண்மைதான்.

சகுந்தலை — (தனக்குள்) எனது காதல் வன்மை மிகுந்திருக்கின்றது. ஆயினும் இந்தச் சிறு பெண்களிடத்தில் அதனை இப்போதே எப்படிச்சொல்வேன்!

பிரியம்வதை — தோழீ! அனசூயை சொல்வது அதிக உண்மையா யிருக்கின்றது; உனது விரக நோயை ஏன் மூடிவைக்கின்றாய்? உனது அவயவங்கள் இளைத்துப்போகின்றன; உனது அழகு மட்டும் குறையாதிருக்கின்றது.

துஷ்யந்தன் — பிரியம்வதை மிகவும் சரியாய்ப் பேசுகின்றாள்; ஆம். அவள் சொல்வது உண்மைதான். * கன்னங்கள் வற்றிப்போயின; மார்புகள் தளர்ந்தன; தோள்கள் சோர்ந்தன; இடுப்பு மெலிந்தது; தேகம் இளைத்தது; மேனி நிறம் மாறி வெள்ளை வெளேலென வெளுத்திருக்கின்றது. ஆதலால் இவளைக் கண்ட எனக்கு, முதிர்ந்த இலைகள் உதிர்ந்து, இளங்காற்றிற் றுளிர்க்கும் மல்லி

கைக் கொடியைக் கண்டபடி, துக்கமும் சந்தோஷமும் உண்டாகின்றன.

சகுந்தலை —(நாணத்தோடு) என் சங்கதியை வேறுயாரோடு சொல்வேன்? என்றால் உங்களுக்குப் பிரயாசை.

பிரியம்வதையும் அநசூயையும் — இதனாலேதான் உன்னை நாங்கள் இத்தனை தூரம் வேண்டிக்கொள்ளுகிறோம். அன்புள்ள நண்பர்களிடத்தில் சொல்லிக்கொண்டால், துயரம் சிறிது ஆறுகின்றது.

துஷ்யந்தன் — இன்பதுன்பங்களில் இணைபிரியாமலிருந்த தனது தோழியர் கேட்டுக்கொண்டதனால், இந்தக்கன்னிகை தனது மனதில் மறைந்துள்ள துயரகாரணத்தைத் தவறாமல் வெளியிடுவாள்; அதற்குள் என்மனம் படபட வென்றடித்துக்கொள்ளுகிறது; முன்பு அவள், தன்தோழியர்களோடு என்னைவிட்டுப் போன போது, அடிக்கடி என்னைத் திரும்பிப்பார்த்துக்கொண்டே போனவளாயினும், இப்போது என்ன சொல்லப்போகிறாளோ வென்று ஆவல் அதிகரித்திருக்கின்றது.

சகுந்தலை — (நாணத்தோடு) தோழியர்காள்! இந்த ஆசிரமத்தைக் காப்பவராகிய அந்த ராஜருஷி என்றைத்தினத்தில் என் கண்முன்னே தோன்றினாரோ, அன்றுதொடங்கி, அவர்மேல்வைத்த ஆசையால், எனக்கிந்த விரகதாபம் உண்டாயிருக்கின்றது.

துஷ்யந்தன் — (பரவசமாய்) நான் எதைக்காதாரக் கேட்கவேண்டுமென்றெண்ணினேனோ, அதைக்கேட்டாயிற்று. * நீர்கொண்ட மேகங்களாற் கறுத்த கோடைக்காலத்தின் † கடைசிநாட்கள், உஷ்ணம், உஷ்ணநிவர்த்தி ஆகிய இரண்டிக்கும் காரணமாயிருப்பதுபோல, எனக்குக் காதல்நோய் நேரிட்டிருந்ததற்கும், இப்போது அது தணிந்து போனதற்கும் மன்மதனே காரணனாயிருக்கின்றான்.

சகுந்தலை — நான் சொன்னது உங்களுக்குச் சம்மதமானால், அந்த ராஜருஷிக்கு என்மேல் இரக்கம உண்டாகச்செய்வது உங்கள் கடமை. இல்லையேல், எனக்கு எள்ளுந்தண்ணீரும் இறைக்க வேண்டியதுதான்.

---

† இதன் குறிப்பை அநுபந்தத்திற் காண்க.

துஷ்யந்தன் — இந்த வார்த்தைகளால் என் சந்தேகமெல்லாம் ஒழிந்தன.

பிரியம்வதை — (அனசூயையோடு மறைவாய்) அனசூயா! இவளுக்கு விரகதாபம் தலைமண்டை கொண்டுவிட்டதால், பொறுக்க முடியாமல் தவிக்கிறாள்; இவள் காதல் கொண்டபுருஷர், புருகுலத்துக்கோர் அணிகலம்போல் சிறந்து விளங்குபவர்; ஆகையால் இவளது விருப்பத்தை, நாம் அங்கீகாரம் பண்ணிக்கொள்வது உத்தமந்தான்.

அனசூயை — (மறைவாய்) தோழீ! நீ சொல்வது சரிதான். (உரக்க) அன்புள்ள சகுந்தலா! உனக்குத்தகுந்த இடத்திலேயே உனது காதலைச்செலுத்தினாய்; பெருநதி சமுத்திரத்திலன்றி வேறெங்கே போய்க்கலக்கும்?

பிரியம்வதை — தளிர்த்த மல்லிகைக்கொடி, தேமாமரத்திற் படர்வது அழகல்லவா?

துஷ்யந்தன் — † விசாக நட்சத்திரம் சந்திரனைச் சேர்ந்தால், அது ஒரு வியப்பாகுமா?

அனசூயை — நமது தோழியின் விருப்பத்தை விரைவாகவும் இரகஸியமாகவும் பூர்த்திசெய்யும் உபாயம் எது?

பிரியம்வதை — "இரகஸியமாய்" என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும்; "விரைவாய்" என்பது சுலுவு.

அனசூயை — அது எப்படி?

பிரியம்வதை — இவள்மேற் காதற் பார்வையைச் செலுத்தி விட்டுப் போன அந்த ராஜருஷி, இத்தனை நாள், தூக்கமின்றி, இவள் ஏக்கத்தாலே மெலிந்திருப்பார்.

துஷ்யந்தன் — உண்மையில், நான், அப்படியே ஆய் இருக்கின்றேன். * கையைவளைத்துத் தலையின்கீழ் வைத்துப் படுத்துக்கொள்ளுவதனால், தூக்கமில்லாமல், எனது கண்களிரண்டினும் உஷ்ணக் கண்ணீர் ஒழுகுகிறபடியால், எனது கையிலணிந்த கல்லிழைத்த கடகம் கறுத்தது; கைகளும் சிறுத்தன; அதனால் அந்தக் கடகம்

---

† இதன் குறிப்பை அநுபந்தத்திற் காண்க

தளர்ந்து நழுவி மணிக்கட்டிலிறங்கி விழுகின்றது. எனது வில்லின் நாண் உராய்ந்த முழங்கைத் தழும்பையுங் கடந்து அப்படி அது விழுந்தோறும், நான் அதனை முன்னிருந்த இட மாகிய புஜத்தில் இழுத்து விட்டுக்கொண்டிருக்கின்றேன்.

பிரியம்வதை — (சிறிது யோசித்து) எனக்கிப்படித் தோன்றுகின்றது : சகுந்தலை தனது காதலை வெளியிட்டு ஒரு கடிதம் எழுதட்டும் ; நான் அதனைப் புஷ்பங்களுக்கு மத்தியில் மறைத்துக்கொண்டு போய்த் தேவப்ரசாதமென, அந்த ராஜருஷி கையில் கொடுத்து விடுகிறேன்.

அனசூயை — இந்த உத்தம யுக்தி எனக்கு மிகவும் உகந்ததா யிருக் கின்றது ; சகுந்தலை என்ன சொல்லுகிறளோ ?

சகுந்தலை —உங்கள் வார்த்தைக்கு இரண்டாவது, நான் எப்போதாவது சொன்னதுண்டா ?

பிரியம்வதை — ஆனல், சரி ; உனது காதலை வெளியிட்டு ஒரு கவி கட்டுவதற்குச் சிந்தனை பண்ணு.

சகுந்தலை — நான் அப்படியே செய்கிறேன். ஆனல், 'அவர் அதனைத் தள்ளிவிடுவாரோ !' என அஞ்சுகின்றேன்.

துஷ்யந்தன் —(தனக்குள்) *அஞ்சுகின்ற மாதே ! எவன் உன்னை மதியா திருப்பான் என்று நீ எண்ணுகின்றனையோ, அவன் இதோ நின்று கொண்டு உன் சேர்க்கைதனைக் கோரிக் காத்திருக்கின்றனன். சீதேவியை, ஒருவன் அடைய விரும்புவானனல், அவள் அவ னுக்குக் கிடைப்பதும் உண்டு ; கிடைக்காமற்போவதும் உண்டு ; அவளே அவனை விரும்பி வலிய வந்துசேர எண்ணுவளேல், எங்ஙனம் அவனுக்கவன் கிடைக்காமற்போவான் ?

பிரியம்வதையும் அனசூயையும் — உன் அருமை நீயே அறியாதிருக் கின்றனையே ! ஓ சகீ, சகுந்தலா ! தனக்குச் சுகத்தைக்கொடுக்கிற வேனிற்காலத்து வெண்ணிலவை, ஆடையால் மறைப்பவன் எவ னவது உண்டா ?

சகுந்தலை — (புன்சிரிப்போடு) நீங்கள் சொன்னபடி செய்கிறேன்.

(உட்கார்ந்து யோசிக்கின்ருள்.)

துஷ்யந்தன்— *கண்ணிமைக்காமல், எனது காதலியை இப்போதுதான் பார்க்கவேண்டும். இவள், தனது புருவங்களிலொன்றை மேலேற நெளித்துக்கொண்டு, தான் கட்டும் கவிக்குத் தக்க பதங்களை நினைக்கும்போது, கன்னமயிர் சிலிர்க்கின்றன. இதனால் இவளுக்கு என் மேலுள்ள காதற்பெருக்கு விளங்குகின்றது.*

சகுந்தலை — *தோழியர்காள் ! யோசித்தாயிற்று ; அதனை எதனில் எழுதுவேன் ?*

பிரியம்வதை — *கிளியின் வயிறுபோல் மிருதுவான இந்தத் தாமரை யிலையில் உன் நகத்தாலேயே எழுதிவிடலாம்.*

சகுந்தலை — *(அப்படியே செய்து) தோழியர்காள் ! கவனித்துக் கேளுங்கள் ; நான் எழுதின கருத்துப் பொருத்தமா யிருக்கிறதா ? கவி, காதுக்கினிமையா யிருக்கிறதா ?*

பிரியம்வதையும் அனசூயையும் — *அப்படியே கவனிக்கின்றோம்.*

சகுந்தலை — *(வாசிக்கிறாள்.)*

(தரவு கொச்சகக் கலிபபா)

† *உனதுமன மின்னதென வுத்தமனே நானறியேன்*
எனதுடலை யிரவுபகல் எரிக்கின்ற துனதாசை
தனதுவலி யான்மனது தவிக்கின்றேன் இரக்கமிலாய்
எனதுநிலை யறிந்தென்மேல் இரங்கினு லாகாதோ.

துஷ்யந்தன் — *(திடீரென எதிரே சென்று)*

(தரவு கொச்சகக் கலிப்பா)

† *எனதாசை யாலுனது தேகமெரி கின்றதென்றாய்*
உனதாசை யாலடியேன் உடல்வெந்து நீறாமால்
தனதாசைத் தாமரையைச் சூரியன்தான் வாட்டாமல்
மனதாரச் சந்திரனை வாட்டுகின்ற வாறேபோல்.

பிரியம்வதையும் அனசூயையும் — *(அரசனைக் கண்டவுடன், சந்தோஷத்தோடு எழுந்து) சமயத்தில் வந்து தோன்றிய எமது மனமுகந்த மன்னவரே ! வருக, வருக.*

(சகுந்தலை எழுந்திருக்க முயல்கிறாள்)

துஷ்யந்தன்—*ஏனோ வீணாய் வருந்தி எழுந்திருக்கின்றனை ? வேண்டா; வேண்டா. படுக்கையிற் பரப்பிய புஷ்பங்களெல்லாம், உனது தேகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன ; நீ அணிந்திருக்கும் நீண்ட தாமரைத்தாள்கள், உனது தேகோஷ்ணத்தாலே வாடி வதங்கி, அதற்கு வாசனை தருகின்றன. இப்படிப்பட்ட இருப்பில் இருக்கிற உனது உடலை ஒடுக்கி எழுந்து, நீ, எனக்கு உபசாரம் செய்யத்தகாது.

அனசூயை — நமது நண்பர் இந்தக் கல்லாசனத்தின்மேல் உட்காருவாராக.

(துஷ்யந்தன் உட்காருகிறான். சகுந்தலை நாணத்தோடு நிற்கின்றாள்.)

பிரியம்வதை — நீங்கள் ஒருவருக்கொருவர் அன்புடையீர் என்பது நன்றாய் விளங்குகின்றது. எனது தோழி சகுந்தலையின்மேல் வைத்த பிரியத்தால், நான், உமக்குச் சொல்லக்கூடாத சில வார்த்தைகளைச் சொல்லவேண்டியவளா யிருக்கின்றேன்.

துஷ்யந்தன் — நல்லாய் ! அன்பர்க்குள் சொல்லத்தகாததென்று ஒன்றுண்டா ? சொல்ல வேண்டுமென்றெண்ணியதைச் சொல்லியே தீரவேண்டும் ; இல்லாவிட்டால் அது பின்பு விசனத்துக் கிடமாம்.

பிரியம்வதை — தனது ஆட்சியிலுள்ளார் இடருற்றபோது அவர்கட்கு இருந்துதவி செய்வது, அரசன் கடமை.

துஷ்யந்தன் — அதைவிட வேறென்ன இருக்கின்றது.

பிரியம்வதை — இதோ இந்தத் தோழி, சகுந்தலை, உமதாசையாலே ஒடுங்கி இந்த நிலைமையில் இளைத்திருக்கின்றாள். ஆகையால் தாங்கள் அவள் விஷயத்தில் இரங்கி அருள்புரிந்து அவளுயிரைக் காப்பது தங்கள் கடமையாயிருக்கின்றது.

துஷ்யந்தன் — நல்லாய் ! எங்கள் இருவர்க்கும் காதல் பொதுவேயாம் ; ஆகையால் நான் பலவிதத்திலும் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சகுந்தலை — (பிரியம்வதையை நோக்கி) * அந்தப்புர ஸ்த்ரீகளைப் பிரிந்து வந்து அநேக நாட்கள் ஆனபடியால், அவர்களைக் காணும் காதல் மிகுந்திருக்கிற அரசரை நீ இப்படி நிறுத்துவது சரியா ?

துஷ்யந்தன் — * எனது நெஞ்சகத்தில் இடைவிடாதிருக்கும் இன்பக்

கொடியே! இந்த எனது நெஞ்சகம் இன்னொரு பெண்கொடிக்கு இடந்தாராதென்று தெரிந்துகொள்; சினக்கதிர்வேற்கண் சிற்றிடைத்திருவே! இதனைத் தெளியாமல், நீ வேருக நினைப்பை யாளுல், காமன் அம்பாற் கலங்கும் அடியேன் கருத்தழிந்து வருந்துவேன்.

அனசூயை — அரசருக்குத் தேவியர் அநேகர் என்று கேள்வி; ஆகையால், நீர், இந்தப் பூங்கொடியை உமது மனத்தகத்தில் நட்டு மலரச்செய்யவேண்டும்; இல்லாவிட்டால் இது வாடி வதங்கித் தனது கிளைகளை வளைத்து வருத்துவதாகும்.

துஷ்யந்தன் — பெண்மணீ! நான் இன்னும் அதிகம் சொல்ல வேண்டுமா? எனது தேவியர் எத்தனை பேராளுலும் என்ன? என் குலத்தைச் சிறப்பிக்கிற ஸ்த்ரீகள் இரண்டுபேர்தான்—கடலாடை யுடுத்த பூமாதேவியும் உங்கள் தோழி சகுந்தலையுமே.

பிரியம்வதையும் அனசூயையும் — எங்கள் பாக்கியமே பாக்கியம்.

பிரியம்வதை — (கண்ணுற் சைகை செய்து) தோழி, அனசூயா! அதோ பார்; அந்த மான்குட்டி, தன் தாயைத் தேடுகிறது; அது நாலுபக்கமும் பார்த்துப் பார்த்துக் கத்துகிறது; வா, நாம் போய் அதனை, அதன் தாயிடத்திற் கொண்டுபோய் விடலாம்.

(இருவரும் போகிருர்கள்.)

சகுந்தலை — எனக்கு யாரும் துணையில்லையே! இரண்டுபேரில் யாராவது ஒருவர் இங்கே வாருங்கள்.

பிரியம்வதையும் அனசூயையும் — உலகரக்ஷகரான அரசரே உன் பக்கத்திலிருக்கின்ருரே!

(போய்விட்டார்கள்.)

சகுந்தலை—என்ன, இது! அவர்கள் நிஜமாகவே, போய்விட்டார்களே!

துஷ்யந்தன் — வருந்தாதே. * ஏழை வருந்துகின்றனை? உனக்குபசாரஞ் செய்பவன் உகந்து உனது அருகில் இருக்கையில் ஏழை அஞ்சுகின்றனை? தாமரையிலை விசிறியாற் குளிர்காற்றெழுப்பி உனது குறையைத் தீர்க்கலாமா? மெல்லிய வாழைத்துடையுடையாதே! அழகிய செந்தாமரைகள்போன்ற உனது திருவடிகளை எனது மடிமேலிருத்திக்கொண்டு வருடலாமா? அதனுல் உனக்குச் சுகம் உண்டாக்கலாமா?

சகுந்தலை — நான், உங்களுக்கு உபசாரம் செய்யவேண்டியவளாயிருக்க, நீங்கள் எனக்கு உபசாரஞ் செய்யலாமா? நான் குற்றவாளியாக மாட்டேனா? (எழுந்துபோக விரும்புகிறாள்.)

துஷ்யந்தன் — அழகிய நங்காய்! கடும்பகல் உஷ்ணம் இன்னும் ஒழியவில்லை. இப்போது நீ யிருக்கும் நிலைமையை நினைத்துப்பார்; * இந்தப் புஷ்ப சயனத்தைப் புறத்தே விட்டு, உனது மார்பினில் வைத்துக் கட்டிய தாமரை இலைகளை யெல்லாம் எடுத்தெறிந்து, உனது மிருதுவாகிய அவயவங்கள் மெலிய, இத்தனை உஷ்ண வெய்யிலில் எங்ஙனம் செல்லுவை?

(அவளைப் பிடித்திழுத்துத் திருப்புகிறான்.)

சகுந்தலை—புருகுல வேந்த! ஐனுசார முறைமையைத் தப்பி நடவற்க; நான், காதல் வசப்பட்டிருக்கின்றேனாயினும், என் இஷ்டப்படி நடக்கக் கூடாதவளாய் இருக்கின்றேன்.

துஷ்யந்தன்—பயந்த பெண்ணே! உனது பெற்றோரும் மற்றோரும் உன்னைக் குற்றங் கூறுவார்கள் என்று அஞ்சாதே! துறவியர் தலைவராகிய கண்வர், சாஸ்திர ஆராய்ச்சி செய்தவராகை யால், நன்றாய் யோசிப்பார்; உன்மேற் குற்றங் கூறமாட்டார். ஏனெனில், ராஜருஷிப் பெண்களில் அநேகர், காந்தர்வ விதிப் படி கலியாணஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். அதனை, அவர்கள் தகப்பன்மார் அங்கீகாரம் பண்ணினார்கள்.

சகுந்தலை—ஆனால், என்னைவிட்டு விடுங்கள்; எனது தோழியர்களோடு மறுபடியும் யோசனை செய்யப்போகிறேன்.

துஷ்யந்தன் — நல்லது; உன்னை விட்டுவிடுவேன்.

சகுந்தலை — எப்போது?

துஷ்யந்தன் —* அன்றலர்ந்த புஷ்பத்தில் தேனையுண்ணும் வண்டு போல, இன்றுனது இதழமுதத்தை உண்டு எனது தாகம் தணிந்தபின் உன்னை விடுவேன்.

[அவளுடைய முகத்தை நிமிர்த்த முயல்கிறான். அதனை அவள் தடுக்கிறாள்.]

[திரைக்குப் பின்னால்]

ஓ, பெடைச்சக்கரவாகப் பக்ஷியே ! உனது துணைவனிடத்தில் விடைபெற்றுக்கொள் ; இரவு வந்துவிட்டது.

சகுந்தலை—(கலவரத்தோடு உற்றுக்கேட்டு) பௌரவரே ! எனது தேகசுக நிலைமை இன்னதென்றறிந்துகொள்ளக் கௌதமி அம்மையவர்களே நேரில் வருகின்றார்கள். ஆகையால் இந்தக் கிளைகளின் மறைவில் ஒளித்துக்கொள்ளும்.

துஷ்யந்தன் — அப்படியே செய்கிறேன். (ஒளித்துக்கொண்டு நிற்கிறான்.)

[பிறகு, கௌதமி தனதுகையில் ஒரு கலசந்தாங்கிக்கொண்டு, இரண்டு தோழியர்களோடும் பிரவேசிக்கின்றாள்.]

பிரியம்வதையும் அனசூயையும் — அம்மே ! இவ்வழியே வாருங்கள், இப்படியே வாருங்கள்.

கௌதமி — (சகுந்தலையை நெருங்கி) குழந்தாய் ! உனது அவயவங்களின் சிரமந் தீர்ந்ததா ?

சகுந்தலை — ஆம் : கொஞ்சங் கொஞ்சமாய்த் தணிந்துகொண்டே வருகின்றது.

கௌதமி—இந்தத் தர்ப்பை ஜலத்தால், உனது தேகத்தின் அசௌக்கியம் நீங்கும். (சகுந்தலை தலையிற்றெளித்து) பொழுது சாய்ந்தது ; குழந்தாய் ! வா, நமது ஆசிரமத்துக்குப் போவோம.

(எல்லாரும் புறப்படுகிறார்கள்.)

சகுந்தலை — (தனக்குள்) ஓ, நெஞ்சே ! உனது காதற்பொருள், தானே வந்தடைந்தும், உனது கோழைத்தனம் உன்னைவிட்டுப் போகவில்லை. பிரிவுக்குப் பிறகு வருந்தும உனக்குப் பரிகாரம் ஏது ? (கொஞ்ச தூரம் சென்று, நின்று, உரக்க) ஓ பச்சைப் பசுங்கொடிப் பந்தரே ! எனது நோவைத் தணித்த வுனக்கு வந்தனஞ் செய்து தற்காலம விடைபெற்றுக்கொள்கிறேன். ஆனால், மறுபடியும் உனது கூட்டுறவின் சுகத்தை விரும்புகிறேன்.

(சகுந்தலை விசனத்தோடு, மற்றவர்களுடன் போய்விட்டாள்.)

துஷ்யந்தன் —(பெருமூச்செறிந்துகொண்டு பந்தலுக்குள் தான் முன்னிருந்த இடத்துக்குத் திரும்பிவந்து)* ஆஹா! எண்ணம்முடிவதற்கு எத்தனை

தடைகள் உண்டாகின்றன! அழகாய் நீண்ட கண்மயிர்களை யுடைய அந்த மங்கை, தனது கைவிரல்களை உதட்டில் ஊன்றி, சிங்காரமாய் என்னை நோக்கி 'வேண்டா வேண்டா' வென்று விளம்பி, தனது தலையை ஒய்யாரமாய்த் தோட்புறந் திருப்பிக் கொண்டனள். ஆனாலும் நான் அவளுடைய முகத்தைத் திருப்பினேன்; முத்தங்கொடுத்தேன் இல்லை. பித்தம் பிடித்தவன்போலானேன்; எங்கே செல்லுவேன்! என்ன செய்வேன்? இங்கே எனது காதலியிருந்து நீங்கின பந்தலில் நிலைத்திருப்பேன். (சுற்று முற்றும் பார்த்து) * இதோ இருக்கின்றதவள் மலர்ப்படுக்கை! அவளவயவங்கள் அழுந்தினகுறியுடன் கல்மேடையின்மேல் விளங்கும் இந்த மெத்தையினருகே, தாமரையிலையில் கைந்நகத்தால் அவள் எழுதின காதல்திருமுகம் இதோ விழுந்துகிடக்கின்றது! அந்தோ! கிளிமொழி பூண்ட தாமரைத்தாட் கங்கணங்கள் துவண்டு நழுவி இதோ இங்கே விழுந்திருக்கின்றன! இவைகளிற் செலுத்திய எனதிரு கண்களும் வேறு பொருள்களைக்காண விரும்பா! எனதுயிர்க்காதலி யில்லாதிருந்தும் இந்தப் பைங்கொடிப் பந்தலைவிட்டு நீங்க முடியாதிருக்கின்றேன்.

(திரைக்குப் பின்னால்)

ஓ, மஹாராஜாவே! சாயங்கால வேளையிலே செய்ய வேண்டிய யாகத்துக்காக நாங்கள் தீ மூட்டினதுதான் தாமதம், யாகமேடையைச்சுற்றிக் கூட்டங்கூட்டமாய்ச் சாயங்கால மேகம்போல இராக்ஷதர்களுடைய நிழல்கள், எங்களுக்குப் பயத்தை உண்டாக்கிச் சுழன்று கொண்டிருக்கின்றன.

துஷ்யந்தன்—(கேட்டு) இதோ வந்தேன்.

(போய் விடுகிறான்.)

மூன்றாம் அங்கம் முடிந்தது.

வைகாநஸர்—"அரச! இது ஆசிரமமிருகம்; கொல்லற்க! கொல்லற்க!"

(6-ஆம் பக்கம் பார்க்க.)

நான்காம் அங்கம்

† விஷ்கம்பம்

இடம் :— ஆசிரமத்துக்கருகே ஒரு புல் நிலம்.

பாத்திரங்கள் :—துஷ்யந்தன், சகுந்தலை, பிரியம்வதை, அனசூயை, துருவாசர், கண்வர், சிஷ்யன், ருஷிபத்தினிகள், நாரதன், கௌதமன் (ருஷிகுமாரர்கள்), கௌதமி, சார்ங்கரவன், சாரத்வதன் (கண்வமுனிவருடைய சிஷ்யர்கள்).

(பிரியம்வதையும் அனசூயையும் பூப்பறித்துக்கொண்டிருக்கிற நிலைமையில் வருகின்றார்கள்.)

அனசூயை — தோழி, பிரியம்வதா! தனக்குத்தகுந்த நாயகனைக் காந்தர்வ முறைப்படி சகுந்தலை மணந்துகொண்டதற்கு, எனது மனம் திருப்தி அடைந்திருக்கின்றது; ஆயினும், கவலைக்கும் இடந் தருகின்றது.

பிரியம்வதை — ஏன் அப்படி?

அனசூயை — துறவிகள், யாகமுடிந்தவுடன், அந்த ராஜருஷியை அவரது நகரத்துக்குப் போய்விடும்படி விடைகொடுத்தார்கள்; அவரும் அவ்வாறே சென்று தமது தேவியரோடு சேர்ந்து வாழ்கின்றனர். இங்கு நடந்த விஷயங்கள் அவர் ஞாபகத்திலிருக்கின்றனவோ, என்னவோ?

பிரியம்வதை — நம்பியிரு. அவரைப்போன்ற உத்தமபுருஷர்கள், என்றென்றும் தமது நல்வழியைவிட்டு விலகமாட்டார்கள்; எனக்

†விஷ்கம்பம் = இடையுரை = ஒட்டுறை.

குள்ள சந்தேகமெல்லாம், அப்பா, கண்வரைப்பற்றித்தான். அவர் இந்த சமாசாரத்தைக் கேள்விப்பட்டால், என்ன செய்வாரோ ?

அனசூயை — அவர் கருத்தும் எனது கருத்தும் ஒத்திருக்கும்.

பிரியம்வதை — ஏன் அப்படி ?

அனசூயை — கன்னிகையை அவளுக்குத் தகுந்த வரனைத் தேடிக் கொடுக்கவேண்டும் என்பது, அவருடைய உள்ளக்கருத்து ; அதன்படியே அதிஷ்டம் ஒத்துவந்திருக்கிறபொழுது, தகப்பனு ருடைய எண்ணம் சரிவர முடிந்திருக்கிறபடியல்லவா ?

பிரியம்வதை — (பூக்குடலையைக் கவனித்து) தோழீ ! நாம் இருவரும் போதுமானவரையில் தேவாராதனைக்கு வேண்டிய மலர்களைச் சேகரித்துவிட்டோம்.

அனசூயை — சகுந்தலைக்குத் தகுந்த வரனைக் கொடுத்த பாக்கிய லக்ஷ்மி யை நாம் பூஜிக்கவேண்டாமா ?

பிரியம்வதை — ஆம் ஆம்.

(இருவரும் திரும்பவும் பூப்பறிக்கின்றார்கள்.)

(திரைகருப பின்னே)

துருவாசர் — ஆசிரமத்தில் யார் அங்கே ? இதோ நான் வந்திருக்கிற தையுங் கவனியாமல் இருக்கின்றீர்களே !

அனசூயை — (உற்றுக்கேட்டு) தோழீ ! யாரோ அதிதி ஒருவர், தமது வரவைத் தெரிவிப்பதுபோலிருக்கின்றது.

பிரியம்வதை — சகுந்தலை, ஆசிரமத்தில் இல்லையா ? (தனக்குள்) இருந்து என்ன பலன் ? அவள் மனம் இங்கில்லையே.

அனசூயை — சரி; இந்த மலர்கள் போதும்.

(இருவரும் புறப்படுகின்றனர்.)

(மறுபடியும் திரைக்குப்பின்னுல்)

துருவாசர் — அதிதியை அவமதிக்கின்றவளே ! உனக்குத் துக்கம் உண் டாகக் கடவது ; தவத்தில் மிக்க நான், இங்கு வந்திருப்பதையும் உணராமல், எவனுக்கு உன் மனதைத் தத்தம் செய்து, அவனையே அதனில் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனையோ, அவன், நீ, எத் தனை நினைப்பூட்டினபோதிலும், கள்ளுண்டு மயங்கினவன்போல, தான் முன்சொன்னதை மறந்து, உன்னை அவமதிக்கக்கடவன்.

பிரியம்வதை — ஐயையோ! அனர்த்தம் வந்துவிட்டதே! சகுந்தலை, தன்னை மறந்து பரவசமாயிருந்தபடியால், பூஜிக்கத்தகுந்த யாரோ ஒரு அதிதிக்குப பிழைசெய்து விட்டாளே! (முன்னே நோக்கி) சாதாரண அதிதியல்லவே! மஹாமுனிவராகிய துருவாசராயிற்றே! வெகு சுலுவில் கோபித்துக்கொள்பவரல்லவா, அவர்? இப்பேர்ப்பட்ட பெருஞ்சாபமிட்டவர், யாராலுந் தடுக்கக் கூடாதபடி படபடவென்று நடந்துவிட்டார். கொளுத்துவதற்கு நெருப்பினும் மேலான பொருள் எது?

அனசூயை — சீக்கிரம் போய், அவர் பாதங்களில் விழுந்து, அவரைத் திரும்பிவர, வேண்டிக்கொள். அதற்குள் நான், அவர்க்கு வேண்டிய அர்க்ய பாத்யாதிகளைச் சித்தஞ்செய்து வைக்கிறேன்.

பிரியம்வதை — அப்படியே செய்கிறேன். (போய்விடுகிறாள்.)

அனசூயை — (சிறிது தூரம் சென்று, இடறி விழுந்து) ஐயோ, நான் அவசரத்தில் இடறி விழுந்தபோது, பூக்குடலையும் கைதவறி விழுந்து விட்டதே! (இறைந்த புஷ்பங்களைப் பொறுக்குகிறாள்.)

பிரியம்வதை — (திரும்பி வந்து) இயற்கையிலே † வக்ர ஸ்வபாவமுடையவராகிய அவரை யாராலே திருப்ப முடியும்! ஆனாலும் அவரைச் சிறிது இரக்கமுடையவராக்கினேன்.

அனசூயை — (புன்சிரிபபோடு) இவ்வளவு, அவர் கோபத்தை நீ தணித்ததே அதிகந்தான்; எப்படித் தணித்தாய் சொல்லு.

பிரியம்வதை — அவர்க்கு, என்னுடன் திரும்பிவர இஷ்டமில்லாதிருந்தது கண்டு, நான் அவரை வேண்டிக்கொண்டேன்.

அனசூயை — என்ன வேண்டிககொண்டாய்?

பிரியம்வதை — "அருந்தவச் சிரேஷ்டரே! இது, முதற்குற்றமாகையால், தேவரீர் சிறிது யோசிக்கவேண்டும்; தவத்தின் வல்லமை இன்னதென்றறியாத உமது குமாரத்தியின் இந்த ஒரு குற்றத்தை மாத்திரம தேவரீர் மன்னித்தருளவேண்டும்."

அனசூயை — அப்பால் என்ன?

பிரியம்வதை — "எனது வாக்குப் பொய்க்காது; ஆனாலும், அடையாளமாகக் கொடுக்கப்பட்ட ஆபரணத்தைக் கண்டவுடன், சாபம்

---

† வக்ர ஸ்வபாவம்=கோணைமனம்.

நீங்கும்" என்று சொல்லிக்கொண்டே அவர் மறைந்துபோய் விட்டார்.

அனசூயை — ஆனால், நமக்குக் கொஞ்சம் நம்பிக்கை யிருக்கிறது; ராஜருஷி சகுந்தலையைப் பிரிந்து போனபோது, தமது பெயர் செதுக்கின மோதிரம் ஒன்றை, அவள் விரலிற் போட்டு, அதனைக் கலியாண ஞாபகச் சின்னமென்றார். அதனால், சகுந்தலையின் சாபவிமோசனப்பொருள் அவளுடைய சுவாதீனத்திலேயே யிருக்கும்.

பிரியம்வதை — தோழீ! வா, நாம் போய் சகுந்தலையின் காவல் தெய்வத்தைப் பூஜை செய்யலாம்.

(இருவரும் சுற்றிச் செல்கின்றனர்.)

பிரியம்வதை — (உற்றுபபார்த்து) அனசூயா! பார்த்தையா நமது தோழியை; சித்திரப் பாவைபோல அசைவற்றுட்கார்ந்து மோவாய்க்கட்டையை இடது கையில் வைத்து ஊன்றிக்கொண்டிருக்கின்றாள். அவள் தனது கணவனைச் சிந்தித்தபடியே, தன்னையு மறந்து, என்னையும் உன்னையும் மற்றெல்லாரையும் அறவே மறந்திருக்கின்றாள். ஓர் அதிதியை மறக்கக் கேட்பானேன்?

அனசூயை—பிரியம்வதா! நம்மிருவருக்குள்ளேயே இந்த விஷயம் ரஹஸ்யமாய் இருந்துவிடவேண்டும். நமது தோழி கோமளமன முடையவளாகையால், அவளுக்கும் இது தெரியப்படாது.

பிரியம்வதை — இளமல்லிகைக் கொடிக்கு, யார்தான் வெந்நீர் ஊற்றுவார்கள்? (இருவரும் போய்விடுகின்றனர்.)

(இங்கே விஷ்கம்பம் என்னும் இடையுரை முடிகின்றது.)

[அப்போதுதான் தூங்கிவிழித்த சிஷ்யன் ஒருவன் வருகின்றான்.]

சிஷ்யன் — பெருமை பொருந்திய கண்வமுனிவர், இப்போதுதான் ஊரிலிருந்து திரும்பி வந்தனர்; நாழிகை இத்தனையென்றறிந்து சொல்லும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றனர். ஆகையால் நான் வெளியே சென்று, விடிய இன்னும் எத்தனை நாழிகை யிருக்கின்றதென்று பார்ப்பேன். (சுற்றிச்சென்று ஆகாசத்தை உற்றுநோக்கி) ஆஹா! விடியற்காலம் நெருங்கியிருக்கின்றதே! *புற்பூண்டுகளுக்கு நாயகனாகிய சந்திரன், மேற்குமலைச்சிகரத்தில் ஒருபுறம் இறங்

கும்போதே மறுபுறம், சூரியனும், தனது சாரதியாகிய அருணனை, முன் செலுத்தி, பின்னே தோன்றுகின்றான். இவ்விரு சுடர்களுக்கும் ஒரே காலத்தில் மறைப்பும் தோற்றமும் முறையே உண்டாயிருத்தல், இவ்வுலக வாழ்க்கையில் இன்ப துன்பம் நிலையாமையை விளக்குகின்றது. *ஆதலால் மனிதர்கள், துக்க சுகங்கள் மாறிமாறி வருவதற்கு மனம் வருந்தியும் பொருந்தியும் இருக்கவேண்டா என்று இது கற்பிக்கும்.

இன்னும், சந்திரனையிழந்த அல்லிமலர் கணவனைப் பிரிந்த காரிகைக்குச் சமானம். * சந்திரனை யிழந்த அல்லி, அழகிழந்து வாடியிருப்பதுபோல, கணவனைப் பிரிந்த காரிகையின் துயரம் அளவிறந்து சகிக்கமுடியாததாகும்.

(திரையைச் சடுதியில் விலக்கிக்கொண்டு அனசூயை வருகின்றாள்.)

அனசூயை—கணவனைப்பிரிந்த காரிகையின் துக்கம் சகிக்க முடியாததாயிருக்குமென்பது காதல் விஷயத்தில் அனுபவமில்லாத சிஷ்யனுக்குக்கூட நன்றாய்த் தெரிகின்றதே; அப்படியிருக்க, உலக வியாபாரத்தை நன்றாய் அறிந்திருக்கிற துஷ்யந்த மஹாராஜன், சகுந்தலை விஷயத்தில் எப்படி அவமதிப்பாய் நடந்துகொள்ள நேரிட்டதோ, தெரியவில்லையே! முன்னமே நமக்கு இது விஷயத்தில் அச்சமுண்டாய் இருந்ததல்லவா? அது சரியாய்த்தான் முடிந்தது.

சிஷ்யன் — நல்லது, காலையிற் செய்யும் யாககாலம் நெருங்கிவிட்டதென்று நான், குருவினிடம் போய்த் தெரிவிக்கின்றேன்.

(போய்விடுகின்றான்.)

அனசூயை—நன்றாயறிந்திருந்தும் நான் என்ன செய்யமுடியும்? எனது கைகால்கள், வழக்கமாய்ச் செய்ய வேண்டிய காரியங்களுக்கே, என் சுவாதீனத்தில் இல்லையே! எமது சுத்தமனத்துத்தமியாகிய சகுந்தலை, இரண்டகமுள்ள ஒருவனை, நம்பினதற்குக் காரணனாயிருந்த மன்மதன், இப்போதாவது தனதெண்ணம் நிறைவேறிச் சந்தோஷமாயிருக்கட்டும். அல்லது, துருவாச மாமுனிவருடைய சாபந்தான் இத்தன்மையான மறதியை, அந்த ராஜருஷிக்கு உண்டாக்கியிருக்கின்றதோ? இல்லாவிட்டால், புகழ்பெற்ற ராஜகுமாராகிய அவர், அத்தனை உறுதி மொழிகள்

கூறி, இத்தனை நாட்களாகியும், ஒரு திருமுகமாயினும் அனுப்பாமல் இருப்பாரா ? ஆகையால், ஒருவர்க்கொருவர் அறிந்துகொள்வதற் கடையாளமாயுள்ள கணையாழியை, இங்கிருந்து அவருக்கு நாம் அனுப்பலாம். செய்தவத்தில் உழைக்கும் தவசிகளுக்குள் யாரிடத்தில், அந்த மோதிரத்தைக் கொடுத்தனுப்பக் கூடும் ? சகுநதலைமேற் குற்றமிருக்கின்றதென்று எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறபடியால் அவள் துஷ்யந்தனை மணந்து கர்ப்பவதியாயிருக்கிற விஷயத்தை, அப்பா, கண்வரிடததிற் சொல்லக்கூடாதவளா யிருக்கின்றேன் ; அவரும் இப்போதே, தமது யாத்திரையிலிருந்து திரும்பிவந்தார். விஷயங்கள் இப்படியிருக்கின்றன. ஆகையால், எங்களால் என்ன செய்ய முடியும் ?

(பிரியம்வதை பிரவேசிக்கின்றாள்.)

பிரியம்வதை — (மகிழ்ச்சியோடு) சகி, அனசூயா ! சீக்கிரம் வா, போகலாம் ; சகுந்தலை கணவன் வீட்டுக்குப் போகபபோகிறாள் ; அந்த மங்களகாரியத்தைக் கொண்டாடவேண்டும் ; சீக்கிரம் வா !

அனசூயை — அது எப்படி, ஒரு முடிவுக்கு வந்துவிட்டது ?

பிரியம்வதை — சொல்லுகிறேன் கவனமாய்க்கேள். இப்போதுதான், நான் சகுநதலை நன்றாய்த தூங்கினாளா என்று விசாரிப்பதற்கு அவளிடத்துக்குப் போயிருந்தேன் ;

அனசூயை — அப்பால் என்ன ?

பிரியம்வதை — அவள் என்னவோ, நாணத்தினால் தலை குனிந்திருந்தாள் ; அப்பா, கண்வர் அவளைத் தழுவிக்கொண்டு பின்வருமாறு உபசார வார்த்தைகள் கூறுவாராயினர்:— “ யாகஞ் செய்வோனுடைய (எஜமானனுடைய) கண்கள் புகை மூடி யிருந்தபோதிலும் அவனிட்ட யாகபலியானது, யாககுண்டத்தின் மத்தியிலுள்ள நெருப்பிலேயே விழுந்தது. ஆகையால் உத்தம மாணாக்கனுககுக் கற்பித்த கல்வியைப்பற்றி ஒரு குருவுக்கு எப்படிக் கவலை நீங்குமோ அப்படி இனி எனக்கு உன்னைப்பற்றிய கவலை ஒழிந்தது. இன்றைக்கே, உன்னை இருவர் துணைவரோடு, உனது புக்ககம் அனுப்பி விடுகின்றேன். ”

அனசூயை — யாரால் இநதவிஷயம் அவர்க்குத் தெரிந்தது ?

பிரியம்வதை = அவர், யாகசாலையில் நுழைந்தபோது, அசரீரியாய்க் கேட்ட ஒரு திருப்பாசுரத்தால்.

அனசூயை— (அதிசயமடைந்து) எப்படி ? அதனைச் சொல்லு !

பிரியம்வதை—(ஸம்ஸ்க்ருதந் தெரிந்தவளாதலால், வழக்கம்போல் ப்ராக்ருத பாஷையிற் சொல்லாமல் திருத்தமான ஸம்ஸ்க்ருதத்தில்)* "ஓ, அந்தண! இதனைக் கவனித்துக்கேள்: வன்னிமரம் தன்னிடத்தில் அக்கினியை மறைத்து வைத்திருப்பதுபோல, உனது மகள் தனது வயிற்றில், இவ்வுலக முழுவதும் ஈடேறும்படி, துஷ்யந்தனுடைய பரிசுத்தமான மூளையை வைத்து வாழ்கின்றாள்."

அனசூயை — (பிரியம்வதையைத் தழுவிக்கொண்டு) உண்மையில் எனக்குச் சந்தோஷமாயிருக்கின்றது. தோழி ! இன்றைக்கே, சகுந்தலை, தனது புக்ககம் போகப் போகின்றாள் என்னும் விஷயம் எனக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணுகின்றதானாலும், துக்கமும் கலந்திருக்கின்றது.

பிரியம்வதை — தோழி ! நமது துக்கத்தை எப்படியோ, ஒருவாறு தொலைத்துக்கொள்ளலாம் ; சகுந்தலை சந்தோஷம் அடையட்டும்.

அனசூயை — அப்படியானால் இதோ இந்த மாமரத்தில் தொங்கவிட்டிருக்கிற தென்னோலைப்பூங்குடலையில், அதற்கெனவே நான் வைத்து வைத்த † கேசரப் பூமாலை யிருக்கின்றது. அது எத்தனை நாட்கள் சென்றதானாலும் வாடியிராது. அதை எடுத்துக் கொண்டுவா ; நான் போய், கோரோசனை, புண்ணியதீர்த்த மண், அறுகம்புற்கொழுந்து இவைகளைக் கூட்டி வாசனைத்திரவியம் சித்தஞ் செய்கிறேன்.

பிரியம்வதை — நல்லது, அப்படியே செய்.

[அனசூயை போய்விடுகின்றாள் ; பிரியம்வதை பூமாலையை எடுத்து வருகின்றாள்.]

(திரைமறைவில்)

ஓ கௌதமீ ! சார்ங்கரவன் முதலியோரைச் சகுந்தலையுடன்

---

† கேசரபூமாலை=மகிழம்பூமாலை.

போகச்சொல்; அவர்கள் அவளைக்கொண்டுபோய், அவளுடைய புக்ககத்தில் விட்டுவிட்டு வரட்டும்.

பிரியம்வதை — (உற்றுக்கேட்டு) அனசூயா! சீக்கிரம் வா, சீக்கிரம் வா; இதோ, இந்தத் துறவிகள் ஹஸ்தினாபுரம் போகவேண்டுமென்று ஒருவர்க்கொருவர் அதிக அவசரமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

(அனசூயை, மங்களகரமான வாசனைக் கூட்டுத் திரவியத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வருகிறாள்.)

அனசூயை — சகி! வா நாம் போவோம்.

(இருவரும் போகிறார்கள்.)

பிரியம்வதை — (பார்த்து) தோழி அனசூயா! அதோ, சகுந்தலை, சூரியோதயத்திலேயே ஸ்நானஞ் செய்துவிட்டு, தன்னைச் சூழ்ந்துள்ள ஆசிரமத்துப் பெண்கள் ஆசீர்வாதஞ்செய்து அக்ஷதை யேந்தி வாழ்த்திக்கொண்டிருக்க, அவர்க்கு மத்தியில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றாள். நாம் அவளிடம் போவோம்; வா.

(இருவரும் நெருங்குகிறார்கள்.)

(மேற்சொல்லியபடி சகுந்தலை மணையிலுட்கார்ந்துகொண்டு தோன்றுகின்றாள்.)

ருஷிபத்தினிகளுக்குள் ஒருத்தி — (சகுந்தலையை நோக்கி) எனதன்புள்ள குழந்தாய்! உனது கணவருடைய மேலான நன்கு மதிப்பை நீ பெற்றுக்கொண்டதற் கடையாளமாக, 'பட்டமஹிஷி' என்னும் பட்டத்தைப் பெறக்கடவாய்.

மற்றொருத்தி — குழந்தாய்! சுத்தவீரனாகிய சுதனைப்பெறக் கடவாய்.

இன்னொருத்தி — குழந்தாய்! உனது கணவன் உன்னை உயர்வாக மதிக்கக் கடவன்.

(இப்படி ஆசீர்வதித்துவிட்டு, கௌதமி தவிர எல்லாரும் போய்விடுகிறார்கள்.)

பிரியம்வதையும் அனசூயையும்—(கிட்டவந்து) உனது ஸ்நாநம் மங்களம் பெறக்கடவது.

சகுந்தலை — தோழியர்காள்! உமது வரவு நல்வரவாகுக; வாருங்கள், வந்து உட்காருங்கள்.

பிரியம்வதையும் அனசூயையும்—(மங்களப்பொருள்கள் வைத்துள்ள கலத்தைக் கையிலேந்தி அமர்ந்திருந்து) அன்புள்ள சகுந்தலா! இந்த மங்கள வாசனைக் கூட்டை நாங்கள் உனக்குப் பூசுகிறோம்; நீ அதைத் தயைசெய்து அங்கீகாரம் பண்ணிக்கொள்.

சகுந்தலை —இதனை நான், அதிக உயர்வாய் ஏற்றுக்கொள்ளவேண்டும்; தோழியர்கள் அலங்கரித்தல் வெகு மேன்மை; அதுவும், இனி எனக்குக் கிட்டுவது அருமையல்லவா? [கண்ணீர்விடுகிறாள்.]

பிரியம்வதையும் அனசூயையும் — தோழீ! இப்படிப்பட்ட மங்கள காலத்தில் கண்ணீர்விடுதல் சரியல்ல.

(கண்ணீரைத்துடைத்துஅவளை அலங்கரிக்கின்றார்கள்.)

பிரியம்வதை — விலையுயர்ந்த ஆபரணங்களுக்கு யோக்கியதையான உனது உருவத்தை இந்த ஆசிரமத்தில் கிடைக்கக்கூடிய சாதாரண பொருள்களால் அலங்கரிக்கிறதினால், அதன் அந்தம் கெட்டுப்போகின்றது.

[கைகளிலேந்திய வரிசையுடன் ருஷிகுமாரர்கள் இருவர், பிரவேசிக்கின்றனர்.]

நாரதனும் கௌதமனும் — இதோ, நகைகள், இவைகளால், இந்த அம்மையாரை அலங்கரியுங்கள்.

(அனைவரும் அவைகளைக்கண்டு அதிசயிக்கின்றனர்.)

கௌதமி — தம்பி, நாரதா! இவைகள் எங்கிருந்து கிடைத்தன?

நாரதன் — அப்பா கண்வருடைய வல்லமையாலேதான்.

கௌதமி — அவருடைய மனோவல்லமையால் உண்டாக்கினாரா?

கௌதமன் — இல்லை, இல்லை. நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேளுங்கள். பெருமைபொருந்திய அப்பா கண்வர் எங்களை நோக்கி "சகுந்தலைக்காக, காட்டுமரங்களிலிருந்து, மலர்பறித்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார். அப்படியே நாங்கள் போயிருந்தபோது, * வெண்ணிலாவைப்போல வெள்ளைவெளேலென மங்களமாக மகிழ்ந்தணிந்துகொள்ளத்தகுந்த வெள்ளைப் பட்டுவஸ்திரத்தை ஒருமரம் கக்கிக்கொடுத்தது; மற்றொரு மரம்,

காலில் அணிந்துகொள்ளத்தகுந்த செம்பஞ்சுக் குழம்பைச் சிந்தியது ; இன்னும் சிற்சில மரங்களிலிருந்து, தளிர்போல் அழகிய தமது கரங்களை மணிக்கட்டுவரையில் நீட்டிக்காட்டிக் காட்டுத் தெய்வப்பெண்கள் இந்த அணிகளைத் தந்தனர்.

பிரியம்வதை— (சகுந்தலையைப் பார்த்து) வனதேவதைகள் இவ்வாறு உனக்கு அருள் செய்த விஷயம் உனது கணவன் வீட்டில் நீ அனுபவிக்கப் போகிற அரச செல்வத்துக்கு அறிகுறியாக இருக்கின்றது.

(சகுந்தலை நாணுகின்றாள்.)

நாரதன்—கௌதமா ! வா, வா ; வனதேவதைகள் செய்த இந்த உபகாரத்தை ஸ்நாநஞ்செய்யப் போயிருக்கிற கண்வருக்கு அறிவிப்போம்.

கௌதமன்— அப்படியே.

(இருவரும் போய்விடுகின்றனர்.)

அனசூயை — தோழி, சகுந்தலா ! எங்களிருவருக்கும் ஆபரணம் அணிந்த வழக்கம் இல்லை ; ஆயினும் சித்திரம் எழுதப்பழகியபடி இவ்வாபரணங்களை உனக்குப் பூட்டுகிறோம்.

சகுந்தலை — உங்கள் சாமர்த்தியம் எனக்குத் தெரியாதா ?

(இருவரும் அவளை அலங்கரிக்கின்றார்கள்.)

[பிறகு கண்வர் ஸ்நாநாதிகளை முடித்துக் கொண்டு வருகின்றார்.]

கண்வர்— * இன்று சகுந்தலை என்னைப்பிரிந்து போய்விடுவாள் என்று எண்ணும்போதே, எனது மனம் விசனமிகுந்திருக்கின்றது ; புறப்படும்போது கண்ணீர்விடுவது அனுசிதமென்று நினைத்து கண்ணீரை அடக்கிக்கொண்டிருப்பதனால் தொண்டை கம்மிக் கொண்டு, பார்வை மழுங்கித் தவிக்கின்றேன். உலக இன்பங்களையொழித்து காட்டில் வசிக்கும் துறவியாகிய எனக்கே, வளர்த்த மகளாசையால், இத்தனைவிசனமிகுந்திருக்கிறதென்றால், நாட்டில் வாழும், கிரகஸ்தாசிரமத்தில் இருக்கும் ஒருவனுக்கு, அவன் பெற்ற மகள் பிரிந்துபோகுங்காலத்தில், உண்டாகும் விசனத்தை அளவிட்டுரைக்கவும் ஆகுமோ ?

[சுற்றி வருகின்றார்.]

பிரியம்வதையும் அனசூயையும் — அன்புள்ள சகுந்தலா! உனது அலங்காரம் முடிந்தது; இப்போது இந்த பட்டாடைகளிரண்டையும் உடுத்திக்கொள்.

(சகுந்தலை எழுந்து அவ்வாடைகளை உடுக்கின்றாள்.)

கௌதமி — குழந்தாய்! இதோ வுனது தந்தை, ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்கோடு மகிழ்ச்சி மிக்கவராய் உன்னைத் தழுவிக்கொள்பவரைப்போல வருகின்றார்; ஆகையால் வழக்கம்போல அவருக்கு வந்தனம் செலுத்து.

சகுந்தலை — (நாணத்தோடு) அப்பா! தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

கண்வர்—* எப்படி சர்மிஷ்டையை யயாதி வேந்தன் உயர்வாக மதித்தானோ, எப்படி, அவள் அவனுக்குப் பூருவனைப் பெற்றுக்கொடுத்தாளோ, அப்படியே, உனதுகணவன் உன்னை உகந்துவாழக்கடவன்; உலகெலாம் ஒரு குடைக்கீழ் ஆளவல்ல ராஜகுமாரனை நீ பெறக் கடவை.

கௌதமி—இது ஆசீர்வாதமாகக் கூறப்பட்டதாயினும் வாஸ்தவத்தில் வரமேயாகும்.

கண்வர் — குழந்தாய்! இங்கேயுள்ள யாகத்தீயைச் சுற்றிவா.

(எல்லாரும் சுற்றிவருகிறார்கள்; கண்வர், ருக்வேத சாரமாயுள்ள பின்வரும் கருத்தமைந்த ஒருசெய்யுளைக் கூறி அவளை ஆசீர்வதிக்கின்றனர்.)

* நான்கு பக்கங்களிலும் தருப்பை சூழ்ந்தயாகமேடைமேல் விளங்கும் குழிகளில், சமித்துடன் கூடி எரியும் ஓமதிரவிய வாசனையால், பாவமனைத்தும் பறக்கடிக்கின்ற தக்ஷிணாக்கி, காருகபத்தியம், ஆகவனீயம் ஆகிய மூன்றுநெருப்புகளும் உன்னைக்காக்கக்கடவன. குழந்தாய்! இப்போது நீ புறப்படலாம்; (சுற்று முற்றும் பார்த்து) சார்ங்கரவன் முதலியோர் எங்கே?

(சார்ங்கரவன் வருகின்றான்.)

சார்ங்கரவன்—நாங்கள் இதோ இருக்கிறோம் சுவாமி!

கண்வர் — சார்ங்கரவா! உன் தங்கையை அழைத்துக்கொண்டு போ;

சார்ங்கரவன் — அம்மணி! இவ்வழியே வா, இவ்வழியே வா.

(எல்லாரும் நடக்கிறார்கள்.)

கண்வர் — வனதேவதைகள் வசிக்கும் ஆசிரமத்து மரங்காள்! * எவள் உங்களுக்கு ஜலம் வார்க்காத முன்பு, தான் ஜலபானம் செய்த தில்லையோ, எவள், தளிர்களால் அலங்கரித்துக்கொள்ள அதிக விருப்பமுள்ளவளா யிருந்தும் உங்களிடத்திலுள்ள வாஞ்சையி னால் உங்களது குளிர்தளிரை ஒருபோதும் கொய்ததில்லையோ, எவள், உங்களது முதற் பூப்பின் காலத்தில் உற்சவங்கொண்டாடி மகிழ்ந்தனளோ, அந்த அருங்குணவதியாகிய சகுந்தலையை, நீங்கள் விடைகொடுத்து அனுப்புவது உங்கள் கடமையாம். (குயில் கூவுதலைக்கேட்டு) * மரங்களிற் குயில்கள் கூவுவதனால், அவைகள் சகுந்தலைக்கு விடை தந்தோம் என்பது போலிருக்கின்றது.

(ஆகாயத்தில் ஒரு வாக்கு)

* தாமரை மலர்ந்த தண்ணீர்த் தடாகங்கள் இவள் செல்லும் வழி களில் எங்கெங்கும் இருக்கக்கடவன; நிழலைக்கொடுக்கும் மரங்கள், இவள் செல்லும் வழியோரங்களில் இருந்து வெய்யிலைத் தடுக்கக் கடவன; வழித்தரையிற் புழுதி, தாமரை மலர்த்தாதுபோல மெத் தென்றிருக்கக்கடவது ; இவட்கு நிரம்ப இன்பமாக, இவள் செல் லும் திசையை நோக்கித் தென்றல் வீசக்கடவது.

(அனைவரும் அதிசயத்தோடு கேட்கின்றார்கள்.)

கௌதமி — குழந்தாய் ! ஆசிரமத்துத் தெய்வங்கள் உனக்கு, போக வுத்தரவு கொடுத்தன ; அவைகள் உனது சொந்த சுற்றங்கள் போல்வன. ஆகையால், அவைகளுக்கு வந்தனம் செய்.

சகுந்தலை — (அவைகளை வணங்கினபடியே அப்பால் நடந்து, மறைவாய்) அன்புள்ள பிரியம்வதா! எனது கணவரைக் காணும் ஆவல் அதிக ரித்திருந்தும், எனக்கு, இந்த ஆசிரமத்தை விட்டுப் போவதென் றால், எடுத்தடி வைப்பதற்குக் கஷ்டமா யிருக்கின்றது.

பிரியம்வதை—ஆசிரமத்தை விட்டுப் பிரிவதற்கு நீ மாத்திரமா வருந்து கின்றனை ? உன்னைவிட்டுப்பிரியும் இந்தச் சமயத்தில், ஆசிரமம் முழுவதும் அநுபவிக்கும் மாசிரமத்தைக் கவனித்துப்பார் : * தமது வாய்களிற் கவ்விய தருப்பைப் புல்லை, மான்கள் நழுவ விடுகின்றன ; ஆடு மயில்கள் அசைவற்றிருக்கின்றன ; பழுத்த

இலைகளை உதிர்க்குஞ் செடிகள் கண்ணீர் சிந்துவபோலிருக்கின்றன.

சகுந்தலை — (அப்போதுதான் ஞாபகம் வந்து) அப்பா! எனது தங்கைக் கொடியாகிய வனஜோத்ஸ்னியைக் கண்டு பயணஞ் சொல்லிவிட்டு வருகிறேன்.

கண்வர் — நீ அதனிடத்தில் வைத்திருக்கிற சகோதர அன்பை நானறிவேன். இதோ, அது இந்தத் தென்புறத்திலிருக்கிறது.

சகுந்தலை — (கொடியை நெருங்கி) ஓ, வனஜோத்ஸ்னி! நீ மாமரத்தோடு கூடியிருந்தபோதிலும், இப்புறந்திரும்பி உனது கிளைக்கைகளால் என்னைத் தழுவிக்கொள்; இன்றுமுதல், நான், உன்னைவிட்டு நெடுந்தூரத்தில் இருக்கவேண்டியவளாகின்றேன்.

கண்வர்—*உன்னுடைய உத்தமகுண விசேஷத்தால் உனக்குத் தகுந்த வரனைப் பெற்றிருக்கின்றனை; இதுவே, எனது நெடுநாளைய எண்ணம். இந்த மல்லிகைக் கொடியும், மாமரத்தோடு கூடியிருக்கின்றது. ஆகையால் எனக்கு உங்கள் இருவரைப்பற்றிய கவலைகளும் ஒழிந்தன. நீ க்ஷேமமாய்ப் போய்வா.

சகுந்தலை—(தனது தோழிமாரை நோக்கி) தோழிகாள்! இம்மல்லிகைக் கொடியை, உங்கள் இருவர் கையிலும் ஒப்புவிக்கின்றேன்.

பிரியம்வதையும் அனசூயையும்—எங்களை யார் கையில் ஒப்புவிக்கின்றாய்?

(கண்ணீர் சொரிகின்றனர்.)

கண்வர்—அனசூயா! அழாதே. நீங்களிருவரும் அல்லவா, சகுந்தலையைத் தேற்றவேண்டும். (எல்லாரும் போகிறார்கள்.)

சகுந்தலை—அப்பா! இதோ, இந்த வீட்டுக்கொல்லையில் மேய்ந்துகொண்டிருக்கும் பெட்டைமான் பூர்ண கர்ப்பமாயிருக்கிறபடியால் தள்ளாடி நடக்கின்றது; இது குட்டிபோட்டுச் சௌக்கியமானவுடன், எனக்கோர் ஆள் அனுப்பிச் சங்கதி தெரிவியுங்கள்.

கண்வர்—அப்படியே, மறக்கமாட்டோம்.

சகுந்தலை—(நடைதடுக்கப்பட்டு நின்று) விட்டு விட்டு என் ஆடையைக் கௌவி யிழுத்து உறுய்ந்து நிற்பது எது?

(திரும்பிப் பார்க்கிறாள்.)

கண்வர்—குழந்தாய்! * எந்த மான்வாயில் கூர்மையாகிய தருப்பைப் புல்லின் நுனி குத்திக்கொண்டபடியால் உண்டான புண்ணை, இங்குதி நெய்யைத் தடவி நீ ஆற்றினையோ, சாமாகமென்னும் தானியத்தை நின் கைநிறைய அள்ளி, எந்த மானை இதமாய் ஊட்டி உன் பிள்ளையைப்போலப் பிரியமாய் வளர்த்தையோ, அந்தக் குட்டி மானே உன்னை விடாது பின்தொடர்ந்து வருகின்றது.

சகுந்தலை—குழந்தாய்! நீ ஏன் என்னைப் பின்தொடர்கின்றாய்; நான் தான், உங்களை எல்லாம் விட்டுப்போகத் துணிந்தவளானேனே! நான் என்னவோ, உன்னைச் சின்னகுட்டியிலேயே, உன் தாய் இறந்தவுடனே, எடுத்துவந்து வளர்த்தேன்; இப்போதுகூட நான் போய் விட்டபிறகு எனது தந்தையார் உன்னைப் பாதுகாப்பார். நீ திரும்பிப்போ. (அழுதுகொண்டே போகிறாள்.)

கண்வர்—* அழாதே! அழாதே! கண்ணீர் பெருகி நீண்ட இறையினையுடைய உன் கண்களின் பார்வையை மறைக்கும்; அதனால் மேடு பள்ளமாய் உள்ள வழிகளில் உனக்கு அடி தடுமாறும்.

சார்ங்கரவன்—தமது சுற்றத்தாரைப் பயணங்கூட்டி விடுபவர்கள், தண்ணீர்க் கரைவரையில்தான், வரலாம் என விதியிருக்கின்றது. இதோ இங்கே ஏரிக்கரை குறுக்கிட்டிருக்கிறது. ஆகையால், ஸ்வாமின்! தேவரீர், கடைசியாக எங்களுக்குச் சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்லிவிட்டுத் திரும்பிச் செல்லலாம்.

கண்வர்—ஆனால், இந்த ஆலடி நிழலில் அனைவருஞ் சிறிதுபோது தங்குவோம்.

(எல்லாரும் போய்த் தங்குகின்றார்கள்.)

கண்வர் — (தமக்குள்) மாட்சிமை தங்கிய துஷ்யந்த மன்னவர்க்குத் தகுதியான சமாசாரம் என்ன சொல்லி அனுப்பலாம்!

(யோசிக்கிறார்.)

சகுந்தலை—(மறைவாய்) தோழீ! அந்தப் பெடைச் சக்ரவாகப் பக்ஷியைப் பார்! அது தனது சேவலைக் காணாமல் வருந்திப் புலம்புகின்றது; சேவல், தூரத்திலும் இல்லை; அருகிலுள்ள தாமரை இலைகளிலேயே மறைந்திருக்கின்றது. இதைக் கண்டதனால் என் மனம் வருந்துகின்றது.

அனசூயை — தோழீ, சகுந்தலா ! அப்படிச் சொல்லாதே. * தனது சேவலைப் பிரிந்த பேடையும், விசன மிகுதியால் விடியாது நீண்ட இரவைக் கடக்கும் இயற்கை உள்ளதாகும் ; பிரிவின் துயரம் பெரிதே. ஆயினும், மறுபடியுங் கூடுவோம் என்னும் கோரிக்கையால், அது பொறுத்துக்கொள்ளக் கூடியதாகும்.

கண்வர் — சார்ங்கரவா ! நீ, சகுந்தலையை அரசனெதிரிற் கொண்டு போய் விட்டு, நான் சொன்னதாகப் பின் வருகிறபடி சொல்லக் கடவாய் :—

சார்ங்கரவன் — தேவரீர் கட்டளைப்படியே ;

கண்வர்—* "எமது † தவந்தான் எங்களுக்கு ஆஸ்தியென்று எண்ணும் தவசிகள் நாங்கள். உமது ராஜகுல மேன்மையையும், உற்றாராகிய நாங்கள் இல்லாத காலத்தில், இவள், உம்மை விரும்பித் தன தாசையைக் குறைவின்றி உம்மிடத்திற் செலுத்தியதையும் உள்ளபடி யோசிக்கக்கடவீர்." * அரண்மனை ஸ்த்ரீகள் பலர் உமக்கிருப்பினும், அவர்களைக் காட்டிலும் இவள் தாழ்ந்து வருந்தாமல் ஆதரிக்கக்கடவீர். அப்பால் இவளதிஷ்டம் போலாகட்டும். இதற்கு மேலும் பெண் வீட்டார் பேசலாகாது."

சார்ங்கரவன் — சங்கதி தெரிந்துகொண்டேன்.

கண்வர் — மகளே ! உனக்கு இப்போது கொஞ்சம் புத்திமதி சொல்ல வேண்டி யிருக்கின்றது ; நாங்கள் வனவாசிகள் ஆயினும் உலக விவகாரமும் அறிந்திருக்கின்றோம்.

சார்ங்கரவன் — அறிஞர் அறியாத அறிவு கிடையாது.

கண்வர் — * உனது புருஷன் வீட்டில் நீ வாழ்கிற காலத்தில், ' மூத்தோரிடத்தில் முகக்கோணலில்லாமல் ஏத்தி யவரையிறைஞ்சிடுவாய் ?" சக்களத்திமார்களைத் தோழியர்போல நேசிக்கக்கடவாய் ; உனது புருஷர் கோபித்தாலும், நீ அவரை மீட்டும் கோபிக்காதே ; வேலையாட்களிடத்திற் பக்ஷமாயிரு ; அணியாடை முத

---

† தவந்தான் என்பதற்கு தவந்தவிர ஆஸ்தி எங்களுக்கு வேறில்லை யென்றும், தவமே ஆஸ்தி மற்றெல்லாம் நாஸ்தியென்றும், இருபொருள் படுகின்றமை காண்க.

லிய செல்வவளங்களைக் கண்டு நீ செருக்கடையாதே. இப்படி வாழ்பவர்களே கற்புடை ஸ்த்ரீகள்; 'எப்படி வாழ்ந்தால் என்னென்று' உல்லங்கனஞ் செய்யும் பெண்களே குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பாவார்கள். இந்தப் புத்திமதிகளைக் குறித்துக் கவுதமி எண்ணம் என்னவோ?

கௌதமி—புருஷன் வீட்டுக்குப்போகிற புதுப்பெண்ணுக்குச் சொல்ல வேண்டிய புத்திமதி இவ்வளவே; இந்தப் புத்திமதியை மனத்தில் அமைத்துக்கொள்.

கண்வர் — குழந்தாய்! என்னையும் உனது தோழிமார்களையும் தழுவிக்கொள்.

சகுந்தலை — அப்பா, என் சகிமார் பிரியம்வதையும் அனசூயையும் இங்கிருந்தே திரும்பி ஆசிரமத்துக்கு வந்துவிடுவார்களோ?

கண்வர்—அவர்களுக்குக்கூட கலியாணம் ஆகவேண்டியிருக்கின்றது. அவர்கள் உன்னுடன் நகரத்துக்கு வருவது சரியல்ல. கௌதமி வருவாள்.

சகுந்தலை — (தனது பிதாவைத் தழுவிக்கொண்டு) * † மலயமலைச்சாரலிலிருந்து பிடுங்கி யெறியப்பட்ட சந்தனச் சிறு செடிபோல, எனது தந்தையின் மடியிலிருந்து பிரிந்து நான், மற்றொரு தேசத்தில் எங்ஙனம் உயிர் பிழைத்திருப்பேன்!

கண்வர் — * என்னத்துக்கோ, இங்ஙனம் பயப்படுகின்றனை? உயர்குல வேந்தர் வேந்தனுயுள்ள ஒருவனுடைய மனைவி நீ; அவன் உன்னை விரும்பி ராஜ காரியத்தில் தனது (மந்திரத்) துணைவியாக்கிக் கொள்ளப் போகின்றான்; அதிலேயே உனது மனந்திரும்பி வேறு நினைக்க அவகாசம் இல்லாமற் போகப்போகிறது; கிழக்கு திக்கில் உதிக்கும் சூரியன்போல, புகழ்பெறும் புத்திரன் ஒருவனைப் பெறப்போகின்றனை; ஆதலால் நீ எனது பிரிவைச் சற்றும் கவனிக்கப்போகிறதே இல்லை.

(சகுந்தலை தனது தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்குகின்றாள்.)

---

† மலயமலை = கன்னியாகுமரிக்கருகே மேற்குத்தொடர்ச்சி மலைகளில் ஒன்று.

கண்வர்—நீ அடையவேண்டுமென்று நான் விரும்புகின்ற எல்லாவற்றையும் நீ அடையக்கடவாய்.

சகுந்தலை — (தனது தோழியர்களை நெருங்கி) நீங்கள் இருவீரும் ஒன்றாய் என்னைத் தழுவிக்கொள்ளுங்கள்.

பிரியம்வதையும் அனசூயையும் — (தழுவிக்கொண்டு) தோழீ! ஒருவேளை, அரசர் உன்னை இன்னாளெனத் தெரிந்துகொள்ளத் தாமதிப்பாரானால், அவர் பெயர் செதுக்கியுள்ள இந்த மோதிரத்தைக் காட்டு.

(அவர்கள் அவளுக்கதனைக் கொடுக்கின்றனர்)

சகுந்தலை — இப்படி நீங்கள் கொள்ளுகிற இந்தச் சந்தேகத்தால், என் மனம் நடுங்குகின்றது.

பிரியம்வதையும் வனசூயையும் — அஞ்சாதே; அன்பதிகமானால் கெடுதி வருமோ என அச்சமுண்டாவது வழக்கம்.

சார்ங்கரவன் — சூரியன் உச்சமானான்; வெய்யில் ஏறியது; அம்மா! நீ சீக்கிரம் பிரயாணப்படவேண்டும்.

சகுந்தலை — (ஆசிரமத்துக்கு நேராகத் திரும்பி) அப்பா! மறுபடியும் நான், இந்த ஆசிரமத்தை எப்போது காணுவேன்?

கண்வர் —கவனமாய்க்கேள் * நாற்கடல் சூழ்ந்த நானிலாதிபதியாகிய துஷ்யந்த மஹாராஜனுக்கு, மனைவியாய் வாழ்ந்து, நீ, புகழ் பெறும் புத்திரனொருவனை, பெற்றுக்கொடுத்து, அந்த மைந்தனுக்கு மணவினை முடித்து, முடிசூட்டி அரசனுக்கி பூபாரத்தை அவன்மேற் சுமத்தி, பின்பு நீயும் நினது கணவனும் இவ்வாசிரமத்தை நிச்சயமாய் அடைவீர்கள்.

கௌதமி — குழந்தாய்! புறப்படுவதற்குக் குறித்த லக்கினம் தப்பிப் போகின்றது; அப்பாவைத் திரும்பிப் போகவிடு. (கண்வரை நோக்கி) இங்கே இவள் இப்படித்தான் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டே பொழுது போக்குவாள். ஆகையால் தாங்கள் தயவு செய்து திரும்பிவிடுங்கள்.

கண்வர் — குழந்தாய்! என்னுடைய தபோநுஷ்டானங்களுக்குத் தடை உண்டாகின்றது.

சகுந்தலை — (மறுபடியுந் தந்தையைத் தழுவிக்கொண்டு) அப்பா! உமது

சரீரம் தபஅநுஷ்டானத்தால், இப்போதே இளைத்திருக்கின்றது. ஆகையால் என்னைப்பற்றி அதிக கவலைப்படவேண்டாம்.

கண்வர் — (பெருமூச்செறிந்து) * நிவேதனமாக நீ வாரி இறைத்த நீவார தானியம், ஆசிரமவாசலில் முளைத்து வளரக் காணுந்தோறும், எனது கவலையும் அதுபோலவே வளரும்; கொஞ்சமேனும் குறையாது. ஆனாலும், நீமட்டும் மங்களகரமாகப் போய்வா.

(சகுந்தலை தனது துணைவரோடு செல்கின்றனள்.)

பிரியம்வதையும் அனசூயையும் — (சகுந்தலையை நெடுக நோக்கி) ஆஹா! ஆஹா! சகுந்தலை வனத்தில் மறைந்துவிட்டாளே!

கண்வர் — (பெருமூச்செறிந்து) அம்மா, அனசூயா! தவத்தொழில்களில் உங்களுக்குத் துணையாயிருந்த சகுந்தலை கடைசியாகப் பிரிந்துபோய்விட்டாள். உங்கள் விசனத்தை அடக்கிக்கொண்டு என்னோடு வாருங்கள்; நான் ஆசிரமத்துக்குப் போகிறேன்.

பிரியம்வதையும் அனசூயையும் — அப்பா! சகுந்தலையில்லாமல் பாழடைந்து (அழகு குறைந்து) இருக்கும் ஆசிரமத்தில் நாங்கள் எப்படி நுழைவோம்?

கண்வர் — அன்பு அதிகமிருப்பதால் அப்படித்தான் தோன்றும். (ஆழ்ந்த யோசனையோடு நடந்துகொண்டு) * ஆஹா! சகுந்தலையை, அவள் கணவன்வீட்டுக்கனுப்பின இப்போதுதான் எனக்கொருவித ஆறுதல் உண்டாயிருக்கின்றது; மகள் எந்நாளும் மற்றவர் பொருள், பிறரிடத்திற் பெற்ற இரவற்பொருளென்றும் இயம்பலாம்; இரவற் பொருளை அதற்குடையவரிடத்தில் திருப்பிக் கொடுத்து மகிழ்வதுபோல, சகுந்தலையை அவளுக்குடையவனாகிய அவள் கணவனிடம் அனுப்பினபின்பே, என் மனது தெளிந்து மகிழ்ந்து விளங்குகின்றது.

நான்காம் அங்கம் முடிந்தது.

ஐந்தாம் அங்கம்

இடம் : — அஸ்தினபுரியில் துஷ்யந்தன் அரண்மனையில் ஓரறை.

பாத்திரங்கள் : — துஷ்யந்தன், விதூஷகன், ஹம்ஸபதிகை, கஞ்சுகி, பிரதீகாரீ, முதல் வைதாளிகன், இரண்டாம் வைதாளிகன், சார்ங்கரவன், சாரத்வதன், கௌதமி, சகுந்தலை, புரோகிதர்.

(துஷ்யந்தனும் விதூஷகனும் உட்கார்ந்துகொண்டிருக்கின்றார்கள்.)

விதூஷகன் — (உற்றுக்கேட்டு) அன்புள்ள நண்பரே! சங்கீதசாலைக்குள்ளே உமது கவனத்தைச் செலுத்தக் கோருகிறேன். காதுக்கினிமையாயும் பொருத்தமாயுமுள்ள கலவைச்சுரங்களோடு கூடிய இசையை, யாரோ பாடுகிறார்கள். ஹம்ஸபதிகை அம்மையார், இசைபாடப்பழகுவதாக நினைக்கின்றேன்.

துஷ்யந்தன் — பேசாதிரு; நான், கொஞ்சம் கவனித்துக் கேட்கட்டும்.

(காற்று வாட்டத்தில் பின்வரும் கருத்தமைந்த பாட்டொன்று கேட்கிறது.)

ஹம்ஸபதிகை — * மாம்பூத்தேனை மகிழ்ந்து குடித்த வண்டு, தாமரைத் தேனுக்குத் தாவுவதும் உண்டோ? தாமரைத் தேனுக்குத் தாவுமாயினும் அது, மாமரத்தேனை மறக்குமா? தாமரைத்தேனைக் குடிக்கலாம் என்கிற விருப்பத்தினால், மாமரத்தேனை மறக்கும்.

துஷ்யந்தன் — ஆஹா ! எவ்வளவு உருக்கமாய், காதுக்கினிமையா யிருக்கின்றது.

விதூஷகன் — பாட்டின் சொற்பொருள் உமக்கு விளங்குகின்றதா ?

துஷ்யந்தன் — (புன்னகையோடு) ஒருகாலத்தில் நான் இவளைக் காதலித் திருந்தேன் ; இப்போது வசுமதியிடத்தில் எனக்குள்ள காத லில், காய்ச்சல்கொண்ட இவள், என்னை நிந்தாஸ்துதியாகப் பாடு கின்றாள். அன்பனாகிய நீதான், இப்போது அவளிடத்துக்குப் போய், அவள் என்னை நிந்தித்தது எனக்கு நன்றாய் உறுத்தியது என்று நான் சொல்லியனுப்பினதாகத் தெரிவிக்கவேண்டும்.

விதூஷகன் — உமது கட்டளைப்படியே ; (எழுந்து) பிறர் கையைக் கொண்டு என் குடுமியைப் பற்றிக்கொண்ட அவ்வம்மையாரிடத்தி லிருந்து நான் எங்ஙனம் தப்புவேன் ! அப்ஸர ஸ்த்ரீயின்வலையில் அகப்பட்ட அருந்தவசியைப்போலானேன்.

துஷ்யந்தன் — போ ; போய், அவளிடத்திற் பெருந்தன்மையாகவே பேசி விஷயத்தை அறிவி.

விதூஷகன் — வேறு வழி ஏது ? (போய்விடுகின்றான்.)

துஷ்யந்தன் — (தனக்குள்) காதலரைப் பிரியாதிருந்தும், இப்படிப்பட்ட பாட்டைக் கேட்டது முதல், என் மனதிற் பெருங்கவலை உண்டா யிருக்கின்றது ! என்னகாரணமோ! ஒருவேளை, முற்பிறப்பில் விட்ட குறை தொட்ட குறையா யிருக்கலாமோ ! * நற்பொரு ளைக் காணுதல் நல்லிசையைக் கேட்குதல் முதலியவைகளால், ஒருவனுக்கு அவனையும் அறியாமலே அவன் மனதில் ஆழ்ந்து பதிந்துள்ள பூர்வகாதலுணர்ச்சி அநேகமாய் உண்டாய்விடு கினறது.

(செயற்கையற்று நிற்கின்றான்.)

(அப்போது † கஞ்சுகி பிரவேசிக்கிறான்.)

கஞ்சுகி — அந்தோ ! நான் இந்த நிலைமைக்கு வந்துவிட்டேனே ! ஒருகா லத்தில், எனது அந்தப்புரக்காவல் அதிகாரத்துக்கு அடையாள மாய் என் கையிலேந்தியிருந்த இந்தச் சிங்காரத்தடி இப்போது நடக்கத் தள்ளாத கிழவனாகிய எனக்குக் கிழத்தடியாய் ஊன்றி

---

† அந்தப்புரவேலைக்காரன் ; ஒரு கிழப்பிராமணன்.

நடக்க உதவுகின்றதல்லவா ? அரசகடன் தடைபடக்கூடாது. என்றாலும், இப்போதுதான், தமது கடமைகளை முடித்து நியாயா சனத்தைவிட்டெழுந்து சென்ற அரசர்க்கு, கண்வமுனிவருடைய சிஷ்யர்களின் வரவைத் தெரிவித்துச் சிரமமுண்டாக்க எனக்கு மனம் வரவில்லை. ஆனாலும், உலகாக்ஞை செய்வோர்க்கு ஒரு காலும் ஓழிவே கிடையாதென்பது உண்மை. * கட்டின தேர்க் குதிரைகளை அவிழ்க்காமலே சூரியன் ஓட்டிக்கொண்டிருக்கின்றான் ; எப்போதும் காற்று ஓயாமல் வீசிக்கொண்டே யிருக்கின்றது ; பூபாரத்தைச் சேஷன் விடாது சுமந்துகொண்டே யிருக்கின்றான் ; ஆறிலொரு கடமைகொண்டு பாராளும் மன்னவன்றன் அதிகாரமும் அப்படியே ஓய்வின்றி விளங்கும். எனது கடமையை நான் தவறாமற் செய்வதே தகுதி. (சுற்றிப்போய் உற்று நோக்கி) * தனது பரிவார யானைகளை மேயவிட்டு, தன்னந்தனியே ஓரிடத்தில் இளைப்பாறிக்கொண்டிருக்கும் அரசயானையைப்போல, வேந்தராகிய இவர், ஜனங்களைப் பெற்ற பிள்ளைகளைப்போல பாதுகாத்து, தமது இளைப்பாறத் தங்கியிருக்கின்றார். (அருகே சென்று) மகாராஜாவுக்கு ஜயமங்களம் உண்டாகுக ! இங்கே துறவிகள் இருவர் பெண்களுடன் வந்திருக்கின்றனர். இமயமலைச் சாரலி லிருப்பவர்களாம் ; கண்வர் இடத்திலிருந்து சமாசாரம் கொண்டு வந்தனர். இதைப் பற்றித் தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கின்றேன்.

துஷ்யந்தன் — (மரியாதையோடு) கண்வரிடத்திலிருந்து சமாசாரங் கொண்டுவந்தவர்களா ?

கஞ்சுகி — ஆம்.

துஷ்யந்தன் — ஆனால், உடனே, நீபோய் இதைப் புரோகிதர், சோமராதர்க்குத் தெரிவி ; அவர் ஆசிரமவாசிகளுக்கு வேத விதிப்படி செய்ய வேண்டிய அர்க்கிய பாத்தியாதி கடமைகளைச் செய்து, அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு வரட்டும் ; நான் போய் அவர்களை நல்வரவேற்பதற்குரிய இடத்தில் இருக்கின்றேன்.

கஞ்சுகி — தங்கள் கட்டளைப்படியே ;

துஷ்யந்தன் — (எழுந்து) வேத்ரவதீ ! யாகசாலைக்கு வழிகாட்டு.

பிரதீகாரீ — இவ்வழியே வாருங்கள். (வழிகாட்டிச் செல்கின்றாள்.)

துஷ்யந்தன் — (அரசாட்சியின் துன்பத்தைச் சொல்லிக்கொண்டே நடந்து) தான் விரும்பிய பொருளைப் பெற்றவுடனே ஒவ்வொரு பிராணியும் சந்தோஷப்படுகின்றது. ஓர் அரசனோ என்றால், தான் விரும்பிய பொருளைப் பெற்றும், பின்னும் துன்பத்தையே அடைகின்றான். * ஒருவன் தான் விரும்பிய † பொருளைப் பெற்றானால், அவனுடைய இச்சைமட்டும் தீரும். அன்றி, அதனைக் காப்பாற்றுந் துன்பம் அதிகரிக்கும். ஆதலால், அரசாட்சி கைக்குடைக்குச் சமானம்; அதனைப் பிடித்தலால் ‡ கைக்குண்டாகும் துன்பம் அதிகம், § உடற்குண்டாகும் சுகம் குறைவு.

(திரைக்குப் பின்னே)

‖ **வைதாளிகர்** — மன்னர்க்கு ஜயமுண்டாகுக.

முதல்வைதாளிகன் — * குடிகள் சுகத்தை நாடுதலே உமக்கியற்கை; ஒருபோதும் உமது சுகத்தை நீர் நாடுவது கிடையாது. மரமானது தனது தலையில் வெய்யிலைத் தாங்கிக்கொண்டிருந்தும், தன்னிழலில் வருபவர்களுடைய இளைப்பை யகற்றுவதுபோல, சான்றோர் தமது துன்பத்தைக் கவனியாமலே, பிறர் துன்பத்தை நீக்குவார்கள்.

இரண்டாம்வைதாளிகன் — * செல்வம் பொருந்தியுள்ளபோது மட்டும் சுற்றத்தார் கூடி இருப்பார்கள். நீரோ அப்படி அன்று. குடிஜனங்கள், உண்மை வழியை விட்டு விலகினால் கண்டிக்கின்றீர்; அவர்களுக்குள் நேரிடும் வழக்கறுக்கின்றீர்; அவர்களைப் பலவிதத்திலுங் காப்பாற்றுகின்றீர்; ஆதலால் உமது அன்பின் நிலைமை அதிசயிக்கத்தக்கது.

துஷ்யந்தன் — மனக்கவலை கொண்ட நான் மறுபடியும் மனக்களிப் படைந்தேன்.

(சுற்றிச் செல்கின்றான்.)

---

† பொருள்=அரசாட்சி. ‡ எதிர்காற்றிற் பட்டபோது குடைபிடித்துச் செல்வோன் கைபடும்பாடு பெரும்பாடு. § எதிர்மழையிற் பட்டபோது குடைபிடித்துச் செல்வோன் படும்பாடு பெரும்பாடு.

‖ வைதாளிகர்=சமயோசிதமாய்ப்பாடும் அரண்மனைப் பாடகர்கள்=அரசர்க்குக் காலவரை யறிவித்துக் கடமை முடிப்பிக்கிறவர்கள்.

பிரதீகாரீ— யாகசாலையின் சுற்றுமேடை நன்றாய்ப் பெருக்கிச் சுத்தமா யிருக்கின்றது ; யாகப்பசுவும் ஒருபுறங் கட்டியிருக்கின்றது ; கண்டோர் மனதைக் கவரக்கூடிய இந்த வாசற்படியின்மேல் ஏறுங்கள்.

(ஏறி, மெய்காப்பாளன் ஒருவனுடைய தோண்மேல், சாய்ந்துகொண்டு நிற்கிறான்.)

துஷ்யந்தன் — வேத்திரவதி ! எதற்காக இம்முனிவர்களைக் கண்வர் அனுப்பி யிருப்பாரோ ? * இந்த ருஷிகள் தவத்திற்கென்ன குறை நேரிட்டதோ, துன்மார்க்கர்களில் எவர்களேனும் தவவன மிருகங்களுக்குக் கெடுதி செய்தார்களோ, எனது தீவினையின் முதிர்ச்சியால், தவவனக் கொடிகள் மலராதிருந்தனவோ, இப்படிப் பலவாறு என் மனது பரிதபிக்கின்றது.

பிரதீகாரீ — இந்த ருஷிகள் தம்தம் தவக்கருமங்கள் சரிவர நடைபெறுவதால், மனமகிழ்ந்து, மன்னவராகிய தங்களுக்கு மரியாதை செய்ய வந்திருக்கின்றார்கள் என்று எண்ணுகின்றேன்.

(அப்போது, முன்னே கஞ்சுகியும் புரோகிதரும் நடந்து வழிகாட்ட, இடையில் சகுந்தலையோடு கௌதமி செல்ல, பின்னே முனிவர்கள் வருகின்றனர்.)

கஞ்சுகி — சுவாமிகாள் ! இப்படி வாருங்கள் ; இப்படியே வாருங்கள்.

சார்ங்கரவன்—சாரத்வதா ! * இந்த அரசர், எப்போதும் நல்வழி விட்டு அல்வழியிற் செல்லாத பரிசுத்த புருஷோத்தமர் ; இவர் அரசாட்சியில் அடங்கிய குடிகளில், கீழ்க்குலத்தோரும் அல்வழியிற் செல்லார்; ஆயினும் மனிதர் மிகுந்தில்லாத் தவவனங்களிலிருந்து பழகிய எனக்கு இந்த மாந்தர் நிறைந்த அரண்மனை, நெருப்புச் சூழ்ந்த வீடுபோலத் தோன்றுகின்றது.

சாரத்வதன்—நகரத்தை அடைந்தவுடனே உமக்கு இப்படித் தோன்றுவது ஞாயந்தான் : * எண்ணெய் தேய்த்துக் குளித்தானவன், எண்ணெய் தேய்த்துக்கொண்டு இனிக் குளிப்பவனையும், நல்வழியிற் செல்வோன், அல்வழியிற் செல்வோனையும், தூங்கி விழித்துக் கொண்டவன், தூங்கிக் கொண்டிருப்பவனையும், சுயேச்சையில் திரிபவன், சிறையில் இருப்பவனையும், கண்டால் எப்படி எண்ணு

வார்களோ, அப்படி நான், சிற்றின்பத்தில் மூழ்கி வாழும் இம் மனிதனைக் கண்டு மதிக்கின்றேன்.

சகுந்தலை—(தான் என்னவோ அவசகுனங்கண்டு) அந்தோ! ஏனோ என் வலக்கண் துடிக்கின்றது!

கௌதமி—குழந்தாய்! உனக்கு வந்த துன்பம் நீங்கக் கடவது; உனது கணவன் வீட்டுக் குலதெய்வங்கள் உனக்கு நன்மை உண்டாக்கக் கடவன. (நெடுக நடக்கின்றனர்.)

புரோகிதர்—(அரசனைச் சுட்டிக்காட்டி) நான்கு வருணத்தினரையும் நான்கு ஆசிரமத்தினரையும் தத்தம் நிலையிற் றவறாது காப்பவராகிய மன்னவர், தமது ஆசனத்தைவிட்டெழுந்து, உங்கள் வரவை எதிர் நோக்கி நிற்கின்றார்; அவரைப் பாருங்கள்.

சார்ங்கரவன் — ஓ, பிராமணோத்தம! இது மிகவும் கொண்டாடத் தக்க விஷயமேயாயினும், நாங்கள் இதனை இவ்வரசர் விஷயத்தில் அரிதாக மதியோம். * காய்த்த பளுவினால் மரங்கள் வளையும்; நீர் மிகுந்து சாய்ந்த பளுவினால் மேகங்கள் கீழ் இறங்கும்; செல்வம் நிறைவதனால் சான்றோர்க்கு வணக்கம் உண்டாகும்; பிறர்க்கு நன்மை தரும் மனமுடையார் இங்ஙனம் இருத்தல் இயற்கை.

பிரதீகாரீ — சுவாமீ! முனிவர்கள் முகமலர்ந்திருக்கின்றபடியால், தமது காரியம் சுளுவில் முடியுமென நம்பியிருக்கின்றார்கள் என்றெண்ணுகின்றேன்.

துஷ்யந்தன் — (சகுந்தலையை உற்றுநோக்கி) இதோ, * பழுத்த இலைகளின் இடையிலிருக்கும் இள இலைபோல, முற்றிலும் தனது அழகு தோன்றாதபடி துறவியர் நடுவில் முக்காடிட்டு முகத்தை மூடி விளங்கும் இந்நங்கை யாரோ?

பிரதீகாரீ — ஆச்சரிய மிகுதியால், எனது எண்ணமும் எந்த வழியிலும் செல்லவில்லை; உருவமென்னவோ, அதியற்புதமாகத்தான் இருக்கின்றது.

துஷ்யந்தன் — என்றாலும் பிறன் மனைவியைக் கவனித்துப் பார்க்கப் படாது.

சகுந்தலை — (தனது மார்பிற் கையை வைத்து, தனக்குள்ளேயே) ஓ,

நெஞ்சே! ஏன் இப்படி நடுங்குகின்றனை? எனது தலைவராது காதல் மிகுதியை நினைந்து சற்றுத்தைரியமா யிரு.

புரோகிதர் — (முன்னே போய்) இறைவ! விதிப்படி உபசரித்து நல்வரவேற்று, நான் அழைத்துக்கொண்டு வந்த துறவிகள் இதோ வந்திருக்கின்றனர்; அவர்கள் தமது குருவினிடத்திலிருந்து தங்களுக்கொரு சமாசாரங் கொண்டுவந்திருக்கின்றார்கள்; அதனைத் தாங்கள் தயைசெய்து கேட்கவேண்டும்.

துஷ்யந்தன் — கேட்கச் சித்தமாயிருக்கின்றேன்.

சார்ங்கரவனும் சாரத்வதனும் — (கைகளை உயர்த்தி) ஓ அரச! உமக்கு ஜயமுண்டாகக்கடவது.

துஷ்யந்தன் — உங்களனைவர்க்கும் வந்தனம் செய்கின்றேன்.

சார்ங்கரவனும் சாரத்வதனும் — உமது எண்ணம் ஈடேறக்கடவது.

துஷ்யந்தன் — முனிவர்களுடைய தவவொழுக்கங்கள் நன்கு நடைபெறுகின்றனவா?

சார்ங்கரவனும் சாரத்வதனும் — *உமது பாதுகாப்பில் உள்ள நல்லோருடைய தவக்கருமங்களுக்கும் தவறுண்டாகுமா? சூரியன் சுடர் விரிந்து விளங்குகையில் இருள் எவ்வாறு நிற்கும்?

துஷ்யந்தன் — இப்போதுதான் அரசன் என்னும் பட்டப்பெயர் எனக்கு நிலைத்தது. உலக க்ஷேமகாரணரும் பெருமை பொருந்தியவரும் ஆகிய கண்வர், க்ஷேமமா யிருக்கின்றாரா?

சார்ங்கரவனும் சாரத்வதனும்—மஹான்கள் தங்களுடைய தபோசக்தியினாலேயே தங்களுடைய சுகத்தையும் வாழ்வையும் பெற்றிருக்கின்றனர். அவர், உமது சுகத்தைக் கேட்டபிறகு, இதனை உமக்குச் சொல்லச் சொன்னார்.

துஷ்யந்தன் — மஹானாகிய அவர் என்ன கட்டளையிட்டார்?

சார்ங்கரவன் — "நீரும் எனது மகளும் ஒருவருக்கொருவர் உடன்பட்டு மணம்புரிந்துகொண்டதை, நான், உங்கள் இருவர்மேலும் வைத்த அன்பினால், அங்கீகரிக்கின்றேன். *உலகில் உம்மை உத்தமோத்தமராக மதிக்கின்றேன்; சகுந்தலையோ, சற்குணவதி; ஆத

லால், இப்படி ஒத்த குணாதிசயங்களோடு கூடிய தம்பதியாகிய உங்கள் இருவரையும் ஒன்றாய்க் கூட்டிவைத்த பிரமன், தான் இத்தனை நாளாய்ப் பெற்ற † நிந்தையைப் போக்கினான்; கரு வுயிர்க்குங் காலம் நெருங்கியுள்ள இந்த மங்கையை, தம்பதி சமேதராய்ச் செய்துகொள்ளவேண்டிய ஸீமந்தம் முதலிய சடங்கு கட்காக, இப்போதே நீர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கௌதமி — மஹாராஜாவே, * நான் பேசவேண்டியது அநாவசியம்; ஆயினும், இரண்டொரு வார்த்தை பேச விரும்புகின்றேன்: கலியாணத்தை விரும்பின நீரும், பெண்ணைப் பெற்றவர்களுடைய இஷ்டத்துக்கு எதிர்பார்க்க இல்லை; அந்தப் பெண்ணும் அப்படியே, தனது சுற்றத்தாரை யோசிக்காமலே ஒப்புக்கொண்டனள். இப்படி உங்களுக்குள்ளே உள்ளம் ஒத்துத் தனிமையில் நடந்த விவகாரத்தில், நீங்கள் ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ள வேண்டிய முறையைப்பற்றி நான் என்ன சொல்லக்கூடும்?

சகுந்தலை — (தனக்குள்) எனது நாயகர் என்ன சொல்லுவாரோ தெரியவில்லையே!

துஷ்யந்தன் — இது என்ன இது! எனக்கு முன்னே, இவர்கள் என்னவோ கொண்டுவந்திருக்கிறார்களே!

சகுந்தலை —(மனதுக்குள்) ஐயோ! இவர் வார்த்தை நெருப்புப்போலிருக்கிறதே!

சார்ங்கரவன் — என்ன வார்த்தை சொல்லுகிறீர்! உம்மைப்போன்ற மன்னர்கள் உலக விவகார ஒழுங்கை நன்குணர்ந்தவர்கள் அல்லவா? * யௌவனமுடைய ஒரு பெண் கற்புடையவள் ஆயினும் தனது கணவனைவிட்டு, சுற்றத்தார் சார்பில் வாழ்வாளாயின், ஊரார் அவளை மதியார்கள்; ஆதலாற்றான் கணவன் வெறுத்துத் தள்ளினாலும், அவனுடனே மனைவி இருக்கவேண்டுமென்று அவள் பந்துக்கள் விரும்புகிறார்கள். இதனை நீவிர் அறியாதிருப்பது விந்தை.

---

† கணவர் மனைவியர் ஒருவர்க்கொருவரை, பெரும்பாலும் ஒவ்வாமற் படைத்துப் பெற்ற நிந்தை.

துஷ்யந்தன் — ஆஹா ! இவ்வம்மையாரை நான் மணந்தேனா ?

சகுந்தலை — (துயரத்தோடு மனதுக்குள்) ஓ, நெஞ்சே ! நீ பயந்தது சரி தான்.

சார்ங்கரவன் — ஐயா ! செய்த காரியத்தை ஏன் இல்லை என்கிறீர். அந்தரங்கமாகச் செய்தது இப்பொழுது உமக்கு வெறுப்பாய்த் தோன்றினாலும் அரசராகிய நீர் நீதிநெறியைத் தவறலாமா ?

துஷ்யந்தன் — பொய்யைப் புனைந்து சுருட்டிக்கொண்டு வந்த இந்த கேள்விகளுக்கு விடைகள் கிடையா.

சார்ங்கரவன்—இராஜாதிகாரப்பிராந்தி மிகுந்திருப்பவர்களுக்கு, இந்த மனமயக்கம் சாதாரணமாயுண்டு.

துஷ்யந்தன் — என்னை மிகவும் அவமதித்துப் பேசுகின்றீர் !

கௌதமி — குழந்தாய் ! கொஞ்சங் கூச்சப்படாமல் இரு ; முக்காட்டை நீக்குகின்றேன் ; உனது கணவர் உன்னை இன்னாளென அறிந்து கொள்வார். (முக்காட்டை நீக்குகின்றாள்.)

துஷ்யந்தன் — (சகுந்தலையை உற்று நோக்கி தனக்குள்) * அழகின் மிகுந்த † அணங்குபோல் என்னெதிரே தோன்றும் இந்த இளங்கொடியை, எந்நாளில் எங்கே மணந்தேனோ, இல்லையோ எனக்கு ஞாபகம் இல்லை. ‡ பனித்துளியான் மூடிய மல்லிகை மலரைக்கண்ட வண்டுபோல, இவரைத் துணிந்து கொள்ளவும் மனம் வரவில்லை ; தள்ளவும் மனம் வரவில்லை.

(சிந்தித்துக் கொண்டிருக்கின்றான்.)

பிரதீகாரீ — (மனதுக்குள்) சன்மார்க்க நெறியில் எமது மன்னவர் எத்தனை சிறந்தவர் ! வலிய வந்திருக்கிற இந்த அழகைக் கண்டவுடனே யார்தான் தடை சொல்வார்கள் ?

சார்ங்கரவன்—ஓ வேந்தே ! நீர் ஏனோ இங்ஙனம் சும்மா இருக்கின்றீர்?

துஷ்யந்தன்— ஓ துறவிகாள் ! நான் எத்தனையோ எண்ணி எண்ணிப் பார்த்தும், இவ்வம்மையாரை மணஞ் செய்துகொண்ட ஞாபகம்

---

† அணங்கு=தெய்வப்பெண்.

‡ பனியால் நிறைந்த மல்லிகைமலரை வண்டு நுகருவதற்கு முன் அதைத் தொடுகிறதா விடுகிறதாவென்று சுற்றிப பறந்து ஆராய்வது வழக்கம்

வரவில்லை. ஆதலால் நான்தான் கணவனென்பது சந்தேகமா யிருக்கையில், கர்ப்பச் சின்னங்கள் விளங்கியுள்ள இவளை, எங்ங னம் ஏற்றுக்கொள்வேன் ?

சகுந்தலை — (துக்கத்தோடு மறைவாய்) எனது நாயகர், கலியாணத்தைக் குறித்தே சந்தேகப்படுகின்றார். ஆதலால் எனது ஆசையின் முதிர்ச்சி எங்ஙனம் நிறைவேறப்போகின்றது ?

சார்ங்கரவன் — அப்படிச் சொல்லாதீர் ; * தமது கற்புடைய மகளை, நீர், கற்பழித்தும், கண்வமுனிவர் மனங்களித்தனர் ; திருடின பொருளைக் கண்டு பிடித்தும், அதனை அக்கள்வற்கே திருப்பிக் கொடுப்பதுபோல, தமது மகளை உமக்கே கொடுத்து, உமது நிந் தையைத் துடைத்தனர் ; அப்பேர்ப்பட்டவரை, நீர் அவமதிப்பது அடாது.

சாரத்வதன் — சார்ங்கரவ ! இனிப் பேசுவதை நிறுத்து ; சகுந்தலா ! நாங்கள் என்ன சொல்லவேண்டுமோ, அதனைச் சொல்லியாயிற்று. இங்கே அரசரும் இப்படிப் பேசுகிறார் ; அவர்க்கு நம்பிக்கை வரத்தகுந்த விஷயம் ஏதாவதிருந்தால் சொல்லு.

சகுந்தலை — (தனக்குள்) அப்படிப்பட்ட காதலே அடியோடு காற்றாய்ப் பறந்தபோது, ஞாபகம்பண்ணி நம்பவைப்பதிற் பலனென்ன ? நான், எப்போதும் தீராத்துயரத்தை அநுபவிக்க வேண்டியவளா யிருக்கின்றேன். (உரக்க) பிராணநாதா ! (இதுபாதி சொல்லி) மணம் புரிந்ததே, சந்தேகத்தில் இருக்கிறபொழுது, இப்படி அழைப் பது ஞாயமல்ல—; புருவமிசத்தில் உதித்தவரே ! ஆசிரமத்தில் என்னென்னவோ உடம்படுமொழிகள் கூறி, களங்கமற்ற என்னை மயக்கிவிட்டீர், இப்போது இப்படிப் பேசி தள்ளிவிடுதல் சரியல்ல.

துஷ்யந்தன் — (காதுகளிற் கைகளைவைத்து) * அந்தோ பாவம்! பாவம் ! கரைபுரண்டு வேகமாய் ஓடுகின்ற பெருநதியானது, தெளிந்த நீரைக் கலங்கலாக்கி, கரையிலுள்ள மரங்களை வேரோடு தள்ளிவிடு கின்ற தன்மைபோல, எனது நிலையைக் கலக்கிக் குலநலத்தைக் குலைத்துவிட எண்ணுகின்றனை !

சகுந்தலை — உண்மையில் நான், பிறர் மனைவியென நீர் ஐயுற்று, இங்ங

னம் நடந்துகொள்வீராயின், சரி! இதோ இந்த அறிகுறியைக் கொண்டு உமது ஐயத்தை நீக்குகின்றேன்.

துஷ்யந்தன் — மிகவும் நல்ல ஏற்பாடு.

சகுந்தலை — (மோதிரமிருந்த இடத்தைத் தடவி) ஐயையோ! என் விரலில் மோதிரத்தைக் காணோமே!

(கௌதமியை வியாகுலத்தோடு பார்க்கிறாள்.)

கௌதமி — சக்காராவதாரத்திலுள்ள சசிதீர்த்தத்தை நீ குனிந்து வணங்குகையில், அம்மோதிரம் நழுவி விழுந்துவிட்டிருக்கலாம்.

துஷ்யந்தன் — (புன்சிரிப்போடு) 'பெண் புரட்டு, புணைசுருட்டு' என்கிறார்களே, இதுதான்.

சகுந்தலை — இருக்கட்டும்; இதுதான் இப்படியாயிற்று. விதியை வெல்ல யாராலாகும்? வேறொரு விஷயம் கூறுகிறேன்.

துஷ்யந்தன் — கண்ணாலே பார்க்கவேண்டியது போய்விட்டது. இப்போது காதாலே கேட்கவேண்டிய விஷயம் வந்துவிட்டது! ஆகட்டும் அதை இப்போதே சொல்லு.

சகுந்தலை — ஒருநாள், நவமாலிகைக் கொடிப்பந்தலில் உமது கையில் தாமரையிலைத் தொன்னையில் தண்ணீர் வைத்துக்கொண்டிருந்தீர்.

துஷ்யந்தன் — நன்றாய்க் கேட்கிறது; சொல்லு.

சகுந்தலை — அந்தச் சமயத்தில், நான் பிள்ளையைப்போல் வளர்த்த தீர்க்காபாங்கன் என்னும் எனது மான், உமதருகில் வந்தது. நீர், அதனைத் தயாளகுணத்தோடு நோக்கி "மெல்லியமானே, இந்தா, தண்ணீர் குடி" என்றீர். அது உம்முடன் பழகியில்லாதபடியால், உம்முடைய உபசாரத்தை ஏற்றுக்கொள்ளப் பயந்தது. அதே ஜலத்தை என் கையில் எடுத்துக்கொண்டபொழுது, அது என்னிடத்தில் நம்பிக்கை வைத்துக் குடித்தது. அப்போது நீர் "இனத்தை இனம் நம்பிச் சேரும்; நீங்கள் இருவீரும் வனசார்களல்லவா"? என்று பரிகாசஞ் செய்யவில்லையா?

துஷ்யந்தன் — தங்கலம் பாராட்டும் நயவஞ்சகப் பெண்கள் இத்தகைய தேன்மொழிகளால், சிற்றின்பப் பிரியர்களை மயக்குகின்றார்கள்.

கௌதமி — பெருந்தகை அரசே! இப்படி அவசரப்பட்டுப் பேசாதீர். ஆசிரமத்தில் வளர்ந்த இந்த மாசிலாமங்கை, பொய் பேச அறியாள்.

துஷ்யந்தன் — * மூத்தமாதவப் பெண்மணீ! பெண்களுக்குள் சூது மிகுந்திருக்கின்றதென்பதை, மனிதரினும் தாழ்ந்த மிருக பக்ஷிகளுக்குள்ளேயும் காணலாம்: ஆகையால் அவைகளினும் அறிவின் முதிர்ந்த மனிதர் எத்தனை ஏற்றமான சூதர் என்பது சொல்லவும் வேண்டுமோ? பெட்டைக்குயில், தனது குஞ்சுகளுக்குப் பறக்கும் பருவம் வரும் வரையில், மற்றப் பக்ஷிகளாலே ரக்ஷிக்கப்படும்படி செய்யுந் † தந்திரம் யாவர்க்கும் தெரிந்த விஷயமே.

சகுந்தலை — (கோபத்தோடு) பெருந்தகைமையிற் பிறழ்ந்தவரே! * உமது ‡ துர்க்குணத்தைக்கொண்டே, உலகத்தை மதிக்கும் உமது தந்திரம், யார்க்கும் அடுக்காது; ஆழ்ந்த பாழுங்கிணறானது அழகிய புல் பூ முதலியவற்றால் தன்னை மறைத்துக்கொண்டு அபாயத் துக்கிடமாயிருப்பதுபோல, நீரும்தருமநீதி என்னும் கஞ்சுகத்தை மேலுக்குப் பூண்டு உமது துர்க்குணம் தோன்றாமல் மறைந்தொழுகுகிறீர்.

துஷ்யந்தன் — (தனக்குள்) இவளுடைய கோபம் களங்கரகிதமாய் இருக்கின்றது. இதனால், எனது மனத்திற் சிறிது சந்தேகம் உண்டாயிருக்கின்றது. * மறதி யென்னும் மயக்கம் கப்பிக்கொண்டபடியால், இருவர்க்கும் அன்பு இதற்கு முந்தியே இரகசியத்தில் ஏற்பட்டிருக்கின்றதென்று, ஒப்புக்கொள்ளாத என்னை நோக்கி இவள், தனது கரும்புருவத்தை நெளித்துக் கண் சிவத்தல், மன்மதன் தனது § கரும்புருவ வில்லை வளைத்து முறித்தபடியென மொழியலாம். (உரக்க) அம்மே! துஷ்யந்தனுடைய செய்கைகள் ஜகத்பிரசித்தம்; ஆயினும் அவைகளில் உன்னை மணந்ததென்பது கிடையாது.

சகுந்தலை — * புருவமிசத்திலுதித்த உத்தமரென்ற நம்பிக்கையால் நெஞ்சில் நஞ்சும் நாவில் தேனும் வைத்திருக்கின்ற இந்த நயவஞ்

---

† தனக்குக் கூடுகட்டவும் குஞ்சு பொரிக்கவும் தெரியாதபடியால், குயில், காக்கைக் கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கச்செய்யுந் தந்திரம்.

‡ "தான் திருடி அசல்வீடு நம்பாள்" என்பதுபோல

§ கரும்புருவ = கரும்பு + உருவ = கரும்புவடிவாகிய.

சகர் வார்த்தையிற் கட்டுப்பட்டு மதிமோசம் போன என்னை, இவர் இப்பொழுது வேசியாக்கிவிட்டது மிக நியாயந்தான்; ஐயோ! கற்பிழந்தேன்; உலகநிந்தைக் காளானேன்.

[முன்றானையால் முகத்தை மூடிக்கொண்டு அழுகிருள்.]

சார்ங்கரவன்.—* ஆய்ந்தோய்ந்து பாராமல் தானே அவசரப்பட்டுச் செய்த காரியம் இப்படித்தான் துன்பத்தைத் தரும். ஆகையால் காந்தர்வ விவாகம் செய்துகொள்ளுவோர் நன்கு ஆராய்ந்தறியாமல் செய்யலாகாது; ஒருவருடைய மனதைத் தேராமல் கொண்ட நட்பு பின்னுக்குக் கடும்பகையாய் முடிகின்றது.

துஷ்யந்தன்— ஐய, இவ்வம்மையார் வார்த்தைகளிற் பூரண நம்பிக்கை வைத்து, ஏனையா என்னை அவதூறு பேசி வருத்துகிறீர்?

சார்ங்கரவன் — (இகழ்ச்சியாய்) ஒன்றுக்கொன்று மாறான விஷயங்களை (நான் பேசிவிட்டேன்) (பெரியோராகிய தாங்கள் அதைக்) கேட்டு விட்டீர்களே! * பிறந்தநாள் தொடங்கிச்சிறந்த வுத்தமியாக் கபடென் பதுவே கனவிலும் அறியாத நங்கை மொழிகள் நம்பத்தகா தனதான்! பகைவரை வஞ்சித்து ஜயிப்பதுவே கற்ற கல்வியாக் கைக்கொண்ட ஒருவருடைய வார்த்தைகள் நம்பத்தக்கனவை களாயிருக்கட்டுமே!

துஷ்யந்தன் — ஐயா உண்மையில் உயர்ந்தவரே! நீர் சொல்வது சரி என்று வைத்துக்கொள்ளுகிறேன்; இவ்வம்மையாரை வஞ்சிப்ப தில் எனக்கு என்ன இலாபம்?

சார்ங்கரவன் — அழியா நரகத்தில் விழுவதுதான்.

துஷ்யந்தன் — புருவம்சத்தார் நரகில் விழ நாடுவார்கள் என்பது நம் பத்தகாத காரியம்.

சாரத்வதன் — சார்ங்கரவா! இந்த வாக்குவாதத்தால் வரும் இலாபம் என்ன? நாம் நமது குருவின் கட்டளைப்படி நடந்து கொண் டோம்; இனித் திரும்பிப் போகவேண்டியது தானே? (அரசனை நோக்கி) * இதோ உமது மனைவி; அவளைக் கொள்ளுவதோ, தள் ளுவதோ, உமது இஷ்டம். மனைவியர்மீது கணவர்க்குள்ள அதி காரத்துக்கு அளவேது? அம்மா கௌதமி! புறப்படுங்கள் முன் னே. (அனைவரும் புறப்பட்டு விட்டார்கள்.)

சகுந்தலை—அந்தோ, நான் என்ன செய்வேன்! இந்த இரண்டகமுள்ள வன்தான், என்னை வஞ்சித்தானென்றால், நீங்களுமா, சதிசெய்து விட்டுப் போகிறீர்கள்?

(அவர்களைப் பின்தொடர்கின்றாள்.)

கௌதமி—(சிறிதுதூரஞ்சென்று) குழந்தாய், சார்ங்கரவா! இதோ சகுந்தலை அழுதுகொண்டு நம்மைப் பின்தொடர்கின்றாள்; பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது; என்செய்வாள் மகள்? புருஷனும் வேண்டாமென்று தள்ளிவிட்டான்; மிகவும் கொடுமை.

சார்ங்கரவன் — (கோபத்துடன் திரும்பி) கட்டுக் கடங்காதவளே! உன் இஷ்டப்படி இருக்கப் பார்க்கிறாயா?

(சகுந்தலை பயத்தால் நடுங்குகிறாள்.)

சார்ங்கரவன் — *அரசன் சொற்படி நீ அவனுடைய மனைவியாகாவிட்டால், அருந்தவ முனிவராகிய உனது தந்தை தமது மனம் ஒப்பி உன்னை எப்படி ஏற்றுக்கொள்ளுவார்? குலத்தில் இழிந்த கோதையென்று உன்னைத் தள்ளிவிடுவார். அவ்வாறன்றி உன் சொற்படி நீ கற்புள்ள காரிகையானால் உனது கணவன் வீட்டில் அடிமை செய்தாவது காலங்கழிப்பது மேன்மை. ஆகையால் நீ நில்லு; நாங்கள் செல்லுகிறோம்.

துஷ்யந்தன் — துறவிகாள்! ஏனோ இம்மங்கையை வஞ்சிக்கின்றீர்கள்? * சந்திரன் இரவில் ஆம்பல் புஷ்பத்தைமட்டுமே மலரச்செய்து திருப்தியடைகிறான்; சூரியன் பகலில் தாமரைப் புஷ்பத்தைமட்டும் மலரச்செய்து அதனோடு திருப்தி அடைகிறான்; (அதுபோல) ஐம்புலன்களையும் அடக்கினவர்கள் அயல் மாதர்மேல் மனம் வையார்கள்.

சார்ங்கரவன் — மற்றக் காரியங்களில் மனஞ்செலுத்தி யிருப்பதனால், முந்திநடந்த விஷயத்தை நீர் மறந்திருக்கலாம்; இவ்வாறு மறதிக்காளாகிய நீர் எவ்வாறு பழிபாவத்திற்குப் பயப்படுவீர்?

துஷ்யந்தன் — (புரோகிதரை நோக்கி) நான் இப்பொழுது செய்யவேண்டியது இன்னதென்று மஹானாகிய தாங்களே ஆலோசித்துத் தெரிவிக்கக் கோருகின்றேன். * நானே மறந்திருக்கலாம்; ஒரு வேளை, இவரே பொய்யுரைத்திருக்கலாம்; மெய்யாய் நான்

சகுந்தலே—“இந்தப் பாழும் வண்டு சும்மா இருக்கமாட்டேன் என்கிறதே!”

(13-ஆம் பக்கம் பார்க்க.)

இவளை மணம்புரிந்திருக்கிற பக்ஷத்தில், கொண்ட மனையாளைக் கைவிட்ட பாதகனாகிறேன்; அப்படிக்கின்றி, இவளை மணஞ் செய்து கொள்ளாதிருப்பது உண்மையென்றால், பிறன் மனையாளைப் பெண்டு கொண்ட பாவியாவேன்; இவ்விரண்டு கொடும்பாவங்களிலும் எது பெரிது எது சிறிது என்று சொல்லவேண்டும்.

புரோகிதர்— (ஆழச் சிந்தித்து) அப்படியானால், இப்படிச் செய்யுங்கள்.

துஷ்யந்தன்—நல்லது; தயவுசெய்யுங்கள்.

புரோகிதர் — பிரஸவிக்குமளவும் இவ்வம்மையார் எனதகத்தில் வாழட்டும்; ஏனப்படி என்பீராயின், உமக்கு முதற் பிறக்கும் புதல்வன் நான்கு சமுத்திரங்கள் வரையிற் பரவிய பூமியை ஒரு குடைக்கீழ் ஆள்வான் என்று முனிவர்கள் அருளிய வரம் ஒன்றிருக்கின்றது. இந்த முனிவர் மகள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளை சக்கரவர்த்திக்குள்ள லக்ஷணங்கள் பொருந்தியிருப்பானாயின், இவளைப்போற்றி யுமது அந்தப்புரத்திற் சேர்த்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் இவளை இவள் தந்தையிடத்திற் சேர்த்து விடலாம்.

துஷ்யந்தன் — தாங்கள் விரும்பியபடி செய்யலாம்.

புரோகிதர் — மகளே! என் பின்னே வா.

சகுந்தலை — ஓ, பூமாதேவியே! உனது கர்ப்பத்தில் என்னைச் சேர்த்துக் கொள். (அழுதுகொண்டே புரோகிதரோடு போகின்றாள்.)

(துறவிகளும போய்விட்டார்கள்)

(சகுந்தலை விஷயத்தைபபற்றி அரசன் யோசிக்கின்றான்; ஆனால் சாபம், அவன் ஞாபகத்தைத் தடுக்கின்றது.)

(திரைக்குப் பின்னே)

ஆச்சரியம்! ஆச்சரியம்!

துஷ்யந்தன் — (உற்றுக்கேட்டு) அங்கே என்ன நடந்திருக்கலாம்?

(புரோகிதர் வருகின்றார்.)

புரோகிதர் — (ஆச்சரியத்துடன்) ஓ, வேந்த! ஓர் அதிசயம் நடந்தது.

துஷ்யந்தன் — என்ன?

புரோகிதர் — இறைவ! கண்வருடைய சிஷ்யர்கள் திரும்பிப் போனவுடனே, அம்மங்கை தனது தௌர்ப்பாக்கிய தசையை நொந்து கொண்டு கைகளை உயர்த்தி அழத்தொடங்கினாள்.

துஷ்யந்தன் — அப்புறம் என்ன ?

புரோகிதர் — அப்ஸராஸ் தீர்த்தத்துக் கருகாமையில் மின்னொளியிற் பெண்ணுருவொன்று தோன்றி, அவளை அந்தரத்தில் தூக்கிக் கொண்டு மறைந்துபோயிற்று.

(அனைவரும் அதிசயிக்கின்றனர்.)

துஷ்யந்தன் — பெருமை பொருந்திய ஐயா ! அவ்விஷயத்தைத்தான், நாம் அப்போதே, விலக்கிவிட்டோமே ; நீங்கள் ஏன் அதைப் பற்றி வீணாய் யோசிக்கின்றீர்கள் ? தயவு செய்து சும்மா இருங்கள்.

புரோகிதர் — (அரசனை நோக்கி) உமக்கு ஜயமுண்டாகக்கடவது.

(போய்விடுகிறார்.)

துஷ்யந்தன் — வேத்திரவதி ! நான்மனங் கலங்கியிருக்கின்றேன் ; படுக்கையறைக்கு வழிகாட்டு.

பிரதீகாரீ — இந்த வழி, இந்த வழித்தான் மகாராஜாவே !

(வழிகாட்டிச் செல்கின்றாள்.)

துஷ்யந்தன் — (மனதுக்குள்) * எனது மனைவியென்று இங்கே வந்த முனிவர் மகளைத் தனிமையில், நான், திருமணஞ்செய்த ஞாபகம் இல்லாமல் தள்ளிவிட்டது உண்மையானாலும், எனது நெஞ்சம், அதனால் இரங்கி வாடுகின்றதை நாடிப் பார்க்கையில், விவாகம் செய்தது மெய்யெனக் கலக்கமின்றிக் காட்டுகின்றது.

(எல்லாரும் போய்விடுகின்றனர்.)

ஐந்தாம் அங்கம் முடிந்தது.

ஆறும் அங்கம்

இடம். — ஒரு தெரு, பிறகு அரண்மனையின் உத்தியான வனம்.

பாத்திரங்கள்: — சூசகன், ஜாநுகன் (இரண்டுசேவகர்கள்), செம்படவன், கொத்தவால், சாநுமதி, பரபிருதிகே, மதுகரிகே (இரண்டு தோட்டக்காரிகள்) கஞ்சுகி, துஷ்யந்தன், விதூஷகன், பிரதீகாரீ, சதுரிகை, யவனபெண், மாதலி, ஆர்ய பிசுனர் என்னும் மந்திரி.

(அரசா மைத்துனரும் ஊர்காவல் தலைவருமாகிய கொத்தவாலும், பின்னே கை இறுகக் கட்டப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்ட செம்படவன் ஒருவனை நடத்திக்கொண்டு சூசகன், ஜாநுகன் என்னும் இரண்டு சேவகர்களும் வருகின்றனர்)

சூசகனும் ஜாநுகனும் — (செம்படவனை அடித்துக்கொண்டே) அடே, திருடா! இரத்தினம இழைத்த இந்த மோதிரம் உனக்கு எப்படி கிடைத்ததடா? இது இராஜாவுடையதாச்சே; பார்த்தையா, முகப்பில் அவர்பேர் செதுக்கியிருக்கிறது?

செம்படவன் — (நடுங்கிக்கொண்டு) அயமாரே! கும்புட்றே© நா© அப்டி செயறவெ© அல்லாங்க; எனெ சும்மா அடிக்காதிங்க.

சூசகன் — என்ன! இராஜா வுனக்கு இதைத் தானங்கொடுத்தாரோ? நீ நல்ல பிராமணனாச்சே.

செம்படவன் — ஐயொ, ராசாவா—எங்கப்பாணெ இல்லெசாமி. நாம் செல்றதெ ரவெ காதுகுடுத்து கேளுங்க, செம்படவெம் ஐயமாறு.

சூசகன — அடே, செம்படவரா ஐயமாரு.

செம்படவன் — சாமீ, உங்க காலுக்கு கும்பட்றேம். நாம் ஜாதிலே செம்படவேம். சக்ரவாதக்கரைலே இர்க்கிறவெம் சாமி.

ஜானுகன் — பக்காதிருடா ! நாங்கள் உன் ஜாதியை கேட்டோமா ?

கோத்தவால் — சூசகா ! அவன் சொல்வதை யெல்லாம் ஒழுங்காய்ச் சொல்லட்டும் ; நடுவில் தடுக்காதே.

சூசகனும் ஜானுகனும் — எஜமான் உத்திரவின்படி சொல்லிக்கொண்டு போ !

செம்படவன் — நாம் தெனம் மீன்புடிச்சி எம் குயிம்பத்தெ காப்பாத்தி சீவனம் பண்றவெம் ; வலெபோட்டும் புடிப்பேம் ; தூண்டிபோட்டும் புடிப்பேம்; இன்னம் எப்படியாறு புடிப்பேம்.

கோத்தவால் — (சிரித்துககொண்டு) ஆஹா! மெத்த சுத்த புண்ணிய ஜீவனம் !

செம்படவன் — சாமி ! புண்ணியம் பாவம். தலெமறெ தலெமறெயா வர்ற ஜாதி தொயிலு இயிவா யிர்ந்தாலும் உட்டுட்லாமா ? வேதத்தெ எல்லாம் படிச்ச பாப்பாருக்கு எதக்கம் ரொம்ப இருக்கும் எண்றுங்களெ அவங்க யாகம் செய்றேம்ண்ணு எத்தினி ஆடுங்களே கொண்ணு துண்ணு புட்றுங்கோ.

கோத்தவால் — வேதம்-யாகம்-பார்ப்பார், இதெல்லாங்கூட உனக்குத் தெரியுமா ? அது இருக்கட்டும், உன்சங்கதியைச் சொல்லிக் கொண்டுபோ.

செம்படவன் — சாமீ ! ஒருநா மீன் புடிச்சேம் ஒரு சேகெண்டெ அம்புடிச்சி. அது மினு மினுண்ணு அயவா இருஞ்சிச்சி. அத்தெ அப்படியே அர்ஞ்சேம். அதும் கொடெல்லெ இருஞ்சி மின்னிச்சிங்கோ இந்த மோதரம் அத்தே அப்படியே எடுத்துகுனு இங்கே விக்கவந்தேம் ; ஐயாங்க புடிச்சிக்கினீங்க. இத்தாஞ்சாமி எனக்கு தெரியும் வேறெ ஒரு பாவமு அறியேம் சாமீ. என்னெ கொண்ணுலும் சரி, உட்டாலும் சரி, மோதரம் வந்தவயி இத்தாம்.

கோத்தவால் — ஜானுகா ! இந்தச் சண்டாளன்மேலே பச்சைமீன் கவுச்சடிக்கிறது ; இவன் செம்படவன் தான் ; சந்தேகமில்லை. இவனுக்கு மோதிரம் வந்தவழிதான் கண்டுபிடிக்கவேண்டும் ; நாம் அரண்மனைக்கே போவோம் ; வாருங்கள்.

சூசகனும் ஜானுகனும் — அடே முடிச்சுமாறிப் பயலே ! நடடா.

(எல்லாரும் செல்கின்றனர்.)

கோத்தவால் — சூசகா ! இந்த அரண்மனை வாசலில் இவனைக் கவன மாய்ப் பார்த்துக்கொள். அதற்குள், நான் போய், அரசரைக் கண்டு, இந்தமோதிரம் அகப்பட்ட சங்கதியைத் தெரிவித்து, அவருடைய கட்டளையைப் பெற்றுத் திரும்புகிறேன்.

சூசகனும் ஜானுகனும் — அப்படியே தாங்கள்போய், இராஜாவின் தய வைப்பெற்று வாருங்கள். (கொத்தவால் போகின்றார்.)

ஜானுகன் — அடே பாவிப்பயலே, இப்பொழுதாவது உண்மையைச் சொல்லிவிடு, எங்களோடு ஒழிந்துவிடும். அரசனிடத்தில் போனால் அதோகதிதான்.

செம்படவன் — சாமி ! எங்கப்பாணெ, சாமியாணெ நாo சொன்ன த்தாo அதுக்குமெ எனக்கு ஒண்ணுந் தெரியாது. ராசாகிட்ட கூட இத்தாo சொல்லபோறேo ?

ஜானுகன் — ஏதுடா இப்போது சொல்லுவாயா. மயிலே மயிலே என்றால் இறகு கொடுக்குமா ?

சூசகன் — ஜானுகா ! நமது தலைவர்போய், நெடுநேரமாயிற்றே !

ஜானுகன் — சமயமறிந்தல்லவா, இராஜாக்களைக் காணவேண்டும் !

சூசகன் — ஜானுகா ! (செம்படவனைச் சுட்டிக்காட்டி) இவன் தலையிலே மாலைபோட்டு எப்போதுகொல்லலாம் என்று என் கை பதைக் கிறது.

செம்படவன் — ஆறு ஒரத்தனெ கொண்ணுாட்டா, உங்களுக்கு நல்லதா, சாமி ?

ஜானுகன் — (பார்த்து) இதோ வருகிறார் நமது எஜமான் ; கையிலே

ஏதோ ஏடு வைத்திருக்கிறார் ; அது இராஜா ஆக்கினை. இன்றைக் கிவன், கழுருக்கிரையோ, நாய்க்கிரையோ தெரியவில்லை.

(கொத்தவால் வருகிறார்.)

கோத்தவால் — சூசகா ! இந்தச் செம்படவனை விட்டுவிடு ; அவன் சொன்னபடி இந்த மோதிரம் வந்தவழி சரிதான்.

சூசகன் — எஜமான் சொற்படி.

ஜானுகன் — எமன் வாயிலே நுழைந்து திரும்பினான் !

(செம்படவனை விட்டுவிடுகிறான்.)

செம்படவன் — (கொத்தவாலை பணிந்து) சாமீ ! நாo எப்பிடி பொழைப்பேo ?

கோத்தவால் — இந்தாடா, இராஜா கொடுத்தார் ; மோதிர கிரயத்தை உனக்கு வெகுமதி யாக்கினார். (பணத்தை அவனுக்குக் கொடுக்கிறார்.)

செம்படவன் — (வணங்கி வாங்கிக்கொண்டு) எசமாo தயவுலே பொழைச்சிக்கினேo.

சூசகன் — நீ பிழைத்தது புண்ணியமடா; கழுவிலேற்ற வேண்டியவனை யானைமேலே ஏற்றினபடி யாச்சுதடா.

ஜானுகன் — இப்போது நடந்திருக்கிற சங்கதியைப் பார்த்தால், அரசர்க்கு மோதிரம் அருமையானதென்று விளங்குகிறது.

கோத்தவால் — அது விலை யுயர்ந்ததென்றல்ல, அவர் அதனை அருமையாக மதிப்பது ; அதைக் கண்டவுடனே அவர்க்கு மிகவும் பிரியமான யாரோ ஒருவரின் ஞாபகம் வந்தது. எவ்வளவோ உறுதியான நெஞ்சுடைய அவர், அதைக் கண்டவுடன் கொஞ்சநேரம் கலங்கினார்.

சூசகன் — ஆனால், நீங்கள் ராஜாவுக்கு நல்ல உதவிதான் செய்தீர்கள்.

ஜானுகன் — ஏன், அதுமாத்திரம் ? இந்த மீன்குத்திப்பயலுக்கும் நல்ல காலம் ஆச்சு. (செம்படவனைப் பொறாமையோடு பார்க்கிறான்.)

செம்படவன் — சாமீ ! இந்தாங்கோ, இதிலே பாதி எடுத்துக்குங்கோ , உங்க பூச்செலவுக்கு ஒதவும்.

ஜானுகன் — இதுதானடா சரி ;

கோத்தவால் — வலையா ! இப்போது நீ எனக்கு நல்ல சிநேகிதனாய்

விட்டாய்; முதல் முதல் சிநேகிதம் ஆனதற்கு அடையாளமாகக் கன்ணுக்கடைக்குள் நுழைவோம் வாடா.

(எல்லாரும் போய்விடுகிறார்கள்.)

(இடையுரை இங்கே முடிகிறது)

[சானுமதி என்னும் அப்ஸரஸ்திரீ விமானத்தில் ஏறிக்கொண்டு வருகிறாள்.)

சானுமதி — அப்ஸரஸ்திரீகள் ஸ்நானம் பண்ணுகிற இந்தப் புண்ணிய தீர்த்தக்கரையில் எனது முறைப்படி நான் இருந்தாயிற்று. இப்போது இதனில் முனிவர் நீராடும் சமயம் வந்துவிட்டது அதற்குள், நான், இந்த இராஜருஷியின் செய்கையைக் கவனிப்பேன். மேனகையின் சிநேகத்தால் எனக்குச் சகுந்தலை மிகவும் வேண்டியவளாயிருக்கின்றாள். ஆகையால், அவள், தனது மகள் விஷயமாக, என்னை ஏவினாள். (சுற்றுமுற்றும் பார்த்து) ஆஹா! என்ன இது! வசந்தோற்சவ காலத்தில் கூட, அரசனரண்மனையில் சந்தடியே காணுமே! நினைத்த மாத்திரையிலேயே சகலமும் தெரிந்து கொள்ளும் சக்தி எனக்குண்டு. ஆனால் எனது தோழியின் இச்சையைப் பூர்த்தி செய்யவேண்டும். ஆதலால் நான் திரஸ்கரணி என்னும் வித்தையின் மகத்துவத்தால், இந்தத் தோட்டக்காரிகளுக்கருகில் மறைந்திருந்து, எல்லாவற்றையும் அறியக்கடவேன்.

(இறங்கி நிற்கின்றாள்.)

(தோட்டக்காரிகளுக்குள் ஒருத்தியும், மாமொட்டைப் பார்த்துக்கொண்டே அவளுக்குப் பின்னே மற்றொருத்தியும் வருகிறார்கள்.)

பரபிருதிகே — * செம்மை வெண்மை பசுமை யென்னும் மும்மை நிறங்கொண்ட மாமலர்கள், வசந்தகாலம் என்னும் நங்கைக்கு உயிர் போன்றிருக்கின்றன. இவைகள் உயிர் போன்றன ஆகையால், மாந்தளிர்கள் † உடல் போன்றன. * வண்டு காலால் மிதிக்க வாயைத்திறக்கிற மாமொட்டைக் கண்ட குயிற்குலங்கள், களிப்படைவன; மன்மதன் தூதுவிட்டன போலக் குரலெடுத்துக்

---

† மேனி=நிறம், உடல்; மாந்தளிர்கள் நிறம் போன்றன வென்றுங் கூறலாம். வசந்தகாலம் பெண்ணாகவும், மாம்பூ அவளுக்குயிராகவும், மாந்தளிர் திருமேனியாகவும் உருவகிக்கபபட்டன.

கூவுகின்றன. ஆகையால் வஸந்த காலம் ஆரம்பித்துவிட்ட தென்று தோற்றுகிறது.

† மதுகரிகே — தோழீ, ‡ பரபிருதிகே! ஏனோ இப்படி உனக்குள் நீயே பேசிக்கொள்கின்றனை ?

பரபிருதிகே —மதுகரிகே! மாமொட்டைக் கண்டு மகிழ்ச்சி மிகுந்திருப்பது பரபிருதிகைக்கு (அதாவது குயிலுக்கு) வழக்கமாயிற்றே.

மதுகரிகே — (அவசரமாய்ச் சந்தோஷத்துடன் ஓடிவந்து) என்ன! வசந்த காலம் வந்துவிட்டதா ?

பரபிருதிகே — மதுகரிகே! (அதாவது ஓ வண்டே) இதுதான் உனது களியாட்டுக்கும் பாட்டுக்கும் சரியான காலம்.

மதுகரிகே — தோழீ! நான் மாமொட்டைப் பறிக்க முன்னடியை யூன்றி எக்குகிறேன்; நீ என்னைப் பிடித்துக்கொள். அந்த மொட்டுகளால் மன்மதனைப் பூசிக்கவேண்டும்.

பரபிருதிகே — அப்படியே; உனது பூசாபலத்தில் பாதி எனக்குத் தரவேண்டும்.

மதுகரிகே — நான் ஏன் தரவேண்டும் ? அதுவே உனக்கு வரவேண்டும். ஏனென்றால், நாம் இருவரும் உடலால் வேறானாலும், உயிரால் ஒன்றல்லவா ? (தோழியைப பற்றிக்கொண்டே எக்கி மொட்டைக் கொத்தோடு பறிக்கிறாள்.) ஆஹா! இப்போது, இந்த மாமுகைகள் முழுதும் இதழ் விரியாதிருந்தாலும் காம்பிலிருந்து பறிக்கப்பட்டபடியால் நறுமணம் வீசுகிறது. (இரண்டு அகங்கைகளையுஞ் சேர்த்து) * ஓ மாமலரே! கருப்புவில்லேந்திய காமதேவர், கணவரை நீங்கிய காரிகைமார்களின் மார்களிற் குறி பார்த்தெய்யும் மாமலரே! அவருடைய ஐங்கணைகளிற் சிறந்த அருமா

---

† மதுகரிகே என்பதற்கு வண்டென்று பொருள்படும். இரண்டாம் தோட்டக்காரி அப்பெயரைக் கொண்டிருக்கிறாள்போலும்.

‡ பரபிருதிகே என்பதற்கு மற்றவையால் போஷிக்கபபட்டது என்பது பொருள். குயில் காக்கைக் கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கச் செய்வதால் அதற்கு பரபிருதிகே என்று பெயர். முதல் தோட்டக்காரி அப்பெயரைக் கொண்டிருக்கிறாள்போலும்.

மலரே! உன்னை அவர்க்கு நான் விரும்பி அர்ச்சிக்கின்றேன்.

(மாமுகிழ்களை எறிகின்றாள்.)

[சபெதியில் திரையை விலக்கிக்கொண்டு கஞ்சுகி யென்னும் காவலாள்கோபத் தோடு வருகின்றான்.]

கஞ்சுகி — புத்தியில்லாத பெண்ணே! அப்படிச் செய்யாதே! வசந்த காலத் திருவிழாவை யாரும் கொண்டாடப்படாதென்று மன்னர் மறுத்திருக்கையில், நீமாத்திரம் எப்படி அந்த மாமுகிழைப் பறிக்கின்றாய்?

பரபிருதிகேயும் மதுகரிகேயும் — (அஞ்சி) ஐயா பெரியவரே! தெரியாதே செய்துவிட்டோம்; கோபிக்கவேண்டாம். அரச கட்டளையை நாங் கள் அறியோம்.

கஞ்சுகி — இரண்டு பேருக்குந் தெரியாதா? ஆச்சரியமா யிருக்கிறதே! * வசந்தகாலத்திற் † பாசிலைகளால் தம்மை அலங்கரித்துக்கொள் ளும் மரங்களும் அவைகளில் வாழும் பறவைகளும் கூட அரசர் ஆக்கினைக்கு அடங்கியிருக்கின்றன; இங்ஙனம் இருக்கையில், உமக்கு ஒன்றுமே தெரியாதென்கிறீர். மாமரங்கள் நெடுநாளைக்கு முன்பே அரும்புவிட்டன; ஆனால் மலர்ந்து மகரந்தம் கொள்ள வில்லை. குரவவிருக்ஷங்கள் முகிழ்களோடு விளங்குகின்றன; ஆனால் அலரவில்லை. இது உங்களுக்குத் தெரியாதா? பனிநாள் போய் நெடுநாளாகியும், ஆண்குயில்கள் பாடாமல் வாயடங்கி யிருக்கின்றன. மன்மதனும் தமது மனந் தடுமாறினார்; கையி லெடுத்த அம்பை வில்லில் தொடுக்காமல் மறுபடியும் அம்பறாத் தூணியில் அசையாது வைத்துவிட்டார்.

சானுமதி — (தனக்குள்) அதற்குச் சந்தேகமில்லை; அரசராக்கினை அப் படிப்பட்டதுதான்.

பரபிருதிகே — சில நாட்களுக்கு முந்தித்தான், அரசர் மைத்துனரா கிய மித்ராவசுவென்பவர், அரசவூழியத்துக்கு எங்களை நியமித் தார்; அது முதல் இந்த நந்தவனப் பாதுகாப்பு வேலையிலேயே

---

† பசுமை + இலை = பாசிலை,

இருந்து வருகின்றோம். நாங்கள் புதியவர்கள் ஆகையால், இச் செய்தி கேள்விப்படவில்லை.

கஞ்சுகி — ஆனால் சரி; இனி இப்படிச் செய்யவேண்டா.

பரபிருதிகேயும் மதுகரிகேயும் — ஐயா! நாங்கள் இருவரும் சந்தோஷப் படுகிறோம்; எங்களுக்கு நீங்கள் சொல்லக்கூடுமானால், ஏன், அரசர் வசந்தகாலத்திருவிழாவைத் தடுத்திருக்கின்றார் என்று தயவுசெய்து தெரிவிக்கக் கோருகின்றோம்.

சானுமதி — (தனக்குள்) திருவிழா என்றால் மனிதர்க்கு அதிக ஆசை; ஆகையால் ஏதோ பலமான காரணம் இருக்கவேண்டும்.

கஞ்சுகி — அது எல்லார்க்கும் தெரிந்ததுதான்; உங்களுக்கு ஏன் மறைக்க வேண்டும்; சகுந்தலையைத் தள்ளிவிட்ட நிந்தையைப் பற்றி நீங்கள் கேட்டதில்லையா?

பரபிருதிகேயும் மதுகரிகேயும் — கொத்தவாலே எங்களுக்குச் சொல்லி யிருக்கிறார்; மோதிரம் அகப்பட்ட விஷயம் வரையிலும் எங்களுக் குத் தெரியும்.

கஞ்சுகி — ஆனால், உங்களுக்குச் சொல்லவேண்டியது அதிகம் ஒன்று மில்லை; தன் மோதிரத்தைக் கண்டவுடனே அரசனுக்கு, தான், குணவதியாகிய சகுந்தலையை இரகசியத்தில் மணந்த ஞாபகம் வந்தது; அவளை அநியாயமாய்த் தள்ளிவிட்டதும் தெரிந்தது; அது முதல் மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கின்றார். * அரசர், தமது சுகத்தை விரும்பார்; மந்திரிமார்களைக் கண்டு பேசப்பயப் படுவார்; அரசகாரியத்தைக் கிஞ்சித்தும் நினையார்; கட்டிலின் மேலேபடுத்துப் புரளுவார்; பகலிற்போலவே, இரவிலும் தூங்கா மல் ஏங்குவார்; அந்தப்புர ஸ்திரீகளிடத்தில் நன்னயமாக நடந்துகொள்ளும் வழக்கம்போல இரண்டொரு வார்த்தை அள வாய்ப்பேசுவார்; அவர்கள் பேர்களை மாறி அழைப்பார்; சகுந்தலை யென்று தவறிக் கூப்பிடுவார்; அங்ஙனம் தவறி அழைத்தபோது, இன்னது செய்வதென்றறியாமல் மனங்கூசி மயங்கிவிளங்குவார்.

சானுமதி — (தனக்குள்) எனக்கு இது நல்ல செய்தியே!

கஞ்சுகி — இந்த ஆழ்ந்த விசனத்தால்தான் திருவிழாக்களெல்லாம் தாழ்ந்திருக்கின்றன.

பரபிருதிகேயும் மதுகரிகேயும் — *அது நியாயந்தான்.*

(திரைக்குப்பின்னே)

வாருங்கள் ; வாருங்கள் அரசே ! இவ்வழிதான்.

கஞ்சுகி — *(உற்றுககேட்டு) அரசர் இப்படித்தான் வருகிறார் ; உங்கள் வேலையைப் பாருங்கள்.*

பரபிருதிகேயும் மதுகரிகேயும் — *அப்படியே !*

[மனஸ்தாபத்தைக்காட்டும் முகக்குறியோடு துஷ்யந்தனும் விதூஷகனும் பிரதீகாரீயும் வருகின்றனர்.]

கஞ்சுகி — *(அரசனை உற்றுநோக்கி) *அழகாயிருப்பது எப்படியாயினும், அழகாகவே தோன்றும், அரசர் விசனமிருந்து விளங்கினும், காண்பதற் கினிமையாகவே இருக்கின்றனர் ; நகைகளைப் பகைகளாகக் கழித்து விட்டனர். புஜத்திற் கடகம் ஒன்றே காணப் படுகின்றது ; பெருமூச்சு விடுவதால் உதடுகள் உலர்ந்துபோயின; ஏக்கம் நிறைந்து தூக்கம் குறைந்து கண்கள் புண்களாய்ச் சிவந்தன ; ஆனாலும் இயற்கையழகு மாறவில்லை ; திருமேனி வாடி வதங்கியிருந்தும் சாணையிற் கடைந்த விலைமணிபோல் ஒளி மிகுந்திருக்கின்றார்.*

சானுமதி — *(அரசனை உற்று நோக்கி, தனக்குள்) இவர் சகுந்தலையைத் தள்ளி அவமதித்திருந்தும் இவருக்காக அவள் வருந்துவது சரிதான்.*

துஷ்யந்தன் — *(ஆலோசித்துக்கொண்டே மெல்ல நடந்து) * மான்விழிச் சகுந்தலை மிகவருந்தி எழுப்பினபோதெல்லாம், எழுந்திருக்காமல் தூங்கிக் கிடந்த எனது மனது, இப்போது விழித்துக்கொண்டிருக்கின்றது ; என்ன பிரயோஜனம் ? வீணாய்ப் பச்சாத்தாபப் படும் பொருட்டேயாம்.*

சானுமதி — *(தனக்குள்) சகுந்தலை பாக்கியவதிதான்.*

விதூஷகன் — *(தனக்குள்) மறுபடியும் அரசனைச் சகுந்தலை நோய் வாட்டுகிறது ; அதற்கு என்ன மருந்து கொடுத்தால் தீரும் !*

கஞ்சுகி — *(நெருங்கி) அரசர்க்கு ஜயம் உண்டாகுக ; உய்யான வனத்தைச் சுற்றிமுற்றும் பார்த்தேன் ; மஹாராஜா அவர்கள் இன்பம் நுகர்தற்குரிய இஷ்டமான இடத்தில் தங்கியிருக்கலாம்.*

துஷ்யந்தன் — வேத்ரவதி! நீ போய் ஆரியபிசுனனென்னும் மந்திரியைக்கண்டு, இப்படி நான் சொல்லியனுப்பினதாகத் தெரிவி : "இரவில் நெடுநேரம் கண்விழித்திருந்தமையால், நியாயாசனத்தில் வீற்றிருக்க என்னாலாகாது ; நீர், விசாரித்துத்தீர்ந்த விவகாரங்கள் எவையேனும் இருந்தால், கடிதமூலமாய் அறிவிக்கலாம்."

பிரதீகாரீ — அரசர் கட்டளைப்படியே. (போய்விடுகின்றாள்.)

துஷ்யந்தன் — (கஞ்சுகியை நோக்கி) வாதாயனா! நீயும் உன் வேலையைப் பார்.

கஞ்சுகி — அரசர் கட்டளைப்படியே. (போய் விடுகின்றான்.)

விதூஷகன்—நாம் தவிர இங்கே வேறொருவரும் இல்லை ; இந்த நந்தவனத்தின் குளிர்ச்சியையும் சுகத்தையும் அநுபவித்துக்கொண்டு நீர் காலம் போக்கலாம்.

துஷ்யந்தன் — (பெருமூச்சுவிட்டு) 'பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்' என்னும் பழமொழி பழுதாகாது! ஏனென்றால்: * கண்வர் மகள்மேல் நண்ணும் என் காதல் உணர்ச்சியை, அறவே ஒழித்த மறதியென்னும் மாய இருள் அகன்று, எனது மனது நிர்மலமாயிருக்கும் இந்தத் தருணத்தில் மன்மதன் தனது மாம்பூக்கணையை எடுத்துச் † சுரும்புக்கயிற்றில் மாட்டிக் கருப்பு வில்லை வளைத்து என்னைக் குறிபார்த்திருக்கின்றனன்.

விதூஷகன் — ஆனால், கொஞ்சம் பொறும் ; இதோ உமது காதல் நோய்க்குக் காரணவஸ்துவை இந்தக் கைத்தடியால் அடித்து நாசம்பண்ணி விடுகிறேன்.

(மாம்பூக்களை அடித்து உதிர்க்கத் தடியை உயர்த்துகிறான்.)

துஷ்யந்தன் — (புன்சிரிப்புடன்) இருக்கட்டும் ; உமது பிராமண வல்லமை தெரிந்ததுதான் ; கண்ணுக்குக் குளிர்ச்சியாய் இப்போது நான் எங்கே உட்காரலாம்? எந்த இடத்திலிருந்தால் எனது பைந்தொடியாள் சகுந்தலையைப் பார்க்கிறபடி இளங்கொடிகளைப் பார்க்கலாம்?

விதூஷகன — மல்லிகைக்கொடி மண்டபத்துக்கு வரும்படி சதுரிகை என்னும் சேடிக்கு அப்போதே நீர் கட்டளை யிட்டிருக்கின்றீர் ;

---

† சுரும்பு + கயிறு = சுரும்புக்கயிறு = வண்டுகளின் ஒழுங்காகிய நாணி.

அங்கே நீர் காலத்தை வேடிக்கையாய்க் கழிப்பதாகவும் சொன்னீர். அவளும் உமது கையால் தீட்டிய சகுந்தலையின் படத்தை உமது கட்டளைப்படி எடுத்துக்கொண்டு அங்கே வருவாள்.

துஷ்யந்தன் — ஆனால் சரி; அப்படிப்பட்ட இடந்தான்வேண்டும்; அதிக மனோகரமா யிருக்கும்; அதற்கு வழிகாட்டு.

விதூஷகன் — இந்தவழி; இந்த வழித்தான் ஐயா!

(இருவரும் செல்கின்றனர், சானுமதியும் பின்தொடர்கின்றனள்.)

விதூஷகன் — இந்த மல்லிகைக்கொடிப் பந்தலுக்கு மத்தியில் அரசர் இருப்பதற்குத் தகுந்த சலவைக் கற்பீடம் அமைந்திருக்கின்றது; இந்தக் கொடிகளும் தமது புஷ்பங்களென்னும் பற்களால் நகைமுகங்காட்டி நம்மை நல்வரவேற்கின்றன. வாருங்கள்; உள்ளே வந்துட்காருங்கள்.

(இருவரும் உள்நுழைந்து உட்காருகிறார்கள்.)

சானுமதி — (தனக்குள்) கொடிகளுக்குப் பின்புறத்தில் ஒளித்திருந்து எனது தோழியின் படத்தைப்பார்ப்பேன்; பிறகு, அவள் கணவன் அவள்மேல் வைத்துள்ள காதலின் முதிர்ச்சியை அவளுக் கறிவிப்பேன். (அவ்வாறே கொடியின் பக்கத்தே நிற்கின்றாள்.)

துஷ்யந்தன் — நண்ப! முதலில் சகுந்தலைக்கும் எனக்கும் நேரிட்ட காதல் வரலாறு இப்போது எனது ஞாபகத்தில் வருகிறது; அதைப்பற்றி உனக்குஞ் சொல்லியிருக்கின்றேன். நான் அவளை வெறுத்து நீக்கியபோது நீ என்னருகில் இல்லை. அவள் பெயரை நீயாவது அதற்கு முந்தி எனக்குச் சொல்லியிருந்தாயா? அதுவும் இல்லை; என்னைப்போலவே, நீயும் மறந்துவிட்டாயோ என்னவோ!

விதூஷகன் — நான் மறக்கவில்லை; நீர்தான் என்னை மறக்கவைத்தீர். அந்தக்காலத்தில், எல்லாவற்றையுஞ் சொல்லிய நீர் "இவையெல்லாம் உண்மையல்ல; வேடிக்கையார்த்தமாகச் சொன்னேன்" என்றீரே! நானோ களிமண் மூளையுள்ள கல்தலையன். நீர் சொன்னதை நிஜம் என்று நம்பிவிட்டேன். எல்லாம் விதியின்படி நடக்கிறது. அதை வெல்ல யாராலாகும்?

சானுமதி — (தனக்குள்) ஆமாம; அப்படித்தான்.

துஷ்யந்தன் — (ஆழயோசித்துக்கொண்டே) நண்ப! என்னைக் காப்பாற்று.

விதூஷகன் — இது என்ன ஐயா இது? இது உமக்குத் தகாது. * சாதுக்கள் ஒருபோதும் துன்பத்துக்கிடங் கொடுக்கமாட்டார்களே! பெருங் காற்றிலும் மலைகள் அசைகின்றனவா?

துஷ்யந்தன் — நான் காரணமின்றித் தள்ளிவிட்டபோது எனது காதலி எய்திய விசன நிலையை எண்ணி யெண்ணி யேங்குகின்றேன்; என்றால் தாங்கமுடியவில்லை. * அவளை நான், சேர்த்துக் கொள்ள மாட்டேன், என்று சொன்ன சொல்லை, அவள் ஆராய்ந்து, தனது சுற்றத்தாரோடு போவதற்குப் பிரயத்தனப்பட்டனள்; அப்போது அவளுடைய தந்தைக்குச் சமானமான அவருடைய சிஷ்யன் ஒருவன் அவளை வெருட்டி "இங்கேயே இரு; வராதே" என்றான். அதற்கு அவள், தனது கண்களில் நீர்பெருக அவைகளை உருட்டி என்னைப் பார்த்த பார்வை, விஷமூட்டிய பாணம் போல, எனது மனதை இன்னும் வருத்துகின்றது.

சானுமதி — (தனக்குள்) ஆய்ந்தோய்ந்து பாராமல் ஒருகாரியத்தைச் செய்துவிட்டுப், பிறகு எண்ணி வருந்துதலின் இயற்கை இது தான்; இவர் வருந்துவது, எனக்குச் சந்தோஷமா யிருக்கின்றது.

விதூஷகன் — ஆகாசவாசிகளில் யாரோ, அவ்வம்மையைக் கொண்டு போய்விட்டார்களென்று எண்ணுகிறேன்.

துஷ்யந்தன் — வேறு எந்த மனிதன் அவளைத் தொடுவான்? கற்புடையவளாயிற்றே; மேனகைதான் உனது தோழியின் தாயாரென்று கேள்வி. மேனகையின் தோழிகள்தான் அவளைக்கொண்டு போய் விட்டார்களோ?

சானுமதி — (தனக்குள்) இத்தனை மிகுந்த காதலை மறந்திருந்ததே ஆச்சரியம். அதைப்பற்றிப் படிப்படியாய் நினைத்துக்கொள்வது விந்தையல்ல.

விதூஷகன் — அப்படியானால் அவள் விரைவில் வருவது நிஜம்.

துஷ்யந்தன் — எப்படி?

விதூஷகன் — தமது மகள் தனது கணவனைப்பிரிந்து வருந்துவதைப் பார்த்து எந்த மாதாபிதாக்கள் மனம்பொறுத்திருப்பார்கள்?

துஷ்யந்தன் — நண்ப! அந்தக்காரிகையை நான் பார்த்துப்பேசி அனு

பவித்தது முதலானதெல்லாம் * கனவோ, இந்திரஜால வித்தையோ, மதிமயக்கோ, அல்லது எனது நல்வினைப்பயன் அழிவு காலமோ, சென்றது, சென்றது ; திரும்பவில்லை; எனது எண்ணம் எண்ணிறந்து ஏறிவிட்டது.

விதூஷகன் — இப்படிப் பேசவேண்டா ; இந்த மோதிரமே சாக்ஷி ; நாம் எண்ணியது தப்பாமல் முடியும்.

துஷ்யந்தன் — (மோதிரத்தை நோக்கி) நண்ப ! கிடைத்தற்கரிய இடத்திலிருந்து நழுவி விழுந்த இந்த மோதிரத்திற்காக இரங்குகின்றேன். *ஓ மோதிரமே! நீ எனது காதலியின் மெல்லிய விரலிற் பொருந்தியிருந்து, விழுந்துவிட்ட விதத்தை யோசித்துப் பார்க்கையில், அஸ்திர மனமுடையேனாகிய அடியேன் செய்தவமும் நீ செய்தவமும் † பயனற்றன.

சானுமதி — (தனக்குள்) இது வேறோரிடத்திற் சேர்ந்திருந்தால், எத்தனை விசனத்திற் கிடமாயிருக்கும் !

விதூஷகன் — என்ன எண்ணத்தோடு இந்த முத்திரைமோதிரத்தை அந்த உத்தமியின் கையிற் போட்டீர்கள் ?

சானுமதி — (தனக்குள்) நான் அறிய விரும்பி யிருக்கிறதையே இவனும் அறிய விரும்பி இக்கேள்வி கேட்டான்.

துஷ்யந்தன் — கவனமாய்க் கேள் ; வனத்திலிருந்து நகரத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த என்னை நோக்கி எனது அன்புடையாள், தனது கண்களில் நீர் கலங்க “ எனது தலைவர் திரும்பி என்னைக் கடைக்கண்பார்க்க எத்தனை தினங்கள் செல்லும் ? ” என்று கேட்டாள்.

விதூஷகன்—பிறகு ;

துஷ்யந்தன்—அப்போது, நான் இந்த மோதிரத்தை அவள் விரலிற் போட்டு,* “இந்த மோதிரத்திற் செதுக்கிய என்னுடைய பெயரின் எழுத்துக்களில், ஒவ்வொரு நாளும் ஒவ்வோரெழுத்தாய், நீ கடைசி எழுத்தைக் கணக்கிடு முன்னமே, எனது ஆளை அனுப்பி, உன்னை அழைத்துக்கொண்டுபோய், அந்தப்புரத்திற் சேர்த்துக்

† தொட்டுவிட்டதால் நீயும் நானும் சரி.

கொள்ளுவேன்” என்று சொன்னேன், கன்மனப் பாவியாகிய யான் மறதியினால் அவ்வாறு நடக்கத் தவறிவிட்டேன்; நான், சுத்தப் பித்தன். இது சத்தியம் சத்தியம்.

சானுமதி — (தனக்குள்) காலங்குறித்துச் சொன்னது விநோதமாயிருந்தது; விதியின் விநோதம் வேறாய் முடிந்தது.

விதூஷகன் — செம்படவன் பிடித்த சேற்கெண்டையின் வயிற்றில் அது சென்றவிதம் என்ன ?

துஷ்யந்தன் — உனது தோழி, சசிதீர்த்தத்தை வணங்கினபொழுது அது அவள் விரலிலிருந்து நழுவிக் கங்கையில் விழுந்துவிட்டது.

விதூஷகன் — அப்படி நடந்திருக்கக்கூடும்.

சானுமதி — (தனக்குள்) அதனாலேதான் அரசன் பழிபாவத்துக் கஞ்சுகிறவனாயிருந்தும், சகுந்தலை கலியாணத்தைச் சந்தேகப்பட நேர்ந்தது; இப்படிப்பட்ட காதல் முதிர்ச்சிக்கு மோதிர அடையாளங் கூடவா வேண்டும் ?

துஷ்யந்தன் — ஆகையால், மோதிரத்தைத்தான் நான் குற்றஞ் சொல்வேன்.

விதூஷகன் — (தனக்குள்) மஹாராஜா பித்தர்வழியில் திரும்பி யிருக்கிறார்.

துஷ்யந்தன் —*அழகு மிகுந்து மிருதுவாகிய விரல்களோடு விளங்கும் கையை விட்டுக் கழன்று தண்ணீரில், ஏனோ ந்தனை ? விவேகமில்லா அசேதனப்பொருள் நீ ஆகையால், குணத்தைத் தேர்ந்து கொள்ளும் திறனற்றனை. உன்னை நோவதிற் பயனில்லை; நுண்ணறிவுடைய நானேன் அவளை ஞாயமின்றி நீக்கினேன் ? இது ஆச்சரியந்தானே ?

விதூஷகன் — (தனக்குள்) என்ன ! இவர் என்னென்னவோ பேசுகிறார்; எனக்குப் பசி பிராணன் போகிறதே !

துஷ்யந்தன் — காதலீ ! இன்னொரு முறை வந்து இந்த ஏழையைக் கடைக்கண் பார். அநியாயமாய் உன்னைத் தள்ளிவிட்டதை எண்ணி யெண்ணி ஏங்குகின்றேனே !

(சதுரிகை சடுதியில் திரையை விலக்கிக்கொண்டு கையில் சித்திரப்படத்துடன் பிரவேசமாகிறாள்.)

துஷ்யந்தன்—"ஆசிரமப்பெண்களை அவமதித்து நடப்பவன் யார்?"

(13-ஆம் பக்கம் பார்க்க.)

சதுரிகை—இதோ வுமது காதலியை இந்தப் படத்திற் பாருங்கள்.

(படத்தைக் காட்டுகிறாள்.)

விதூஷகன் — நண்ப ! நன்றாய்ச் செய்தீர் ! படத்தைக்கண்டு மகிழ்வதற்குக் காரணம் இருக்கிறது. எழுதப்பட்ட பொருள்களின் மேடு பள்ள அமைதிகளைப் பார்க்கும்போது என் கண்கள் அவற்றில் தடுக்கி விழுவதுபோ லிருக்கின்றன.

சானுமதி—(தனக்குள்) இந்த இராஜ இருஷியின் வல்லமை வியக்கத் தக்கது. சகுந்தலையே என் கண்முன் இருக்கிறதுபோல் காணப் படுகிறது.

துஷ்யந்தன் — * சித்திரம் சீரா இல்லாவிட்டால், அழித்தெழுதுதல் அழகுதான். ஆனாலும், அவள் அழகை இதனில் கொஞ்சந்தான் தீட்டி யிருக்கின்றேன்.

சானுமதி — (தனக்குள்) சுத்தமனத் துத்தம காதல்நிலை இப்படித்தான் இருக்கும்.

விதூஷகன் — ஆஹா ! இங்கே மூன்று பெண்ணுருவங்கள் தோன்றுகின்றன ; எல்லாரும் அழகிகள் ; இவர்களில் சகுந்தலை யார் ?

சானுமதி — (தனக்குள்) இவன் கண்ணிருந்தும் குருடன்; இந்த வுருவம் இவனுக்குத் தெரியவில்லையே !

துஷ்யந்தன் — இந்த மூன்றில் எனது காதலியின் உரு எது வென்றெண்ணுகின்றாய் ?

விதூஷகன் — *அதோ அந்த வுருதான் சகுந்தலை என்று எண்ணுகின்றேன் ; களைப்படைந்திருக்கிறதாகக் காண்கிறது ; அவிழ்ந்து தொங்குகிற கருங்கூந்தலின் மலர்கள் கொட்டுகின்றன ; முகத்தில் வேர்வை மூடி அரும்பியிருக்கின்றன ; தோள்கள் இரண்டும் துவண்டு தொங்குகின்றன ; தண்ணீர்ப்பாய்ச்சப் பட்டதனால் தளிர்த்து நீண்ட மாமரத்தின் கீழ் நின்றிருக்கின்றாள். இந்த இருவரும் அவளுடைய தோழிமார் என்றெண்ணுகின்றேன்.

துஷ்யந்தன் — நீ திறமைசாலி ; * இதோ பார் எனது காதல் பெருகி விளங்குகின்ற அடையாளம். விரல்களின் வியர்வையால் படத்தின்

13

ஓரம், அழுக்குப்படிந்திருக்கின்றது ; கண்ணீர் பெருகிக் கன்னத்தில் விழுந்த அடையாளம், வர்ணம் வேறாய் மாறியிருப்பதுதான். இந்த விநோதப்படம் அரைகுறையாகவே ஆயிருக்கிறது. சதுரிகே! நீ போய் வர்ணங்களை எடுத்துக்கொண்டுவா.

சதுரிகை — ஐயா விதூஷகரே! நான் போய் வர்ணப்பெட்டியை எடுத்து வருமட்டும் இந்தச் சித்திரப்பலகையைப் பிடித்துக்கொண்டிரும்.

துஷ்யந்தன் — நானே பிடித்துக்கொண்டிருக்கிறேன் ;

(அப்படியே பிடித்துக் கொள்கிறான்)

(சேடி போய்விடுகிறாள்)

துஷ்யந்தன்—* தானே வலிய வந்த சீதேவியைத் தள்ளிவிட்டு, படத்திலெழுதிய அவளுடைய விசித்திர வுருவில் மயங்கித் தியங்குகின்றேன். ஆதலால் நான், நன்னீராற்றில் தண்ணீர் அருந்தாமல், †கானற் சலத்தில் தாகந்தீர்க்க முயலும் ஒருவனுக்கு ஒப்பானேன்.

விதூஷகன் — (தனக்குள்) ஆமாம்; இவர் ஆற்றைவிட்டுச் சேற்றில் விழுந்திருப்பது உண்மைதான். (உரக்க) இதோ இங்கே, இன்னும் என்ன எழுதவேண்டும் ?

சானுமதி — (தனக்குள்) எனது தோழி எந்தெந்த இடங்களிற் களிப்புடன் பழகியிருந்தாளோ, அவைகளை யெல்லாம் எழுத விரும்புவார்.

துஷ்யந்தன் — உற்றுக்கேள். * மாலினி நதியை வரையவேண்டும் ; அதன் கரைமேலே இளைப்பாறுகின்ற இரட்டை அன்னப்பறவைகளை எழுதவேண்டும் ; மான்கள் வாழும் இமயமலைச்சாரற் குன்றுகளை காட்டவேண்டும் ; மரவுரி தொங்கவிட்டுள்ள மரத்தைகுறிக்கவேண்டும். அதன்கீழ்க் கலைமானையும் அதன் கொம்பின் நுனியில் தனதிடக்கண்ணைத் தேய்க்கும் பெட்டைமானையும் தீட்டவேண்டும்.

---

†கானல் + சலம்= பேய்த்தேர் நீர்=வெட்ட வெளி வெய்யிலிற் செல்வோர் கணணுக்கு முன்னே, நெடுந்தூரத்தில் ஜலம்போல் தோன்றும் பொய்த் தோற்றம் ; இதனைக்கண்டு மான் முதலிய விலங்குகளும் ஏமாறுகின்றன.

விதூஷகன் — (தனக்குள்) எனக்குத் தெரிந்தவரையில் சொல்லு கிறேன். இந்தப் படம் நிறைய, தாடி நீண்ட சந்நியாசி சுவாமிகள் உருவங்களை எழுதிவைத்தால் நல்லது.

துஷ்யந்தன் — நண்ப! சகுந்தலைக்கு மிகவும் முக்கியமான அலங்கா ரத்தைச் செய்ய மறந்துவிட்டோமே!

விதூஷகன் — என்ன அது?

சானுமதி — (தனக்குள்) காட்டில் வாழும் பெண்களுக்கு என்ன வேண்டும்? இயற்கையழகு; இலேசான ஆபரணம்.

துஷ்யந்தன் — நண்ப! * எனது காதலி மகிழ்ந்தெடுத்துக் காம்புகள் காதிற் பொருந்த வைத்ததனால், மகரந்தத் தாள்களாகிய கேசாங் கள், கன்னத்தில் மருவிய சிரீஷமலரைத் தீட்ட மறந்தேன்; மாரி காலத்து நிலவைப்போல நிர்மலமான தாமரைநூல்களை மார்புக்கு மத்தியில் தொங்க விடுதற்குச் சுத்தமாய் மறந்தேன்.

விதூஷகன் — அரசியாகிய சகுந்தலை அம்மாளவர்கள் பயந்து செந்தா மரைபோன்ற தமது முன்கையினால் முகத்தை மூடி நடுங்கி நிற்குங் காரணம் என்ன? (உற்றுநோக்கி) ஓஹோ! பூந்தேனைத் திருடும் இந்தப் பொல்லாத வண்டல்லவோ அவ்வம்மையார்முகத் தில் வந்து விழுகிறது.

துஷ்யந்தன் — ஆமாம்! அந்தத் துஷ்டனை அப்பாலே ஓட்டிவிடு.

விதூஷகன் — துஷ்டநிக்ரகம் பண்ணுவதில் நீரே வல்லவர்; ஆகை யால் இவனை நீர்தான் ஓட்டவேண்டும்.

துஷ்யந்தன் — சரி! * பூத்த செடிகளுக்கேற்ற அதிதியே! ஏனோ இங்கே இறங்கித் துன்பப்படுகின்றனை? அதோ இருக்கின்ற அம் மலர்மேலே, தங்கியிருக்கின்ற பெட்டைவண்டு ஒன்றியா யிருக் கின்றது; நீ வாராமல் தனியே, தான்மட்டும் தேனை உண்ணச் சகியாமல், தன் பசியையும் மறந்து, உள்ளம் நைந்து, நீ எப்போது வருவையென் றெதிர்பார்த்திருக்கின்றது.

சானுமதி — (தனக்குள்) இப்போது இந்த வண்டை நல்லமாதிரியாகவே எச்சரித்திருக்கிறார்.

விதூஷகன் — எச்சரித்தும் என்ன பலன் ? இது இயற்கையிலேயே, பிடிவாத முள்ளதல்லவா ?

துஷ்யந்தன்—*ஆஹா ! இன்னுமா என் ஆக்ஞையை அவமதித்திருக்கின்றனை ! இப்படியே இருப்பையாகில், உன்னைத் தக்கபடி தண்டிப்பேன். அந்தத் தண்டனையைச் சொல்லவா ? சொல்லுகிறேன் கேள் ; ஓ வண்டே ! கைதீண்டியறியாத இளமரத்தளிர்போல,மனோகரமாய் என்னை மயங்க வைத்ததனால், காதல் விருந்து நான் களிப்புடன் உண்கையில்,அமுத ரஸத்தைப் பானம் பண்ணுதற்கு ஆதரவாகி ஆனந்தமளித்த எனதுயிர்க்காதலியின் குற்றமற்ற உதடென்னுங் கோவைப்பழத்தை இன்னமுந்தீண்ட நீ இச்சை வைப்பையேல், உன்னைப் பிடித்தபிடியிற் கொண்டுபோய்த் தாமரை மலர்ச் சிறையில் அடைக்கச் செய்வேன் ; இது சத்தியம்.

விதூஷகன் — இப்படிப்பட்ட கொடுந்தண்டனைக்கும், ஏன் பயப்படவில்லை ? (நகைத்து, தனக்குள்) இவர்க்குப் பைத்தியம் ஏறியிருக்கிறது ; இவரோடுகூடச் சேர்ந்திருப்பதனால், நானும் இவரைப் போலவே ஆயிருக்கின்றேன். (உரக்க) என்ன ! இது படமாச்சே!

துஷ்யந்தன் — என்ன ! படமா, இது ?

சானுமதி — (தனக்குள்) நானும் இப்போதுதான் இது படமென்று தெரிந்தேன்; படத்தினுருவே உண்மையுருவென்று மனோவிகாரங் கொண்டிருக்கிறார் மன்னவர்.

துஷ்யந்தன் — * அன்ப ! நீ செய்தது, கொஞ்சமேனும் தகுந்த காரியமல்ல ; எத்தனை கெடுதி செய்தனை ! இப்போது, இங்கே, இந்நேரம் மனமொத்து என்னுடன் நயமாக இன்பமனுபவித்திருந்த காதலியை, படத்திற்கண்ட பைந்தொடி வடிவம் ஆக்கிவிட்டனை, ஐயையோ ! ஏனோ இங்ஙனை யூட்டினை !

(கண்ணீர் விடுகின்றான்.)

சானுமதி — (தனக்குள்) முன்பின் ஒவ்வாத இப்பிரிவு ஆச்சரியத்துக்கிடமாயிருக்கிறது.

துஷ்யந்தன் — * எங்ஙனஞ் சகிப்பேன் ! என்செயவல்லேன் ! என்து பிரிய நண்ப ! இந்தத்துயரம் என்னைவிட்டு நீங்காது. எனது காத

லியைக் கனவிற் காணலாம் என்றால், தூக்கமில்லாமையாலே, அங்ஙனம் காண்பதற்கின்றி ஏங்குகின்றேன் ; நனவிற் படத்திற் பார்க்கலாம் எனின், கண்ணீர் மறைக்கக் கருத்தழிகின்றேன்.

சானுமதி — (தனக்குள்) நீர் சகுந்தலையைத் தள்ளிவிட்டதனால் அவளுக்கு நேரிட்ட துயரத்துக்குப் போதுமான பரிகாரம் செய்துவிட்டீர்.

(சதுரிகை வருகின்றாள்.)

சதுரிகை — அரசற்கு வெற்றி உண்டாகக் கடவது. வர்ணப்பெட்டியையெடுத்துக்கொண்டு இங்குவரப் புறப்பட்டேன். அப்போது—

துஷ்யந்தன் — அப்போது என்ன ?

சதுரிகை — அரசி, வாசுமதி அம்மையார், அதனை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டார்கள். அப்போது தரளிகையுங்கூட இருந்தாள் ; அந்தம்மாளே அதை இங்கு எடுத்துக்கொண்டு வருவதாகச் சொன்னார்கள்.

விதூஷகன் — நீ தப்பிவந்தது தம்பிரான் புண்ணியம்.

சதுரிகை—மரக்கிளையில் மாட்டிக்கொண்ட உத்தரீயத்தைத் தரளிகை விடுவித் தெடுத்துக் கொண்டிருந்தாள் ; அப்போது நான் குடுகுடு என்று ஓடிவந்துவிட்டேன்.

துஷ்யந்தன் — நண்ப ! அதோ வந்துகொண்டிருக்கிறாள் அவள் ; நான் அவளை நன்கு மதித்திருப்பதால், அவள் செருக்கடைந்திருக்கின்றாள். இந்தச் சித்திரபடத்தைப் பத்திரமாய் வைத்திரு.

விதூஷகன் — ‘ நீ பத்திரமாயிரு ’ என்று சொல்லும் (சித்திரபடத்தை எடுத்துக்கொண்டு எழுகின்றான்.) நீர் அந்தப்புரச் சண்டையை வென்றவுடனே, என்னை அழையும் ; நான் ‘ மேகப்பிரதிச்சந்தம் ’ என்னும் அரண்மனையி லிருப்பேன்.

(விரைந்தோடி மறைகின்றான்.)

சானுமதி — (தனக்குள்) இச்சை வேறிடத்தில் வைத்திருந்தும், இவ்வரசர் பழங்காதலையும் பாராட்டுகின்றனர். இப்போது இவர் காதல், நிலையற்றிருக்கின்றது.

(பிரதீகாரி கையில் கடிதத்தோடு வருகின்றாள்)

பிரதீகாரி — அரசர்க்கு ஜயம் உண்டாகக்கடவது.

துஷ்யந்தன் — வேத்ரவதி! அரசியை வழியிற் சந்திக்கவில்லையா?

பிரதீகாரி — ஆமாம்; கண்டேன். அந்தம்மாள் என் கையிற்கடிதத்தைக் கண்டு, வந்தவழியே திரும்பிப் போய்விட்டார்கள்.

துஷ்யந்தன் — அவள், காரியாகாரியம் தெரிந்தவள் ஆகையால், இராஜாங்கக் காரியத்தில் எனக்கு இடைஞ்சல் உண்டாக்கமாட்டாள்.

பிரதீகாரி — சுவாமீ! பல நிலவரிக் கணக்குகள் † பைசல் செய்தபடியால் ஒரு வழக்குத்தான் தீர்மானமாயிற்றென்று மந்திரி மனுசெய்து கொள்ளுகிறார். அதனைத், தாங்கள், கடிதத்தால் அறியலாம்.

துஷ்யந்தன் — கடிதத்தை இப்படிக் கொண்டுவா (பிரதீகாரி அதைக் கொடுக்கிறாள்)

துஷ்யந்தன் — (வாசித்து) என்ன! கப்பல் வியாபாரியாகிய தனமித்திரர், கடலில் கப்பல் உடைந்திறந்தாராம். ஐயோ பாவம்! அவர்க்குச் சந்ததியும் இல்லையாம். அவர் ஆஸ்தி அரசனைச் சேருகிறதாம். பிள்ளை யில்லாமை பெரிய துக்கம். ஏ வேத்ரவதி! அவர்க்கு மனைவிமார் பலரிருக்கின்றமையால், அவர்களில் யாராவது கருவுற்றிருக்கிறார்களா என்று விசாரிக்கச் சொல்.

பிரதீகாரி — சுவாமீ! அவர் மனைவியரில், அயோத்தியாநகரின் புகழ்பெற்ற சாகேதலன் மகளாகிய ஒருத்திக்குச் சில தினங்களுக்கு முந்தித்தான் சீமந்த கலியாணம் நடந்ததாம்.

துஷ்யந்தன் — கருவிற் குழந்தையே, தகப்பன் திருவிற்குச் சுவாதீனமுள்ளது; போய், இதனை மந்திரிக்கறிவி.

பிரதீகாரி — எனது ஆண்டவர் கட்டளைப்படியே!

(புறப்படுகின்றாள்.)

துஷ்யந்தன் — சற்றுப் பொறு.

பிரதீகாரி — இதோ இருக்கிறேன்.

துஷ்யந்தன் — அவர்க்குப் பிள்ளை யிருக்கிறதா, இல்லையா என்கிற கேள்விகூட அநாவசியம். *இங்ஙனம் பறையறைந்து கூறவேண்

---

† பைசல் (இந்துஸ்தானி) = தீர்மானம்.

டும்; எங்ஙனம் என்னில் சொல்லுகிறேன் கேள்: எத்தனை அன்புள்ள சுற்றத்தையும் இழந்து வாடுகின்ற எந்தக் குடியாயினும், பாவவழியிற் படாதாயின், துஷ்யந்தனைத் தனது துணைவனாகப் பெற்று வாழச் சற்றுந் தடையில்லை.

பிரதீகாரி — அப்படியே பறையறையச் சொல்லுகிறேன்.

(போய்த் திரும்பிவந்து)

ஆண்டவர் ஆக்கினையைக் காலமழையைப்போல ஆனந்தமாய் அங்கீகரித்தார்கள்.

துஷ்யந்தன் — (பெருமூச்செறிந்து) * அந்தோ! மூலபுருஷன் முடிவடைந்திட்டால், கால்வழி யில்லாக் கஷ்டத்தாலே, ஆதரவின்றி அவஸ்தைப்படுகிற குடும்பச்சொத்தைக் கொள்ளை அடிக்க, எவனோ அன்னியன் ஏற்படுகின்றான். இப்படியே நானும் இறந்தேனால், பூமியும், புருகுல புகழும் மேன்மையும் இந்தக் கதியே அடையும் என்பதற்கு ஐயம் இல்லை; காலம் அல்லாக் காலத்தில் விதைத்த விதைபோல் வீணாகும்.

பிரதீகாரி — துன்பம் எல்லாம் தொலையக்கடவன.

துஷ்யந்தன் — வாசலில் வலிய வந்த ஸ்ரீதேவியை அவமதித்தகற்றிய என்னை, என்ன செய்யினும் போதாது.

சானுமதி — (தனக்குள்) வாஸ்தவத்தில் இந்த மன்னவன், சகுந்தலையை மறவாமல் நினைந்து நைந்துருகித் தன்னை வெறுத்துக்கொள்ளுகிறார்.

துஷ்யந்தன் — * பருவமறிந்து பயிர் செய்வதற்கு, விசேஷ பலனை விரும்பி ஒருவர், விதைத்த விதைபோல, விவாகஞ் செய்து கொண்ட எனது மனைவி வயிற்றில், எனது கான்முளை வாழ்வதால், எனதருங்குலமெல்லாம் இன்பமுற் றென்றும் இடையறாதோங்கும் என்றிருந்தும், அதனை அறியாத நான், விவேகமின்றி அவளை வெறுத்துத் தள்ளிவிட்டேன்.

சானுமதி — (தனக்குள்) உமது சந்ததி என்றென்றும் மாறாது; அஞ்சவேண்டா,

சதுரிகை — (தனக்குள்) இந்த வர்த்தகன் விவகாரத்தால், எமது அரசர், விசனத்தில் ஆழ்ந்திருக்கின்றார்; நான் போய், விதூஷகனை அழைத்துக்கொண்டு வருவேன். அவர் மேகப்பிரதிச்சந்த அரண்மனையில் இருக்கின்றார் அல்லவா! அவர் வந்தால்தான் அரசற்குச் சந்தோஷம் உண்டாக்குவார்.

பிரதீகாரி — நல்ல காரியம். (அழைக்கப் போயினள்)

துஷ்யந்தன் — அந்தோ! * "இவனிறந்தபிறகு, எமக்குச் சாஸ்திர விதிப்படி, எள்ளுந்தண்ணீரும் எவர் இறைப்பார்கள்! இவன் இறந்தபின் இவன் மகன் இருந்தானாகில், எமக்கே அன்றி, இவனுக்கும் எள்ளுந்தண்ணீரும் இறைப்பான்;" என்று எண்ணி அருவருத்து அழுது, "ஐயோ! இவன் இறைக்கும் எள்ளுந் தண்ணீரையும் ஒருவாறு உண்போம்" என்று தென்புலத்தாராகிய பிதிர்கள் கூறுவார்கள்.

(சோகமுற்று மூர்ச்சை அடைகின்றான்.)

சதுரிகை — (துரிதமாய் அரசனைத் தாங்கி) ஆண்டவரே! மனந்தடுமாற வேண்டா!

சானுமதி — (தனக்குள்) அந்தோ! விளக்கிருந்தும் பயனில்லை; திரை மறைப்பதனால் இருண்டிருக்கின்றது. இதனால் இவர் இப்படி வருந்துகின்றார். இப்போது இவரைநான் சந்தோஷப்படுத்துகின்றேன். உண்மையைச் சொல்லிவிடலாமா! ஏன்! இப்படி அவசரப்பட வேண்டும்? இந்திரன் தாயார், சகுந்தலையை நோக்கி "அவிப்பலி எப்போதுகிடைக்கும் என்று காத்துக்கொண்டிருக்கிற தேவர்கள் உன்னை உனது கணவருடன் கூட்டிவைப்பார்கள்" என்று சமாதானப் படுத்திக்கொண்டிருக்கையில் கேட்டிருக்கிறேன். அது வரையிற் காத்திருத்தலே தகுதி. அந்தச் சமயத்தைக் கெடுக்கப்படாது. அதற்குள் நான் சென்று இந்தச் செய்தி தெரிவித்து, எனது தோழி சகுந்தலையைச் சமாதானப்படுத்துவேன்.

(திடீரென்று உயரக்கிளம்பி மறைகின்றாள்)

(திரைக்குப் பின்னால்)

ஐயோ! ஐயையோ! அங்கே ஆரும் இல்லையா! ஓ, பிராமணனைக்காப்பாற்று! ஓ, பிராமணனைக்காப்பாற்று!

துஷ்யந்தன் — (மூர்ச்சை தெளிந்து உற்றுக்கேட்டு) விதூஷகனுடைய அபயக்குரல்போல் இருக்கிறதே! ஓஹோ! ஓஹோ! யார் அங்கே?

(பிரதீகாரி வருகின்றாள்)

பிரதீகாரி—(விரைவாய்) அண்ணலே, ஆபத்திலிருக்கிற தமதுநண்பரை, தாங்கள் காப்பாற்றவேண்டும்.

துஷ்யந்தன் — யாரால் ஆபத்து நேரிட்டது?

பிரதீகாரி — கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு கசுமாலப் பிசாசம் அவரை மூர்ச்சையாக்கி மேகப்பிரதிச்சந்தம் என்னும் அரண்மனைக் குயர்தளத்தில் இழுத்துக்கொண்டு போய்விட்டது.

துஷ்யந்தன் — (எழுந்து) இப்படியாகலாமா! * எனது கிருகங்களிலும் அத்துமீறிப் பிசாசுகள் நுழைகின்றனவா! ஐயோ! நொந்த மனத்துடன் நான் செய் பிழையே நானறியாமல் இருக்கையில், எனது குடிமக்களில் இன்னார் இன்ன பிழையை இயற்றினார் என்பதையும், அவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கும் காரணங்களையும் உணரல் எங்ஙனம் முடியும்?

(திரைக்குப் பின்னால்)

நண்ப! என்னைக் காப்பாற்றும்! காப்பாற்றும்!

துஷ்யந்தன் — (விரைந்து முன்னே சென்று) பயப்படாதே! நண்ப, பயப்படாதே!

(திரைக்குப்பின்னே)

என்னைக் காப்பாற்றும்! காப்பாற்றும்! நான் எப்படிப் பயப்படாம லிருப்பேன்? இந்த இராக்ஷதன், என்கழுத்தைப் பின்னே வளைத்து, கருப்பங்கழியைப்போல மூன்று துண்டாய் முறிக்கின்றானே!

துஷ்யந்தன் — (சுற்றி முற்றும் பார்த்து) வில்லெங்கே! **வில்லை** எடு.

(† யவனப்பெண்ணொருத்தி தனது கையில் வில்லுடன் வருகிறாள்)

யவனப்பெண் — ஆண்டவரே! இதோ வில்லும் கையுறையும் இருக்கின்றன.

(துஷ்யந்தன் வில்லையும் கையுறையையும விரைந்து வாங்கிக்கொள்ளுகிறான்.)

---

† யவனப்பெண் = சோனகப்பெண் = அரபிதேயத்தினள்.

(திரைக்குப் பின்னே)

* பாரடா! இதோ, நான் உன்மேற் புலிபோற் பாய்ந்து, பசுவைப் போலப் பயந்து நடுங்கும் உனது கழுத்தை உறுதியாய்க் கௌவிப் பிடித்துக் கடித்துக்கொன்று, உனது உதிரத்தைக் குடிக்கின்றேன்! துன்பம் உற்றவரைத் துணையாய்க் காக்கு நிமித்தமே கையில் வில் ஏந்தியுள்ள துஷ்யந்த மஹா ராஜனை ஓலமிட்டு அழைத்து வரவழை; அவர் வந்து உன்னை மீட்கின்றாரோ என்னவோ; அதையும் ஒருகை பார்க்கலாம்.

துஷ்யந்தன் — (கோபத்தோடு) என்ன! என்னை யாரோ நிந்திக்கிறான். அடே! பிணந்தின்னிப் பயலே! கொஞ்சம் பொறடா; இதோ வந்தேனடா! உன் உயிரை வாங்குவது நிச்சயமடா. (வில்லை வளைக்கிறான்) வேத்ரவதீ! படியேறும் வழியைக் காட்டு.

பிரதீகாரி — இதோ, இப்படித்தான் எனது ஆண்டவரே!

(எல்லாரும் விரைந்து செல்கின்றனர்.)

துஷ்யந்தன் (சுற்றிமுற்றும் பார்த்து) இங்கே ஒன்றையுங் காணோமே!

(திரைக்குப் பின்னால்)

என்னைக் காப்பாற்றும்! என்னைக் காப்பாற்றும்! நீர் இருக்கிறது எனக்குத் தெரிகிறதே; நானிருப்பது உமக்குத் தெரியவில்லையா? பூனைவாயில் எலியைப்போல என் உயிரில் எனக்கு நிச்சயமே இல்லை.

துஷ்யந்தன் —*† திரஸ்கரணி வித்தை தெரிந்ததனால் செருக்குக்கொண்டவனே! எனது பாணம் எவ்விதமாகிலும், உன்னைக் கண்டுபிடித்துக் கொல்லும்பொருட்டு அதனை விடுகின்றேன்; நீர்பிரித்துப் பாலுண்ணும் அன்னமேபோல, எனது பாணமும், ‡ அடுதற்குரிய வுன்னை அடும்; விடுதற்குரிய வேதியனை விடும்.

(அஸ்திரத்தைவிடக் குறிபார்க்கிறான்.)

(பிறகு § விதூஷகனைவிட்டு விட்டமாதலியும் அவன் பின்னே விதூஷகனும் வருகின்றார்கள்.)

மாதலி — இந்திரனார், * புகழோங்கும் உமது பாணங்கள், அசுரரைக்

---

† எதிர் இருந்தும் தோன்றாது மறைதல். ‡ அடுதல்=கொல்லுதல். § மாதலி= இந்திரசாரதி.

கொல்லவே அமையும் என்றெண்ணி இருக்கின்றார். ஆகையால் அசுரரைக் கொல்லவேண்டும்போது, இந்த வில்லை நீர் வளைக்கலாம்; பெரியோர்கள் நண்பரை நன்னயமாய்ப் பார்ப்பார்கள் அன்றி, அவர்கள்பேரில் படிகணை தொடுக்கப் பார்க்கமாட்டார்கள்.

துஷ்யந்தன் — (தனது அஸ்திரத்தை விடுக்காமல் நிறுத்தி) ஆஹா! ஆஹா! மாதலீ! இந்திரசாரதி! உனக்கு மங்களம் உண்டாகக்கடவது

(விதூஷகன் வருகின்றான்.)

விதூஷகன் — கொஞ்ச நேரத்துக்கு முந்தி வேள்விப்பசுவைக் கொல்லுதல்போல என்னைக் கொன்றுவிட நினைத்த ஒருவற்கு உபசாரங் கூறி ஏற்றுக்கொள்ளுகிறீரே!

மாதலி — (புன்னகையோடு) வேந்தரிற் பெரியோய்! இந்திரன் என்னை உம்மிடத்தில் ஏன் அனுப்பினார்; அதைச் சொல்லட்டுமா?

துஷ்யந்தன் — அதிக கவனமாய்க் கேட்கிறேன்.

மாதலி — காலநேமி என்னும் ராக்ஷஸ வமிசத்தைச் சேர்ந்த ஓரசுரன் துர்ச்சயன் என்பவன்.

துஷ்யந்தன் — அவனைப்பற்றி நாரதர் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

மாதலி — * உமது அருமை நண்பராகிய இந்திரராலே, அவனை கொல்ல முடியாதாகையால், உம்மால் அவனை ஒழிக்க எண்ணினார். எழுபரித்தேரை ஏறி நடத்தும் சூரியனாலே ஒழிக்கமுடியாத இராத்திரிகாலத்திருளைச் சந்திரனும் போக்குகின்றது ஆகையால் இதோ வந்திருக்கிற இந்திரருடைய தேரின்மேல், உமது வில்லோடு தாழ்க்காமல் ஏறி என்னுடன் வந்து ஜயம் பெறக்கடவீர்.

துஷ்யந்தன் — இந்திரன், என்மேல் இத்தனை கிருபை வைத்ததனால் நான் பெருமை பெற்றேன்; நீர் ஏன் விதூஷகனை இப்படி நடத்தினீர்?

மாதலி—அதுவுட் நான் சொல்லுகிறேன் : * விறகை ஏறத்தள்ளினால் தீ மிகுந்து எரியும் ; கோபமூட்டினால் பாம்பு தன்படத்தை விரித்துக்காட்டும் ; கடுஞ்சினமிகுந்தால் மக்கள் அனைவரும் தமது வல்லமையைக் காட்டுகின்றார்கள் ; எந்தக் காரணத்தினாலோ,

கவலை அதிகரித்து, கருத்து வேறுபட்டு விளங்கிய வும்மை, மிகு சினமூட்டி வேறு திருப்ப விரும்பிய நானும் அங்ஙனம் செய்தனன்

துஷ்யந்தன்—* தாங்கள் செய்தது மிகவும் பொருத்தமே. (விதூஷகனைப பார்த்து) வானுலகத்திற் கிறைவனான தேவேந்திரன் இட்ட கட்டளையை மீறலாகாது. ஆதலால், இச்செய்தியைப் பிசுனர் என்னும் பிரதானியர்க்கு நீ தெரிவித்து இதனைச்சொல், "சிலநாள், தங்கள் அறிவினால் மாத்திரமே குடிகளைப் பாதுகாத்துக் குறைவற அரசை நடத்தவேண்டும். நாணேற்றியுள்ள எனது வில்லானது வானுலகத்தாரின் பகைவர்மேல் செல்லுகின்றது."

விதூஷகன் — எஜமான் ஆக்கினைப்படி.

மாதலி — மன்னர் மன்னவ! தேரின்மேல் ஏறிக்கொள்வீர்.

(அரசன் ஏறுகிறான்.)

(அனைவரும் போய்விடுகிறார்கள்.)

ஆறும் அங்கம் முடிகின்றது.

ஏழாம் அங்கம்

இடம் — விண்ணுலகம்.

பாத்திரங்கள் — துஷ்யந்தன், மாதலி, இரண்டு தவப்பெண்கள், சர்வதமனன், சகுந்தலை, மாரீசர், தாக்ஷாயணி, காலவன், சாகலியர்.

(மாதலியோடுகூட இரதத்தில் உட்கார்ந்துகொண்டு ஆகாச மார்க்கமாய்த் துஷ்யந்தன் பிரவேசிக்கின்றான்.)

துஷ்யந்தன் — மாதலீ! தேவேந்திரர் எனக்கு இட்ட கட்டளையை நான் நிறைவேற்றினேன்; ஆனாலும், அவர் எனக்குச் செய்த பெருமையை நோக்கும்போது நான்செய்த நன்றி மிகச் சிறியதாயிருக்கின்றது.

மாதலி — (புன்சிரிப்புடன்) * பல்லாண்டுவாழும் † பார்த்திப! நான் சொல்வதைக் கேட்பீராக: இருவீரும் திருப்தியடைந்தீர் இல்லையென்று எண்ணுகின்றேன்; ஏனெனில், நீர் கீர்த்தி மிகுந்து விளங்கலால், இந்திரர்க்குச் செய்த நன்றியை ஒருபொருளாக மதித்தீர் இல்லை. அவரும் உமது அற்புதப் போராண்மையில் அதிசயம் அடைந்திருக்கின்றனர். ஆகையால், உமக்கு அவர் செய்த உத்தம கௌரவத்தை ஒரு பெரிதாய் எண்ணினார் இல்லை.

துஷ்யந்தன்—மாதலீ! * அப்படியல்ல; அப்படியல்ல. இந்திரரிடத்தில் கடைசியாக நான், விடை பெற்றுக்கொண்டபோது, அவர் எனக்கு மனமுவந்து செய்தபெருமை, தேவர்க்கும் அரியது; எனது விருப்பையும் கடந்து, என்றென்றும் நான், எதிர் பாராத

† பார்த்திபன் = அரசன்.

தாய் இருந்தது: சரியாசனமாய் அரியாசனத்தில் அவர்க்கிணையாக அமர்ந்து வீற்றிருந்த எனது மனது மகிழ் சிறக்க, மந்தார மாமலரிற் கட்டித் தமது மார்பகத்து அரிச்சந்தனத்தில் ஒட்டி விளங்கிய மாலையை, தேவர்கள் மகிழ்ந்து வாழ்த்த, அதனை அணிந்துகொள்ளத் தமது குமாரனாகிய ஜயந்தவன் விரும்பி எதிர்பார்த்திருந்தும், எனது கழுத்தில் இந்திரர் எடுத்துச் சூட்டி இன்முகங் காட்டித் தமது மைந்தர்க்குப் புன்னகை ஈட்டினர்.

மாதலி—*பல்லாண்டுவாழும் பார்த்திப! உமக்கு, இந்திரர் கைம்மாறாகக் கருதிக் கொடுக்கக்கூடாப் பொருளெது சொல்லக்கடவீர்? இந்த்ர லோகம் இடரெய்தும்படி, தோன்றியுள்ள அரக்கரென்னும் முட்களைக்களைய, அந்தநாளில் ஒன்றாகவும் இந்தநாளில் ஒன்றாகவும் விளங்கிய முள்வாங்கிகள் இரண்டேயாவன: அவை, இரணியனைக் கொன்ற நரஹரியின் நகமும், கணுக்குறாகிய உமது கணைகளுமேயாம்.

துஷ்யந்தன் — என்றால் வெற்றிபெற்றாராயினும், இந்த விஷயத்தில் இந்திரர்க்கே புகழெய்தும்:*வேலைக்காரர் முடித்தவேலையால் வருஞ் சிறப்பு, அந்த வேலைக்காரர்கட்காகாது; அந்தவேலையைச் செய்ய ஏவிய எஜமானர்க்கே ஆகும் ஆயிரங் கதிர்களோடு கூடிவிளங்கும் சூரியன் தனது தேரோட்டும் தொழிலில் அருணனைத் தனக்கு முன்னே வையானேல், அருணற்கு ஒளிசெய்யும் திறமேது?

மாதலி — உவமானம் மிகவும் பொருத்தமா யிருக்கின்றது (கொஞ்ச தூரம் மெதுவாய் ஓட்டி) * பல்லாண்டுவாழ்வீர்! இதோபாரும்! உமது பெரும்புகழ் உச்சமாகி, இந்திரலோகத்தை எட்டியிருக்கின்றது; ஆஹா! எத்தனை சிறப்பு! தேவர்கள் இனிய பாக்கள்பாட எண்ணியிருக்கின்றார்கள். ஆகையால், உமது வெற்றியின் உயர்ந்த புகழைக்கற்பகம் அளித்த அதிசய ஆடையில், அரம்பாஸ்திரீகள் அணிந்த குங்கும நீல முதலியவற்றால், சித்தையாதெழுதி இருக்கின்றார்கள்; எத்தனை மேன்மை!

துஷ்யந்தன் — மாதலீ! நேற்று நான், இராக்ஷதரைக் கொல்லவேண்டுமென்னும் அபேக்ஷை மிகுந்திருந்தபடியால், தேவலோகத்துக்குப் போகும் வழியிலிருக்கிற இந்த இடங்களைக் கவனிக்கவில்லை; இப்போது நாமிருப்பது எந்த வாயுமண்டலம்?

மாதலி — * இதனைப் பரிவகம் என்னும் மண்டலமென்பார்கள்: இதனிற் கங்கை, மூன்றுகிளைகளாகத் தோன்றும்; இதனால் நக்ஷத்திரங்கள், தமது மண்டலத்தில் சரியாயியங்கித் தத்தங்கிரணங்களைப் பெற்று விளங்குவ ; கொஞ்சமேனும் அசுத்தமின்றி விளங்கும் இதனில் விஷ்ணுமூர்த்தி, தமது † இரண்டாவது அடியை வைத்த காரணத்தால், இது மகத்துவமுள்ளது.

துஷ்யந்தன் — மாதலீ ! அதனாலேதான், எனது காசாணுதி அவயவங்களும் ஆத்துமாவும் ஆறுதல் அடைந்திருக்கின்றன. (தேர்ச்சக்கரங்களை நோக்கி) மேகமண்டலத்தில் இறங்கியிருக்கின்றோம்.

மாதலி — அது எப்படித்தெரியும் ?

துஷ்யந்தன் — * தேர்ச்சக்கரங்கள் தண்ணீரால் நனைந்திருக்கின்றன. ஆகையால் உமது தேர், மேகமண்டலத்தில் மேவியது என்பது தெரிந்துகொண்டேன் ; இது மாத்திரம் அன்று ; சாதகப்பறவைகள் சக்கரப்பழுக்களுக்கிடையில் நுழைந்து பறக்கும் குறிப்பினாலும், தேரிற்பூட்டிய தெய்வக்குதிரைகள், மின்னல் ஒளியால் மினுமினுவென்று விளங்குவதாலும் அதனை விவரமாய் உணர்ந்தேன். இது அதிசயம் அல்ல.

மாதலி — இன்னும் ஒரு நிமிஷத்தில் உமது ஆட்சிக்கடங்கிய நிலவுலகந் தோன்றும்.

துஷ்யந்தன் — (கீழ்நோக்கி) * அதிவேகமாய்த் தேரை விட்டுக்கொண்டு கீழே யிறங்கிச் செல்லும் நமக்கு இந்த மனிதவுலகத்தோற்றம், விநோதமா யிருக்கின்றது : உயரக்கிளம்பிப் பெயர்வதுபோன்ற மலைகளுக்கு மத்தியில் பொருந்திய பூமி, ஆழ்ந்துபோகும் அதிசயத்தை காண்பீராக. இலை மூடியிருந்து தோன்றிய மரங்கள் அனைத்தும், அந்தத்தோற்றம் மாறி, அடிவரையிலும் நன்றாய்த் தெரியும் அதிசயத்தைக் கவனிப்பீராக.சிறு கோடுபோல் உலர்ந்து தோன்றிய நதிகள் பலவும், நன்றாய்த் தெரிகின்றன; நாடிப்பார்ப்பீராக. பூமியை எவனோ ஒருவன், எடுத்தெறிவதனால், அஃது என்னருகில் பொருந்த வருவதுபோல்வதை மகிழ்ந்து நோக்கக் கடவீர்.

† திரிவிக்ரமாவதார காலத்தில்.

மாதலி — நன்று கவனித்தீர் ! மிகவும் நன்றாய் வருணித்துக் கூறினீர்! (வியப்போடு நோக்கி) நிலவுலகம் எத்தனை கம்பீரமாய்க் கண்களைக் கவருகின்றது !

துஷ்யந்தன் — ஐயா மாதலி, கிழக்குச் சமுத்திரத்திலிருந்து மேற்குச் சமுத்திரம்வரையில் தங்கத்தை உருக்கி ஊற்றினாற்போலவும் அஸ்தமனகாலத்து மேகத்தைப் போலவுங் காணப்படுகிறதே ; இது என்ன ?

மாதலி — பல்லாண்டு வாழ்வீர் ! இதுதான் ஹேமகூடம், கிம்புருடர் வாழ்வதற் கிடமாயுள்ள இம்மலை, முனிவர் செய்தவமுடிவதற்கு அநுகூலமான இடமாயிருக்கிறது ; ஏனென்றால், இதோ பாரும் : காசியபப் பிரஜாபதி தமது மனைவியோடு இங்கே தவஞ்செய்கின்றார் ; இவர், பிரம்மாவின் புத்திரராகிய மரீசியின் புதல்வர் ; தேவர்க்கும் அசுரர்க்கும் தந்தை.

துஷ்யந்தன் — அப்படியானால், வலியவந்த சிரேயஸை தப்பவிடக் கூடாது ; முனிவரை வணங்கிப்போக விரும்புகிறேன்.

மாதலி — உத்தம உத்தேசம் ; (இருவரும் இறங்குகின்றனர்.)

துஷ்யந்தன் — (அதிசயத்தோடு) தேர் பூமியிலிறங்கியும், அதன் சக்கரங்கள் அதனிற் படவில்லை ; அதனால் அவைகளின் ஓசையே கேட்கவில்லை ; தூசிகள் கிளம்பியுங் கண்ணுக்குத் தோற்றவில்லை; குதிரைகளை நீர் இழுத்துப் பிடித்திருக்கிறபடியால் தேர் பூமியி லிருப்பதாகவே, தெரியவில்லை.

மாதலி—பல்லாண்டு வாழ்வீர் ! இதுதான் இந்திரர் தேருக்கும் உமது தேருக்கும் உள்ள வித்யாசம்.

துஷ்யந்தன் — மாதலி ! மரீசியாசிரமம் எங்கே யிருக்கின்றது ?

மாதலி — (கையாற் சுட்டிக் காட்டி) * அதோ இருக்கின்றது ; அதனைக் காண்பீர். அதனிற் கட்டைபோல் அசையாதிருந்து சூரியன் ஒளியைத் தமது கூர்மையாகிய கண்களால் கூசாமற் பார்த்துக் கொண்டு, குற்றமற்ற தமது சரீரத்திற பாதி, புற்று மூடிக் கொண்டு மறைந்திருக்கவும், பாம்பின் தோல்கள் அநேகமாய்த் தமது மார்பை மூடிக்கொண்டிருக்கவும், தமது கழுத்தில், பழுத் துலர்ந்த கொடிகள் சுற்றிக்கொண்டு அழுத்தவும், தோள்களின்



துஷ்யந்தன்—"தனது முகத்தை என்பக்கந் திருப்பினள்."

(29-ஆம் பக்கம் பார்க்க.)

மேலே தொங்குகிற சடையில் பறவைகள் தொடுத்த கூடுகள் ஆடவும் விளங்குகிற அந்த மாமுனிவரைப் பார்ப்பீராக.

துஷ்யந்தன் — ஓ, அருந்தவமுதல்வரே! அடியேன் உம்மை வணங்குகின்றேன்.

மாதலி — (குதிரை லகான்களை இழுத்துப்பிடித்து) வேந்தர் பெருமானே! அதிதியால் வளர்க்கப்பட்ட விருட்சங்கள் நிறைந்த காசியபர் ஆசிரமத்திற்கு வந்துவிட்டோம்.

துஷ்யந்தன் — ஸ்வர்க்கத்துக்கு மேலான இந்த ஆசிரமத்துக்கு வந்தவுடன் தேவாமிர்தம் நிரம்பிய வாவியில் ஸ்நானம் பண்ணினவன் போலாயினேன்.

மாதலி — (தேரை நிறுத்தி) மன்னவர் தயவுசெய்து இறங்கலாம்.

துஷ்யந்தன் — (இறங்கி) மாதலி! நீர் என்ன செய்யப்போகிறீர்?

மாதலி — இதோ இரதத்தைச் சரியானபடி நிறுத்திவிட்டேன்; நானும் இறங்குகின்றேன். (அப்படியே செய்கிறான்) மன்னவரே! இப்படி வாரும்; (நடந்து சென்று) மாமுனிவர் தவம்புரியும் ஆசிரமங்களைப் பாரும்.

துஷ்யந்தன் — * இன்னுமுள்ள அதிசயம் நான் காண்கிறபடி சொல்லுகிறேன் கேட்பீராக. இந்த இடத்தை இதாருஷிகள் அடைந்து வாழ்வதற்கு அநேகநாள் தவஞ்செய்கின்றார்கள்; இந்த இடத்தின் விந்தையை என்னால் சொல்லமுடியாது. ஆனாலும் சிறிது கூறுகின்றேன்! இதனில் பற்பலவான கற்பக விருக்ஷங்கள், நிறைந்துள்ள விசேஷத்தாலே, சுத்தாகாசத்தை நித்தமும் அடைந்து, உயிர்வாழ்ந்திருத்தல் ஒழுங்குடைத்தாகும்; பொற்றாமரைகள் பொன்மகரந்தம் சிந்துகிறபடியால், சிவந்து விளங்குகின்றன; தண்ணீரில் ஸ்நானஞ்செய்து படிகமேடைமேல், பண்புடனிருந்து, அரம்பையர் பலரும் அருகில் இருப்பினும், தன்மனம் அடக்கி ஆதியை நினைத்துச் சோதியைக்காணல், சாத்தியமாகும். இன்னமும நான் என்ன சொல்லப்போகிறேன்!

மாதலி — மேலோர்விருப்பம் மேன்மையாகவே யிருக்கின்றது. (நடந்து போய் ஆகாசத்தை நோக்கி) ஓ, விருத்தசாகலியரே! மாரீசமாமுனிவர் என்ன செய்கிறார்? என்ன சொல்லுகின்றீர்? "கற்புடை

மாதர் இலக்கணத்தைக் கூறும்படி தமது மனைவியாகிய தாட்சாயணி அம்மையார் கேட்டுக்கொண்டபடியால் அதனை அவர் அவ்வம்மையார்க்கும் மற்றுமுள்ள முனிவர் மனைவியர்க்கும் விளங்கவுரைத்துக்கொண்டிருக்கின்றார்" என்று சொல்லுகின்றீர் ?

துஷ்யந்தன் — (உற்றுக்கேட்டு) இதனால் என்ன விளங்குகிறது தெரியுமா ? தற்சமயம் நாம் காக்கவேண்டியது தான்.

மாதலி — (அரசனைநோக்கி) மன்னவர் இந்த அசோகநிழலில் உட்கார்ந்திருக்கலாம் ; அதற்குள் நான்போய், தேவேந்திரன் தந்தையாகிய மாரீசமாமுனிவர்க்கு உமது வரவைச் சமயம் அறிந்து அறிவித்து வருகிறேன்.

துஷ்யந்தன் — உமது இஷ்டம்போலச் செய்யலாம்

(அப்படியே உட்காருகிறான்.)

(போய்விடுகிறான்)

மாதலி — பல்லாண்டு வாழ்வீர் ! போய்வருகின்றேன்.

துஷ்யந்தன் — (நற்சகுனங்கண்டு) * எனது இச்சை நிறைவேறுமென்று நான் நம்பவில்லை ; ஓ எனது புஜமே ! ஏனோ இப்படி வீணாய்த் துடிக்கின்றாய்? அதிஷ்டம் அப்போதே ஓடிப்போய்விட்டது; இப்போதிருப்பதெல்லாம் துரதிஷ்டந்தான்.

(திரைக்குப்பின்னால்)

இப்படி முறட்டுத்தனம் பண்ணாதே ! ஆஹா ! என்ன ! மறுபடியுந்தனது பழைய பிடிவாதத்தை ஆரம்பித்துக்கொண்டானே !

துஷ்யந்தன் — (உற்றுக்கேட்டு) *இதுவோ துறவிகள் இருக்கும் இடம் ; இதனில் துஷ்டர் இருப்பதற்கு இடம் இல்லை ; இவ்வகையாக கண்டிக்கப்படுகின்ற இந்தத்துஷ்டன் யாரோ, தெரியவில்லை ; (சத்தம் வந்தவழியை உற்றுநோக்கி ஆச்சரியத்தோடு) ஆஹா ! இந்தப் பையன் யாரோ ! பார்வைக்குப்பையன் ஆனாலும் பராக்ரமமிகுந்த ஐயன்போல, தன்னை இரண்டு ருஷி ஸ்திரீகள், விடாமற் பின்தொடர வருகின்றான் ! வரும்வழியிற் பசியோடு பாலுண்டபடியே தாயண்டை படுத்துக்கொண்டிருந்த அஞ்சா நெஞ்சுபடைத்த சிங்கக்குட்டியை அதன் பிடரி மயிர் கசங்கும்படி

பிடித்து தூக்கிக்கொண்டனன்; கடைசியாக அதுவும் இவனுக்கு அடங்கிவிட்டது.

(மேற்குறித்தபடி ஒரு பையன் இரண்டு தவப்பெண்களுடன் பிரவேசிக்கிறான்.)

சிறுவன் — சிங்கக்குட்டீ! உன் வாயைத்திற ; பல்லை எண்ணலாம்.

முதல் தவப்பெண் — * துஷ்டப்பயலே! துடுக்குப்பையா! மிருகங்களை யெல்லாம் பிடித்து, ஏனோ இப்படி வீணாய் வதை செய்கின்றனை? அவைகளை நாங்கள் அன்புடன் எமது மக்களைப் போல மதித்து வளர்த்து வருகின்றோமே! இப்படி உனது துடுக்குகள் வளர்ந்து வருகின்றபடியினால் முனிவர் உனக்குச் † சர்வதமனன் எனப் பெயரிட்டது பொருத்தமாகத்தா னிருக்கின்றது.

துஷ்யந்தன் — எனது சொந்தப் பாலகன்போல் இந்தப் பாலகன்மேல் எனக்கு இச்சை உண்டாகின்றதே! இதற்கென்ன காரணம்? உண்மையில் நான் பிள்ளையில்லாதவன். ஆகையால், எனக்கிந்த இச்சை உண்டாகின்றது.

இரண்டாந் தவப்பெண் — குட்டியை விட்டுவிடு? இல்லாவிட்டால் சிங்கம் உன்னைக் கடிக்கும்.

சர்வதமனன் — (புன்னகையோடு) ஓஹோ! எனக்கு எவ்வளவு பயமாயிருக்குது தெரியுமா? பூ! (உதட்டைப பிதுக்கிக்காட்டுகிறான்.)

துஷ்யந்தன் — (தனக்குள்) * ஆரோ மஹானுடைய அரியமுளை இவனெனச் சந்தேகம் இல்லை. சமித்தை யிட்டவுடனே பற்றி எரியும் பெரு நெருப்பு ஒரு பொறியின் அளவாக இருப்பதுபோல விளங்குகின்றான், இந்தச் சிறு பயல்.

முதல்தவப்பெண் — இந்தக்குட்டியை விட்டுவிடு ; உனக்கு நான் வேறே பொம்மை கொடுக்கிறேன்.

சர்வதமனன் — எங்கே அது? கொண்டுவா.

(கையை விரித்து நீட்டுகிறான்.

துஷ்யந்தன் — (தனக்குள்) * ஆஹா! இதுவும் ஆச்சரியமே! சக்ரவர்த்தியின் லக்ஷணம் பொருந்தி இருக்கின்றனன் இந்தச் சிறுவன் ; விளையாட்டுக்கருவியை விரும்பி நீட்டிய இவன்கரம்,

---

† சர்வதமனன் = சகலத்தையும் அடக்கியாள்பவன்.

நெருங்கிய விரல்களையும் நீண்டுபின்னிய இரேகைகளையுங் கொண்டு விளங்குகின்றது. ஆதலால், அதிகாலையில் அலர்ந்து, செந்நிற இதழ்கள் அடர்ந்து, இடைவெளி யில்லாமல் இருக்கின்ற தாமரை மலரே அதற்குச் சமமெனச் சாற்றலாம்.

இரண்டாந் தவப்பெண் — சுவரதே! சும்மா, வாயாலே சொன்னால் அவன் ஒத்துக்கொள்ளமாட்டான். பரபரவென்று என் குடிசைக்குப்போய், அங்கே வர்ணந்தீற்றிய மண்மயில்ஒன்று இருக்கிறது; அது முனிவர்மகனாகிய மார்க்கண்டேயனுடையது; அதை இவனுக்காக எடுத்துக்கொண்டுவா.

முதல் தவப்பெண் — அப்படியே; எடுத்து வருகிறேன்.

(போய்விட்டாள்.)

சர்வதமனன் — அது, வரும்வரையில் நான் இந்தக் குட்டியோடேயே விளையாடிக்கொண்டிருப்பேன்.

(தவபபெண்ணைப் பார்த்துச் சிரிக்கிறான்.)

துஷ்யந்தன் — வழியே போகிற இந்தச் சிறுவன்மேலே வாஸ்தவத்தில், எனக்கு ஆசை உண்டாயிருக்கின்றது! * காரணம் சிறிதும் இன்றி சிரிக்கும்போதெல்லாம் சிற்றரும்பின் அழகமைந்த தமது பற்களெல்லாந் தெரியக்காட்டி இனிய மழலை மொழிகளை இதமாய்ப் பேசி, அன்புடன் ஓடிவந்து, தம்மைப் பெற்றவர்களுடைய மடியிலேற விரும்புகின்ற மக்களை, ஆசையோடு அணைத்துக்கொண்டதனால், அவர் மேற் புழுதி தம்மேற் படும்படி விளங்குபவர்கள் புண்ணிய புருஷர்கள்.

இரண்டாம் தவப்பெண்—இவனுவது, என்னைச் சட்டைபண்ணுகிறதாவது! (சுற்றிமுற்றும் பார்த்து) யாரங்கே? முனிவர் பிள்ளைகள் யாரும் இல்லையா? (அரசனை நோக்கி) ஐயா பெரியவரே! இப்படிக் கொஞ்சம் வாருங்கள்; இதோ இந்தப் பையன், இந்தக் குட்டியை வதைக்கிறான்; இது இவனிடத்திலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாமல் முழிக்கிறது.

துஷ்யந்தன் — (நெருங்கிப் புன்சிரிப்புடன்) * ஆசிரமத்தில் வாழும் அருந்தவப் பிள்ளாய்! இத்தனை இளவயதிலேயே, தவவொழுக்கத்தைத் தள்ளி, பொறுமை ஒரு சிறிதும் பழகாதிருக்கின்றனை;

என்ன காரணமோ? ஓ குழந்தாய்! பிராணிகளுக்கு நிழலைத் தருதற்கு இனிதான சந்தனமரத்தை வசைபெறச் செய்யும், நஞ்சுள்ள கருநாகக் குட்டி போலாயினை.

இரண்டாந் தவப்பெண் — ஐயா மஹானே! இவன் முனிவர் மகனல்லன்.

துஷ்யந்தன் — இவனுடைய செய்கையும் உருவும் அதனைத் தெரிவிக்கின்றன; இவன் இருக்கும் இடத்தை உத்தேசித்து நாம் அப்படி எண்ண நேர்ந்தது. (தவப்பெண் வேண்டிக்கொண்டபடி சிங்கக் குட்டியை விடுவிக்கும்போது அச்சிறுவனுடம்பு தன்மேற்பட ஆனந்தம் ஸமிதமஸ ஸ்ர்ராம) * இன்னான் மகன் இவன் என்பது எனக்குத் தெரியாதிருந்தும், சிறுவனாகிய இவனைத் தொடுவதனாலே, எனது உறுப்புகள் சுகானுபவத்திற் பொருந்துகின்றன; எனக்கே இங்ஙனம் இருக்குமானால், இவனைப் பெறத் தவஞ்செய்தவன், அடையும் சுகத்தை என்னால் அளவிடல் ஆமா?

இரண்டாந் தவப்பெண் — (இருவரையும் உற்றுநோக்கி) ஆச்சரியம்! ஆச்சரியம்!

துஷ்யந்தன் — அம்மணீ! என்ன அது?

இரண்டாந் தவப்பெண் — இந்தப் பையன் உருவமும், உங்கள் உருவமும் ஒத்திருக்கின்றன; எத்தனை ஆச்சரியம் இது! இவனும் உம்மோடு பழகினவன்போலவே அடங்கி இருக்கிறான்.

துஷ்யந்தன் — (பையனைத் தடவிக்கொடுத்து) இவன், முனிவர் மகனல்லனாயின், பின் இவன் எக்குலத்திற் பிறந்தவன்?

இரண்டாந் தவப்பெண் — புருவம்சத்திற் பிறந்தவன்.

துஷ்யந்தன — (தனக்குள்) * ஆஹா! இதுவும் ஆச்சரியந்தான்; இவனும் எனது குலத்திற் பிறந்தவனா! இதனாலேதான், இந்தத் தவபபெண்மணி, என்னைப்போலவே இவன் இருக்கின்றனன் என்றனள்; அதனை இப்போது நன்றுயறிந்தேன்; புருவம்சத்தில் பொருந்திய வழக்கம நெடுநாளா நிலைத்தது ஒன்று உளது; அது இளமையில் இந்நில வுலகத்தைப் பரிபாலித்தற் பொருட்டு, சுவரெங்குஞ் சுண்ணந்தீற்றி வெள்ளிதாய் விளங்கும் அரண்மனைகளிலே, வாழ்வதும், அதன்பின் முதுமையில், தம் அன்பிற்

சிறந்த மனைவிமார் பின்றொடர்ந்துவந்து பணிவிடைசெய்ய முனிவர்க்குரிய தவவனங்களில் நுழைந்து, கனிகளைப் புசித்து மர நிழல்களில் வாழ்வதும்ஆகும். (உரக்க) ஆனாலும், இந்த ஆசிரமத்தில், மனித வல்லமையால் நுழைவது அசாத்தியமாயிற்றே!

இரண்டாந் தவப்பெண் — ஐயா சொல்கிறது உண்மைதான்; இவனுடைய தாயார்க்கு அப்ஸரஸ்திரீ சம்பந்தம் உண்டாகையால், இவனை தேவகுருவாகிய இந்தக் காசியபர் ஆசிரமத்தில் பெற்றெடுத்தாள்.

துஷ்யந்தன் — (தனக்குள்) இதுவும் எனது எண்ணம் ஈடேறுவதற்கு இரண்டாவது அடையாளம்; (உரக்க) அந்த மாதர்க்கரசி யாருடைய மனைவி?

இரண்டாந் தவப்பெண் — கொண்ட மனைவிக்கு இரண்டகஞ் செய்து, அவளை அநியாயமாய் நீக்கிவிட்ட பாதகன் பெயரை நினைக்கவும் யார்தான் துணிவார்கள்?

துஷ்யந்தன் — (தனக்குள்) வாஸ்தவத்தில் இந்தக் கதை என்னையே குறிக்கின்றது; ஆனாலும் இந்தப் பையனுடைய தாயின் பெயரை யாவது விசாரிக்கலாம்; பிறன் மனைவியின் பெயரைக் கேட்பது பிசகல்லவா?

(முதல் தவப்பெண், மண்மயிலைக் கையில் எடுத்துக்கொண்டு வருகின்றாள்)

முதல் தவப்பெண் — சர்வதமனா! இந்தச் † சகுந்தலாவண்யத்தைப் பார்.

சர்வதமனன் — (ஆவலோடு சுற்றிப்பார்த்து) ‡ எங்கே எங்கம்மா?

தவப்பெண்கள் இருவரும் — தாய்மேல் வைத்த பிரியத்தினால், ஒரே மாதிரியான பெயர்களைக் கேட்டுப் பையன் மயங்குகிறான்.

இரண்டாந் தவப்பெண் — குழந்தாய்! இந்தக் களிமண் மயிலின் அழகைப் பார்க்கச் சொன்னேன்.

துஷ்யந்தன் — (தனக்குள்) என்ன! இந்தப்பையன் தாயின்பெயர் சகுந்தலையா? ஒரேமாதிரியான பெயர்கள் எத்தனையோ இருக்கின்றன;

---

† (சகுந்தம் = பறவை; லாவண்யம் = அழகு.)

‡ தவப்பெண் கூறியவார்த்தைகளில் சகுந்தலா என்கிற வரையிற் பையன் கவனிக்கிறான்.

இந்த வெறும்பெயர் கானல் ஜலத்தைப் போலக் கடைசியில் என்னை ஏமாற்றிவிடுமோ ?

சர்வதமனன் — அம்மா, இந்த மயில் அழகாயிருக்கிறது ; ஏது இது ?

(மயிலை எடுத்துக்கொள்கிறான்)

முதல் தவப்பெண் — (கலவரத்தோடு பார்த்து) ஓ! குழந்தை கையிற் கட்டியிருந்த இரக்ஷா பந்தனத்தைக் காணோமே !

துஷ்யந்தன் — அம்மா, கலவரப்படவேண்டா ; இவன், சிங்கக்குட்டியோடு விளையாடிக்கொண்டிருக்கையில், அது கீழே விழுந்து போயிற்று (அதை எடுத்துக்கொடுக்க முயலுகிறான்.)

தவப்பெண்கள் இருவரும் — அதைத் தொடவேண்டா ! தொடவேண்டா ! எப்படி யடியம்மா, தொட்டு எடுத்தாயிற்றே ! (இருவரும் மார்பில் கையை வைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் அதிசயத்தோடு பார்த்துக் கொள்கிறார்கள்.)

துஷ்யந்தன் — அம்மா, எடுக்கவேண்டாமென்று, ஏன் தடுத்தீர்கள் ?

முதல் தவப்பெண் — கேளும் மகாராஜரே ! இது * அபராஜிதை என்னும் மூலிகை ; இவனுக்கு ஜாதகர்மம் நடந்த காலத்தில் இதனை மாரீசர் கொடுத்தார். இது கீழே விழுந்தால், இவன், அல்லது இவனுடைய தாய்தந்தையர் தவிர வேறே யாரும் எடுக்கப்படாது.

துஷ்யந்தன் — வேறு யாராவது எடுத்தால் ?

முதல் தவப்பெண் — வந்தது கேடு ; இதுவே பாம்பாய் வடிவெடுத்துக் கடித்துவிடும்.

துஷ்யந்தன் — அப்படி உரு மாறினபோது நீங்கள் கண்டிருக்கின்றீர்களா ?

தவப்பெண்கள் இருவரும் — எத்தனையோமுறை ,

துஷ்யந்தன் — (சந்தோஷமாய்த் தனக்குள்) எனது இச்சை பூர்த்தியாகியும், நான் ஏன் சந்தோஷப்படாமல் இருக்கவேண்டும் ! (பாலகனைத் தழுவிக் கொள்ளுகிறான்.)

இரண்டாந் தவப்பெண் — சுவரதே! வா, போவோம்; நோன்பு நோற்கும் சகுந்தலைக்கு இதனைத் தெரிவிக்கவேண்டும்.

(இருவரும் போகிறார்கள்)

சர்வதமனன் — என்னை விட்டுவிடு; அம்மாக்கிட்டப் போறேன்.

துஷ்யந்தன் — என்கிட்டவே இரம்மா, என் அருமைக் குழந்தாய் உங்கம்மாகிட்ட நாம் இரண்டுபேரும் போகலாம்,

சர்வதமனன் — எங்கப்பா, துஷ்யந்தனுச்சே நீயார்?

துஷ்யந்தன் — (புன்சிரிப்போடு) இந்த வாக்குவாதமே எனக்கு நம்பிக்கை உண்டுபண்ணுகிறது

(பிறகு ஒரிழையாகப் பின்னிய கூந்தலையுடைய சகுந்தலை வருகிறாள்)

சகுந்தலை — சர்வதமனன் கையிற் கட்டியிருந்த இரக்ஷாபந்தனம் உருமாறி யிருந்திருக்க வேண்டிய காலத்திலும், மாறாமல் இருந்ததென்று கேள்விப்பட்ட பின்னும் என் அதிர்ஷ்டத்தை நான் நம்பவில்லை. ஆனால் சானுமதி சொன்னபடி எல்லாம் சரியாயிருக்குமானால், நம்பலாம்.

துஷ்யந்தன் — (சகுந்தலையை நோக்கி) * இவளுடைய ஈராடைகளும் அழுக்கடைந்து காராடைகளா யிருக்கின்றன; இவளுடைய முகமும் நோன்பு நோற்பதனால் வாடியிருக்கின்றது; ஐயோ, இவளுடைய கூந்தலையும் ஒற்றையாகப் பின்னிக்கொண்டு ஏங்கியிருக்கின்றாள்; இவளுடைய செய்கைகளை யெல்லாம் நோக்கினால், இரக்கம் இன்றி நான் இவளை நீக்கிவிட்டும், இவளுடைய கற்புக் கெடாமல், என்னை எண்ணியெண்ணி இவள் நோன்பு நோற்குந் தன்மை விளங்குகின்றது.

சகுந்தலை — (மனவருத்தத்தினால் முகம் வெளுத்திருக்கிற அரசனை நோக்கி) இவர், என் பிராணநாதரைப் போலத் தோற்றவில்லை; ஆனாலும், இவர் யார்? மங்கலமான இரக்ஷை கட்டியிருந்த எனது குழந்தையை எடுத்தணைத்து தன் தேகபரிசத்தினால் அசுத்தப் படுத்துகின்றாரே!

சர்வதமனன் — (தாயண்டை வந்து) அம்மா, இதோ யாரோ ஒருவர் என்னை எடுத்தணைத்துப் பிள்ளை யென்று சொல்லுகிறார்.

துஷ்யந்தன் — பிராணநாயகி! நான் உனக்குச் செய்த கொடுமையும் நன்மையாகவே முடிந்தது. ஏனெனில், இப்போது நீ என்னை இன்னுனென்று அறிந்துகொண்டதனால், இரக்க முதலியவைகள் என்னிடத்திலிருக்கின்றனவென்று தெரிகின்றது. உன்னுடைய கணவனாக என்னை அங்கீகரித்துக்கொள். மறுத்துவிடவேண்டாம்.

சகுந்தலை — (தனக்குள்) நெஞ்சே! அஞ்சாதே! அஞ்சாதே! தெய்வத்துக்கு என்மீதிருந்த தீராக்கோபம் ஒழிந்தது; இரக்கம் உண்டாயிருக்கின்றது; இவர்தான் எனது கணவர்.

துஷ்யந்தன் —*அன்புடையாளே! அதிஷ்டவசத்தால் நான் உன்னை அடைந்தனன்; † கிரகணம் விட்டவுடனே, சந்திரனைச் சேரும் உரோகிணி நக்ஷத்திரமே போல, எனது உள்ளத்திருந்த மறதியென்னும் மாயஇருள் போய் ஞாபகம் என்னும் நல்லொளி வந்தபடியால், உன்னை அடைந்தனன்.

சகுந்தலை — என் பிராணநாதர்க்கு ஜயமுண்டாகக்கடவது! (துக்கத்தால் கண்ணீர் சொரிந்து இடையில் பேச்சடங்கி நிறுத்துகிறாள்.)

துஷ்யந்தன் — * இன்பத்துக்கிருப்பிடமே! அன்பின் பெருக்கே! கண்ணீர் விடுவதாற் கலங்கிய நீயும், ஜயம் என்னும் வார்த்தையை தடைபட்டுரைத்தனை; ஆனாலும் உன்னுடைய ஆபரணம் அணியாத வாடிய முகத்தையும், வதங்கிய உதட்டையும் கண்டவுனது கணவனாகிய எனக்கு, ஜயம்! ஜயம்! எல்லாம் ஜயமாகவேமுடியும்.

சர்வதமனன் — அம்மா! ஆர் இது?

சகுந்தலை — குழந்தாய்! உன் நல்லதிஷ்டத்தைக்கேள்!

துஷ்யந்தன்—(சகுந்தலையின் பாதங்களில் விழுந்து) *பொன்போலுமேனிப் பொலங்கொடியே! நான், உன்னைச் சிறிதும் அன்பு செய்யாமல் அகற்றி வெறுத்துவிட்டதனை, உனது மூதறிவினால் மன்னித்துக் கொள்ளக்கடவை; வன்மனப்பாவியாகிய நான், எனது மனத்தகத்தில், அக்காலத்தில் நிறைந்திருந்த மறதியால், உனது அருமையை எண்ணி யறியாதிருந்தேன். தன்மேல் எறிந்த புஷ்ப

---

† கிரகண இருள், துஷ்யந்தன் மறதிக்கும்; கிரகணம் விட்டவுடன் சந்திரன் ஒளி, துஷ்யந்தனுடைய ஞாபகத்துக்கும்; சந்திரன், துஷ்யந்தனுக்கும்; உரோகிணி, சகுந்தலைக்கும்; உவமை அணியாகக் கூறப்பட்டன.

மாலையைக் குருடன் ஒருவன், பாம்பென்று எண்ணி அதனைத் தூக்கி எறிந்துவிடுவதுபோல, முன் செய்த நல்வினைப்பயனால் நன்மை வந்தடைந்தும், என்போன்ற அறிவீனர் தமது மறதி காரணமாக, மூடத்தன்மை மலிந்து, அதன் அருமையை உய்த்துணராமல் கெடுவார்கள்.

சகுந்தலை — பிராணநாதா! எழுந்திருங்கள்; முற்பிறப்பிற் பரிசுத்த தர்மங்களைத் தடுத்த எனது தீவினையே அப்படிப் பலித்தது; ஆகையினாலேதான் இரக்கமே உருவமாயவதரித்துள்ள. எனது பிராணநாதரும், என்னை வெறுத்துத் தள்ளினர்.

(அரசன் எழுந்திருக்கின்றான்.)

சகுந்தலை — எனது பிராணநாதர்க்கு, இந்தத் துரதிஷ்டம் பிடித்தவளுடைய ஞாபகம் எப்படி வந்தது!

துஷ்யந்தன் — *எனது மனத்தகத்தில், வீழ்ந்து ஆழ்ந்து பதிந்துள்ள துயரக்கணையைப் பெயரச்செய்து, பிறகு அதனைச் சொல்லுவேன்; ஓ சுந்தர மானே! அந்த நாளையில் என்தன் முன்னே, நிந்தையில்லாத நீ நின்றுகொண்டு, ஒழுகவிட்ட கண்ணீர், உனது உதட்டில் ஒழுகிப் பெருகித் துயரம் பெருக்கியது. ஆனாலும், மனமருண்டு இருந்த நான், அதனை அலக்ஷியஞ் செய்திருந்தேன்; ஓ, அமுதமொழித் தையல்நாயகி! அந்தக்கண்ணீர், இன்னும் அழியாமல், உனது திருக்கண் உரோமநுனியில், தொங்குகின்றதனால், ஓ உடுக்கையிடை ஒண்டொடீ! அதனை இப்போதே அடியேன் துடைத்துவிட்டு எனது துயரொழிக்கக் கடவேன்.

(அப்படியே துடைக்கின்றான்.)

சகுந்தலை — (கணையாழியைக் கண்டு) காதல! இதுவல்லவா தமது கணையாழி?

துஷ்யந்தன் — இது அகப்பட்டதனாலேதான் உன் ஞாபகம் எனக்கு வந்தது.

சகுந்தலை — இதுதான் பெருந்துனபத்துக்கிடமாயிருந்தது; அறிகுறியாகக் காட்டலாம் என்று தேடினபோது காணமற் போயிற்றல்லவா?

துஷ்யந்தன் — ஆனால், வசந்த காலம் வந்தபோது, புஷ்பம், கொடியில் பூக்கிறபடி, இது உனது விரலிற் சேரட்டும்.

சகுந்தலை — எனக்கிதனிடத்தில் நம்பிக்கை யில்லை; எனது தலைவரே இதனை அணிந்திருக்கட்டும். (மாதலி வருகின்றான்.)

மாதலி — ஐயா! நீர், முறைப்படி மணந்தவுமது மனைவியை அடைந்ததற்கும் மைந்தனைக் கண்டதற்கும் நான் சந்தோஷம் கொண்டாடுகின்றேன்.

துஷ்யந்தன் — மாதலீ! எனது மனோரதம் முதிர்ந்து இனிமையாய்ப் பழுத்தது; இந்த விஷயம் இந்திரர்க்குத் தெரிந்திருக்குமா?

மாதலி — (புன்சிரிப்புடன்) தேவர்க்குத் தெரியாத செய்தியும் உண்டா? இருக்கட்டும்; உடனே வாருங்கள்; தெய்வத்தன்மையுள்ள மாரீசர் உமக்குத் தரிசனங்கொடுக்கச் சித்தமாயிருக்கின்றார்.

துஷ்யந்தன் — சகுந்தலா! பிள்ளையைப் பிடி; உன்னை முன்னிட்டுக் கொண்டு முனிவரைக் காணப்போகிறேன்.

சகுந்தலை — என் பிராணநாதரோடு கூட, குருவிடத்திற்குப் போக எனக்கு வெட்கமாயிருக்கிறது.

துஷ்யந்தன் — விசேஷ காலங்களில் இப்படிச் செய்தே தீரவேண்டும்; வா; உடனே வா; (எல்லாரும் போகிறார்கள்.)

(மாரீசர் † தாக்ஷாயணியுடன் வருகின்றார்.)

மாரீசர் — (துஷ்யந்தனைப பார்த்துக்கொண்டு அதிதியைநோக்கி) * தாக்ஷாயணீ! இதோ, இவர், உனது மகன் இந்திரனுடைய யுத்தகளத்தில், முதல்வராயிருப்பவர், இவரே, இவ்வுலகில் இன்பம் பெருக, அதனை ஒரே குடைக்கீழ் அரசு செலுத்தும் துஷ்யந்தரெனப் பரிசுத்தத் திருநாமம் பூண்டிருப்பவர்; இவருடைய வில்லே எந்நாளும், இந்திரனுடைய துன்பத்தை நீக்கி விளங்குகின்றது. ஆதலால், இந்திரனுக்கு வஜ்ஜிராயுதம் ஓர் ஆபரணமாகி யிருக்குமன்றி அதனால் அவற்கு ஒரு பயனும இன்று.

---

† மாரீசர் மனைவியாகிய அதிதியின் மறுபெயர்; இவர்களுடைய மக்களே தேவேந்திரன் முதலிய தேவர்கள்.

தாக்ஷாயணி — இவருடைய உருவத்திலேயே பராக்கிரமம் விளங்குகின்றது.

மாதலி — பல்லாண்டு வாழ்வீர்! இதோ தேவர்களுக்குத் தாய் தந்தையரான இவ்விருவரும், உம்மைப் பெற்றோர்க்குள்ள பரம கிருபையோடு நோக்குகின்றார்கள்; நீர், அவர்கள் சமீபத்திற் செல்லலாம்.

துஷ்யந்தன் — மாதலீ! * நான் தரிசனம் செய்யும்படி பரிசுத்தராக இதோ இங்கே விளங்கி வீற்றிருக்கின்ற இவ்விருவர்கள்தாமோ, பிரமபுத்திரர்களாய்ப் பெருமை மேவிய தக்ஷனுக்கும் மரீசிக்கும் சந்ததியாக வந்தவதரித்தவர்கள்? இவ்விருவர்கள்தாமோ, பிரமருக்கிப்பால், ஒரு தலைமுறை, இடை ஒற்றி விளங்கும் பெரியோர்? இவர்கள்தாமோ, பன்னிரு சூரியர் பிறத்தற்கிடமாயிருந்த பெரியோர்? இவர்கள்தாமோ, மூவுலகுக்கும் மூதாதையும் அமராதிபதியும், யாகாதிபதியுமாகிய இந்திரனைப் பிரியமுடனே பெற்ற பெரியோர்? இவர்கள்தாமோ, இணையில் † பரம்பொருள், அவதாரம் செயற்காஸ்பதமாகி இருந்த பெரியோர்?

மாதலி — ஆம் இவர்கள் தாம்; வேறு யார்?

துஷ்யந்தன் — (அருகிற்சென்று) இதோ இந்திரற்கு ஊழியனான துஷ்யந்தன் உங்களிருவரையும் வணங்குகின்றான்.

மாரீசர் — குழந்தாய்! பல்லாண்டு வாழ்ந்து பாரினைப் பரிபாலிப்பாயாக.

தாக்ஷாயணி — குழந்தாய்! இணையிலா வீரனாகி விளங்கக்கடவாய்.

சகுந்தலை — எனது சிறுவனோடு உங்கள் திருவடிகளை வணங்குகின்றேன்.

மாரீசர் — குழந்தாய்! * உனது கணவர் இந்திரன்போல்வார்; உனது மகன் ஜயிந்தவன்போல்வான்; ஆகையினால் மகளே! வேறுவகையாய் ஆசீர்வதித்தல் தக்கதன்று, இந்திராணிபோல் இருந்து வாழக்கடவாய்.

தாக்ஷாயணி — குழந்தாய்! உனது கணவன் உன்னைக் காதலுடன் போற்றி வாழக்கடவன். உனது சிறுவன் பல்லாண்டு வாழ்ந்து,

† பரம்பொருள் = திருமால்.

பெற்றோர்களுடைய இருவமிசங்களுக்கும் சந்தோஷ மூட்டக்கட வன். உட்காருங்கள்.

(எல்லோரும் மாரீசரைச் சூழ உட்காருகிறார்கள்.)

மாரீசர் — (ஒவ்வொருவரையும் சுட்டிக்காட்டி) * இதோ இந்தக் கற்பரசி யாகிய சகுந்தலையும், குணசாலியாகிய இந்தச் சிறுவனும், நீரும் இப்போது அதிர்ஷ்டவசத்தால் ஒன்றுகூடி மகிழ்ந்திருப்பது, குறையாத அன்பும், அதிஷ்டமும், அனுஷ்டானமும் ஆகிய மூன்றும் ஒன்றாய்க் கூடியிருப்பதுபோலாகும்.

துஷ்யந்தன் — * தெய்விகம் பொருந்திய பெருமானே! எங்களுடைய எண்ணம் முதலில் ஈடேறி, அதன்பின் உமது தரிசனம் எமக்குக் கிடைத்தபடியால், உமது கிருபை உயர் ஒப்பில்லாததாகும்; எப் படி யென்றால்: பூத்தபின் காய்த்தலும், மேகம் கவிந்தபின் மிகு மழை பொழிதலும் ஆகிய காரணகாரியம் உலக வழக்கு. அப்படி யின்றி யிங்கே, காரணமாகிய வுமது அனுக்கிரகம் பெறுதற்கு முன்பே, காரியமாகிய எமததிஷ்டத்தை நாங்கள் அடைந்தனம்.

மாதலி — ஆதித்தாய்தந்தையர்களுடைய அருள் இப்படித்தான் இருக்கும்.

துஷ்யந்தன் — தெய்வத்தன்மை பொருந்திய ஐயரே! உமது பணிப் பெண்ணாகிய இவளைக் காந்தர்வ விவாகம் செய்த அடியேனுக் குண்டாயிருந்த ஞாபகக்குறைவால், சில காலத்துக்குப் பிறகு சுற்றத்தாரோடு வந்த இவளை வேண்டாமென்று தள்ளிவிட்டேன். அதனால், உமக்குச் சகோதரராகிய கண்வர்க்குப் பிழைசெய்த வன் ஆனேன். பிறகு, மோதிரத்தைக் கண்டதனால், அவருடைய மகளை அடியேன் மணந்த ஞாபகம் திரும்பியது.*எனது சரித்திரம் எனக்கே விந்தையாக இருக்கின்றது. நான் என்ன சொல்லப்போகி றேன்? கண் எதிரிலே யானை இருந்தகாலத்தில், அது யானையல்ல வென மறுத்துவிட்டு, அது சென்றபிறகு சந்தேகமாகி அதன் காலடியின் அடையாளங்களைக் கண்ட மூடன் ஒருவன், யானை தான் அதுவென நிச்சயஞ்செய்து நிதானிப்பதுபோல எனது மனோநிலை இருந்தவாறு இன்னதென்றுணர்ந்து நான் என்ன சொல்வேன்!

மாரீசர் — குழந்தாய்! நீ குற்றம் செய்துவிட்டதாகக் கொண்ட சந்தேகத்தை ஒழித்துவிடு, அப்போது உன்னிடத்தில் மறதியல்லவா குடிகொண்டிருந்தது? சொல்லுகிறேன்; கவனமாய்க் கேள்.

துஷ்யந்தன் — அப்படியே கவனிக்கிறேன்.

மாரீசர் — நீ நீக்கிவிட்டதாகத் துயரப்பட்டுக்கொண்டிருந்த தனது மகள் சகுந்தலையை, அப்ஸரஸ் தீர்த்தக்கரையிலிருந்து, மேனகை தூக்கிக்கொண்டு வந்தபோதே, நான், எல்லாம் எனது ஞானதிருஷ்டியால் தெரிந்துகொண்டேன். துருவாச முனிவருடைய சாப மகத்துவத்தால் நீ உனது தர்மபத்தினியை விலக்கிவிட்டனை; அந்தச் சாபமே உனக்கு மறதியை உண்டாக்கி அவளைத் தள்ளிவிடச் செய்தது; வேறு நினைக்காதே. கடைசியாக மோதிரக் காட்சியால் அந்தச் சாபவிமோசனமாயிற்று. அதுவும் துருவாசருடைய அநுக்கிரஹந்தான்.

துஷ்யந்தன் — (பெருமூச்செறிந்து) பழிக்குத் தப்பினேன்.

சகுந்தலை — (தனக்குள்) காரணமில்லாமல் எனது பிராணநாதர் என்னை விலக்கி விடவில்லை; இதுவும் எனது அதிஷ்டந்தான். நான் சாபம் பெற்ற விஷயம் எனக்குத் தெரியவே தெரியாது; எனது பிராணநாதரைப் பிரிந்த துயரத்தால் என்னை நான் மறந்திருந்தேன். ஆகையால் எனக்கு அந்தச் சாப விஷயம் தோன்றாமற் போயிற்று. இதனாலேதானோ, என் தோழிமார்கள், எனது கணவர்க்கு அந்த மோதிரத்தைக் காட்டும்படி சொல்லி அதனை என்னிடத்திற் கொடுத்தனுப்பினார்கள்?

மாரீசர் — குழந்தாய்! உன் எண்ணம் பலித்துவிட்டது. உன் கணவரை வெறுக்காதே. * நீ உன் சாபகாரணத்தால் தள்ளப்பட்டனை. உனது கணவர் தமது மனத்தில், ஒழியாமறதி உண்டாயிருந்தபடியால் உனது விஷயத்தில் ஒரே பிடிவாதமாய், இரக்கம் என்பது இல்லாதிருந்தனர். இப்போது அவர் மனஇருள் அகன்றதனால், உன்னைப் பட்டத்தரசியாய்ப் பரிந்து வந்து ஏற்றுக் கொண்டனர். அழுக்குப் பிடித்த கண்ணாடியில் அருகிலிருக்கும் பொருள்கள் தோன்றா. ஆனாலும், அவ்வழுக்கைக் கழுவிவிட்டால், அதனிற் சாயை அழகாய்த் தோன்றும்.

துஷ்யந்தன் — சுத்தமனத்துத்தமாகிய தேவரீர் சொல்வது மிக வும் பொருத்தமா யிருக்கின்றது.

மாரீசர் — குழந்தாய் ! சகுந்தலையிடத்திற் பிறந்த உனது மகனாகிய இந்தச் சிறுவனை மனமகிழ்ந்து ஏற்றுக் கொண்டனை என்று நம்பு கின்றேன்; இவனுக்குச் செய்யவேண்டியிருந்த சாதகர்மங்களை நாங்களே செய்தோம்.

துஷ்யந்தன் — பெருமானே ! இவனாலேதான் எனது குலம் நிலைபெற வேண்டும்.

மாரீசர் — அதற்கென்ன தடை; இவன் மஹா சக்கரவர்த்தியாய்க் கீர்த்தி மிகுந்து விளங்குவான். * இடைதவிர்ந்து தடைப்பட்டு நில்லாமல், பார்மேலோடுந் தேர்மேல் ஏறிக்கொண்டு, உலக முழு வதூஉம் ஒவ்வொரு கண்டமாய், ஏழு கண்டங்களையும் எளிதினில் ஜயிப்பான். அப்போது இவனை யாரும் எதிர்க்கமாட்டார்கள். இப்போதும் இவன், இங்குள்ள மிருகம், சிங்கமாயினும், அதற் குச் சிறிதும் பயப்படான். அனைத்தையும் அடக்கிவிட்டனன் ; ஆதலால், சர்வதமனன் என்னும் பெயரிட்டழைக்கப்பட்டனன் ; ஆனாலும் இனிமேல் உலகடங்கலையும் அன்பாய்க் காத்தளிப் பான். ஆகையால், பரதன் எனும் பெயர்பெற்று பிரபலமாக வாழ்வான்.

துஷ்யந்தன் — இவனது சாதகர்மம் முதலிய காரியங்களனைத்தும், புண்ணியராகிய தேவரீரே நடத்தினதினால், தேவரீர் சொன்ன படியே இவனது பெரும்புகழ் விளங்கும் ; இன்னும் அதற்கதிக மாகவே விளங்குவான் என்பதற்குத் தடையில்லை.

தாக்ஷாயணி — ஸ்வாமீ ! தமது மகளுடைய எண்ணம் பூர்த்தியாய்விட்ட தைப்பற்றிக் கண்வ முனிவர்க்கு அறிவிக்கவேண்டும் ; தனது மகள்மேல் வைத்த பிரியத்தினால் மேனகைதான், எனக்கு இவ்விடத்தில் ஏவற்றொழில் செய்துகொண்டிருக்கின்றாளே !

சகுந்தலை — (தனக்குள்) நான் சொல்லவேண்டுமென்று எண்ணியிருந் ததை, இந்த அம்மையாரவர்கள் சொல்லிவிட்டார்கள்.

மாரீசர் — தவஞானத்தால், கண்வர், இவை யெல்லாந் தெரிந்து கொண்டிருக்கின்றார்.

துஷ்யந்தன் — இதனாலேதான் முனிவர் என்னைக் கோபியாதிருந்தனர்.

மாரீசர் — ஆனாலும், இந்த மங்கள காரியத்தை அவர்க்கறிவித்து நாம் சந்தோஷங் கொண்டாடவேண்டும்; யார் அங்கே!

(சிஷ்யன் ஒருவன் வருகின்றான்.)

சிஷ்யன் — பகவானே! இதோ அடியேன் இருக்கின்றேன்.

மாரீசர் — காலவ! உடனே புறப்பட்டு ஆகாயமார்க்கமாய்ப் போய், துஷ்யந்தருக்குச் சாபவிமோசனமாய் நன்னினைவு திரும்பியபடியால், தமது மனைவி சகுந்தலையை அவனுடைய குமாரனுடன் ஏற்றுக்கொண்டார் என்ற சந்தோஷ சமாசாரத்தை நான் சொல்லியனுப்பினதாக, கண்வ முனிவருக்குத் தெரிவி.

சிஷ்யன் — பெருமான் திருவுளப்படியே. (போகின்றான்.)

மாரீசர் — குழந்தாய்! நீ ஏன் இங்கிருக்கவேண்டும்? நீயும் உனது மனைவி மைந்தருடன், உனது நண்பனாகிய இந்திரனது ரதத்திலேறி உனது நகரத்துக்குப் புறப்படுக.

துஷ்யந்தன் — பெரியோர் கட்டளைப்படி.

மாரீசர் — தேவேந்திரன் உனக்கும் உன் குடிகட்கும் ஏராளமான மழையை வருஷிக்கட்டும்! நீயும் அநேக யாகாதிகளால் தேவர்களைத் திருப்திசெய்யக்கடவாய். இவ்விதமாக நீ தேவர்களுக்கும் தேவர்கள் உனக்கும் சிலாகிக்கத்தகுந்த உபகாரங்களை பரஸ்பரம் செய்துகொண்டு பல்லாயிரம் யுகங்கள் வாழக்கடவீர்களாக!

துஷ்யந்தன் — பகவானே, என்னாலியன்றவரையில் நற்கருமங்களைச் செய்ய முயல்வேன்.

மாரீசர் — குழந்தாய்! உனக்கு இன்னும் வேறுபகாரம் நானென்ன செய்யப்போகின்றேன்?

துஷ்யந்தன் — இதைவிடப் பேருதவி வேறென்ன இருக்கின்றது? பெரியோராகிய தாங்கள் இன்னும் வேறுபகாரம் எனக்குச் செய்ய

விரும்பினால், † பரதனுடைய கோரிகையின்படி இந்த அனுக்கிரகம் செய்யப் பிரார்த்திக்கின்றேன். * அரசர்கள் தமது குடிஜனங்களுக்கு நன்மையே செய்து வாழக்கடவார்கள்; அழகிய திருமேனியுடையவளாகிய சரசுவதியைப் புலவர்கள் பூசித்து வாழக்கடவார்கள்; தமக்குத்தாமே இணையாகிய சுயம்புவாகி, சங்கரியாகிய உமாதேவியை இடது பாகத்தில் வைத்து, என்றும் அழிவில்லாமல் வீற்றிருக்கும் நீலகண்டக் கடவுளாகிய சிவபிரான் எமது மறுஜன்ம நோயைப்போக்கி எம்மைக் காத்தருளுக.

ஏழாம் அங்கம் முடிகின்றது.

சகுந்தலை முற்றுப்பெற்றது

---

† நாடகாசிரியராகிய ஒரு முனிவர் மற்ற விவரங்களை அநுபந்தத்திற் காண்க

அநுபந்தம்—க

கடவுள் துணை

சகுந்தலை

[முக்கியமானபாகங்களுக்கு நூலாசிரியர் இயற்றிய செய்யுட்கள்]

முதலாம் அங்கம்

துஷ்யந்தன் :— (பக்கம் 4, வரி 10.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(1) கழுத்தைத் திருப்பிக் கவினுறப் பின்னே
வருமிர தந்தனைக் கருவிழிக் கடையால்
அடிக்கடி நோக்கியும், அம்புதன் மீதில்
பாயுமோ என்னும் பயத்தால் உடலின்
முற்புற மதனைப் பிற்புறந் தன்னில்
ஒடுக்கியும், இளைப்பால் உள்வாய் தோன்றக்
காட்டிய பகுவாய்க் கடைவழி மூலமாய்
அரைகுறை யாக அயின்றுமென் றகற்றிய
புற்களை வழியெலாம் சிந்தியும், பொருக்கெனத்
துள்ளிக் குதிப்பதால் தொலைவிலா காயத்
ததிகதூ ரத்தையும் அவனியிற் கொஞ்ச
தூரந் தன்னையும் துணைவிற் கடந்து
போய்க்கொண் டிருக்கும் புதுமையைப் பாராய்!

துஷ்யந்தன் :— (பக்கம் 8, வரி 3.)

(அகவல்)

(2) தென்றற் காற்றால் சிற்றலை தோன்றும்
கால்வாய் நீரின் மரவேர்க் கற்றைகள்
முழுகி அலைந்திங் கெழுவன பாராய்

(இன்னும்)

புத்திளந் துளிர்களிற் பொருந்தொளி யெல்லாம்
சுத்தமாம் வெண்ணெய் சொரிந்து கிளம்பிய
புகைகளின் மழுங்கும் புதுமையைக் காணாய்
(இன்னும்)

தருப்பைப் புல்லின் தண்ணிய கொழுந்தை
அறுத்து விட்ட அணிதிகழ் புனத்திற்
புன்தலைப் புல்வாய்ப் பெட்டைகள்
புற்களைக் கறிக்கும் புதுமையை நோக்காய்.

துஷ்யந்தன் :— (பக்கம் 8, வரி 24.)

(**பஃறொடைவெண்பா**)

(3) ஆசை சிறிதுமில்லா தார்நிறைந்து வாழுமிந்த
ஆசிரமந் தன்னை அடைந்த எனதுதோள்
ஆஹா துடிக்கின்ற தாச்சரியம் ஆச்சரியம்
ஆச்சரியம் இங்கே அதன்பலனெவ் வாறுவரும்
ஆனாலு மென்ன அதிஷ்டமெங் கெங்குமுண்டு
ஆரோ அறிவா ரதை.

துஷ்யந்தன் :— (பக்கம் 9, வரி 7.)

(**பஃறொடைவெண்பா**)

(4) இந்தப் புறத்தி லிவரழகின் மேன்மையைப்போல்
அந்தப் புரத்தி லரண்மனையில் வாழ்மகளிர்
எந்தப் புரத்தினர்க்கும் இல்லையில்லை ஆதலினால்
பந்தமுடன் சீராட்டிப் பாராட்டு நம்முடைய
நந்த வனமலர்கள் நாகரிக மில்லாத
இந்த வனமலர்கட் கெவ்விதமும் தாமொவ்வா
அந்த மணமிவைக ளால்.

துஷ்யந்தன் :— (பக்கம் 10, வரி 2.)

(**நிலைமண்டில ஆசிரியப்பா**)

(5) சற்றுமென் ணுமலித் தவசி யானவர்
இயற்கை யழகமைந் திருக்குமிவ் வுருவைத்
தவத்தொழில் செய்து தவிக்கவைத் திருக்கும்
தன்மையை நோக்கில் வன்மையா யுள்ள

சமித்தறுப் பதற்குத் தக்கதென் றெண்ணி
நீலோற் பலத்தின் நீளிதழ் விளிம்பை
உபயோ கிக்க உடன்படு கின்றார்
என்று கூறற் கிடமா மன்றே.

துஷ்யந்தன் :— (பக்கம் 10, வரி 23.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(6) சுந்தரஞ்சேர் தாமரையைச் சைடைப்பாசி சூழினுந்தான்
அழகாய்த் தோன்றும்
சந்திரற்குக் களங்கமிருந் திருந்துமதன் ஒளிகுறையாத்
தன்மை போல
இந்தமட மங்கைமர வுரியணிந்தும் எழின்மிகுந்து
விளங்கு கின்றாள்
சுந்தரநல் லுருவமதற் கழகுசெயா ததுவுலகிற்
சொல்லுங் காலே.

துஷ்யந்தன் :— (பக்கம 11, வரி 10.)

(வெண்பா)

(7) கீழுதடே செந்தளிராக் கிளைவண்ணப் பைங்கொடிக்குத்
தாழுகின்ற தோள்களே சாகைகளாச்—சூழும்
இளமை நலமே எழின்மலரா மேனி
வளமை வளர்ந்திருக்கு மால்.

துஷ்யந்தன் :— (பக்கம் 12, வரி 9.)

(வெண்பா)

(8) க்ஷத்திரியன் வேட்கத் தகுந்தவளிந் நங்கையென்றென்
சித்தங் களித்தெனக்குச் செப்புமால்—இத்தரையில்
சந்தேக காரியங்கள் சான்றோர் நினைத்தபடி
அந்த முடன்முடிவ தால்.

துஷ்யந்தன் :— (பக்கம் 12, வரி 20.)

(வெண்பா)

(9) எவ்வெப்பக் கத்தி லிருந்துவந்து வண்டுவிழும்
அவ்வப்பக் கத்திலிவ ளச்சத்தால்—தெவ்வெனவே
தன்புருவ வில்வளைத்துத் தாவில் விழியம்பு
முன்புருவ நோக்கு முனிந்து.

துஷ்யந்தன் :— (பக்கம் 12, வரி 20.)

(வெண்பா)

(10) அன்பி ரஸப்பழக்கத் தார்ந்தநண்பர் துய்க்கின்ற
இன்ப ரஸப்பழக்கம் இல்லையிவட்—கென்பதனுல்
ஆசைதனை முன்காட்டி அங்கயற்க ணூட்டிப்பின்
மோசமிவள் கற்பாள் முயன்று.

துஷ்யந்தன் :— (பக்கம் 12, வரி 20.)

(அகவல்)

(11) என்னமா தவமீ தென்னமா தவமோ
பன்னு சுகானு பவஞ்செய் மதுகரா
என்னமா தவநீ யியற்றினை யாமால்
நன்னுத லிவளுநீனை நாடிக் கடைக்கணுல்
பார்த்ததும் பாரா ததுவுமா யிருந்து
பயந்து நடுங்குறாஉம் பான்மைய ளாயினும்
அடிக்கடி யிவளை யன்புடன் தொட்டுப்
பரம ரஸியம் பகர்பவன் போல
இவள்செவி தன்னி லினிய ரீங்காரம்
செய்து திகழ்வை தேனுணும் வண்டே!

(அதா அன்று)

தனது கரங்களால் தடுத்தும் இவள்தன்
இன்ப மூறு மிதழமு துண்பாய்

(அதனுல்)

என்னமா தவமீ தென்னமா தவமோ
பன்னு சுகானு பவஞ்செய் மதுகரா!
என்னமா தவநீ யியற்றினை யாமால்

(நாங்கள்)

இங்கிவள் வரலா றின்னதென் றுணர
முயன்றன மதனுல் மோசமுற்
றேங்கி யிருந்திங் கிடருற் றேமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 13, வரி 15.)

(அ க வ ல்)

(12) புருகுல மன்னன் பொல்லா தவரை
அடக்கி அவனியை ஆளுமிந் நாளில்
ஆசிரமப் பெண்களை மாசிரமம்
செய்யுந் துஷ்டப் பையன் யாரடா* ?

துஷ்யந்தன் :— (பக்கம் 16, வரி 17.)

(க ண் ணி)

(13) மானிடப்பெண் பெற்ற மகட்கிவ் வழகேது
மாநிலத்தி னின்றல்ல மின்னல் வருவதுவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 17, வரி 4.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(14) காதற் பெருக்கைக் கழிக்கத் தகுமிம்
மாதவ நெறியில் மணஞ்செயு மட்டுமே
நிற்பதோ அன்றியிந் நெறிவிடா தென்றும்
இவ்வித மாகவே இங்குள மான்களின்
கண்களுந் தனது கண்களுஞ் சமமாய்
இருப்பதால் இவைகளோ டிணைபிரி யாமல்
இருந்துவாழ் வதுவோ இளையா ளிவளே.

துஷ்யந்தன் :— (பக்கம் 17, வரி 14.)

(அ க வ ல்)

(15) உனதுசந் தேகம் ஒழிந்தது தீண்டா
நெருப்பென நினைந்தது விருப்புறு
விலையிலா மணியாய் விளங்குகின் றதுவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 17, வரி 28.)

(அ க வ ல்)

(16) காதலன் ஒருவற்குச் செய்கை கருத்தொடு
பொருந்தா ; துறவியின் அருந்தவ மகளைத்
தொடரவெண் ணினவென் சுத்த வொழுக்க
நெறிதடுத் தென்னை நிறுத்தின படியால்

---

* ஆசிரியப்பா, ஏகார ஈறுபெறவேண்டுமென்னும் எண்ணமுடையார், நாடகவியல்பைநோக்கி இதனை ஒப்புக. இப்படியே வருந்தோறுங்கொள்க.

இருந்த இடத்தில் அசையா திருந்தேன்
எனினும் அவள்பின் ஏகி
மீண்டவ ளாகி விளங்குகின் றேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 18, வரி 12.)

(அ க வ ல்)

(17) தண்ணீர்க் குடத்தைத் தாங்கின படியால்
தோள்களும் சோர்ந்தன தூயநற் கரங்கள்
செக்கச் செவேலெனச் சிவந்திருக் கின்றன
இன்னமும் பெருமூச் செறிகின் றதனால்
இவளது மார்பகம் ஏறியும் இறங்கியும்
அசைகின் றதுமுகத் தரும்பிய வியர்வைத்
துளிக ளிவள்செவி தொடுத்த சிரீஷ
மாமலர் விழாவகை தாமிருந் துளவால்
கூந்தற் கட்டுக் குலைந்தவிழ்ந் ததனால்
பிரிந்துள வதனைப் பரிந்துதன் கையால்
சேர்த்துப் பிடித்திருக் கின்றனள்
ஆகையால் அவள்கடன் யான்தரு வேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 19, வரி 9.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(18) நான்பேசுங் காலத்தி லிவள்கலந்து பேசாமல்
நண்ணு மேனும்
நான்பேசும் பேச்சுகளைச் செவிகொடுத்துக் கேட்டுநனி
நயக்கின் றாளே
நான்பார்க்கும் போதென்ற னெதிரிலே நிற்பதற்கு
நாடா ளேனும்
தான்பார்க்கும் பார்வைதனக் கென்னையன்றி வேறுபொருள்
இல்லை தானே.

தபோவனவாசிகள் :— (பக்கம் 19, வரி 16)

(அ க வ ல்)

(19) பாரீர் குதிரைக் குளம்படிப் பட்ட
புழுதி மாலை வெயிலிற் பொருந்தி

வெட்டுக் கிளிகளின் மட்டிலாத் தொகுதிபோல்
ஈர மரவுரி சேரத் தொடுத்த
தபோவன மரக்கிளை களின்மேல் தங்குவ

(அன்றியும்)

அரச னூருந் தேரைக் கண்டு
வெருண்டதோ ரானை வேகமாய் நமது
தவங்க ளெல்லாத் தும் அவங்க ளாக்கவும்
வழியினில் வாழும் மான்கணம் வெருளவும்
முற்றடுத் தனத்தால் முறித்த மரக்கிளை
மருப்பி லழுந்தப் பொருத்திக் கொண்டும்
கொடிகளின் தொகுதி கோத்தசங் கிலிபோல்
கால்களிற் சுற்றிக் கழலா திருக்கவும்
தபோவனந் தன்னில் நுழைய
வருவதை அனைவரும் வந்து பாரீர்.

துஷ்யந்தன் :— (பக்கம் 20, வரி 19.)

(தரவுகொச்சககலிப்பா)

(20) முன்செல்ல எனதுடலம் முடுகுகின்ற தென்றாலும்
பின்சென்று மனமதனிற் பிரிந்திருந்து வேறாகும்
முன்செல்லுங் கொடிமரத்தின் முடியிலுள்ள பட்டாடை
பின்சென்று காற்றெதிரிற் பிறங்குகின்ற வாறேபோல்.

இரண்டாம் அங்கம்

துஷ்யந்தன் :— (பக்கம் 22, வரி 25.)

(கலிவெண்பா)

(1) என்னாசை மின்னாள் எனக்குக் கிடைக்கரியாள்
என்றாலுந் தேறி யிருப்பேனான்—அன்றவளென்

கண்முன்செய் காதற் குறிப்புணர்ந்தேன் ஆகலினப்
பெண்மனதைத் தேரும் பிரியமுளேன்—நண்ணரிய

காதற் பலனின்னும் கைகூடா விட்டாலும்
காதற் பெருக்கிரண்டு காதலர்க்கும்—மோதுவதால்

அன்பு மிகப்பெருகி ஆசை வளர்ந்ததனால்
இன்பம் பயக்கும் இசைந்து.

(புன்சிரிப்புடன்)

தன்னுணர்ச்சி போலவே தன்காதலியென்னும் [ணர்ச்சி
மின்னுணர்ச்சி யென்றெண்ணும் மேன்மையினால்—கொன்னு

மாறி யிருக்கின்ற மத்தனே ஆகின்றான்
மீறி விளங்குமொரு காதலன்றான்—தேறியவள்

என்னைப்பா ராமல்வே றெங்கேயோ பார்த்தாலும்
நன்னயமாய்ப் பார்த்தாள் நறுங்குழலாள்—தன்னுடைய

உள்ளப்பூ ரிப்பால் உடலெல்லாம் பூரித்து
மெள்ள நடந்தாள் விளங்கிழையாள்—உள்ளபடி

போகாதே நீயென்று போய்மறித்த தோழியரை
வாகாய்ச் சினந்துரைத்தாள் வாள்விழியாள்—ஆஹா

இவையாவு மன்னாள் எனக்காகச் செய்த
கவையெனவே யெண்ணுகின்றேன் காதற்—சுவைவிரும்புங்

காதலன்தன் காதலியின் காரியங்கள் தன்பொருட்டென்
றாதரவா யெண்ணுமமர்ந்து.

துஷ்யந்தன் :— (பக்கம் 24, வரி 5.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(2) என்னுயிர்நா யகியுடனே யிருந்துவிளை யாடுகின்ற
இந்த மான்கள்
என்னுயிர்நா யகிதனக்குப் பார்வைகற்றுக் கொடுக்கின்ற
இயல்பே பூண்டு
பொன்னுடைய வுருக்கேபோல் மேனியழ குடையனவாய்ப்
பொலியு மாற்றால்
என்னுடைய வில்லிலம்பு தொடுத்தபின்னும் எய்யாமல்
இருக்கின் றேனே.

சேனாபதி :— (பக்கம் 25, வரி 6.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(3) மலைகளில் திரியும் மாதங்கம் போல
மன்னவற் குடலம் வன்மைபெற் றுளதால்
(அதனிற்)
கையு மார்பும் கார்முக நாணை
இடைவிடா திழுத்தலால் இறுகித் திகழ்வன
(அதுதான்)
சூரிய வெம்மையின் சுறுக்கைப் பொறுத்தும்
வியர்வையின் மிகுதியால் அயர்வற் றிருந்தும்
இளைத்து விளங்கு மெனினும் உண்மையில்
அழுந்தி வன்மையாய் அழகுபெற் றுளதே.

சேனாபதி :— (பக்கம் 25, வரி 22.)

(அ க வ ல்)

(4) கெட்டநீ ரெல்லாம் திட்டமாய் வடிந்து
தேகம் சிறுத்துத் தெளிவாய்ச் சுளுவாய்
இயங்குதற் கிசைவாய் வயங்க லாலும்
காட்டு மிருகங் களின்சினம் அச்சக்
குறிப்பை யுணர்ந்து கொள்ளப் பழகும்
தன்மை யாலும் தவறாக் குறிபார்த்
தம்பை யெய்யும் அதிசயப் பழக்கம்
செய்த லாலும் வேட்டையே சிறந்ததாம்

இதனைக் கெட்டதென் றிகழும் வீணர்
வீணரே யாருக விளையாட்
டிதனின் மிக்க தில்லையென் பேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 26, வரி 6.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(5) இன்று மாத்திரம் எருமைக ளெல்லாம்
இங்குள குட்டையில் இறங்கித் தண்ணீர்
கலக்கிக் கொண்டு களிப்புடன் வாழ்க
மான்குல மெல்லாம் மந்தை மந்தையாய்
மரங்களின் நிழல்களில் வாய்களை மென்று
வாழ்க வனத்தில் வராக மெல்லாம்
கோரைக் கிழங்கின் வேரைப் பேர்த்து
விளங்குக என்கையில் வில்லும் அதன்றன்
நாணியாற் கட்டி நலியா திருந்து
சிரமந் தவிர்ந்து செழித்துவா ழியவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 26, வரி 16.)

(வெண்பா)

(6) தொடுவதற்குத் தண்ணென்னும் சூரியகாந் தக்கல்
கொடுநெருப்பைச் சூரியன்முன் கொட்டும்—கடுமைபோல்
இந்தத் துறவியர்சா துக்களெனி னுங்கோபம்
வந்தக்கால் சாபமிடு வார்.

துஷ்யந்தன் :— (பக்கம் 27, வரி 19 & 22.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(7) புருவமி சத்துப் புரவலர் மனங்கள்
தகாத பொருள்களைத் தாம்விரும் பாவாம்
மருவார் மல்லிகை மலரதன் கொடியைவிட்
டெருக்கில் விழுந்திருக் கின்ற விதம்போல்
மேனகை யென்னும் தேவர்தம் மெல்லியல்
ஈன்றன ளிவளை இரக்க மின்றித்
தனியாய் விட்டுத் தான்சென் றபின்னர்
முனிவர் கண்டெடுத் தினிமையாய் வளர்த்தார்,

துஷ்யந்தன் :— (பக்கம் 28, வரி 1.)

(கண்ணி)

(8) கண்டு மொழிக்கன்னி கட்டழகை நீயொருகாற்
கண்டனையே யாயிற் கழறுவையோ இம்மொழியே.

துஷ்யந்தன் :— (பக்கம் 28, வரி 6.)

(நிரையசைக் கட்டளைக்கலித்துறை)

(9) படத்தி லெழுதிய பின்ன ருயிர்வரப் பண்ணினரோ
இடத்திற் பெரிய வுலகினி னல்ல எழில்களெல்லாம்
திடத்திற் றிரட்டியொன் றாக்கிநன் றாச்சிருஷ் டித்தனரோ
மடத்தி லழகி மலரோன் படைப்பினி லொப்பிலளே.

துஷ்யந்தன் :— (பக்கம் 28, வரி 14.)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(10) யாராலும் நுகராத வனப்புடையா ளவளை
அன்றலர்ந்து முகராத அரியமலர் தனக்கும்
கூரான நகங்களினாற் கொய்யாத தளிர்க்கும்
குற்றமில்சீர் வயிரத்தால் குடையாத மணிக்கும்
ஆராத புதியநறுந் தேனுக்கும் சரியாய் [தோன்றும்
அறைந்திடலாம் அருந்தவங்கள் அனைத்துமொன்றாய்த்
சீராரும் அவளையனு பவிக்கவெவன் தன்னை
திருநெடுமால் மகன்படைத்துச் சிறந்திருக்கின் றனனோ.

துஷ்யந்தன் :— (பக்கம் 28, வரி 30.)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(11) மின்னிடத்திற் சாயலையும் பொன்னிடத்தில் மேனியையும்
பொருந்தியொளிர் மேன்மை யுற்றாள்
என்னிடத்திற் செலுத்துகின்ற தனதுகள்ளப் பார்வையையும்
என்னையெதிர் கண்ட போது
தன்னிடத்திற் சிரிப்பையுந்தான் வேறெதையோ பார்த்ததுவும்
சிரித்ததுவு மாக மாற்றி
என்னிடத்தி லிச்சையவள் முழுவதுங்காட் டவுமில்லை
மறைக்கவுமங் கில்லை தானே.

துஷ்யந்தன் :— (பக்கம் 29, வரி 9.)

(அகவல்)

(12) சென்றாள் சிறிது தூரம் நின்றாள்
தருப்பைப் புல்நுனி தனது காலில்
குத்திற் றென்றாள் முத்தவெண் ணகையாள்
மாவுரி செடிகளின் கிளைகளின் மாட்டிக்
கொள்ளா திருந்தும் கொண்டது போலப்
பாவனை காட்டியென் பக்கமாத் திரும்பி
அதனை விடுவிப் பதுபோல்
என்னைப் பார்த்தனள் ஏந்திழை தானே.

கௌதமன் :— (பக்கம் 30, வரி 20.)

(அகவல்)

(13) அச்ச மின்றி அனைவரும் வந்து
பொச்சமி லின்பம் பொருந்த விளங்கும்
ஆசிர மங்களில் அருந்தவ முனிவர்
வாழ்வது போல மன்பதை தம்மை
மகிழ்ச்சியிற் பொருத்தும் மனையற மதனில்
நிலவுவ ரிந்த நீண்முடி வேந்தர்
(அதாஅன்று)
அனுதின முனிவ ரருந்தவந் தன்னைப்
போற்றி வாழும் ஏற்றம் போல
வேந்த ரிவர்குண சாந்தராய் மன்பதை
தம்மை அளிக்கும் சான்றாண் மையினால்
புண்ணிய மீட்டிக் கண்ணிய மெய்துவர்
(அதாஅன்று)
இந்த்ரிய நீக்கம் எனும்பொருள் படூஉம்
இருடி யென்னும் இன்மொழி யதனை
ஆகா யத்தில் அமர்ந்தொளிர் சாரணர்
பாடிச் செல்லும் பான்மை போல
இந்த்ரிய நீக்கத் தியல்புடை மையினால்
இராஜ விருடி யெனுமிவர் பெயரை

இன்னமும் அவர்கள் நன்னய மாகப்
பாடிக் கொண்டே படர்குவர்
விண்ணி லென்றும் விளங்குதற் பொருட்டே.

தாண்டாயனன் :— (பக்கம் 31, வரி 8.)

(அகவல்)

(14) தேவா ஸுரர்கள் ஓவா தமர்செய்
தருணங் களிலெலாம் தைத்தியர் தம்மை
வெறுத்து வாழும் விண்ணுல கரிவையர்
தமாது தலைவனாச் சால்புடை யிந்திரன்
ஏந்து வச்சிரா யுதமும் இந்த
வேந்தர் வளைக்கும் வில்லும் வெற்றி
பெறுக வென்று பிரார்த்திப் பதுவே
வழக்க மாகி வருவதா லீங்கிவர்
நத்தக மாகும் வித்தகக் கோட்டை
வாசலின் தாழ்ப்பாள் வயங்கல் போல
நீண்டு பருத்து நிலைத்து விளங்கும்
தோள்களால் நான்கு சமுத்திரஞ் சூழ்ந்த
உலக மனைத்தும் ஒருவரே யாகிக்
காத்தளிக் கின்ற காரியம்
வியப்பல வென்று விளம்ப லாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 34, வரி 17.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(15) எமது நிலைமையின் ஏற்ற மெங்கே
காட்டு மான்களின் கூட்டுற வதனால்
காதலென் பதன்றன் கருத்தினை அறியாக்
கன்னிகை யெங்கே உன்னுட னுரைத்த
விளையாட் டுரைகளை வினையாக் காதே.

மூன்றும் அங்கம்

துஷ்யந்தன் :— (பக்கம் 36, வரி 12.)

(அகவல்)

(1) முனிவர் தவவலி முழுதுநா னறிவேன்
தன்மனம் போலத் தைய லவளும்
செய்ய முடியா தென்பதும் தெரிவேன்
ஆயினும் அவளிடத் தமர்ந்த வென்மனந்
தன்னை மீட்குஞ் சக்தி
இல்லா தவனு யிரங்குகின் றேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 36, வரி 16.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(2) காம தேவரே! கலங்கும் ஏழைமேல்
கருணை செய்திலீர் கருப்பு வில்லிரே
மாம லர்க்கணை மருவு கின்றநீர்
கொடுமை செய்கிற கொள்கை யென்கொலோ.

துஷ்யந்தன் :— (பக்கம் 36, வரி 19.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(3) எரிந்துகொண்டே சமுத்திரத்தில் என்றுமுள்ள குதிரைமுக
எரியே போல
எரிந்துகொண்டே யிருக்கின்ற சிவனுடைய கோபத்தின்
எரிசேர்ந் தொன்றாய்
எரிந்துகொண்டே கொழுந்துவிட்டு மாறாமல் உம்மிடத்தில்
இருப்ப தன்றி
எரிந்துநீ ராயிருந்தால் எப்படிநீர் எரித்திடுவீர்
என்னைத் தானே.

துஷ்யந்தன் :— (பக்கம் 36, வரி 24.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(4) உமதுகணை யனைத்துமண மலர்களென்றும் சந்திரன்றன்
கிரண மெல்லாம்

தமதுமன மகிழ்வடையக் குளிர்ந்தவென்றும் உலகோர்பொய்
சாற்று கின்றார்
எமதுடலிற் றனதுகுளிர் கிரணத்தால் சந்திரன்தீ
இறைக்கின் றனீர்
உமதுமலர்க் கணைகளைத்திண் வச்சிரா யுதம்போல
உதைக்கின் றீரே.

துஷ்யந்தன் :— (பக்கம் 37, வரி 22.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(5) எத்தனை இன்பமாய்க் காற்றடிக் கின்றது!
தாமரை வாசனை தன்னொடு கலந்து
மாலினி நீர்த்துளி மருவிய காற்று
காம தேவர் கருணை யின்றி
எரிக்கு மென்றன் அங்கங் குளிரத்
தழுவி மகிழுந் தன்மைய தாமால்.

துஷ்யந்தன் :— (பக்கம் 38, வரி 2.)

(அகவல்)

(6) கண்கள் பெற்ற பலனைக் கண்டேன்
என்னுயிர்க் காதலி இதோ இருக்கின்றாள்
பளிங்குக் கல்மேல் படுத்திருக் கின்றாள்
ஆய்ந்தபூ மெத்தைமேற் சாய்ந்திருக் கின்றாள்
அனசூ யையென்பவள் அருகிருக் கின்றாள்
பிரியம் வதையும் பிரியமாய்ப் பேசி
உபசா ரஞ்செய் துடனிருக் கின்றாள்
இவர்கள் பேசும் இரகசியம்
இன்னதென் றுணர இங்கிருப் பேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 38, வரி 22.)

(அகவல்)

(7) மார்பினில் வெட்டிவேர் கட்டிவைத் திருந்தும்
தாமரைத் தண்டின் கங்கண மிரண்டும்
துவண்டு தொங்கிக் கொண்டிருந் தும்மிவள்
மேனி யழகு மிகுந்திருக் கின்றாள்

வேனிற் காலத்து வெப்பமும் விரகமும்
மங்கையர் தம்மை வருத்துந் தன்மையில்
ஒன்றுக் கொன்றுநன் ருெத்துள வேனும்
வேனிற் காலத்து வெப்ப மாயின்
இளையா ளிவளிங் கிளையா ளித்தனை
அழகுடன் விளங்காள் அஞ்சுக மொழியாள்;
ஆதலால், இல்லை, இல்லை ;
காதலே இவளைக் கலக்குகின் றதுவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 39, வரி 27.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(8) உலர்ந்தன கன்னம் தளர்ந்தன மார்பு
சூம்பின தோள்கள் சுருங்கின மருங்குல்
தேய்ந்தது மேனி நிறமுந் திரிந்து
வெள்ளை வெளேலென வெளுத்திருப் பதனுல்
கன்னிகை யிவளைக் கண்ட வெனக்கு
முதிர்ந்த இலைகள் உதிர்ந்திளங் காற்றில்
துளிர்க்கு மல்லிகைத் தூய்மலர்க் கொடியைக்
கண்டது போலக் கலக்கமும் மகிழ்ச்சியும்
கலந்து தோன்றுங் கருத்தினி லொருங்கே.

துஷ்யந்தன் :— (பக்கம் 40, வரி 21.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(9) நீருண்ட மேகத்தால் கறுப்புண்ட கடைக்கோடை
நீணி லத்தில்
வேருண்ட வெம்மைக்கும் தண்மைக்கும் வித்தெனவே
விளங்கு மாறு
சீருண்ட காமநோய் எனக்குண்டா யிருந்ததற்கும்
திரும்பி யந்தக்
காருண்ட நோய்தணிந்து போனதற்கும் மன்மதன்கா
ரணனு மன்றே,

துஷ்யந்தன்—" இந்த இளங்கொடியை, எந்நாளில் எங்கே மணந்தேனோ, இல்லையோ எனக்கு ஞாபகமில்லை."

(75-ஆம் பக்கம் பார்க்க.)

துஷ்யந்தன் :— (பக்கம் 41, வரி 26.)

(அகவல்)

(10) *தூக்க மின்றி ஏக்கத் தாலென்*
கொடுங்கையிற் பொருந்திய நெடுங்கண் ணிரண்டினும்
உஷ்ணக் கண்ணீர் ஒழுகுவ தாலே
கற்க ளிழைத்தவென் கையிற் கடகம்
கறுத்தது வாடிச் சிறுத்தன கைகள்
ஆதலால் அந்தக் கடகந் தளர்ந்து
மணிக்கட் டதனில் வந்து வந்து
விழும்போ தெல்லாம் வில்லின் நாணி
உராய்ந்த முழங்கைத் தழும்பையுங் கடந்து
நண்ணும் அதனை நிண்ணய மாகத்
தள்ளித் தள்ளிமுன் தங்கிய
இடத்தி விழுத்து விடுகின் றேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 42, வரி 18.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(11) *அச்ச முனக்கேன் அன்புள மாதே*
எவனுனை மதியா திருப்பா னென்றுநீ
எண்ணுகின் றனையோ அவனிதோ நின்று
கொண்டுன் சேர்க்கை யதனைக் கோரிக்
காத்திருக் கின்றனன் கவலை யுனக்கேன்
உலகில்சீ தேவியை ஒருவன் அடைய
விரும்பின னாயின் அருந்திரு வவள்தான்
கிடைப்பினுங் கிடைப்பாள் கிடைக்காமல் அவனை
விட்டுப் போகினும் போவாள் விளங்குமத்
திருவே விரும்பி ஒருவனைச் சேர
எண்ணுவ ளாயின் எங்ஙனம் அவட்கவன்
அகப்படா திருப்பான் அறைகு வாயே.

துஷ்யந்தன் :— (பக்கம் 43, வரி 1.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(12) கண்கொட் டாமலென் காதலி தன்னை
இப்போது நான்காண் பதுவே ஞாயம்
இவள்தன் புருவ மதனைமே லேறத்
தூக்கிக் கொண்டு தொடுக்கும் கவிக்குத்
தகுந்த பதங்களைத் தன்மனத் தெண்ணும்
போதிவள் கன்ன மயிர்பொடிக் கின்றன
இதனைக் கண்டுநான் இவளுக் கென்மேல்
இருக்கும் ஆசை எண்ணில தென்றே
விளக்கமா யறிந்து களிக்கின் றேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 44, வரி 1.)

(அகவல்)

(13) எழுந்திருக் காதே எழுந்திருக் காதே
எனது கண்மணீ எழுந்திருக் காதே
படுக்கையிற் பரப்பிய புஷ்பங்க ளெல்லாம்
உனது தேகத்தில் ஒட்டிக் கொண்டன
நீதுணிந் திருக்கும் நீண்டதா மரைத்தாள்
உனது தேகத்தின் உஷ்ணத் தாலே
வாடி வதங்கி வாசனை தருவன
இப்படிப் பட்ட இருப்பி லுள்ள
உனது தேகத்தை ஒடுக்கி யெழுந்துநீ
எனக்குப சாரஞ் செய்வது
தகுதி யல்ல மிகுதி யாமே.

சகுந்தலை :— (பக்கம் 44, வரி 29.)

(அகவல்)

(14) அரண்மனை மடவார் தம்மை அகன்றுவந்
தநேகநா ளானதால் அவர்களைக் காணும்
ஆசை மிகுந்த அரசர்
இவரையிப் படிநீ நிறுத்த லாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 44, வரி 32.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(15) சினக்கதிர் வேறகண் சிற்றிடைத் திருவே
எனதுநெஞ் சகத்தில் இடைவிடா திருக்கும்
இன்பக் கொடியே இந்தஎன் னெஞ்சம்
இன்னொரு பெண்கொடிக் கிடந்தரா தென்பதைத்
தேறு தொருநீ வேறு நினைப்பையேல்
காம னம்பாற் கலங்கு மென்றன்
வருத்தம் பெருத்துக் கருத்தழி வேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 45, வரி 26.)

(அகவல்)

(16) வருந்துவ தேனோ வருந்துவ தேனோ
உனக்குப சாரஞ் செய்பவன் உகந்துன்
அருகி லிருக்க அஞ்சுவ தேனோ
குளிர்காற் றெழுப்பியுன் குறைகளை நீக்கத்
தாமரை யிலைத்தண் விசிறியா லொருநான்
விசிற லாமோ, மெல்லிய வாழைத்
துடையுடை மாதே துடியிடை நங்காய்
அந்தா மரைநேர் உன்தா ளிரண்டையும்
என்தன் மடிமே லிருத்திக் கொண்டு
மனமுவந் தடியேன் மற்றவை தம்மை
வருட லாமோ வருத்தம்
அகன்றொரு நீயும் அகமகிழ் வுறவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 46, வரி 6.)

(அகவல்)

(17) புஷ்ப சயனத்தைப் புறத்தே விட்டுன்
மார்பினில் வைத்துக் கட்டிய தாமரை
இலைகளை யெல்லாம் எடுத்தெறிந் துனது
மிருது வான அவயவ மெலிய
இத்தனை உஷ்ண வெய்யிலில்
எப்படிச் செல்லுவை ஏந்திழை நீயே.

துஷ்யந்தன் :— (பக்கம் 46, வரி 25.)

(நேரசைக்கட்டளைக்கலித்துறை)

(18) அன்று மலர்ந்த மலரினிற் றேனை யமர்ந்துவண்டு
நன்று குடித்துத்தன் தாகத்தைத் தீர்க்கும் நலமதுபோல்
இன்றுன் பவள இதழமு தத்தை யுனக்கிதமாய்
நன்று குடித்தபி னென்விடு வேனுனை நன்னுதலே.

துஷ்யந்தன் :— (பக்கம் 47, வரி 29.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(19) எண்ணம் முடிவதற் கெத்தனை தடைகள்
வருகின் றனவழ கானகண் மயிர்கள்
நீண்ட மங்கைதன் னெடுங்கை விரல்களால்
உதட்டைத் தொட்டொரு வாறெனை நோக்கி
வேண்டா வேண்டா வென்று விளம்பி
அழகாய்த் தலையை அவசர மாகத்
தோட்புறந் திருப்பிக் காட்டின ளேனும்
மற்றதை நிமிர்த்தி மகிழ்ந்தநா னதனில்
முத்தங் கொடுக்க முடியா தவனாய்ப்
பித்தம் பிடித்தவன் போலா னேனே
எங்கே செல்லுவ னென்னசெய் வேனினி
இங்கே யெனது காதலி யிருந்து
நீங்கின பந்தலில் நிலைத்திருப் பேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 48, வரி 9.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(20) இதோ இருக்கின்ற தவள்மலர்ப் படுக்கை
கன்மே டையின்மேற் கலைந்து வதங்கி
அவளவ யவங்கள் அழுந்தின குறியுடன்
விளங்கு மந்த மெத்தையி னருகே
தாமரை யிலையில் தையல்தன் னகத்தால்
தீட்டின காதல் திருமுகம் வீழ்ந்து

கிடக்கின் றதந்தோ கிளிமொழி பூண்ட
தாமரைத் தாளின் கங்கணந் துவண்டு
நழுவி விழுந்து நண்ணு மிங்கே
இவைகளிற் செலுத்திய எனதிரு கண்களும்
வேறு பொருளைக் காண விரும்பா
எனதுயிர்க் காதலி யில்லா திருந்தும்
இந்தப் பைங்கொடிப் பந்தரை விட்டு
நீங்க முடியா தேங்குகின் றேனே.



நான்காம் அங்கம்

சிஷ்யன் :— (பக்கம் 52, வரி 30.)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(1) புல்லுக்கும் பூண்டுகட்கும் தலைவனாகியசோமன்
அஸ்தமிக்கும் போதே யிப்பால்
எல்லுக்கு நாயகனாஞ் சூரியனும் அருணனைமுன்
செலுத்திப்பின் எழும்புகின்றான்
செல்லுக்குள் மறைசுடர்கள் இவைக்கொன்றாய்த்
துக்கசுகம் சேர்ந்துள்ள தன்மை வான
வில்லுக்குள் நிறம்போல இன்பதுன்பம் நிலையல்ல
என்பதனை விளக்குமன்றே.

சிஷ்யன் :— (பக்கம் 53, வரி 5.)

(கொச்சகக்கலிப்பா)

(2) ஆதலால் மாந்தர் அவைகருதி நெஞ்சழிந்து
போதலால் இல்லைபலன் என்பதிது போதிக்கும்
காதலால் நீங்கும் கணவற்கு வாடுகின்ற
மாதலால் ஒப்பார் மதியிழந்த ஆம்பலையே.

சிஷ்யன் :— (பக்கம் 53, வரி 9.)

(கொச்சகக்கலிப்பா)

(3) மதிதணந்த ஆம்பல் வனப்பிழந்த ஓடை
துதிதணந்த தாயெனக்குத் தோற்றுவதை நோக்கிப்
பதிதணந்த மங்கை படுந்துயர மெல்லாம்
விதிதணந்த தாகி மெலிந்திருக்கு மென்பேன்.

பிரியம்வதை :— (பக்கம் 55, வரி 2.)

(நேரிசைவெண்பா)

(4) வன்னிமரம் தன்னிடத்தில் வன்னிவைத்து வாழ்வதுபோல்
மன்னுமுமது மகள்வயிற்றில்—*அந்தணகேள்
வையமெலாம் உய்யவைத்து வாழ்கின்றாள் துஷ்யந்தன்
துய்யமுளை தன்னைச் சுமந்து.

---

* அந்தணர்=கண்வர்.

இரண்டாம் ருஷிகுமாரன் :— (பக்கம் 57, வரி 25.)

(அ க வ ல்)

(5) வெண்ணிலாப் போல வெள்ளை வெளேலென
மங்கள மாக மகிழ்ந்தணிந் துகொள்ளத்
தக்கவெண் பட்டுத் தானை ஒன்றை
ஒருமாங் கக்கிக் கொடுத்த தொருமரம்
காலி லணிந்து கொள்ளும் கரிசிலாச்
செம்பஞ் சிக்குழம் பைச்சிந் தவிட்டது
மற்றுஞ் சிற்சில மரங்களி லிருந்து
தளிர்போல் அழகிய தமது கரங்களை
மணிக்கட் டுவரையில் நீட்டிக் காட்டிக்
காட்டுத் தெய்வப் பெண்களிவ்
வணிகளைத் தந்தனர் அகமகிழ்ந் தொருங்கே.

கண்வர் :— (பக்கம் 58, வரி 20.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(6) சகுந்தலைபோய் விடுவாளென் றெண்ணும்போ தேஎனது
தவத்தின் தூய்மை
மிகுந்தமனக் கலக்கமுற்றுக் கண்ணீரை அடக்குவதால்
மிடறு கம்மித்
தகுந்தபடி வார்த்தைசொல முடியாமற் பார்வைமங்கித்
தவிக்கின் றேனே
உகந்துபெற்ற பெண்பிரிந்தால் இல்லறத்தோன் படுந்துயரம்
உரைக்கற் பாற்றே.

கண்வர் :— (பக்கம் 59, வரி 8.)

(நேரிசை வெண்பா)

(7) எங்ஙனம்சர் மிஷ்டை யயாதியாற்போற் றப்பட்டாள்
எங்ஙனநற் பூருவனைப் பெற்றெடுத்தாள்—அங்ஙனமே
உன்கணவ னுன்னை உகக்க உலகளிக்கும்
மன்மகனை நீபெறுக வாழ்ந்து.

கண்வர் :— (பக்கம் 59, வரி 19.)

(அ க வ ல்)

(8) நாற்புறங் களினும் நண்ணிய தருப்பை
சூழ்ந்த யாக மேடைமேல் துன்னிய
குழிகளில் சமித்துடன் கூடி எரியும்
ஓம திரவிய உயர்வா சனையால்
பாவ மனைத்தும் பறக்கடிக் கின்ற
தக்ஷிணம் காருக பத்தியந் தாவில்
ஆகவ னீயம் ஆகிய
மூன்று தீயும் ஏன்றுனைக் காக்கவே.

கண்வர் :— (பக்கம், 59 வரி 30.)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(9) உங்களுக்கு நீர்வார்க்கு முன்புஜல பானம்
உகந்துசெயா மங்கையெவள் உம்மிடத்தில் அன்பால்
உங்களது தண்தளிரை அணிந்துகொளும் ஆசை
உடையவளா யிருந்துமெவள் ஒருகாலும் கொய்யாள்
உங்களது முதற்பூப்பின் காலத்தை வியந்தே
உற்சவங்கொண் டாடுகின்ற யுவதியெவ ளந்த
அங்கனையாஞ் சகுந்தலையை அன்புடனே வாழ்த்தி
அநுக்கிரகம் புரிந்தொருநீர் அனுப்புவதுங் கடனே.

கண்வர் :— (பக்கம் 60, வரி. 7)

(தரவுகொச்சகக்கலிப்பா)

(10) மயிலாலும் பொழிலாரும் மரங்களிலே நிரைந்திருந்து
குயிலார்வத் துடன்கூவல் குறைவறுசீர் மரங்களெலாம்
அயில்விழியாள் சகுந்தலையின் அன்புடைய சுற்றமவட்
கியல்விடைகள் தந்துவிட்டோ மென்பதுபோன் றிருந்ததுவே.

ஆகாசவாணி :— (பக்கம் 60, வரி 10.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(11) தாமரை மலர்ந்த தண்ணீர்த் தடாகம்
இவள்செலும் வழிகளெங் கெங்கும் பொருந்துக
நிழல்தரு மரங்கள் நெடுக இருந்து
வெயிலைத் தடுத்து விளங்குக தாமரை
மலர்களின் தாதுபோல் வழிகளிற் புழுதி
மிருதுவா யிருக்க மெல்லியல் செல்லும்
திசையை நோக்கித் தென்றற் காற்று
வீசுக இவட்கு மாசுக மிகவே.

பிரியம்வதை :— (பக்கம் 60, வரி 27.)

(அகவல்)

(12) தமது வாயிற் கௌவிய தருப்பையைத்
தாவு மான்கள் சார விடுமால்
ஆடு மயில்கள் அசைவற் றிருக்குமால்
பழுத்த இலைகளை விழுத்துஞ்
செடிகள் கண்ணீர் சிந்துவ போலுமால்.

கண்வர் :— (பக்கம் 61, வரி 14.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(13) உத்தம குணத்தால் உனக்குத் தகுந்த
வரனைப் பெற்றனை மற்றிது வென்றன்
மனப்படி முடிந்தது மல்லிகைக் கொடியும்
மாமரத் தோடு மருவிய ததனால்
உங்களைப் பற்றிய கவலை ஒழிந்தது
பயணம் புறப்படு பரிவுட னீயே.

கண்வர் :— (பக்கம் 62, வரி 4.)

(அகவல்)

(14) கூரிய தருப்பை நுனிகுத் தியதால்
எந்தமான் வாயிற் புண்ணை யிங்குதி
நெய்யைத் தடவி நீயாற் றினையோ,
சாமாக மென்னுந் தானி யத்தை

நின்கை நிரம்ப நேயமாய் எடுத்துநீ
எந்தமான் தன்னை இதமா யூட்டியுன்
பிள்ளையைப் போலப் பிரியமாய் வளர்த்தையோ
அந்த இளமான் ஆகிய இந்தமான்
உன்னடி விடாது தன்னடி
பின்னடி யாகப் பின்தொடர் கின்றதே.

கண்வர் :— (பக்கம் 62, வரி 16.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(15) கண்மணி அழாதே! கண்மணி அழாதே!
கண்மயிர் நீண்டநின் கண்களின் பார்வை
மங்குகின் றதனல் மகளே அழாதே!
கண்ணீர் பெருகிக் கண்களை மறைப்பதால்
பள்ளமு மேடுமா வுள்ள வழியினில்
அடிதடு மாறுவ அந்தோ வுனக்கே.

அனசூயை :— (பக்கம் 63, வரி 4.)

(அகவல்)

(16) தனது சேவலைத் தணந்த பேடையும்
விசன மிகுதியால் விடியா துநீண்ட
இரவைக் கடக்கும் இயல்பின தாமால்
பிரிவின் துயரம் பெரிதே யெனினும்
கூடுவோ மென்னுங் கோரிக்கை
பொருந்தி யிருப்பதால் பொறுக்கப் படுமே.

கண்வர் :— (பக்கம் 63, வரி 13.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(17) "எமதுதவ மேபொருளென் றெண்ணுதபோ தனர்நாங்கள் என்ப தையும்
உமதுகுல மேன்மையையும் உற்றவரா யெநாங்கள் உகந்து வாழும்
எமதிடத்தில் லாதபோ திவள்விரும்பித் தனதன்பை ஏத மின்றி
உமதிடத்தில் வைத்ததையும் உள்ளபடி யோசிப்பீர் நேசிப் பீரே."

கண்வர் :— (பக்கம் 63, வரி 17.)

(நேரிசை வெண்பா)

(18) "மாதர் பலரை மணந்துள்ளீ ராயினுமம்
மாதரினுந் தாழ்ந்திவள் மங்காமல்—ஆதரிப்பீர்
அப்பா லிவளதிஷ்டம் போலாக பெண்விட்டார்
அப்பாலும் சொல்லலா கா."

கண்வர் :— (பக்கம் 63, வரி 26.)

(கலிவெண்பா)

(19) பேரமேவு முன்றன் மணவாளன் வாழ்மனைக்கு
நீமேவி வாழ்ந்து நிலவுகையில்—நேமேவு
மூத்தோ ரிடத்தில் முகக்கோண லில்லாமல்
ஏத்தி யவரை யிறைஞ்சிடுவாய்—நேத்திரநேர்
உன்னருமைத் தோழியரை உள்ளன்பாய் நேசித்துப்
பொன்னருமை யாகநீ போற்றுதல்போல்—உன்னருமைச்
சக்களத்தி மாரைத் தழுவிநடப் பாயவர்க்கு
மிக்கநன்றி செய்து விளங்கிடுவாய்—தக்கபுகழ்
பூண்ட வுனது புருஷர் வெகுண்டாலும்
மீண்டு மவரை வெகுளாதே—யாண்டும்
பணிசெய்வோர் தங்கண்மேல் பட்சம் செலுத்தி
அணியாடை செல்வம் அழகில்—தணியாச்
செருக்குப் படையாதே சிக்கனமா வாழ்ந்து
சுருக்கிச் செலவைச் சுகிப்பாய்—உருக்கமுடன்
இங்ஙனம் வாழும் இயல்புடையார் கற்புடையார்
எங்ஙனம் வாழினு மென்னென்*றுல்—லங்கனஞ்செய்
மாதரார் தம்மை மாமரியுங் கோடரியின்
தீதுபுரி காம்பெனவே செப்பலாம்—சூதிலாள்
இந்தக் கவுதமியின் எண்ணத்தை நானறியேன்
சிந்தித் ததனைத் தெளி

* உல்லங்கனம் = அவமதிப்பு.

சகுந்தலை :— (பக்கம் 64, வரி 20.)

(அ க வ ல்)

(20) எங்ஙனம் உயிர்பிழைத் திருப்பேன் அடியேன்
மலய மலையின் சாரலி லிருந்து
வேருடன் களைந்த மெல்லிய சந்தனச்
சிறுசெடி போலச் சீரார் தந்தை
மடியிற் பிரிந்து மற்றொரு
தேசந் தன்னில் வாசஞ் செய்தே.

கண்வர் :— (பக்கம் 64, வரி 24.)

(அ க வ ல்)

(21) ஏனோ இப்படி அஞ்சு கின்றனை
உயர்குடிப் பிறந்த ஒருவன் மனைவிநீ
அவனுனை விரும்பி அரசகா ரியத்தில்
துணையெனக் கொள்வன் சுத்தமா முன்றன்
சித்த மதனில் திரும்பி யிருக்குமால்
கீழ்த்திசைச் சூரியன் கிளர்ந்தெழு வதுபோல்
நிந்தை யிலாத மைந்தன் ஒருவனைப்
பெற்று விளங்குவை சற்றும்
எனது பிரிவை எண்ணாய் நீயே.

கண்வர் :— (பக்கம் 65, வரி 18.)

(நிலமண்டில ஆசிரியப்பா)

(22) சாகரஞ் சூழ்ந்த தராபதி யாகிய
துஷ்யந் தனுக்குத் துணைவியாய் வாழ்ந்துநீ
நிந்தை யிலாத மைந்த னொருவனைப்
பெற்றுக் கொடுத்துப் பிரியமா யந்த
மைந்தன் தனக்கு மணவினை முடித்து
முடியைச் சூட்டி மூதுல காட்சியை
அவன்மேற் சுமத்தியுன் அன்பனும் நீயுமிவ்
வாசி ரமத்தை அடைவது நிஜமே.

கண்வர் :— (பக்கம் 66, வரி 3.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(23) ஆசிர மத்து வாச லதனில்
நிவேதன மாக நீயெடுத் திறைத்த
நீவா ரதானிய நீளமா முளைக்கக்
காணு மென்றன் கவலை வளரும்
அன்றி நீங்கா தாயினும் போய்வா
மங்கள மாக மகளே மகிழ்ந்தே.

கண்வர் :— (பக்கம் 66, வரி 18.)

(அகவல்)

ஆஇப் போதுநான் அகமகிழ் கின்றேன்
சகுந்தலை தன்னைத் தகுந்த கணவன்
மனைக்கனுப் பிவிட்டேன் மனமகிழ் கின்றேன்
ஆறுத லுற்றேன் தேறுதல் பெற்றேன்
மகளெந் நாளும் மற்றவர் பொருளே
இரவ லாக மற்றவ ரிடத்திற்
பெற்ற பொருளெனப் பேசவுந் தகுமே
அப்பொரு ளதனை அதற்குடை யவர்பாற்
செலுத்தி மகிழும் திறமே போலச்
சகுந்தலை தனையவள் தலைவ னிடத்திற்
செலுத்தின பின்னென் சிந்தை
தெளிந்து மகிழ்சிறந் திருக்கின் றேனே.

ஐந்தாம் அங்கம்

ஹம்ஸபதிகை :— (பக்கம் 67, வரி 16.)

(அம்மானை – மடக்கு – கலித்தாழிசை)

(1) மாமரப்பூந் தேனை மகிழ்ந்து குடித்தவண்டு
தாமரைப்பூந் தேனுக்குத் தாவுமே அம்மானை
தாமரைப்பூந் தேனுக்குத் தாவுமே யாயிடினும்
மாமரப்பூந் தேனை மறக்குமோ அம்மானை
மறக்குமது வுண்டமெனும் மாவிருப்பா லம்மானை.

துஷ்யந்தன் :— (பக்கம் 68, வரி 20.)

(குறள்வெண்பா)

(2) "நல்லிசையைக் கேட்பதனால் நற்பொருளைப் பார்ப்பதனால்
புல்லுமே பூர்வ வுணர்வு."

கஞ்சுகி :— (பக்கம் 69, வரி 6.)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(3) சூரியன்தேர்க் குதிரைகளை அவிழ்க்காமல் ஓய்வின்றிச்
செலுத்துகின்ற தொடர்பு போலப்
பாரிடத்திற் காற்றென்றும் ஓயாமல் வீசிக்கொண்
டிருக்கின்ற பான்மை போலப்
பாரிடத்தைச் சேஷன்தன் முடியிலென்றும் பன்னெடுநாள்
சுமந்துவரும் பான்மை போலப்
பாரிடத்தில் ஆறிலொரு கடமைகொள்ளும் பார்த்திபன்றன்
அதிகாரம் விளங்குந் தானே.

கஞ்சுகி :— (பக்கம் 69, வரி 13.)

(நேரிசை வெண்பா)

(4) மாந்தர் தமைப்பெற்ற மக்களைப்போல் பாலித்துத்
தாந்தம் இளைப்பகலத் தங்கினார்—வேந்தரிவர்
ஆனைகளை மேய அகற்றி இளைப்பாறும்
ஆனையரா சேபோல் அமர்ந்து.

துஷ்யந்தன் :— (பக்கம் 70, வரி 6.)

(நேரிசை வெண்பா)

(5) விரும்புபொரு ளைப்பெற்றால் வேட்கைமட்டுந் தீரும்
திரும்பியதைப் போற்றுதுன்பந் தீரா—பெரும்புகழ்சேர்
மன்ன னரசாட்சி மானுமே கைக்குடையைத்
துன்னுசுக துக்கந் தொடர்ந்து.

முதல்வைதாளிகன் :— (பக்கம் 70, வரி 13.)

(நேரிசை வெண்பா)

(6) தரந்தரமாய் மாந்தர் தமக்கின்பந் தேடி
நிரந்தரமாய் நின்சுகத்தை நேடாய்—மரந்தன்
தலையில் வெயில்சுமந்தும் தன்னிழலில் வந்தோர்
நிலையைக் குளிர்விக்கும் நின்று.

[அல்லது]

(நேரிசை வெண்பா)

நிரந்தகுண வான்கள் நினையார்தந் நோவை
விரைந்துபிறர் நோவிலக்கு வார்கள்—மரந்தன்
தலையில் வெயில்சுமந்தும் தன்னிழலில் வந்தோர்
நிலையைக் குளிர்விக்கும் நின்று.

இரண்டாம்வைதாளிகன் :— (பக்கம் 70, வரி 18.)

(ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா)

(7) துன்னு பெருஞ்செல்வம் தோன்றியுள்ள போதுமட்டும்
மன்னுங் கிளைகள் மருவி யிருப்பார்கள்
மன்பதைகள் உண்மைநெறி மாறினால் கண்டித்தும்
இன்னும் அவர்களுக்குள் எய்தும் வழக்கறுத்தும்
பன்னும் அவர்களைநீ பாலித்தும் வாழ்வதனால்
உன்னரிய அன்பின் உறவுநிலை உன்னரிதே.

துஷ்யந்தன் :— (பக்கம் 71, வரி 7.)

(அகவல்)

(8) இந்த இருஷிகள் தவத்திற் கென்ன
குறைநே ரிட்டதோ கொடுவினை யாளரில்
எவர்க ளேனும் தவவன விலங்குகள்
தமக்குக் கெடுதி தந்தனர் கொல்லோ

எனது தீவினைகளான் இருடியர் தவவனக்
கொடிகள் மலராக் குறையுற் றனவோ
இவ்வித மென்றன் இதயம்
பற்பல நினைத்துப் பரதவிக் கின்றதே.

சார்ங்கரவன் :— (*பக்கம்* 71, *வரி* 20.)

(அகவல்)

(9) *இந்த அரசர் சந்ததம் நன்னெறி*
தன்னின் விலகாத் தாவில் பெருந்தகை
இவரர சாட்சியில் எய்திய குடிகளில்
கீழ்க்குலத் தோரும் கெடுவழி செல்லார்
எனினும் மாந்தர் இல்லா இடத்தில்
இருந்து பழகிய எனக்கிம் மாந்தர்
நிறைந்த அரண்மனை நெருப்புச்
சூழ்ந்த வீடுபோல் தோன்றுகின் றதுவே.

சாரத்வதன் :— (*பக்கம்* 71, *வரி* 27.)

(அகவல்)

(10) *எண்ணெய் தேய்த்துக் குளித்தவன் எண்ணெய்*
தேய்த்துக் கொண்டினிக் குளிப்பவன் தன்னையும்
நல்வழிச் செல்பவன் அல்வழி யோனையும்
தூங்கி விழித்துக் கொண்டவன் தூங்குவோன்
தன்னையும் தனது மனம்போல் திரிவோன்
காவலில் வாழ்பவன் தன்னையுங் கண்டால்
எங்ஙனம் எண்ணுவார் அங்ஙனம் நானிச்
சிற்றின் பத்திற் றிளைத்துவாழ்
மாந்தரைக் கண்டு மதிக்கின் றேனே.

சார்ங்கரவன் :— (*பக்கம்* 72, *வரி* 14.)

(நேரிசை வெண்பா)

(11) *காய்த்த மரம்வளையும் கார்மேகம் நீர்கொண்டு*
சாய்த்த பளுவினால் தாழுமே—வாய்த்துள்ள
தஞ்செல்வத் தாற்சான்றோர் தாழ்வர் பிறர்நலத்தில்
நெஞ்சுடையா ரிந்நிலையர் நேர்ந்து.

துஷ்யந்தன் :— (பக்கம் 72, வரி 22.)

(அகவல்)

(12) பழுத்த இலைகளுக் கிடையில் துளிர்த்த
சிற்றிலை போல முற்றிலும் தன்னெழில்
தோன்றா நிலையிற் றுறவியர் நடுவில்
முக்கா டிட்டு முகத்தை மூடித்
தோன்று மிந்தத் துடியிடை
யாரோ எனநான் ஐயுறு வேனே.

துறவிகள் :— (பக்கம் 73, வரி 15.)

(நேரிசைவெண்பா)

(13) அலகி லுமதா தரவின்கீழ் வாழ்வோர்
இலகு தவந்தவ றெய்தா—உலகில்
தெருளும் ஒளிசேர் தினகரன் முன்னே
இருளும் தலையெடுக்கு மோ.

சார்ங்கரவன் :— (பக்கம் 73, வரி 28.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(14) உலகி லுள்ள உத்தமர்க் குள்ளே
உத்தம ராக உம்மை மதிப்பேன்
சகுந்தலை தானும் சற்குண மெல்லாம்
திரண்டுரு வெடுத்த தெய்வ மங்கை

(ஆதலால்)

ஒத்த குணமும் உயர்ந்த அழகும்
மனமுங் கொண்ட வதூவர ராகிய
உங்க ளிருவரை ஒன்றாய்க் கூட்டி
வைத்த நான்முகன் இத்தனை நாளாய்ப்
பெற்ற நிந்தை அற்றனன் அதனால்
கருவுயிர்க் கின்ற காலம் நெருங்கி
விளங்கு மிந்த மெல்லியல் தன்னை
தம்பதி சமேதராய்ச் செய்ய வேண்டிய
சாஸ்திர விதியிற் சடங்குகட் காகநீர்
ஏற்றுக் கொள்ள வேண்டுமிப் போதே,

கௌதமி :— (பக்கம் 74, வரி 6.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(15) அவசிய மில்லை ஆயினும் விரும்பி
நானும் சிலசொல நயக்கின் றேனே
(என்னெனில்)
கலியா ணத்தைக் கருதின நீரும்
பெண்ணைப் பெற்றோர் எண்ண முணர்ந்திலீர்
அவளுமப் படியே தனதுசுற் றத்தை
யோசிக் காமலே ஒப்புக் கொண்டனள்
(இப்படி)
உங்களுக் குள்ளே உள்ளம் ஒத்துத்
தனிமையில் நடந்த விஷயம் தன்னில்
உங்களுக் குள்ளே ஒவ்வொரு வர்க்கும்
மற்றவர் நடக்க வேண்டிய வகையை
இன்னதென் றுரைக்கநான் என்னறி வேனே.

சார்ங்கரவன் :— (பக்கம் 74, வரி 23.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(16) வாலையா மொருத்தி சீலமார் கற்பு
வாய்ந்தவ ளெனினும் மகிழ்நனைத் தணந்தே
உற்றார் சார்பைப் பெற்றுவாழ் வாளேல்
ஊரார் மதியார் சீரார் கணவன்
வெறுத்துத் தள்ளினும் பொறுத்துக் கொண்டே
அவளவ னிடத்தைவிட் டகலா திருந்து
வாழ்வது நலமென மதிப்ப ருறவோர்
இதைநீர் அறியா திருத்தல் வியப்பே.

துஷ்யந்தன் :— (பக்கம் 75, வரி 15.)

(ஆறடித்தரவுகொச்சகக்கலிப்பா)

(17) பொங்கும் அழகுடைய பொற்கொடிபோ லென்னெதிரே
இங்கு விளங்குமிந்த ஏந்திழையை எந்நாளில்
ஏங்கு மணந்தேனோ இல்லையோ நான்தெளியேன்

மங்கு மனந்துணிந்து கொள்ளுதற்கும் தள்ளுதற்கும்
தங்கு பனித்துளிகள் தாம்நிறைந்த மல்லிகையின்
துங்கமல ரைக்கண்ட †தும்பியைப்போ லானேனே.

சார்ங்கரவன் :— (பக்கம் 76, வரி 7.)

(அகவல்)

(18) உம்மாற் கற்பழிக் கப்பட் டவுத்தமி
ஆகிய தமதரு தவமகள் தன்னைக்
கண்டு தம்மனங் களித்தனர் முனிவர்
திருடின பொருளைக் கண்டு பிடித்தும்
(அதனை)
திருடி னவற்கே திருப்பிக் கொடுப்பது
போல வும்மைச் சீலமார் கற்பழித்
தவரெனச் செய்தனர் அவரை
இப்படி அவமதித் திருப்பது தகாதே.

துஷ்யந்தன் :— (பக்கம் 76, வரி 25.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(19) பாவம்! பாவம்!! பாவம்!!! அந்தோ
கரைபுரண் டோடிக் கடுகும் பெருநதி
தெண்ணீ ரெல்லாம் மண்ணீ ராக்கிக்
கரைமே லுள்ள மரங்களை வேரொடுந்
தள்ளு கின்ற தன்மைபோல் என்றன்
நிலையைக் கலக்கிக் குலநலந் தன்னையுங்
கெடுக்க எண்ணு கின்றனை நீயே.

துஷ்யந்தன் :— (பக்கம் 78, வரி 3.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(20) வயதில் முதிர்ந்த மாதவப் பெண்மணீ
பெண்ணிற் சூது பெரிதும் உண்மை
என்பது மனித இனத்திற் றுழ்ந்த
விலங்குகட் குள்ளும் விளங்கக் காணலாம்

† தும்பி=வண்டு.

ஆதலால் அறிவில் முதிர்ந்த மாந்தர்
எத்தனை முறைகள் ஏற்ற மான
சூதர் என்பது சொல்லவும் வேண்டுமோ
குயிற்பெடை தனது குஞ்சுகள் பறக்கும்
பருவம் அடையும் வரையில் மற்றப்
பக்ஷிக ளாலே ரக்ஷிக்கப் படும்படி
செய்யுந் தந்திரம் ஜெகத்பிர சித்தமே.

சகுந்தலை :— (பக்கம் 78, வரி 10.)

(நேரிசைவெண்பா)

(21) உமது குணத்தால் உலகை அளக்கும்
உமது முயற்சி ஒருவர்—தமக்கும்
அடுக்காது புல்மூடும் பாழ்ங்கிண றனீர்
தொடுத்தவறச் சட்டை சுமந்து.

துஷ்யந்தன் :— (பக்கம் 78, வரி 19.)

(அகவல்)

(22) மறதி யென்னும் மாய்கையிற் பட்டதால்
அன்பிரு வர்க்கு முன்புள தென்றே
ஒப்புக் கொள்ளா வொருவ னாகிய
என்னை நோக்கி யிவள்கரும் புருவம்
தன்னை நெளித்துத் தன்கண் செவத்தல்
மன்மதன் வில்லை வளைத்து
முறித்த தாமென மொழிய லாமே.

சகுந்தலை :— (பக்கம் 78, வரி 27.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(23) புருவமி சத்திற் பொருந்த வைத்த
நம்பிக் கையாலே நானிம் மன்னவர்
அடிநா வதனில் நஞ்சம் பொதிந்து
நுனிநா வதனில் இனிதாம் அமுதம்

காட்டிய மொழியிற் கட்டுப் பட்டிவர்
கையிற் சிக்கிக் கற்பிழந் தவளென
வையம் பழிக்கும் வசைபெற் றேனே.

சார்ங்கரவன் :— (பக்கம் 79, வரி 5.)

(கட்டளைக்கலிப்பா)

(24) மறைவி டத்திலே †சங்கமம் செய்பவர்
மனதி டத்திலெண் ணமற் புரியற்க
நிறைய கத்தை யெண்ணும லொருவரை
நேசஞ் செய்திடில் நாசம் வருவதால்
தறையி டத்திலெக் காரியந் தன்னையும்
சால எண்ணித் துணிவதே தக்கதாம்
அறைய கத்திலே ஆடி யதன்பின்னர்
அம்ப லத்தில் வருதல் சரதமே.

சார்ங்கரவன் :— (பக்கம் 79, வரி 14.)

(அகவல்)

(25) பிறந்தநாள் தொடங்கிச் சிறந்தவுத் தமியாக்
கறந்தபால் கறந்த படியே யாகக்
கவடென் பதுவே கனவினு முணரா
நங்கை மொழிகள் நம்பத் தகாதன

(ஆனால்)

மாற்றவர் தம்மை வஞ்சிப் பதுவே
கல்வி யாகக் கற்றுக் கொள்வோர்
உண்மை பேசற் குரியவர்
ஆமென நம்பல் ஆம்ஆம் ஆமே.

சாரத்வதன் :— (பக்கம் 79, வரி 28.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(26) இதோஇருக் கின்றாள் உமது மனைவி
கொள்ளினுங் கொள்ளுக தள்ளினுந் தள்ளுக
மனைவியர் மீது கணவருக் குள்ள
அதிகா ரத்தை அளவிட லாமே.

---

† சங்கமம்=சேர்க்கை.

சாரங்கரவன் :— (பக்கம் 80, வரி 12.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(27) அரசன் சொற்படி நீயவன் மனைவி
ஆகா யென்றால் அருந்தவ முனிவர்
ஆகிய உந்தை அகனமர்ந் துன்னை
எங்ஙனம் ஏற்றுக் கொள்ளுவர் தள்ளுவர்
குலத்தில் இழிந்த கோதையா யினையால்
(இன்னும்)
கற்பழி யாத காரிகை யென்பதே
உண்மை யாயின் உனது கணவன்
மனையில் அடிமை செய்தல் மாண்பாம்
ஆதலால் நில்லுநீ அனைவரும் செல்லுவோம்.

துஷ்யந்தன் :— (பக்கம் 80, வரி 20.)

(அகவல்)

(28) சந்திரன் குமுதம் தன்னையே மலர்த்தும்
சூரியற் கலர்வது தாமரை யொன்றே
தன்மனம் தன்வசப் பட்டவன்
பிறன்மனைப் புகாமை அறனென வாழ்வனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 80, வரி 30.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(29) நானே மறந்திருந் தாலு மிருக்கலாம்
பெய்வளை இவரே பொய்யுரைத் திருக்கலாம்
இந்தத் தீராச் சந்தே கத்தில்
மனையா ளாயின் நீக்குதல் மாண்போ
பிறன்மனை யாளெனின் அறன்விடுத் திவரைக்
கூடிக் குற்றங் கொள்ளுதல் மாண்போ
இரண்டி லொன்றெனக் கியம்பு வீரே.

துஷ்யந்தன் :— (பக்கம் 82, வரி 16.)

(அ க வ ல்)

(30) எனது மனைவியென் றிங்கே யெய்திய
முனிவர் மகளைத் தனிமையில் ஒருநான்
திருமணஞ் செய்த ஞாபகம் இன்றித்
தள்ளி விட்டது சத்திய மாயினும்
எனது நெஞ்சம் அதனால் இரங்கி
வாடு கின்றதை நாடிப் பார்க்கில்
விவாகம் செய்தது மெய்யெனக்
காட்டு கின்றது கவலை யறவே.

ஆறும் அங்கம்

பரபிருதிகே :— (பக்கம் 87, வரி 24.)

(அம்மானை-மடக்கு-கலித்தாழிசை)

(1) செம்மைவெண்மை பச்சைநிறஞ் சேர்ந்திருக்கு மாமலர்கள்
அம்ம வசந்தமங்கைக் காருயிர்கா ணம்மானை
அம்ம வசந்தமங்கைக் காருயிரே ஆமாகில்
இம்மகியில் மேனி யிருக்குமே அம்மானை
இளந்தளிர்மா மேனி யெனப்புகழ்வோம் அம்மானை.

பரபிருதிகே :— (பக்கம் 87, வரி 27.)

(அம்மானை-மடக்கு-கலித்தாழிசை)

(2) வண்டுகளின் கால்மிதிக்க வாய்நெகிழ்மா மொட்டனைத்தும்
கண்ட குயில்கள் களிகூரும் அம்மானை
கண்ட குயில்கள் களிகூரும் ஆமாகில்
கொண்ட குரலெடுத்துக் கூவுவதேன் அம்மானை
கூவுமதன் தூதனெனுங் கொள்கையினால் அம்மானை.

மதுகரிகே :— (பக்கம் 88, வரி 22.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(3) மாவின் மலரே மாவின் மலரே
கருப்புவில் லேந்திய காம தேவர்
கணவரைத் தணந்த காரிகை மார்களின்
இதயந் தன்னை இலக்குவைத் தெய்வதால்
ஐம்மலர்க் கணைகள் தம்மிற் சிறந்த
மாவின் மலரே மாவின் மலரே
உன்னை யவர்க்குநான் உகந்தளிப் பேனே.

கஞ்சுகி :— (பக்கம் 89, வரி 14.)

(அகவல்)

(4) வசந்த காலத்திற் பசந்த இலைகளால்
தம்மை அணியும் தருக்களும் அவைகளில்

வசிக்கும் பக்ஷி வகைகளுங் கூட
அரசராக் கிளைகட் கடங்கி யிருக்கையில்
உங்களுக் கொன்றுந் தெரியா தென்கிறீர்
அநேகநாள் முந்தியே அரும்பின மாமரம்
ஆயினும் பூந்தாள் அவைகளி லில்லை
குராமரா முகிழ்கள் கொண்டு விளங்கியும்
அலரா திருந்தலை அறியீ ரோநீர்
பனிநாள் சென்று நனிநா ளாகியும்
ஆண்குயில் பாடா தடங்கி யிருக்குமால்
காம தேவர் கருத்துத் திரிந்தார்
அம்புக் கூட்டைவிட் டப்பா லெடுத்த
அம்பை மீட்டும் அதனில்
வைத்துவிட் டாரென மதிக்கின் றேனே.

கஞ்சுகி :— (பக்கம் 90, வரி 20.)

(அகவல்)

(5) சுகத்தை வெறுப்பார் யோசனை சொல்கிற
மந்திரி மார்களைக் கண்டு பேச
அஞ்சுவார் அரச காரிய மதனைக்
கனவிலும் நினையார் கட்டிலின் மேலே
படுத்துப் புரளுவார் பகலிற் போல
இரவிலுந் தூக்கம் இல்லா தேங்குவார்
அந்தப் புரத்தில் அரிவையர் எவர்க்கும்
நன்னய மாக நடந்து கொள்ளும்
வழக்கம் போல இரண்டொரு வார்த்தை
அளவாய்ப் பேசுவார் அதிகம் பேசார்
அவர்கள் பேர்களை மாறி அழைப்பார்
சகுந்தலை யென்று தவறிச் சொல்லுவார்
சொன்ன போதுதாம் இன்னது செய்வதென்
றுணரா ராகி உள்ளம்
வெட்கி மயங்கி வீற்றிருப் பாரே.

கஞ்சுகி :— (பக்கம் 91, வரி 10.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(6) அழகா யிருப்ப தெப்படி யாயினும்
அழகு சிறந்தே விளங்கும் அரசர்
விசன மிருந்து விளங்கினுங் காண்பதற்
கினிமை யாகவே இருக்கின் றனரிவர்
நகைக ளனைத்தும் பகைக ளென்னப்
போட்டுக் கொள்ள வில்லை புஜத்திற்
கடகம் ஒன்றே காணப் படுமால்
பெருமூச் செறிவதால் பேச்சு மாறி
உதடுக ளிரண்டும் உலர்ந்து போயின
ஏக்க மிருந்து தூக்கமில் லாமையால்
கண்க ளிரண்டும் புண்களைப் போல
செவந்து போயின எனினும் சிறந்த
இயற்கை யழகு மாற வில்லை
வாடி மேனி வதங்கி யிருந்தும்
சாணையிற் கடைந்த சாதி மணிதான்
ஒளிமிகுந் திருக்கு மொழுங்கு போல
இவரும் விளங்கி யிருக்கின் றாரே.

துஷ்யந்தன் :— (பக்கம் 91, வரி 21.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(7) மான்விழிச் சகுந்தலை தான்மிக வருந்தி
எழுப்பின போதெலாம் எழுந்திருக் காமல்
உறங்கிக் கிடந்தவென் உள்ளமிப் போது
விழித்துக் கொண்டிருக் கின்றது வீணாய்ப்
பச்சாத் தாபப் படுதற் பொருட்டே.

துஷ்யந்தன் :— (பக்கம் 92, வரி 14.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(8) கண்ணுவர் மகள்மேல் நண்ணு மென்காதல்
உணர்ச்சி தன்னை இல்லா தொழித்த

மறதி யென்னு மாய இருளகன்று
என்மனம் நிர்மல மாகி யிருக்கும்
இந்தச் சமயத்தி லெடுத்துத் தொடுத்தனன்
மன்மதன் தனது மாம்பூக் கணையைக்
கருப்பு வல்லிற் †சுருப்புக் கயிற்றில்
என்னைக் குறிபார்த் திருக்கின் றனனே.

விதூஷகன் :— (பக்கம் 94, வரி 2.)

(குறள் வெண்பா)

(9) வாடார்சா துக்கள் மனத்துயரத் தான்மலைகள்
ஆடாவாங் காற்றி லசைந்து.

துஷ்யந்தன் :— (பக்கம் 94, வரி 6.)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(10) நானவளைச் சேர்த்துக்கொள் ளேனென்ற சொல்லை
நாடியவள் தனதுறவோர் தம்மோடு நயந்து
மானமுடன் போவதற்கு முயன்றனளப் போது
மன்னுமவள் தந்தைநிகர் மாணவனும் ஒருவன்
தானவளை வெருட்டியிங்கே தங்கியிரு வென்றான்
தன்கண்ணீர் பெருகவெனைத் தானுருட்டி யந்த
ஞானமுளாள் பார்த்துநின்ற பார்வையென தகத்தை
நச்சூட்டுஞ் சல்லியம்போ லின்னுநலி விக்கும்.

துஷ்யந்தன் :— (பக்கம் 95, வரி 1.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(11) கனவோ! இந்திர ஜாலக் கல்வியோ!
அறிவின் மயக்கமோ! அன்றி யென்றன்
நல்வினைப் பயனின் நாச காலமோ!
சென்றது சென்றது திரும்புவ தில்லை
என்றன் எண்ணம் எண்ணிறந் தேறி
உச்ச மாகி ஓங்குகின் றதுவே.

---

† சுரும்பு + கயிறு = வண்டுகளாகிய கயிறு.

துஷ்யந்தன் :— (பக்கம் 95, வரி 9.)

(தரவுகொச்சகக்கலிப்பா)

(12) மோதிரமே மோதிரமே மொய்குழலாள் மெல்விரலில்
நீதிரமே அமர்ந்திருந்து நிலைபெயர்ந்த விதநோக்கில்
மாதிரமே யில்லாத மனமுடையேன் செய்தவமும்
நீதிரமே செய்தவமும் நேர்ந்துபய னிலவாமால்.

துஷ்யந்தன் :— (பக்கம் 95, வரி 26.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(13) " இந்தமோ திரத்தில் அந்தமாய்ச் செதுக்கிய
என்தன் பெயரின் எழுத்துக் களில்நீ
ஒவ்வொரு நாளும் ஒவ்வோ ரெழுத்தாய்க்
கடைசி யெழுத்தைக் கணக்கிடு முன்னே
ஆளை அனுப்பி அழைத்துக் கொண்டுபோய்
என்தன் அந்தப் புரத்தில் உன்னைச்
சேர்த்துக் கொள்வேன் தேன்மொழி மாதே"
என்றனன் பொல்லாக் கன்மனப் பாவிநான்
பித்தனு மாவேன் சத்திய மிதுவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 96, வரி 19.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(14) மெல்லிய அழகிய விரல்கள் பொருந்திய
கையை விட்டுக் கழன்றுதண் ணீரில்
விழுந்த தேனோ? விவேக மில்லா
அசேதனப் பொருள்நீ ஆதலால் குணத்தைத்
தேர்ந்து கொள்ளும் திறனிலாய் உன்னை
நோவதிற் பயனிலை நுண்ணறி வுடைய
நானேன் அவளை ஞாயம் சிறிதும்
இன்றி நீக்கினேன் இரும்பு துடைத்தே.

துஷ்யந்தன் :— (பக்கம் 97, வரி 10.)

(அகவல்)

(15) சித்திரம் சீரா யில்லையேல் சிதைத்துத்
திருத்தி எழுதுதல் சிறப்பே ஆகும்
(ஆயினும்)
அவளழ கிதனில் அருமையாய்ச்
சிறிதே தீட்டப் பட்டிருக் கின்றதே.

விதூஷகன் :— (பக்கம் 97, வரி 21.)

(அகவல்)

(16) அதோஅவ் வுருவுதான் சகுந்தலை யென்றுநான்
எண்ணுகின் றேன்களைப் படைந்திருக் கின்றதாக்
காண்கிற தவிழ்ந்த கருமை யாகிய
கூந்தலின் மலர்கள் கொட்டு கின்றன
முகத்தில் வியர்வை மூடி யரும்பின
தோள்க ளிரண்டும் துவண்டிருக் கின்றன
தண்ணீர் பாய்ச்சத் தளிர்த்துப் பூத்து
நீண்டமா மரக்கீழ் நின்றிருக் கின்றாள்
இந்த இருவரும் அவளது
தோழிமா ரென்று துணிகின் றேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 97, வரி 28.)

(அகவல்)

(17) இதோபா ரெனது காதல் மிகுந்து
விளங்கடை யாளம் விரல்களின் வியர்வையால்
படத்தின் ஓரம் அழுக்குப் படிந்தது
கண்ணீர் ஒழுகிக் கன்னந் தன்னில்
விழுந்த படியால் †வர்ணம்
வேறாய் மாறி விளங்குகின் றதுவே.

† வர்ணம்=வருணம்.

துஷ்யந்தன் :— (பக்கம் 98, வரி 10.)

(நேரசைக்கட்டளைக்கலித்துறை)

(18) தானே *வலிவினில் வந்தசீ தேவியைத் தள்ளிவிட்டு
மானேர் விழியைப் படத்தி லெழுதி மயங்குகின்றேன்
தேனேர் இனியதெண் ணீராற்றை விட்டுக்கா னற்சலத்தில்
ஊனேர்தா கத்தை ஒழிக்க முயல்வோனை ஒத்தனனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 98, வரி 19.)

(அ க வ ல்)

(19) மாலினி நதியை வரைய வேண்டும்
மற்றதன் கரையின் மணலின் மேலே
இளைப்பா றுகின்ற இரட்டை அன்னப்
பறவைகள் தம்மைத் திறமுடன் எழுதி
மான்கள் வாழும் இமய மலையின்
குன்றுகள் தம்மைக் குறிக்க வேண்டும்
மரவுரி தொங்கும் மரத்தை அதன்கீழ்ப்
படுத்திருக் கின்ற பைங்கட் கலைமான்
கொம்பில் தனதிடக் கண்ணால்
தேய்க்கும் பெட்டைமான் தனைத்தீட்டு வேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 99, வரி 9.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(20) எனது காதலி யின்பமா யெடுத்துக்
காம்புகள் காதிற் பொருந்தவைத் ததனால்
மகரந்தத் தாள்கள் கன்னத்தில் மருவிய
சிரீஷ மலரைத் தீட்ட மறந்தேன்
மாரி காலத்து மதியின் நிலவுபோல்
தாமரை நூலைத் தனங்களுக் கிடையில்
தொங்கவி டுதற்குச் சுத்தமாய் மறந்தேன்.

---

* வலிவினில்=வலிய

துஷ்யந்தன் :— (பக்கம் 99, வரி 22.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(21) பூத்த செடிகளுக் கேற்ற விருந்தே
இங்கே யிறங்கியேன் துன்புறு கின்றனை
அதோ இருக்கின்ற அம்மலர் மேலே
தங்கி யிருக்குந் தனிப்பெடை வண்டு
தன்பசி தன்னையுந் தானற மறந்துதேன்
உன்னுட னன்றி ஒன்றி யாக
உண்ணமாட் டாமல் உள்ளம் வருந்திநீ
†எப்போ வருவையென் றெதிர்பார்க் கின்றதே.

துஷ்யந்தன் :— (பக்கம் 100, வரி 3.)

(அகவல்)

(22) ஆஹா இன்னுமென் ஆக்கினை தன்னை
அஞ்சா தொருநீ அவமதித் திருப்பையேல்
தண்டனை உனக்குத் தக்க வாறு
சாற்றுவே னதனைப் போற்றிக் கேண்மோ!
தும்பியே, வண்டே, சுரும்பே, ஈயே!
கையால் யாருங் கொய்யா திருக்கும்!
இளஞ்செடி யதனின் வளம்படு தளிர்போல்
மனோகர மாயெனை மயங்கவைத் ததனால்
காதல் விருந்துநான் களிப்புடன் உண்கையில்
அமுத ரஸத்தைப் பானம் பண்ணுதற்கு
ஆதர வாகி ஆனந்த மளித்த
தீதிலா எனதுயிர்க் காதலி தனது
கோதிலா வுதடெனுங் கோவைப் பழத்தை
இன்னமுந் தீண்டநீ இச்சை வைப்பையேல்
உன்னைப் பிடித்து விடாது கொண்டுபோய்
தாமரைத் தண்மல ராகிய
சிறைக்குள் அடைக்கச் செய்வேன் நிஜமே.

† எப்போ=எப்போது என்பதன் கடைக்குறை.

துஷ்யந்தன் :— (பக்கம் 100, வரி 21.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(23) அன்ப உன்செயல் ஆர்க்கும் அடுக்கா
தீயகா ரியநீ செய்திருக் கின்றனை
இப்போ திங்கே இத்தனை நேரமாய்
இதய முழுவது மிணங்கி ஒடுக்கமாய்
என்னுட னிருந்து நன்னய மாக
இன்பம் அனுபவித் திருந்த காதலியைப்
படத்திற் கண்ட பைந்தொடி வடிவம்
ஆக்கி விட்டனை அந்தோ அந்தோ
ஏனோ இந்நிலைப் பூட்டினை நீயே.

துஷ்யந்தன் :— (பக்கம் 100, வரி 29.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(24) எங்ஙனஞ் சகிப்பேன் எங்ஙனஞ் சகிப்பேன்
எனது நண்ப! இந்தத் துயரம்
என்னைவிட் டகலா தெங்ஙனஞ் சகிப்பேன்
கனவிற் காணலா மெனினுந் தூக்கம்
இல்லா மையாலே ஏந்திழை தன்னைக்
காண்பதற் கின்றிக் கலங்கு கின்றேன்
நனவிற் படத்திற் காணலா மெனினுங்
கண்ணீர் மறைக்கக் கருத்தழி கின்றேன்
என்னசெய் வேனினி எங்ஙனம் வாழ்வனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 102, வரி 27.)

(அகவல்)

(25) இங்ஙனம் பறையறைந் தியம்ப வேண்டும்
எங்ஙன மென்னில் இயம்புவேன் கேளாய்
எத்தனை அன்புள சுற்றந் தன்னையும்
இழந்து வாடும் எந்தக் குடியும்
பாவ வழியிற் படர்வ தில்லையேல்
துஷ்யந் தனைத்தந் துணைவ னாகப்
பெற்று வாழச் சற்றுந்
தடையிலை யென்று சாற்றுக பறையே.

முதல்தவப்பெண்.—"துஷ்டப்பயலே! துடுக்குப்பையா! மிருகங்களையெல்லாம் பிடித்துத் தின்று இப்படி வீணாய் வதைசெய்கின்றனை!"

(115-ஆம் பக்கம் பார்க்க.)

துஷ்யந்தன் :— (பக்கம் 103, வரி 9.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(26) அந்தோ கெட்டேன் அந்தோ கெட்டேன்
மூல புருஷன் முடிவடைந் திட்டால்
கால்வழி யில்லாக் கஷ்டத் தாலே
ஆதர வின்றி அவஸ்தைப் படுகிற
குடும்பச் சொத்தைக் கொள்ளை கொள்ள
எவனோ அந்நியன் ஏற்படு கின்றான்
இப்படி நானும் இறந்தே னாயின்
பூமியும் புருகுலப் புகழும் மேன்மையும்
இந்தக் கதியே யெய்தும் என்பதற்கு
ஐய மில்லை அகாலந் தன்னில்
விதைத்த விதைபோல் வீணா கும்மே.

துஷ்யந்தன் :— (பக்கம் 103, வரி 22.)

(அ க வ ல்)

(27) விசேஷ பலனை விரும்பி ஒருவர்
உழுத புழுதி பழுது படாமல்
பருவ மறிந்து பயிர்செய் வதற்கு
விதைத்த விதைபோல் விவாகஞ் செய்து
கொண்ட எனது கோதிலாப் பெண்டிர்
வயிற்றி லெனது காண்முளை வாழ்வதால்
எனதருங் குலமெலாம் இன்பமுற் றென்றும்
இடையறா தோங்கும் எனினும் அதனை
அறியமாட் டாதநான் அவளை
வெறுத்துத் தள்ளினேன் விவேகமற் றேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 104, வரி 7.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(28) இவனி றந்தபின் எமக்குநூல் விதிப்படி
எள்ளுநீர் எவர்வார்ப்பார்
இவனி றந்தபின் இவன்மகன் இருந்திடில்
எள்ளுநீர் எமக்கன்றி

G

இவன்ற னக்குநன் றிறைத்திடும் எனநினைந்
தருவருத் தழுதந்தோ
இவனி றைக்குநீர் உண்பமென் றேற்றதை
யுண்பர்தென் புலத்தாரே.

துஷ்யந்தன் :— (பக்கம் 105, வரி 10.)

(அகவல்)

(29) எனது கிருகங் களினுமெப் படியோ
அத்து மீறிப் பிசாசுகள் அநேகம்
நுழைவன அந்தோ நொந்த மனத்துடன்
நான்செய் பிழையே நானறி யாமல்
இருக்கையில் எனது குடிகளில் இன்னார்
இன்ன பிழையை இயற்றினார்
என்பதை உணரல் எங்ஙனம் ஆமே.

மாதலி :— (பக்கம் 106, வரி 2.)

(அகவல்)

(30) பாரடா நானிதோ புலிபோற் பாய்ந்து
பசுவைப் போலப் பயந்து நடுங்கும்
உனது கழுத்தை உறுதியாய்க் கௌவிப்
பிடித்துக் கடித்துக் கொன்றுன் உதிரம்
குடிக்கிறேன் துன்பங் கொண்டவர் தம்மைக்
காக்கும் பொருட்டே கைவில் ஏந்திச்
சித்தமா யிருக்குந் துஷ்யந் தன்தனை
உன்னை மீட்க ஓலமிட்டு
அழைத்து வரவழை அதையும் பார்க்கலாம்.

துஷ்யந்தன் :— (பக்கம் 106, வரி 21.)

(அகவல்)

(31) *திரஸ்கர ணிவித்தையிற் செருக்குற் றவனே
எனது கணையுனை எவ்வித மாகிலும்
கண்டு பிடித்துக் கொல்வதைக் கருதி
அதனை விடுகிறேன் அதனாற் கொல்லப்

* ஒருவன், பிறர்க்குத் தோன்றாமலே அவர்க்கெதிரில் இருத்தல்.

படுதற் குரிய வுன்னைப் படுக்கும்
விடுதற் குரிய வேதியன் தன்னை
விடுக்கும் நீருடன் விரவிய பாலைப்
பிரித்துக் குடிக்கும் பெருமை
மேவிய அன்னப் பறவைபோல் விரைந்தே.

மாதலி:— (பக்கம் 106, வரி 29.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(32) இந்திர ருமது நிந்தையில் கணைகள்
அசுரனைக் கொல்லவே அமையுமென் றெண்ணி
இருக்கிறு ராகையால் அரக்கனைக் கொல்ல
வேண்டும் போதிவ் வில்லைநீர் வளைக்கலாம்
நண்பரைப் பெரியோர் நன்னய மாகப்
பார்ப்பா ரன்றிப் படுகணை தொடுக்கப்
பாரார் பாரார் பார்த்திப துணிந்தே.

மாதலி:— (பக்கம் 107, வரி 17.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(33) அவனை வெல்ல உமதருந் தோழர்
இந்திர ராலே இசையா ததனுல்
உம்மால் அவனை ஒழிக்க எண்ணினுர்
எழுபரித் தேரினை ஏறி நடத்தும்
சூரிய னுலே தூரத்த முடியா
இரவிரு ளதனை †இந்துவும் ஒழிக்குமால்
(அதனுல்)
இதோவந் திருக்கிற இந்திரர் தேர்மிசை
உமது வில்லுடன் உடனே ஏறி
என்னுடன் வந்துநீர் எய்துவீர் ஜயமே.

† இந்து=சந்திரன்.

மாதலி :— (பக்கம் 107, வரி 27.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(34) விறகைக் கிளறினால் தீமிகுந் தெரியும்
சினமிகச் செய்தால் பாம்புதன் படத்தை
விரித்துக் காட்டும் மிகுசின மூட்டினால்
மாந்த ரனைவரும் தமதுவல் லமையைக்
காட்டு கின்றனரெக் காரணத் தாலோ
கவலை யிருந்து கருத்துத் திரிந்து
விளங்கிய வும்மை மிகுசின மூட்டி
வேறு திருப்ப விரும்பிய நானும்
அங்ஙனம் செய்தனன் சங்கை யறவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 108, வரி 3.)

(அ க வ ல்)

(35) இந்திர னேவலை ஏற்றுக் கொண்டு
தந்திர மாகச் சாதிப்ப தன்றித்
தள்ளி விடுதல் சாத்திய மாகா
ஆதலால் இந்த அரியசங் கதியைப்
பிசுன னென்னும் பிரதா னியர்க்குத்
தெரிவிப் பாய்நீ தேர்ந்தவ ரவர்தாம்
குடிகளைப் போற்றிக் குறைவற அரசை
நடத்த வேண்டும் நானேற் றியுள்ள
எனது வில்லும் இன்னொரு
கடமையிற் செல்லுங் காரணத் தாலே.

ஏழாம் அங்கம்

மாதலி :— (பக்கம் 109, வரி 11.)

(அகவல்)

(1) பல்லாண்டு வாழும் பார்த்திப கேண்மோ
இருவீ ருந்த்ருப் தியெய்தினீ ரில்லையென்
றெண்ணு கின்றேன் ஏனெனில் உமது
கோடல் கீர்த்தி மிகுந்து விளங்கலால்
இந்திரர்க் கியற்றிய நன்றியை மதியீர்
அவரும் உமதற் புதப்பே ராண்மையில்
அதிசய மடைந்திருக் கின்றன ராதலால்
உமக்கவர் செய்த வுத்தம
கௌரவந் தன்னைக் கணக்கிடார் தாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 109, வரி 18.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(2) அப்படி யல்ல அப்படி யல்ல
இந்திர ரிடத்திற் கடைசி யாக
உத்தரம் பெற்றபோ துகந்தவ ரெனக்குச்
செய்த பெருமை தேவர்க்கும் அரிதாய்
எனது விருப்பையும் ஏறியென் றென்றுநான்
எதிர்பா ராததாய் இருந்த தென்பேன்
அரியா சனத்தில் அவர்க்கிணை யாக
அமர்ந்துவீற் றிருந்தவென் அகமகிழ் சிறக்க
மந்தர மலரிற் புனைந்துதம் மார்பில்
அரிச்சந் தனத்தில் தோய்ந்து விளங்கிய
மாலையைத் தேவர்கள் மகிழ்ந்து வாழ்த்த
தமது குமாரனும் ஜயிந்தவன் சூட

விரும்பி நோக்கி யிருந்தன னாயினும்
அவற்கும் அணியா தெனது கழுத்தில்
இந்திரர் எடுத்துச் சூட்டினர் இன்முகம்
காட்டினர் புன்னகை கான்முளை தனக்கே.

மாதலி :— (பக்கம் 110, வரி ௮.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(3) பல்லாண் டுவாழும் பார்த்திப ருமக்குக்
கைம்மா றாகக் கருதி யிந்திரர்
கொடுக்கக் கூடாப் பொருளெது புகல்வீர்
இந்திர லோகம் இடர்ப்பட முளைத்த
அசுர ரென்னு முட்களை அகற்ற
அந்நா ளொன்று மிந்நா ளொன்றாய்
இருந்தமுள் வாங்கிகள் இரண்டே யாகும்
(அவைதாம்)
கரதலா மலகமாக் கடவுளைக் கண்ட
பிரகலா தனனெனும் பிள்ளை யோடு
முரணிய தீயன் இரணியன் தன்னைக்
கொல்நர ஹரியின் கொடுநக மென்பதும்
கணுக்குறு கியவுன் கணைகளென் பவையுமே

துஷ்யந்தன் :— (பக்கம் 110, வரி 16.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(4) வேலை யாட்கள் செய்ததொரு வேலை முடியும் சிறப்பந்த
வேலை யாட்கட் காகாமல் வேலை யிட்டோற் காகுமால்
வேலை யுலகில் அருணனைமுன் வெய்யோன் தனது தேரோட்டும்
வேலை யதனில் வையானேல் அருண னொளிசெய் விதமுண்டோ.

மாதலி :— (பக்கம் 110, வரி 22.)

(அ க வ ல்)

(5) பல்லாண்டு வாழ்வீர் பாரீர் பாரீர்
உமது பெரும்புகழ் உச்ச மாகி
இந்திர லோகத்தை யெட்டி யிருக்கும்
ஏற்றந் தனையிங் கிருந்து பாரீர்

அந்தர வாசிகள் அந்த மான
கவிகள் செய்யக் கருதி யிருப்பதால்
உமது வெற்றியின் உத்தம புகழைக்
கற்பகந் தந்த அற்புத ஆடையில்
அரம்பையர் அணிந்த குங்கும நீலம்
முதலிய வற்றாற் சிதைவிலா
தெழுதி யிருக்கும் ஏற்றம் பாரீர்.

மாதலி :— (பக்கம் 111, வரி 1.)

(அகவல்)

(6) பரிவக வாயுமண் டலமென் றிதனைக்
குறித்துக் கூறுவர் இதனிற் கங்கை
மூன்று கிளைகளாத் தோன்று மிதனால்
நட்சத் திரங்கள் தமது மண்டலத்தில்
சரியா யியங்கித் தத்தங் கதிர்களைப்
பெற்று விளங்குவ சற்றும் அசுத்தம்
இன்றித் திகழும் இதனில் திருமால்
தமதிரண் டாமடி தன்னை
வைத்தகா ரணத்தால் மகத்துவ முளதே.

மாதலி :— (பக்கம் 111, வரி 11.)

(அகவல்)

(7) தேர்ச்சக் கரங்கள் தெண்ணீர் பட்டு
நனைந்திருப் பதனால் நன்னீர் கொண்ட
மேகமண் டலத்தின் மேவிய துமதுதேர்
என்பது தெரிந்தேன் இதுவு மன்றி
சாதகப் பறவைகள் சக்கரப் பழுக்களில்
நுழைந்து பறக்கும் நுட்பத் தாலும்
தேரிற் பூட்டிய தெய்வப் புரவிகள்
மின்ன லொளியால் மினுமினு வென்று
விளங்குவ தாலும விவரமாய்
அதனை அறிந்தேன் அதிசய மலவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 111, வரி 20.)

(அகவல்)

(8) விரைந்து தேரை விடுத்துச் சென்று
கீழே இறங்கும் நமக்கிம் மாந்தர்
உலகத் தோற்றம் விநோதமா யுளதால்
உயரக் கிளம்பிப் பெயர்வது போன்ற
மலைகளுக் கிடையில் மருவிய பூமி
ஆழ்ந்து செல்லும் அதிசயம் பாரீர்
இலைக ளாலே மூடி யிருந்த
மரங்க ளெல்லாம் மற்றவை மாறி
அடிகள் தோற்றும் அதிசயங் காணீர்
சிறுமையாய் உலர்ந்து தெரிந்த நதிகள்
நன்றாய்த் தோற்றுவ நாடிப் பாரீர்
எவனோ ஒருவன் எடுத்தெறி வதனால்
பூமியென் னருகிற் பொருந்த
வருவது போல்வதை மகிழ்ந்துகாண் பீரே.

மாதலி :— (பக்கம் 112, வரி 24.)

(அகவல்)

(9) அதோஇருக் கின்ற ததனைப் பாரீர்
அதனிற் கட்டைபோல் அசையா திருந்து
சூரியன் ஒளியைக் கூரிய கண்களால்
கூசாது நோக்கிக் கோதிலாத் தமதுடல்
புற்றிற் பாதி பொருந்தி மறையவும்
பாம்பின் தோல்கள் பற்பல தமது
மார்பை மூடிக் கொள்ளவும் வளைந்த
பழங்கொடி தமது கழுத்திற் பலமாய்ச்
சுற்றிக் கொள்ளவுந் தோளின் மீது
தொங்குஞ் சடையில் பறவைகள் தொடுத்த
கூடுகள் கூட்டமாய் ஆடவும்
வாழும் அந்தமா முனிவரைக் காணீர்.

துஷ்யந்தன் :— (பக்கம் 113, வரி 17.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(10) எத்தனை அதிசயம் எத்தனை அதிசயம்
உண்மையாய் இங்குநான் ஒன்றையும் விடாமற்
பார்த்து வருவதாற் பகருவன் கேண்மோ
இந்த இடத்தை இதர இருடிகள்
சந்ததம் அடையத் தவஞ்செய் கின்றார்
இந்த இடத்தின் விந்தையை யென்றால்
விளம்ப லாகா தாயினும் விளம்புவேன்
(இதனில்)
பற்பல வான கற்பகத் தெய்வ
விருக்ஷ நிறைந்த விசேடத் தாலே
சுத்த வாயுவை நித்தமும் பெற்று
உயிர்வாழ்ந் திருத்தல் ஒழுங்குடைத் தாகும்
பொற்று மரைகள் பொன்மக ரந்தம்
சிந்துவ தாலே சிவந்து விளங்கும்
தண்ணீர் தன்னில் ஸ்நானஞ் செய்து
படிக மேடைமேற் பண்புட னிருந்து
ஆதியை நினைத்துச் சோதியைக் காண
அரம்பையர் பலரும் அருகி லிருப்பினும்
தன்மன மடக்கச் சாத்திய மாகும்
என்னினி மொழிவேன் இன்னமும் நானே.

துஷ்யந்தன் :— (பக்கம் 114, வரி 15)

(அகவல்)

(11) என்தன் இச்சை நிறைவே றுமென்று
நானொரு சிறிதும் நம்ப வில்லை
ஏனோ எனது புஜமே! இப்படித்
துடிக்கின் றனைநீ சொல்லுவா யெனக்கே
அதிஷ்ட மனைத்தும் அன்றே போயின
இனியிருப் பதெல்லாம் இணையிலாத்
துக்க மென்று சொல்லு வேனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 114, வரி 22.)

(அகவல்)

(12) இதுவோ துறவிகள் இருக்கு மடமாம்
இதனில் துஷ்டர் இருப்பதற் கிடமிலை
இந்தத் துஷ்டன் யாரோ அறியேன்
(சத்தம் வந்தவழியை உற்றுநோக்கி; ஆச்சரியத்தோடு)
ஆஹா! இந்தப் பையன் யாரோ!
பார்ப்ப தற்குப் பைய னேனும்
பராக்ரம மிகுந்த ஐயன் போல
இரண்டு பெண்கள் விடாதுபின் தொடர
வருகின் றுன்வரும் வழியிற் பசியொடு
பாலுண் டபடியே படுத்துக் கொண்டு
தாயண்டை யிருந்த தறுகட் சிங்கக்
குட்டியைத் தூக்கிக் கொண்டனன் அதுவும்
இவனும் சண்டை யிட்ட படியால்
அதன்றன் பிடர்மயிர் கலைந்தது
அதுவும் இவனுக் கடங்கி விட்டதே.

முதல்தவப்பெண் :— (பக்கம் 115, வரி 6.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(13) துஷ்டப் பயலே! துடுக்குப் பையா!
மிருகங் களையெலாம் பிடித்து வீணாய்
ஏனோ இப்படி வதைசெய் கின்றனை
அவைகளை நாங்கள் அன்புடன் மக்கள்போல்
மதித்து வளர்த்து வருகின் றேமே
இப்படி உனது துடுக்குகள் ஏறி
வளர்ந்து வருவதால் மாதவர் உனக்குச்
சர்வ தமனன் எனப்பெய ரிட்டது
தகும்தகு மென்று சாற்ற லாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 115, வரி 20.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(14) ஆரோ மஹான்தன் அருமழலை யிவனெனச்
சந்தேக மில்லை சமித்தை யிட்டதும்
பற்றி யெரியச் சித்தமா யிருக்கும
நெருப்புப் பொறிபோல் நிலவுகின் றனனே.

துஷ்யந்தன் :— (பக்கம் 115, வரி 28.)

(அகவல்)

(15) ஆஹா இதுவும் ஆச்சரிய மாகும
சக்கர வர்த்தியின் இலக்கணஞ் சமைந்திவன்
இருக்கின் றனன்விளை யாட்டுக் கருவியை
விரும்பி நீட்டி விரித்த இவன்கரம்
நெருங்கிய விரல்களும் நீண்டு பிணைந்த
இரேகை களுங்கொண் டிருக்கின் றதனுல்
விடியற் காலையில் விகசித மாகி
செந்நிற இதழ்கள் செறிந்து நெருங்கி
இடைவெளி யில்லா திருக்கும
தாமரை மலரெனச் சாற்ற லாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 116, வரி 16)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(16) காரணமோர் சிறிதுமின்றிச் சிரிக்கும்போ தெல்லாமும்
சிற்றரும்பின் கவின்சேர் தங்கள்
ஏரணவும் பற்களெல்லாந் தோன்றநல்ல இனியமழ
லைச்சொற்கள் இதமாய்ப் பேசி
நாரணவ ஓடிவந்து பெற்றவர்தம் மடியேற
நயக்கின்ற மகக்கள் தம்மைச்
சீரணவ அணைத்தவர்மேற புழுதிதமமேல் தோய்ந்துள்ளார்
புண்ணியத்தை வாய்ந்துள் ளாரே.

துஷ்யந்தன் :— (பக்கம் 116, வரி 29.)

(அகவல்)

(17) அருந்தவப் பிள்ளாய் அருந்தவப் பிள்ளாய்
ஆசிர மத்தில் அருந்தவப் பிள்ளாய்
இத்தனை இளைய வயதினி லேயே
தவசிகள் ஒழுக்கந் தன்னை விடுத்துப்
பொறுமையிற் பழக்கம் பொருந்தா தேனோ
சந்தன மரத்தை நிந்தையிற் படுக்கும்
நஞ்சுள கரிய நாகக்
குட்டியை ஒத்தனை குழந்தாய் நீயே.

துஷ்யந்தன் :— (பக்கம் 117, வரி 10.)

(அகவல்)

(18) இன்னான் மகனிவன் என்னவென் றனக்குத்
தெரியா திருநதும் சிறுவனும் இவனைத்
தொடுவத னாலே சுகானு பவத்திற்
பொருந்துவ என்றன் புரைதீர் உறுபபுகள்
இங்ஙனம் எனக்கே இருக்கும் என்றால்
இவனைப் பெறத்தவஞ் செய்தவன் எய்தும்
இன்பந் தன்னை இத்தனை
என்றள விடுதற் கென்னு லாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 117, வரி 24.)

(நிலைமண்டில ஆசிரியபபா)

(19) ஆஹா இதுவும் ஆச்சரி யநதான்
இவனும் என்றன் குலத்துதித் தவனோ?
இதனா லேதான் இத்தவப் பெண்மணி
என்னைப் போலவே இவனிருக் கின்றனன்
என்றனள் அதனை இப்போ துணர்ந்தேன்
புருவமி சத்திற் பொருநதிய வழக்கம்
நெடுநா ளாக நிலைத்தபோதான் றுளதால்

(அதுதான்)

இளமையிற் பூமியை வளமைப் படுத்தி
இன்புறு விக்க எண்ணியெங் கெங்கும்
சுண்ணந் தீற்றிச் சொகுசா யமைந்த
அரண்மனை களிலே வாழ்வதும் அதன்பின்
முதுமை யதனில் முனிவர்க் குரிய
வனங்களில் நுழைந்து கனிகளை யயின்று
மரங்களின் நிழல்களில் வாழ்வது மாமே

(உரக்க)

ஆயினும் இந்த ஆசிரம மதனில்
மனிதர் தமது வல்லமை யாலே
நுழைவ தசாத்திய நுவலுங் காலே.

துஷ்யந்தன் :— (பக்கம் 120, வரி 17.)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(20) இவளிரண்டு வஸ்திரமும் மாசு பெற்ற
இவள்முகமும் நோற்பதனால் வாடிற் றநதோ
இவளுடைய கூந்தலையும் ஒற்றை யாக
எக்கமுடன் பின்னிக்கொண் டிருக்கின் றாளே
இவளுடைய செய்கையிவை யெல்லா நோக்கின்
இரக்கமின்றி நானிவளை அகற்றி விட்டும்
இவளுடைய கற்பகலா தென்னை யெண்ணி
இவள்நோன்பு நோற்பளென இயம்ப லாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 121, வரி 9.)

(அகவல்)

(21) அன்புடை யாளே! அன்புடை யாளே!
அதிஷ்ட வசத்தால் அடைந்தனன் உன்னைக்
கிரகணம் விட்ட பிறகுகே டில்லாச்
சந்திரன் தனைத்தவ றுமற் சேரும்
உரோகிணி போலவென் உள்ளத் திருந்த
மறதி யென்னும் மாய இருள்போய்
ஞாபகம் என்னும் நல்லொளி வந்ததால்
உன்னை அடைந்தனன் ஒளிர்மதி
முகமுடை மானே ஜெகமிசை நானே.

துஷ்யந்தன் :— (பக்கம் 121, வரி 16.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(22) இன்பின் இருப்பே அன்பின் பெருக்கே
கண்ணீர் விடுவதாற் கலங்கிய நீயும்
ஐயமெனும் வார்த்தை தடைப்பட் டுரைத்தனை
ஆயினும் உன்றன் அணியணி யில்லா
வாடிய முகத்தையும் வதங்கிய உதட்டையும்
கண்ட வுனது கணவனும் எனக்கு
ஐயம்ஜயம் எல்லாம் ஜயம்ஜயம் ஆமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 121, வரி 23.)

(பஃறொடைவெண்பா)

(23) பொன்போலு மேனிய பொலங்கொடியே நானுன்னை
அன்பே புரியா தகற்றி வெறுத்ததனை
உன்பே ரறிவினால் உத்தமியே மன்னிப்பாய்
வன்பே உடையேன் மனத்தகத்தில் மோகத்தால்
நின்பே ரருமை நினைத்தறியா மற்போனேன்
தன்மே லெறிந்தபூந் தாமத்தைக் கண்ணில்லான்
துன்பேசெய் பாம்பென்று தூக்கி யெறிவதுபோல்
முன்பேசெய் நல்வினையால் மூதுலகில் நன்மைவந் தும்
கொன்பே ரறிவிலார் குற்றமுள்ள மோகத்தால்
மன்பே ரறியாமை வாய்ந்ததனை யோரார்கள்
என்பே ரியற்கை யிது.

துஷ்யந்தன் :— (பக்கம் 122, வரி 13.)

(அ க வ ல்)

(24) ஆழ்ந்தென் மனத்தில் வீழ்ந்து பதிந்த
துயரக் கணையைப் பெயரச் செய்து
சொல்லுவேன் அதனைச் சுந்தர மானே!
அந்த நாளையில் என்தன் முன்னே
நிந்தை யிலாதநீ நின்று கொண்டே
ஒழுக்கிய கண்ணீர் உதட்டில் ஒழுகிப்

பெருகித் துயரம் பெருக்கிய தேனும்
மனமருண் டிருந்தநான் மற்றதை அலக்ஷியம்
செய்திருந் தேனே தேமொழி மானே
அந்தக் கண்ணீர் அழிவிலா தின்னும்
உன்தன் திருக்கண் உரோம நுனியில்
தூங்குகின் றதனால் துடியிடை மானே
அதனை யிப்போதே அடியேன்
துடைத்துவிட் டெனது துயரொழிப் பேனே.

மாரீசர் :— (பக்கம் 123, வரி 21.)

(அகவல்)

(25) †தாக்ஷா யணியே சாற்றக் கேண்மோ
இதோ இவர் உன்மகன் இந்திரன் தனது
சமர்க்கள மதனில் தலைவரா யிருப்பவர்
இவரே உலகில் இன்பம் பெருக
அதனையோர் குடைக்கீழ் அரசு செலுத்தும்
துஷ்யந்த ரென்னுந் தூயபேர் பூண்டோர்
இவரது வில்லை என்றுமிந் திரற்குத்
துன்பந் துடைத்துத் துலங்குகின் றதனால்
மகபதி தனக்கு வச்சிரா யுதமோர்
ஆபரண மாகி யிருக்கும்
அன்றி அதனால் அரும்பயன் இன்றே.

துஷ்யந்தன் :— (பக்கம் 124, வரி 7)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(26) பரிசுத் தராகநான் தரிசிக் கும்படி
இதோஇருக் கின்ற இருவர் தாமோ
பிரமபுத் திரர்களாய்ப் பெருமை பொருந்திய
தக்ஷன் தனக்கும் மரீசி தனக்கும்
சந்ததி யாக வந்தவ தரித்தோர் ?

---

† மரீசர் மனைவியாகிய அதிதியின் மறுபெயர்; இவர்களுடைய மக்களே தேவேந்திரன்முதலிய தேவர்கள்.

இவர்கள் தாமோ பிரமருக் கிப்பால்
ஒருதலை முறையிடை ஒற்றின பெரியோர் ?
இவர்கள் தாமோ பன்னிரு சூரியர்
பிறத்தற் கிடமா யிருந்த பெரியோர் ?
இவர்கள் தாமோ இரண்டொ டொன்றும்
மூவுல குக்கும் மூதாதை யாகியும்
அமரா ரதிபதி யாகியும் யாகத்
தலைவ னாகியும் இலகுமிந் திரனைப்
பிரிய முடனே பெற்ற பெரியோர் ?
இவர்கள் தாமோ இணையில் பரம்பொருள்
அவதா ரஞ்செயற் காஸ்பத மாகி
இருந்த பெரியோர் ? இயம்பு வாயே.

மாரீசர் :— (பக்கம் 124, வரி 25.)

(அ க வ ல்)

(27) உனது தலைவன் இந்திரன் ஒப்பான்
உனது மகனும் ஜயிந்தவன் ஒப்பான்
ஆதலால் மகளே ஆசிர் வாதம்
உனக்குவே றென்ன உரைப்பேன்
இந்தி ராணிபோல் இருந்துவாழ் வாயே.

மாரீசர் :— (பக்கம் 125, வரி 4.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(28) இதோ இந்தக் கற்புக் கரசியாம்
சகுந்த லையுங்குண சாலி யாகிய
இந்தச் சிறுவனு நீருமிப் போது
கூடி மகிழ்வது குறைவிலா அன்பும்
அதிஷ்ட முடனனுஷ் டானமும் ஒன்றாய்க்
கூடி யிருப்பதாக் கூற லாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 125, வரி 9.)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(29) தெய்விகம் பொருந்திய ஐயரே! எங்கள்
எண்ண முதலிலீ டேறி யதன்பின்
உமது தரிசனம் எமக்குக் கிடைத்ததால்
உமது கிருபை உயர்வொப் பிலாததாம்
எங்ஙன மென்னில் பூத்தபின் காய்த்தலும்
மேகங் கவிந்தபின் மிகுமழை பொழிதலும்
ஆகுங் காரண காரிய மாயினும்
(இங்கே)
காரண மாகிய வுமதனுக் கிரகம்
பெறுதற்கு முன்பே பெற்றனம் காரியம்
ஆகிய எமதபிஷ் டந்தனை யாமே.

துஷ்யந்தன் :— (பக்கம் 125, வரி 24)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

(30) என்கதை யெனக்கே விந்தை யாக
இருக்கின் றதுநான் என்ன சொல்வேன்
எதிரில் யானை இருந்தகா லத்தில்
யானை யதுவல வென்று மறுத்தது
சென்ற பிறகு சந்தே கமாகி
அதன்கா லடியின் அடையா ளங்களைக்
கண்டொரு மூடன் கரிதா னதுவென
நிச்சயஞ் செய்து நிதானிப் பதுபோல்
எனது மனோநிலை இருந்த வாறுநான்
என்ன சொல்வேன் இன்னதென் றுணர்ந்தே.

மாரீசர் :— (பக்கம் 126, வரி 24)

(அகவல்)

(31) சாற்றுவேன் மகளே சகுந்தலா நீயுன்
சாபகா ரணத்தால் தள்ளப் பட்டனை
உனது கணவர் தமது மனத்தில்
ஒழியா மறதி உண்டா யிருந்ததால்

உன்விஷ யத்தில் ஒரேபிடி வாதமாய்
இரக்க மென்ப தில்லா திருந்தனர்
இப்போ தவர்மன இருளகன் றதனால்
பட்டத் தரசியாப் பரிந்துனை ஏற்றனர்
அழுக்குப் படிந்த கண்ணா டியினில்
அருகி லிருக்கும் பொருள்கள் தோன்றா
ஆயினும் அழுக்கைப் போக்கின்
அதனிற் சாயை அழகாய்த் தோன்றுமே.

மாரீசர் :— (பக்கம் 127, வரி 10.)

(அகவல்)

(32) இடையே நின்று தடையே படாமல்
பார்மே லோடுந் தேர்மே லேறி
உலக முழுவதும் ஒவ்வொரு கண்டமா
ஏழுகண் டத்தையும் எளிதினிற் ஜயிப்பான்
அப்போ திவனை ஆரும் எதிர்க்கார்
இப்போ திவனும் இங்குள விலங்குகள்
சிங்க மாயினும் சிறிதும் அஞ்சான்
அனைத்தையும் அடக்கி விட்டனன் ஆகையால்
சர்வ தமனன் எனும்பெயர் சூட்டி
அழைக்கப் பட்டனன் ஆயினும் இனிமேல்
அனைத்துல கத்தையும் அன்பாய்க் காத்தளிப்
பதனாற் பரதன் எனும்பெயர்
பெற்று வாழ்வன் பிரபல மாகவே.

துஷ்யந்தன் :— (பக்கம் 129, வரி 2.)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(33) மன்பதை தமக்கு மன்னர் மாநலஞ் செய்து வாழ்க
பொன்புரை மேனி வாணி புலவராற் போற்றி வாழ்க
தன்னிகர் சுயம்பு வாகிச் சங்கரி யிடப்பாற் பூத்து
மன்னிய நீலகண்டன் மறுபிறப் பொழித்துக் காக்க.

ஏழாம்அங்கம் முற்றிற்று.

அநுபந்தம் 2

வாழ்த்து அல்லது நாந்தியின் உரை.

காவியங்கள் இயற்றுங் கவிகள், நமஸ்காரம், ஆசீர்வாதம், கதாரம்பம் என்னும் மூன்று வகை * நாந்திகளில் ஒன்றை, அவைகளின் முகப்பிற் பெய்வது வழக்கம். ஆகையால், இந்நாடகத்துக்கும் இடையூறெய்தாவண்ணம், † பூர்வாங்கத்துக்குப் பிரதானங்கமான (ஆசீர்வாதநாந்தி) வாழ்த்துரை முதலிற் கூறப்பட்டது.

அந்வயப்படி பதவுரை

எது=எந்த வடிவம்; மறையோன்=பிரமன்; முதலில்; படைத்தது=உண்டாக்கினது.—(நீர்)

எது=எந்த வடிவம்; மன்னும்=நிலைபெற்ற; விதியால்=சாஸ்த்ரவிதிப்படி; கொடுக்கின்ற; அவியை=நெய் முதலிய ஹோமத்ரவியங்களை; ஏற்பது=ஏற்றுக்கொள்வது—(நெருப்பு)

எது=எந்த வடிவம்; மகிழ்வாய்=மனமுவந்து; அதனை=அந்த யாகத்தை; நடத்துகின்ற; இறையாய்=எஜமானனாய்; விளங்கியிருப்பது—(ஆன்மா)

எவை=எந்த இரண்டு வடிவங்கள்; இயங்கும்=மாறிமாறி வருகின்ற; காலம்=இராப்பகல்களாகிய காலங்களை; அறிவிக்கும்=தெரிவித்தற்குக் கருவிகளாயுள்ள; இரண்டு பொருள்கள்—(சந்திர சூரியர்)

எது=எந்த வடிவம்; சுருதி இயல்பாய்=நாதமாத்திரையாய் (கேட்டல் அளவாய்); எங்கும்=உள்ளும் புறம்பும்; பரந்தது=பரவியிருக்கின்றது—(ஆகாயம்)

எது=எந்த வடிவம்; முறையாய் இருக்கும்=தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் முறையாய் விளங்குகிற; சரம் அசரம்=உயிருள்ளனவும், உயிரில்லனவுமாய், முறையே இடம் விட்டுப் பெயர்ந்தும் பெயராமலும் உள்ள

---

* நாந்தி, † பூர்வரங்கம் இவைகளின் இலக்கணங்கள் பின்னால் கூறப்படும்.

பொருள்கள் ; முளைக்கும் இடமாய் = தாம் பிறத்தற்காதாரமான இடமாய் ; கொண்டது = கொண்டிருப்பது—(மண்)

ஏது = எந்த வடிவம் ; மூவா = கெடாத ; உயிர்கள் அனைத்தினுக்கும் = சகல பிராணிகளுக்கும் ; முயங்கும் உயிராய் = பொருந்திய உயிராகி ; இருப்பது—(காற்று)

இந்த = இப்படிப்பட்ட ; காட்சி அளவாக = கண்ணுக்குத் தெரியும்படியாக ; குறையாது = குறைவில்லாமல் ; குலவும் = விளங்கும் ; எண்வகையாம் = எட்டு விதங்களாகிய ; கோதில் = குற்றமற்ற ; வடிவன் = வடிவங்களையுடையவனாகிய ; ஈசன் = சிவபெருமான் ; உம்மை = உங்களை ; குற்றம் அற = பாவம் நீங்க ; காத்து அருளுக = காப்பாற்றி அருள்புரிக.

பொழிப்புரை

எந்த வடிவம், பிரமன், முதலில் உண்டாக்கினது ? (நீர்). எந்த வடிவம், நிலைபெற்ற சாஸ்த்ர விதிப்படி கொடுக்கின்ற நெய் முதலிய ஹோமதிரவியங்களை ஏற்றுக்கொள்வது ? (நெருப்பு). எந்த வடிவம், மனமுவந்து அந்த யாகத்தை நடத்துகின்ற எஜமானனாய் விளங்கியிருப்பது ? (ஆன்மா). எந்த இருவடிவங்கள், மாறிமாறி வருகின்ற இராப் பகல்களாகிய காலங்களைத் தெரிதற்குக் கருவிகளாயுள்ள இரு பொருள்கள் ? (சந்திர சூரியர்). எந்த வடிவம், நாதமாத்திரையாய் உள்ளும் புறம்பும் பரவி யிருக்கின்றது ? (ஆகாயம்). எந்த வடிவம், தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் முறையாய் விளங்குகிற உயிருள்ளனவும் உயிரில்லனவுமாய், முறையே இடம் விட்டுப் பெயர்ந்தும் பெயராமலும் உள்ள பொருள்கள், பிறத்தற்காதாரமான இடமாய்க் கொண்டிருப்பது ? (மண்). எந்த வடிவம், கெடாத சகல பிராணிகளுக்கும் பொருந்திய உயிராயிருப்பது ? (காற்று).

இப்படிப்பட்ட, கண்ணுக்குத் தெரியும்படியாகக் குறைவில்லாமல் விளங்கும் எட்டுவிதங்களாகிய குற்றமற்ற வடிவங்களை யுடைய சிவபெருமான் உங்களை (பாவம் நீக்கிக்) காப்பாற்றியருளுக.

கருத்துரை

நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு, சந்திரன், சூரியன் ஆன்மா என்னும் எண்வகை வடிவங்களும் தானே ஆகிய சிவபிரான் உமது பாவம் அகல உம்மைக் காக்கக்கடவன்.

விருத்தியுரை

'மறையோன் முதலிற் படைத்ததெது' என்றதனால், இந்த வாக்கியம் ஜலவடிவங் கூறியதாம். இதற்குப் பிரமாணம், (அப ஏவ ஸஸர்ஜ ஆதெள, தாஸு வீர்யமபாஸிருஜத்)=" பிரமதேவர் முதற் படைப்பில் ஜலத்தை யுண்டாக்கி, அதனில் தமது வீரியத்தை விட்டார்" என்கிற விஷ்ணு புராண வாக்யமே யென்க. ஒரு விஷயத்தை நேரே வெளிபபடையாய்க் கூறாமல்; குறிப்பிற் கூறுவது, உத்தம காவிய இலக்கணம். ஆகையால், இங்கே ஜலம் என வெளிப்படையாய்க் கூறாமல், 'மறையோன் முதலிற் படைத்ததெது' எனக் குறிப்பிற் கூறியிருக்கின்றது.

கரும்பு போன்றது, காவியம்; அதன் சாறுபோன்றது, (வியங்கியம் வேஙகியம்=) குறிப்பு. அதற்கிருப்பிடமா யுள்ள சக்கை போன்றது, வாச்சியம் அல்லது வெளிப்படை. ஆகையால், * சதுரகவிகள், குறிப்புப் பொருளையே பெரிதும் பாராட்டுவர். எந்தக் காவியத்தில், வாச்சியார்த்தத்தைக் காட்டிலும் வேங்கியார்த்தத்திற்கு ஆஸ்பதமிருந்திருக்கின்றதோ, அஃது உத்தம காவியம்; எந்தக் காவியத்தில் வாச்சியார்த்தமும் வேங்கியார்த்தமும் சமமாகத் தோன்றுகின்றனவோ, அஃது மத்திம காவியம்; எதனில் முன்னையதைவிடப் பின்னையதற்கு ஆஸ்பதம் குறைந்திருக்கின்றதோ, அஃது, அதம காவியம்.

'மன்னும் விதியாற் கொடுக்கின்ற மகத்திலவியை ஏற்பதெது' என்றதனால், இந்த வாக்கியம் அக்நிவடிவங் கூறியதாம். இதற்குப் பிரமாணம், (அக்நி முகா வை தேவாஹ)=தேவதைகளுக்கு அக்நியே வாய். இதனால், அக்நி, அவிர்பாகத்தை ஏற்று அந்தந்தத் தேவதைகளுக்குச் சேர்க்கின்றது என்று விளங்குகின்றது.

'மகிழ்வா யதனை நடத்துகின்ற இறையாய் விளங்கி யிருப்பதெது' என்றதனால், இந்த வாக்யம் ஆன்மவடிவங் கூறியதாம். 'புலனுய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான் புராரி' என்றதும் இது நோக்கியே யென்க.

'இயங்குங் காலம் அறிவிக்கும் இரண்டு பொருள்கள் எவை' என்றதனால், இந்த வாக்யம் சந்திரசூரியர்களைக் குறித்ததாம். காலம்

---

* வல்லபுலவர்.

நித்யமானது. ஆயினும், * சாந்திர † சௌரமான காலபேதங்களைக் குறித்துக் காலம் அறிவிக்கும் இரண்டு பொருள்கள் என்றார். இது பற்றியே, ‘நிலாப்பகலோன்’ என்றார் பிறரும்.

‘சுருதியியல்பா யெங்கும் பரந்ததெது’ என்றதனால், இந்த வாக்யம் ஆகாசவடிவங் கூறியதாம் ‘சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி’ என்றதூஉம் இதுபற்றியே என்க.

நாதேந்திரியமாகிய செவிக்குள் விளங்கும் ‡ தகராகாசத்தையும், அதற்கு வெளியேயுள்ள இதராகாசத்தையும் குறித்ததனால் எங்கும் என்று கூறியதற்கேற்ப, உள்ளும் புறம்பும் என உரை விரிக்கப்பட்டது.

‘முறைபா யிருக்கும் சராசரங்கள் முளைக்கு மிடமாக் கொண்டதெது’ என்றதனால், இந்த வாக்யம் நிலவடிவங் கூறியதாம். பஞ்சபூத சம்பந்தத்தாலாவன, சராசரப் பொருள்களாயினும், நிலமே - அதாவது மண்ணே - அவைகளுக்கு ஆதார பூதமாயுள்ளது என்று கூறியதனோடு § ‘மண்ணாதி ஆறாறும்’ என்றும் ‘மண்ணிலே பிறந்தேனை’ என்றும் ¶ ‘வாழ்வாவது மாயம்; அது மண்ணாவது திண்ணம்’ என்றும் உள்ள பிற ஆன்றோர் வாக்குகளையும் ஒப்பிட்டு உய்த்துணர்க. வாழ்வாவது மாயம், அது நீராவது திண்ணம், நெருப்பாவதுதிண்ணம் காற்றாவது திண்ணம் என்றிருந்தும், இவைகளையெல்லாம் கூறாமல், ‘மண்ணாவது திண்ணம்’ என்றது, மண்ணே ஸ்தூல ரூபமாய் மற்றவைகளை விளக்குந் தன்மையுடைமையாலென்க. இக்கருத்தே பற்றிஇந்த நூலுடையாரும், ‘முறையாயிருக்குஞ் சராசரங்கள் முளைக்குமிடமாக் கொண்டதெது’ எனக் கூறினார்

---

* சாந்திரமான காலம்=நக்ஷத்திரம், திதி, வாரம், பூர்வபக்ஷம், அபரபக்ஷம் முதலியவைகளாம்.

† சௌரமான காலம்=சூரியனைப்பற்றி நிகழ்வனவாகிய நாழிகை, முகூர்த்தம், நாள் முதலியவைகளாம்.

‡ தகரம்=செவிக்குள் இருககும் மெல்லிய தோற்புரை.

§ திருவிளையாடற் புராணம், வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம்; 57 - ம் பாடல்.

¶ சுந்திரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருக்கேதாரப் பதிகம், மூன்றாம் திருப் பாசுரம்.

‘மூவாவுயிர்களனைத்தினுக்கும் முயங்கும் உயிராயிருப்பதெது’ என்றதனால், இந்த வாக்யம் காற்று வடிவங் கூறியதாம். காற்று, பிராண, அபான, சமான, உதான, வியானனாகிய ஐந்து விதங்களாய் எல்லாவுயிர்களிலும் நிறைந்திருக்கின்றமையால் இங்ஙனம் கூறப்பட்டது.

‘காட்சி அளவாக் குறையாது இந்த எண்வகையாய் விளங்கும் கோதில் வடிவன்’ என்றதனால், ‘மண், நீர், நெருப்பு, சந்திரன் சூரியன், இந்த ஐவடிவங்களே காட்சி அளவு அதாவது கண்ணுக்குத் தோன்றுவன, காற்று, ஆகாசம், ஆத்மா ஆகிய மூன்றும் கண்ணுக்குத் தோன்றவில்லையே’ என்கிற சந்தேகம் உண்டாம். காற்றுக்குப் பரிசப் பிரமாணமும், ஆகாசத்துக்கு நீல நிறத்தாற் காட்சிப் பிரமாணமும், ஆத்மாவுக்கு மானசப் பிரமாணமும் ஆகிய இவைகளும், மிகுதி நோக்கிக் காட்சிப் பிரமாணம் என்னப்பட்டன. இது பற்றியே ஸ்ரீமன் மாணிக்கவாசக சுவாமிகளும் தமது திருவாசகத்தில்,

* “நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ”

என்று அருளிச்செய்தனர்.

சைவ எல்லப்பநாவலர் தமது அருணைக்கலம்பகத்தில்,

† “வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறானார்
சோதியிய மானனிவர் சோமனிவர்—ஆதவனும்
மண்ணுங்கா லும்புனலும் வானுமழல் தானுமிவர்
எண்ணுங்கா லெல்லா மிவர்”

என்று கூறினதும் இது குறித்தே யென்க.

---

* நிலமும், ஜலமும், நெருப்பும், காற்றும், அகண்டாகாசமும், சந்திரனும், சூரியனும், அறிவுள்ள ஆன்மாவும் ஆகிய எட்டுவித வடிவங்களைச் சிவபிரான் பொருந்தி யிருக்கின்றனன். ஆகையால், அவன் ஒருவனே, ஏழுலகென்றும், பத்துத் திசைகளென்றும், பலவடிவங்களாய் விளங்கியிருக்கின்ற விதத்தைத் தியானித்துத் தோள் நோக்கம் ஆடுவாம்.

இது அஷ்டமூர்த்தம் கூறியவாறாம்.

† வேதங்கள் புகழ்ந்துகூறும் சோணேசர்க்கு வேறானார் யாவர்? விளங்கும் ஆன்மா இவர்; சந்திரன் இவர்; சூரியனும், மண்ணும், காற்றும், நீரும், ஆகாசமும், நெருப்பும் இவர்; இப்படி இவர் இருப்பை நாம் யோசிக்குமிடத்தில், எல்லாம் இவரேயாவர். (இவரன்றி வேறுபொருள் கிடையாது.)

ஈசன் என்பதற்கு அணிமா முதலிய எட்டுவித சித்திகளோடு கூடியவன் என்பது பொருள். மண் முதலான பூதங்களுடைய உற்பத்தி ஸ்திதி லயங்களுக்குக் காரணபூதன் ஈசன் ஆகையால், அவன், அவ்வுருவங்களை உடையவன் எனக் கூறப்பட்டனன் என்க. *

† 'விண்ணே விண்ணுதியாம் பூதமே' என்றதூஉம் இப்பெற்றி நோக்கியே யென்க.

உம்மை என்றது சபாபதி, சபையோர், நாடகங் காண்போர் இவர்களைக் குறித்ததாம்.

'குற்றமறக் காத்தருளுகவே' என்றதனால், குணங்களுறக் காத்தருளுக என்பது குறிப்பாற் பெறப்படும்.

நாந்தியிலேயே நாடகக் கதையைச் சூசனையாகக் காட்டுவது, சில கவிகளின் கருத்து. ஆகையால், இதனிலும் இந்நாடக விஷயங்கள் குறிப்பிற் காட்டியுள்ளன.

'முதலிற் படைத்ததெது' என்றது, பாரதவமிசத்திற்கு ஆதி காரணனும் கதாநாயகனுமாகிய துஷ்யந்தனைக் குறித்தது. துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்தவன் பரதன் என்பதும் அவனுடைய வமிசத்தாரே இப்பரதகண்டவாசிகள் என்பதும் ஜகத்பிரசித்தம்.

'மன்னும் விதிபாற் கொடுக்கின்ற மகத்தில் அவியை ஏற்பதெது' என்றது, துஷ்யந்தன், முனிவர்களிடத்தில் ஆறிலொரு கடமை பெற்றுவந்தது இராஜருஷி என்பதைக் குறித்தது.

'இறையாய் விளங்கி இருப்பதெது' என்றது, துஷ்யந்தன், தானதரும யாகங்களைச் செய்தவன் என்பதைக் குறித்தது.

'காலம் அறிவிக்கும்' என்றது, குடிஜனங்கள் துஷ்யந்தனாற் காக்கப்பட்டுத் தத்தம் தருமகாரியங்களைத் தவறாமற் செய்ததனால், மழை முதலியவைகள் தக்கபருவத்திற் பெய்து நல்லகாலத்தைச் செய்ததற்கு, அவனே காரணனாயிருந்தான் என்பதைக் குறித்தது.

---

* அஷ்டமூர்த்தங்களுக்குப் பிரமாணம் :—
ஸூர்யோஜலம் மஹீவாயுர் நிராகாஶமேவச !
யாயஜூகச் சசோமச்சருத்ராதீ நாந்துமூர்த்தய ॥

† தாயுமானவர்

'அரசனே காலகாரணன்; காலமே அரசகாரணம்' என்பது பாரதத்தி லும் சொல்லப்பட்டிருக்கின்றது.

'சுருதியியல்பாய்' என்றது, சாஸ்திரத்திற் கூறிய சகல சுகுணங்களையும் உடையவன், துஷ்யந்தன் என்பதைக் குறித்தது. இன்னும் இதனாலேயே இவனுடைய கீர்த்தி, ஜனங்கள் காதுகளிற் கேட்கப்படுகின்றதென்றும், இவன் புண்ணிய சுலோகன் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

'எங்கும் பரந்தது' என்றது, இவனுடைய புகழ். தடையின்றி எங்கும் பரவியது என்பதைக் குறித்தது.

'மூவுலக்கும் இடமாக் கொண்டதெது' என்றது, ஜனங்கள் எல்லார்க்கும், நீதி கூறல், காத்தல் முதலியவைகளால் துஷ்யந்தன் தந்தையை ஒத்தவன் என்பதைக் குறித்தது.

உயிர்களுக்கு உயிரா யிருப்பதெது' என்றது, ஜனங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி, அதனால் அவன் அவர்களுக்குப் பிழைப்பைத் தந்தவன் என்பதைக் குறித்தது.

'காட்சி அளவாய்' என்றது, மோதிரத்தைக் கண்ட மாத்திரையிலேயே, துஷ்யந்தற்குச் சகுந்தலை ஞாபகம் வந்தது என்பதைக் குறித்தது.

'ஈசன்' என்றது, துஷ்யந்தன் ஸகலைஶ்வர்ய சம்பன்னன் என்பதைக் குறித்தது.

'எண்வகையாம் வடிவன்' என்றது, துஷ்யந்தன், அஷ்டதிக் பால காமிசமாய்த் தோன்றியவன் என்பதைக் குறித்தது. (அஷ்டானாம் லோகபாலானாம் வபுர்தத்தே ‡ நராதிபா) என்கிற பிரமாணப்படி அரசன் அஷ்டதிக் பாலகாமிசன் என்று ஸ்மிருதி கூறுகின்றது.

மேற்கூறிய உரைகள், வாச்சியார்த்தம் அல்ல; வெங்கியார்த்தத்தின்பாற்படும் என்று கொள்க. இதுபோலவே இன்னும், பலவேறு பொருள் நயங்களைப் புத்திமான்கள் ஊகித்துணர்க.

நாந்தியில், அர்த்த மூலமாயாவது, பதமூலமாயாவது நாடகக் கதையைக் குறிப்பிற் காட்ட வேண்டும். ஆகையால், இங்கே அதனை

விவரித்துக் கூறவில்லை. நாயகன் குணங்களைப்போலவே நாயகியின் குணங்களும் இதனிற் குறிப்பாய்க் காணலாம்:

'மறையோன் படைத்தது' என்றதனால், பிரதி சிருஷ்டி செய்தவராகிய விஸ்வாமித்திரருடைய மகள், சகுந்தலை என்று தெரிகின்றது; அவர், இந்திரலோக முதலியவைகளை நவீனமாக உண்டாக்கினார் என்று இராமாயணங் கூறுகின்றபடியால், பிரமனை ஒப்பார்.

'முதலிற் படைத்தது' என்றதனால், பெண்பாலார் அனைவரினும் உயர்ந்த வனப்புடையாள் சகுந்தலை எனத் தெரிகின்றது. ஒருவன் ஒரு தொழிலை முதலிற் செய்கையில், மிகவும் கவனிக்கிறான் ஆகையால், நன்றாய்ச் செய்கிறான். மறுபடியும் அவன், அதனையே செய்யும்போது, கவனக்குறைவாலும், முன்வருந்திய இளைப்பாலும் அத்தனை நன்றாய்ச் செய்கின்றான் இல்லை என்பது ஆன்றோர் துணிபு. இதுபோலவே, (மேகசந்தேசம்=மேகவிடுதூது) என்கிற நூலிலேயும், காளிதாசர் ஒரு பெண்ணைக்குறித்துக் கூறிய சந்தர்ப்பத்தில் 'இவள் பிரமனுடைய முதற்படைப்போ எனக் கூறி இருக்கின்றார்.

'மன்னும் விதியாற் செய்கின்ற மகத்தில் அவியை ஏற்பதெது' என்றதனால், துஷ்யந்தனுடைய மூளையைக் கருவில் வைத்திருந்தனள் சகுந்தலை என்பதும், விதியால் என்றதனால், சகுந்தலை, துஷ்யந்தர் இருவருக்கும் நடந்த காந்தர்வமணம், சாஸ்திர சம்மதமென்பதும் பெறப்படும்.

'இறையாய் விளங்கி இருப்பதெது' என்றதனால், சகுந்தலை, யாகபத்தினி யென்பதும், அதனால், அவள் சற்குண சீலினி என்பதும் குறிப்பிற் பெறப்படும்.

'காலம் அறிவிக்கும் இரண்டு பொருள்கள் எவை, என்றதனால், அனசூயை, பிரியம்வதை என்னும் இருவரும், துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் திருமண நியமனம் செய்த விஷயம் குறிக்கப்பட்டது. மற்றவையனைத்தும் துஷ்யந்தனுக்குக் கொள்ளப்பட்டன போல அவனுடைய பட்டமகிஷியாகிய சகுந்தலைக்கும் குறிப்பில் யூசி கொள்க.

நாந்தியிலக்கணம்

மேலே கூறியது, சொல்வடிவமான நாந்தி; பரத ச கூறியுள்ள நாந்தியிலக்கணம் இங்கே சிறிது கூறுவாம்

நாந்தியென்றும், வாக்ரூப நாந்தியென்றும் நாந்தி இருவகை.

அவைகளிற் கிரியாரூப நாந்தியென்பது, ஒருவிதம் ; அது, நாடகாரம் பத்தில், நந்தியைக் குறித்துப் பூசை செய்வது வழக்கம் ஆதலால், கிரியாரூப நாந்தி எனப்படும். ஈச்வரன், சிதாகாச நடனம் செய்த காலத்தில், நந்திதேவர், தாமே அரங்கஸ்தலமா இருந்தார் என்னும் பரதசாஸ்திரப் பிரமாணப்படி, நாடகாரம் பத்திற் செய்யும் அரங்கஸ்தல பூசைக்கு நாந்தி என்று பெயர் வழங்குகின்றது. உள்ளரங்கத்திலும் வெளியரங்கத்திலும் ஸா க்ஷாத் சிவபிரான் பிரத்யக்ஷமாயிருக்கின்றார் என்று சாண்டில்ய முனிவரர் கூறி யிருக்கின்றார். ஆகையால், உள்ளரங்கத்தில் சிவ பூசை செய்யப்படுகின்றது.

வாக்ரூப நாந்தி, மங்களாசீர்வாதத்தோடு கூடின செய்யுள் ரூபமாயிருக்கும்; அது பலவிதம்.

பூர்வரங்கம்.

சபாபதி, சபையோர், பாடகர்கள், வாத்தியக்காரர்கள், நடன், நடி இவர்கள் ஒருவருக்கொருவர் உற்சாகமாகக் காலங்கழிக்கும் இடத்திற்கு அரங்கஸ்தலம் என்றும், அந்த அரங்கத்தில், ஆரம்பத் திற் செய்யப்படும் காரியத்துக்குப் பூர்வரங்கம் என்றும் பெயர். அதாவது: அரங்கஸ்தலத்தில் உள்ள நடன், நாயக வேடம் பூண்டு, தனது சங்கீதாபி நயங்களால், உள்ளக்கருத்தை வெளியிட்டுச் சபாபதி, சபையோர், நாடகங்காண்போர் முதலானவர்களைச் சந்தோஷப்படுத்துதலாம். இடையூறின்றி நாடக முடிவதற்கு நடன் செய்யவேண்டிய ஒரு காரிய விசேஷந்தான், பூர்வரங்கம் எனப்படும். அதற்கு இருபத்திரண்டு அங்கங்கள் உள; அவைகள் அனைத்தும் கிரியாரூபமாயிருப்பதினால், நடித்துக் காட்டக்கூடாமை பற்றி, செய்யுள் ரூபமான நாந்தி ஒன்றே முக்கியமாய் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதுபற்றியே வேதவியாசரும் "பூர்வரங்கத் து அங்கங்கள் பல; அவைகளை எல்லாம் செய்யாதொழிந் ், நாடகவிக்கினத்தை நீங்கும் பொருட்டுச் செய்யுள்ரூப நாந் செய்தே தீரவேண்டும்" என்று சொல்லியருளினர்.

இவ்வாழ்த்துப்பா, ஒவ்வோரடியும் இருமா ஒருகாய் இருமா ஒருகாயாக வந்த அறு சீராசிரிய விருத்தம் இரண்டு இணைந்து வந்திருத்தலால் இரட்டை ஆசிரிய விருத்தம் எனப்படும். இதன இலக்கணத்தை யாப்பருங்கல விருத்தியில் பரக்கக்காணலாம்.